உரிமையம்

RM-Shanmugam
15/6/36

RM.SHANMUGAM
OKKUR-PO-RD

இந்திய சரித்திரம்

(ஹை ஸ்கூல் வகுப்புக்களுக்கு)

இது
சென்னை-பெரம்பூர்
ராவ் பகதூர் கலவல கண்ணன் செட்டியார் ஹை ஸ்கூல்
தலைமை உபாத்தியாயர்
எம். கே. சுந்தர வரதாசாரியர், பி.ஏ., எல்.டி.,
அவர்களால் எழுதப்பெற்றது.

RM.SHANMUGAM
OKKUR-PO-RD

சென்னை
இந்தியன் பப்ளிஷிங் ஹவுஸ் லிமிடெட்
1930

விலை ரூ. 1-10-0] [காபிரைட்

நான்முகம்

இப்பொழுது உயர்தரப் பாடசாலைகளின் மேல் வகுப்புக்களிலும் ஆங்கிலப் பாட மல்லாதவற்றைத் தாய் மொழியிலேயே கற்பிக்கவேண்டு மென்னும் உணர்ச்சி பெரிதும் பரவி வருகின்றது.

இந்தப் புஸ்தகம் S. S. L. C., போர்டார் வெளியிட்டுள்ள A Group என்னும் பகுதியிற் சேர்ந்த இந்து தேச சரித்திரத்திற்கான விஷய ஜாபிதாவை முழுவதும் தழுவியது. அப்பொழுதைக் கப்பொழுது பற்பல மூலங்களினின்றும் மேதாவிகளினுல் புதிது புதிதாய்க் கண்டு பிடிக்கப்பட்டுவரும் ஆராய்ச்சிகளைத் தனக்கு அங்கமாய்க் கொண்டது. இன்னும் சரித்திரத்தில் சம்பந்தப்படாத பல கற்பனைகளையும் களைந்து உண்மையைமட்டில் மாணவர்களுக்குப் புகட்டுவதில் ஆசிரியன் போன்றது. இந்திய வரசாட்சியின் நேர்மையும், அப்பொழுதுள்ள நகரங்களின் சீர்மையும், குடிகளின் பான்மையும் படிப்பவர் மனத்தைப் பாகுபோல வுருக்குவது.

அன்றியும், இது நியாய நுட்பங்களை நுணிகி யுணர்கின்ற நியாயாதிபதிபோல, எடுத்துக்கொண்ட சரித்திரத்தைக் காய்தலும் உவத்தலு மகற்றிக் கூறிச் செல்வது தான் சரித்திர வாசிரியன் இலக்கணம் என்னும் உண்மையையும், காய்வானேல் குணம் தோன்ருமலும், உவப்பானேல் குற்றம் தோன்ருமலும் கெடும் என்னும் நீதியையும் கொஞ்சமும் மறைக்காமல் பொருந்தி யிருக்கின்றது.

கல்விகற்கும் மாணவர்களை யன்றி சரித்திரப் படிப்பில் ஊக்கங்கொண்டுள்ள மற்றவர்களும் கற்றறியும் வண்ணம் இது எளிய நடையில் இயைந்திருக்கின்றது.

எனது சிற்றறிவிற்குப் புலனுகாத இதனிலும் அரிய பெரிய விஷயங்களைப் படிக்கும் நண்பர்கள் எனக்கு அறிவிப்பார்களாயின் அதனை நன்றியறிதலுடன் ஏற்று அடுத்த பதிப்பில் திருத்திக் கொள்ளச் சித்தனு யிருக்கிறேன்.

ஸி. ஸி. ஸி. ஹைஸ்கூல்
பெரம்பூர், சென்னை
1930ஆ ஆகஸ்ட்மீ 22உ

இங்ஙனம்,
இந்திய ஊழியன்,

எம். கே. சுந்தர வரதாசாரியன்.

பொருளடக்கம்

பீடிகை

I. மகத ராஜ்யத்தின் முன்னேற்றம்

II. மௌரிய ராஜ்யம்

III. அநேக அரச வம்சங்கள்

(கி. மு. 300 முதல் கி. பி. 200 வரையில்)

IV. குப்த ராஜ்யம்

(கி. பி. 300—கி. பி. 600)

V. ஏழாவது, எட்டாவது நூற்றாண்டுகள்

VI. மகம்மதியர் முன்னேற்றம்

VII. விஜய நகர ராஜ்யம்



1. ஆந்திர நாணயம்
2. மீனண்டர் ,,
3. கனிஷ்கர் ,,
4. விக்ரமாதித்யர் நாணயம்
5. ராஜராஜசோழர் ,,
6. பாண்டிய ,,
7. ஷர்ஷா நாணயம்
8. ஸமுத்ர-குப்தர் நாணயம்
9. சேர நாணயம்
10. கிருஷ்ணதேவ ராயர் ,,
11. டாங்கா ,,
12. அக்பர் ,,

இந்திய சரித்திரம்

பீடிகை

i. இந்தியாவின் பெருமையும், சரித்திர ஆராய்ச்சியும்

இந்தியா நமது தாய் நாடு. உலகின்கண் ணுள்ள மற்றைய நாடுகள் பலவற்றிலும் அது மிகச் சிறந்தது. அதை அங்ஙனம் கருதுவது அது நமது நாடு என்னும் அபிமானத்தினா லல்ல. அதன் பெருமை,

" மன்னு மிமய மலை யெங்கள் மலையே
 மாநில மீததுபோற் பிறி திலையே!
இன்னறு நீர்க்கங்கை யாறெங்கள் யாறே
 இங்கிதன் மாண்பினுக் கெதிரெது வேறே?
பன்னரு முபநிட நூலெங்கள் நூலே
 பார்மிசை யேதொரு நூலிது போலே?
பொன்னொளிர் பாரத நாடெங்கள் நாடே
 போற்றுவ மிதனை யெமக்கிலை யீடே.

மாரத வீரர்கள் மலிந்த நன்னாடு
 மாமுனி வோர்பலர் வாழ்ந்த பொன்னாடு
நாரத கான நலந்திகழ் நாடு
 நல்லன யாவையு நாடுறு நாடு

பூரண ஞானம் பொலிந்த நன்னாடு
புத்தர் பிரானருள் பொங்கிய நாடு
பாரத நாடு பழம்பெரு நாடே
பாடுவ மிதனை யெமக்கிலை யீடே"

என்பதனால் ஒருவாறு விளங்கும்.

இத்தகைய பெருமை வாய்ந்ததும், நம்மைப் பெற்று வளர்த்து வருவதுமான இந்திய நாட்டின் ஒப்பற்ற சரித்திரத்தை நாம் கற்றுணர்வது இன்றியமையாதது. நமது முன்னோர்களின் நடை உடை பாவனைகளும், ஆசார அநுஷ்டானங்களும், கொள்கைகளும், வழிபாடு வந்தனங்களும், நமக்கு மிகச் சிறந்த பேறும். அவற்றை நாம் நன்றாக வறிந்தால்தான் நமது பிறப்பின் பெருமையும், அப்பெருமையை நாம் இழந்துவிடாமல் நடந்தொழுகும் வழிகளும் நமக்கு நன்றாய்ப் புலப்படும். அவற்றை நாம் இப்பொழுது செவ்வனே யறியாததும், அவ்வறியாமை காரணமாக நம் முன்னோர்களை வழிபட்டு நடவாததும், நமது நாட்டின் தாழ்வுக்குச் சிறந்த காரணங்களாம். ஆதலால், நாமும் நமது நாடும் முன்னேற்றத்தை யடைய வேண்டுமானால், நாம் நமது நாட்டின் முற்காலத்திய சரித்திரத்தை நன்றாகக் கற்கவேண்டும்.

அதற்குப் பல இடையூறுகள் இருக்கின்றன. எழுத்துக்கள் கண்டுபிடிக்கப்பட்ட காலத்திற்கு முந்தியசரித்திர விவரங்கள் பல நூற்றாண்டுகள் வரையில் கர்ண பரம்பரையாக வந்துள்ளன. அவற்றை நாம் முழுவதும் உண்மையெனக் கொள்வதற் கிடமில்லை. எழுத்துக்கள் ஏற்பட்ட பிறகும் சரித்திரங்கள் செம்மையாக எழுதப்பட்டதாகத் தெரியவில்லை. அல்லாமலும், பற்பல விடங்களிலும் ஒரே காலத்தில் பல சகாப்தங்கள் வழங்கிவந்த காரணத்தினால் சரித்திர வாராய்ச்சிக்கு இன்றியமையாததான காலபாகுபாட்டை வரையறுக்க முடியவில்லை. அஃதன்றியும்,

நமக்குக் கிடைத்துள்ள பற்பல நூல்களில் உண்மையைக் கற்பனைகளினின்றும் பிரித்துத் தெளிவது எளிதன்று. இத்தகைய இடையூறுகள் பல உள்ளனவேனும் மிகப் பழமையான சரித்திர உணர்ச்சிக்கு வேண்டிய பல சாதனங்கள் இருந்து வருவதோடு அவை மேன்மேலும் நமக்குக் கிடைத்து வருவதனால், நாம் முற்காலத்திய சரித்திரத்தையும் ஒருவாறு ஐயமறக் கற்றறியலாம்.

கற்பாறைகளிலும், தூண்களிலும் செதுக்கப்பட்டுள்ள விவரங்களைக் கொண்டும், கட்டிடங்களைக் கொண்டும், நாணயங்களிலிருந்தும், தாமர சாஸனங்களினாலும், பற்பல நூல்களினாலும் நமக்கு வேண்டிய பல சிறந்த உண்மைகள் கிடைக்கின்றன. அவற்றைப் பரிசோதித்து வரும் சாஸ்திர மேதாவிகள் நாளும் புதிது புதிதான பல சிறந்த உண்மைகளைக் கண்டறிந்து வருகிறார்கள். இவற்றையன்றி வெளிநாடுகளிலிருந்து நமது நாட்டிற்கு வந்திருந்த அந்நியர்கள் தாம் கண்டனவும் கேட்டனவுமான பல விஷயங்களை எழுதியுள்ளார்கள். அவைகளி லிருந்தும் நமது நாட்டின் பூர்வ சரித்திர சம்பந்தமான பல விவரங்கள் நமக்குக் கிடைத்துள்ளன. இவை யனைத்தையுங்கொண்டு ஒத்திட்டுப்பார்த்துச் சரித்திர நிபுணர்கள் முற்காலத்திய இந்திய சரித்திரத்தை ஒருவாறு எழுதியிருக்கிறார்கள்.

இத்தன்மையனவான ஆதாரங்களைத் தழுவியே நமது பூர்வீகர்களுடைய சரித்திரம் எழுதப்பட்டிருப்பதனால், ஆங்காங்குப் பல அபிப்பிராய பேதங்கள் இருக்கவு மிடமுண்டு. அன்றியும், இனிப் புதிதாக கிடைக்கும் யாதானுமொரு ஆதாரத்தைக் கொண்டு இதுகாறும் யாம் உண்மையெனக் கொண்டாடி வந்த ஒரு அபிப்பிராயத்தை மாற்றவும் நேரிடும். சரித்திர வாராய்ச்சியில் ஊக்கமுடைய நிபுணர்கள் பலர் முயன்று வருவதினின்றும் நமக்கு ஏற்கெனவே பல உண்மைகள் வெளியாயிருக்கின்றன.

ii. பூர்வீக ஜனங்களும், திராவிடர்களும்

முதற் குடிகள்

சுமார் 32 கோடி ஜனத்தொகையை யுடையதும், கல்வி கேள்விகளிலும் நாகரிகத்திலும் சிறந்து விளங்குவதுமான நமது இந்தியாவில் பல்லாயிரம் வருஷங்களுக்கு முன் யார் இருந்தார்கள்? அவர்களுடைய நடை, உடை, பாஷை, ஒழுக்கம் முதலியன எவ்வாறிருந்தன? அவர்கள் தாம் நமது முன்னோர்களா? இல்லையாயின், அவர்களுடைய சந்ததியார்கள் இப்பொழுது இந்நாட்டில் இருந்துவருகிறார்களா? இவற்றிற்கும், இவை போன்ற இன்னும் பல கேள்விகளுக்கும் நாம் விடையளிக்க முடியாது.

மக்கள் பூமியின் பலபல தேசங்களிலும் பல்லாயிரம் வருஷங்களாக இருந்து வந்திருக்கிறார்கள். ஆனால், அவர்களைப்பற்றின சரித்திரங்களோ வெகு காலத்திற்குப் பிந்தி ஏற்பட்டன. சரித்திரங்கள் உண்டாவதற்கு முன் இருந்த மக்களின் வரலாற்றை நாம் பல ஆதாரங்களைக் கொண்டுதான் ஒருவாறு ஊகித்தறியலாம்.

கால நிர்ணயம்

சரித்திர மேதாவிகள் மனிதர்களுடைய நாகரிகத்தை யொட்டி, அவர்கள் காலங்களைக் கற்கருவிக்காலம், செப்புக் கருவிக்காலம், இருப்புக் கருவிக் காலம் என்று வகைப்படுத்தி யிருக்கிறார்கள். எந்தப்பொருளைக் கொண்டு பழங்குடிகள் தமக்குவேண்டிய கத்தி, கோடாலி, மண்வெட்டி, ஈட்டி, வில், அம்பு முதலிய கருவிகளைச் செய்து கொண்டார்களோ, அதுவே அவர்களுடைய காலத்தைக் குறித்தது.

அல்லாமலும் அந்த நிபுணர்கள், கற்கால மனிதர்களைப் பழைய கற்கால மனிதர்கள் என்றும், புதிய கற்கால மனிதர்கள் என்றும் இரண்டு பிரிவினர்களாக வகுத்துள்ளார்கள். வெகு நீண்ட காலத்திற்கு முன் இந்-

நாட்டி லிருந்த பழைய கற்கால மனிதர்கள், மற்றைய நாடுகளி லிருந்த அவர்களுடைய இனத்தாரைப் போன்று, நாகரிகம் சிறிதும் இன்றி முரட்டு மனிதர்களாகவே இருந்து வந்திருக்கிறார்கள். அவர்கள் குகைகளிலும், மரங்களிலும், தழைக் குடிசைகளிலும் வசித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் காய் கனி கிழங்குகளையும், தாங்கள் வேட்டையாடின மிருகங்களின் இறைச்சியையும் உண்டு வந்தார்கள்.

பழைய கற்கால மனிதர்

அவர்களுக்கு நெருப்பை உண்டு பண்ணவாவது, தமது உணவைச் சமைக்கவாவது தெரியாது. அவர்கள் மட்பாண்டங்கள் செய்வதை அறியார்கள். அவர்கள் தங்களுக்குத் தேவையான கருவிகளையும், ஆயுதங்களையும் கம்பினாலும், கல்லினாலும், எலும்பினாலும் செய்துகொண்டார்கள். அவர்களுடைய கற்கருவிகளையன்றி மற்றவைகள் மண்ணிற்கும் கறையானுக்கும் உணவாயின. ஆனால், அவர்கள் உண்டாக்கின கற்கருவிகள் மாத்திரம் பிற்காலத்தில் ஏராளமாகக் கிடைத்தன. அக் கருவிகள் வெட்டுவதற்கும், இழைப்பதற்கும், துளைப்பதற்கும், அடிப்பதற்கும் வேண்டியவாறு அமைக்கப்பட்டிருந்தன. இவ்வாறு உயிர் பிழைத்த நாகரிகமற்ற முரட்டு மனிதர்களைத் தாம் நாம் இந்தியாவின் பூர்வ குடிகள் என்று கருதவேண்டும்.

அவர்களுக்குப் பிந்திய காலத்தவர்கள் புதிய கற்கால மனிதர்களாவர். இவர்கள் உண்டாக்கின கற்கருவிகள் செம்மையாகத் தீட்டப்பட்டுப் பளபளப்பாக இருந்தன. அன்றியும், அவற்றில் பல்வேறு வகைகளும் அவற்றைக் கொண்டு செய்யும் வேலைகளுக் கிணங்க

புதிய கற்கால மனிதர்

அமைந்திருந்தன. இந்தக் காலத்திய கருவிகள் நமது நாட்டின் எல்லாப் பக்கங்களிலும் கிடைத்துள்ளன. பெல்லாரி ஜில்லாவில்

இக் கருவிகளைச் செய்யும் ஒரு கிடங்கைக் கண்டு பிடித்த தாகவும் தெரியவருகின்றது.

இவர்கள் முதலில் கையினாலும், பிறகு சக்கரத்தைக் கொண்டும் மண் பாத்திரங்கள் செய்துகொண்டார்கள். இவர்கள் ஆடு மாடுகளை மேய்த்தும், நிலத்தைப் பயிர் செய்தும் வந்திருக்கிறார்கள். அன்றியும், இவர்கள் இறந்தவர்களைக் கல்லறைகளில் அடக்கம் செய்தார்கள் என்று தெரிய வருகின்றது. அந்தக் கல்லறைகள் பெரிய கற்களினால் தெற்கு வடக்காக அமைக்கப்பட்டிருந்தன. என்றாலும், அவ்வித பிரேதக் குழிகள் ஏராளமாகக் காணப்படவில்லை.

பிரேதக் குழிகள்

இவர்களுக்கு முந்திய பழைய கற்கால மனிதர்கள் இறந்தவர்களின் உடலை நாய் நரிகளுக்கும், கழுகு கோட்டான்களுக்கும் இரையாகும்படி போட்டு வந்தார்கள். ஆதலின் புதிய கற்கால மனிதர்கள் பழைய கற்கால மனிதர்களைவிட அதிக நாகரிகம் உள்ளவர்கள் என்று தெரிய வருகின்றது.

இவர்களுக்கும் பிந்திய காலத்தவர்களைச் சரித்திர நிபுணர்கள் உலோக கால மனிதர்கள் என்று கூறியிருக்கிறார்கள். அவர்கள் உலோக காலத்தை மறுபடியும் செம்புக் கருவிக்காலம், வெண்கலக் கருவிக்காலம், இரும்புக் கருவிக் காலம் என்று வகுத்திருக்கிறார்கள். வட இந்தியாவில் புதிய கற்காலத்திற்குப் பிறகு செம்புக் கருவிக்காலம் ஏற்பட்டிருந்தது. ஆனால், சரித்திர மேதாவிகள் செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள பெரும்பெயர் கிராமத்திலும், திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள அதிச்சநெல்லூர் கிராமத்திலும், கோயமுத்தூர் ஜில்லாவிலுள்ள சிறுமுகை என்னும் கிராமத்திலும் இன்னும் பற்பல விடங்களிலும் இருந்த மிகப் பழமையான கல்லறைகளைத் தோண்டிப் பார்த்த

உலோக காலம்

தினின்றும் தென்னிந்தியாவில் புதிய கற்காலத்திறகுப் பின்பு இரும்புக் கருவிக் காலம் ஏற்பட்டுவிட்டது என்று தீர்மானித் திருக்கிறார்கள். கங்காநதி தீரத்திலும், மத்திய மாகாணங்களிலும், சூடிய நாகபுரியிலும் கிடைத்தன போன்ற செம்பினாற் செய்த கருவிகள் தென்னிந்தியாவில் இருக்கவில்லை. ஐரோப்பாவில் இரும்புக் கருவிக்காலம் ஆரம்பமாவதற்குச் சுமார் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னமேயே, இந்தியாவில் அந்தக் காலம் தொடங்கி யிருந்தது என்று நிச்சயமாய்த் தெரிய வருகின்றது. செம்புக் கருவிக்காலம் இற்றைக்குச் சுமார் 4,000 வருஷங் களுக்கு முன்னும், இரும்புக் கருவிக்காலம் சுமார் 3,000 வருஷங்களுக்கு முன்னும் இருந்தனவாகும்.

ஐரோப்பிய நாடுகளில் புதிய கற்கருவிக் காலத்திற் கும், இரும்புக் கருவிக் காலத்திற்கும் இடையில் வெண் கலக் கருவிக்காலம் ஒன்று இருந்தது. நமது நாட்டில்

வெண்கலக் கருவிக் காலம் இல்லை

கருவிகளாவது, ஆயுதங்களாவது வெண் கலத்தினால் செய்யப்படவில்லை. பிற்காலத் தில் நமக்கு இந் நாட்டிற் கிடைத்த வெண் கலக் கருவிகள் அயல் நாடுகளினின்றும் கொண்டுவரப்பட்டவைகள் என்பதுதான் பல மேதாவிகளின் கொள்கை.

இப்பொழுது இந்தியாவிலுள்ள ஜனங்கள் கற்கால இரும்புக்கால மனிதர்களின் சந்ததியார்களா அல்லரா என்பதைச் சொல்ல எவராலும் இயலாது. மேனாட்டுச் சரித்திராதிபர்களிற் பலர் நமது நாட்டில் இப்பொழுது இருக்கும் ஜனங்களை உற்று நோக்குங்கால், அவர்களனை வரையும் இரண்டு பெரும் பிரிவினராகப் பிரிக்கலாம் என்றும், ஒரு வகுப்பினர் வெண்ணிறமாகவும் உயரமாக வும் அழகாகவும் இருக்கிறார்கள் என்றும், அவர்கள் அகன்ற நெற்றியும், உயர்ந்த மூக்கும், பரந்த கண்களும், கம்பீர

மான தோற்றமும் உடையவர்கள் என்றும், மற்றொரு

மக்களின் தோற்ற வேறுபாடு

வகுப்பினர் கறுப்பாகவும், குட்டையாகவும் இருக்கிறார்கள் என்றும், இவர்கள் சிறுத்த கண்களும், தட்டை மூக்கும், உடம்பில் அடர்ந்த உரோமமும் உடையவர்கள் என்றும் கூறிவந்தார்கள்.

அல்லாமலும், அந்த மேதாவிகள் பின்னாற் சொல்லப்பட்ட கறுப்புக் குட்டை மனிதர்கள் தாம் இந்நாட்டின் பூர்வ குடிகள் என்றும் எண்ணுகிறார்கள். இவர்களுடைய

திராவிடர்

சந்ததியார்கள் தாம் திராவிடர் என்பதுவும் அவர்களுடைய அபிப்பிராயம். இவர்கள் இப்போதைக்குச் சுமார் 5,000 வருஷங்களுக்குமுன் தென்னிந்தியாவி லிருந்தவர்களென்பது சிலருடைய கொள்கை.

பூகற்ப சாஸ்திரிகள் தென்னிந்தியா மிகப் பழமையான நாடென்றும், அது உண்டான பல்லாயிர மாண்டுகளான பின்புதான் வட இந்தியாவின் பெரும்பாகமும் ஏற்பட்டதென்றும் சொல்லுகிறார்கள். அதற்கிணங்க மக்கள் வரலாற்றில் வல்லவர்களும் உலகத்தில் முதன் முதல் மக்கள் தோன்றியவிடம் தமிழ்நாடாக இருக்க வேண்டுமென்று எண்ணுகிறார்கள். அவ்வாறான தமிழகத்தில் உண்டான திராவிடர்கள் வட இந்தியாவிலும் பரவி இருந்தார்கள் என்பது சிலருடைய அபிப்பிராயம். அது எவ்வாறாயினும், இந்நாட்டின் மிகப் பழங்குடிகள் திராவிடர்கள் என்பது பலருடைய கொள்கை.

பாஷை

திராவிட வகுப்பில் முந்தித் தோன்றினவர்கள் பேசிய பாஷை மண்டா என்பதின்பாற்படும். அவ்வகுப்பில் பிந்தித் தோன்றியவர்கள் பேசிய பாஷை திராவிடம் எனப்படும். திராவிட பாஷைக்கும், மண்டாவிற்கும் விசேஷ

ஒற்றுமைகள் இருப்பதாகக் காணப்படவில்லை. எனினும், இவ்விரு பாஷைகளையும் பேசி வந்த ஜனங்கள் திராவிட வகுப்பினர்தாம் என்பது பல மேதாவிகளின் கொள்கை.

திராவிடர்கள் கொஞ்சங் கொஞ்சமாக நாகரிக வளர்ச்சியைப் பெற்றுப் பிற்காலத்தில் பயிர் செய்யவும், பருத்தியை நூற்று ஆடைகள் நெய்யவும், சாயம் போடவும் கற்றுக்கொண்டார்கள். அவர்கள் கூட்டங்கூட்டமாகச் சிறு கிராமங்களில் ஒரு தலைவனது அதிகாரத்திற் கடங்கி வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் பலிகள் கொடுத்து பேய் பிசாசுகளையும், மின்னல், மழை, காற்று, பாம்பு, புலி முதலியவற்றையுந் தெய்வங்களாகக் கருதி வணங்கிவந்தார்கள் எனினும், எல்லாவற்றிற்கும் மேலான ஓர் கடவுள் உண்டு என்பதையும் உணர்ந்திருந்தார்கள். அவர்களில் புரோகிதர்கள் என்று ஒரு தனி வகுப்பினர்கள் இருந்ததாகத் தெரியவில்லை. அவர்கள் உலோகங்களின் உபயோகத்தை யறிந்திருந்ததை யன்றித் தோணிகளும், சிறு கப்பல்களும் கூடச் செய்யக் கற்றிருந்தார்கள். அவர்களுக்குக் குடும்ப வாழ்க்கையிலும், சண்டையிலும் உற்சாகம் இருந்தது எனத் தெரியவருகின்றது.

பழக்க ஒழுக்கம்; தேர்ச்சி

மத்தியதரைக் கடலைச் சார்ந்துள்ள க்ரீட், ஸைப்ரஸ், பாபிலன் முதலிய நாடுகளில் பெரும்பெயர், அதிச்சநெல்லூர், சிறுமுகைகளின் புராதனக் கல்லறைகளிற் கிடைத்தன போன்ற ஆயுதங்களும் ஆபரணங்களும் பாத்திரங்களும் மிகப் பெரிய மண் ஜாடிகளும் அகப்பட்டனவென்னும் காரணத்தைக்கொண்டும், தென் ஆப்ரிகா, ஆஸ்த்ரேலியா கண்டங்களிலிருந்த அக்காலத்திய ஜனங்களுக்கும் தென்னிந்தியக் குடிகளுக்கும் வேறு விதங்களில் சில ஒற்றுமைகள் இருந்தனவென்பதைக் கொண்டும், மேனாட்டுச் சரித்திராசிரியர்கள் திராவிடர்கள் அயல்நாடு

களிலிருந்து இந்தியாவில் வந்து குடியேறினார்கள் எனத் தீர்மானித்து விட்டார்கள். அந்த ஒற்றுமைகள் காரணமாகவே உலகத்தில் மக்கள் தோன்றிய காலம் முதற்கொண்டு இடைவிடாமல் தென்னிந்தியாவில் வசித்து வந்து காலக் கிரமத்தில் அறிவிலும் நாகரிகத்திலும் தேர்ச்சியடைந்த திராவிடர்கள் இந்நாட்டினின்றும் பிறநாடுகளுக்குச் சென்றிருக்க வேண்டும் என்னும் அபிப்பிராயம் இப்பொழுது கொஞ்சங் கொஞ்சமாக ஒப்புக்கொள்ளப்பட்டு வருகின்றது. இதை அபிப்பிராயபேதமின்றி யாவரும் ஒத்துக்கொள்ளக்கூடிய சான்றுகள் போதுமான வளவு இன்னும் கிடைக்கவில்லை. சீக்கிரத்தில் யாவரும் இதுதான் உண்மையென அங்கீகரிக்க நேரிடும் என்று எண்ணுவதற்கு இடமுண்டு.

குடியேற்றத்தைக் குறித்த அபிப்பிராய பேதங்கள்

பொதுவில், இந் நாட்டிலும், மற்றெந் நாட்டிலும் வாழ்ந்திருந்த மிகப் பழமையான மக்கள் வேட்டையாடியும், ஆடுமாடுகளை ஊர் ஊராகச் சென்று மேய்த்தும், அவற்றைப் பழக்கி நிலங்களைப் பயிர் செய்தும், கற்கருவிகளையும், பின்னர் உலோகங்களினாற் செய்யப்பட்ட கருவிகளையும் உபயோகித்தும், பாத்திரங்கள் செய்துகொள்ளவும் ஆடைகள் நெய்யவும் கற்றுக்கொண்டும் கொஞ்சங் கொஞ்சமாக நாளடைவில் நாகரிகத் தேர்ச்சியை யடைந்தும் வந்துள்ளார்கள் என்பது நமக்குத் தெளிவாகத் தெரியவருகின்றது.

நாகரிக வளர்ச்சி

iii. ஆரியர்கள்

வெகு நீண்ட காலத்திற்கு முன் ருஷியாவின் தென் பாகத்தில் ஓர் உயர்ந்த ஜாதி ஜனங்கள் இருந்தார்கள் என்றும், அவர்களுடைய சந்ததியார்கள் ஐரோப்பாவிலும், ஆசியாவின் தெற்கிலும், மேற்கிலும் குடியேறினார்கள்

என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. சரித்திர மேதாவிகள் அவர்களுக்கு ஹிந்தோ-ஐரோப்பியர் எனப் பெயர் வைத்தார்கள்.

'ஹிந்தோ ஐரோப்பியர்கள் பல நூற்றுண்டுகளவரையில் தென் ருஷியாவில் ஆடுமாடுகளை மேய்த்தும், பயிர் செய்தும் ஜீவனம் செய்து வந்திருக்கிறுர்கள். காலக்கிரமத்தில் அவர்களுடைய குடும்பங்கள் பெருகிவிட்ட காரணத்தினுலோ அல்லது அந்நாட்டில் குளிர் அதிகமாகவும், தங்களுடைய கால் நடைகளுக்குப் போதுமான மேய்ச்சல் கிடைக்காமலும், பயிர் செய்வதற்குப் போதுமான வசதியில்லாமலும் இருந்ததனுலோ, புதிய புதியநாடுகளைத் தேடிச் செல்ல வேண்டியதாயிற்று. அவ்வாறு ஐரோப்பிய நாடுகளை நாடிச் சென்றவர்களின் சந்ததியார்கள் தாம் கிரேக்கர், உரோமர், ஜர்மானியர், ஆங்கிலேயர் முதலானவர்கள் ஆவர்; பாரஸிகத்தை நோக்கிச் சென்று அங்கே குடியேறினவர்களின் சந்ததியார்கள் பாரஸிகர்கள். காபூல் மார்க்கமாய் வந்து வடமேற்குக் கணவாய்களைக் கடந்து பஞ்சாப் நாட்டில் குடியேறினவர்கள் ஆரியர்கள். அவர்களுள் பல ஒற்றுமைகள் இருந்தனவென்பதே அவர்கள் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று கருதுவதற்குப் போதுமான சாக்ஷியாகும்,' என்பது சிலருடைய அபிப்பிராயம். பாலகங்காதர திலகர் என்னும் மேதாவி ஆரியர்கள் முதன் முதல் ஆர்டிக் மகா சமுத்திர தீரத்திலிருந்தார்கள் என்றும், அங்கிருந்து அவர்களில் ஒரு பகுதியார் இந்தியாவில் வந்து குடியேறினுர்கள் என்றும் கருதுகிறுர்.

ஆரியக் குடியேற்றம்

மற்றுஞ் சில நிபுணர்கள் வடஇந்தியாவிலிருந்த நமது பரத நாட்டினரைத்தான் மேனுட்டார் ஆரியர்கள் என்று

வழங்கினார்கள் என்றும், திராவிடர் என்று ஒரு ஜாதியாரும், அயல் நாடுகளிலிருந்து வந்து குடியேறின ஆரியர்கள் என்று மற்றொரு ஜாதியாரும் இருந்தார்கள் என்று கருதுவது பிசகு என்றும் வாதிக்கிறார்கள். மேலும், இவர்கள் கடவுளர்க்கு அளிக்கும் உணவைத் தீவாயிலாகத் தரும் முறைக்கு ஆரியம் என்று பெயர் என்றும், அம் முறையைக் கைக்கொண்டு நடக்கும் வகுப்பினருக்கு ஆரியர் என்னும் பெயர் உண்டாயிற்று என்றும் சொல்லுகிறார்கள். அல்லாமலும், இந்த நிபுணர்கள் அவர்களுடைய மதந்தான் ஆரியமதம் என்று வழங்கி வந்திருக்க வேண்டுமேயன்றி வேறில்லை என்றும் எண்ணுகிறார்கள். இவர்கள் ஹிந்து, பௌத்த, சமண மதங்கள் என்பவைகள் தனித்தனி மதங்கள் என்றும் ஒப்புக்கொள்ளவில்லை.

ஆரியர் இந் நாட்டினரே

இவர்கள் ஆரிய, திராவிடர்களுடைய வெவ்வேறான தோற்றத்திற்கும், நடை உடை பாஷை முதலியவற்றின் பேதங்களுக்கும் நாட்டின் இயற்கை யமைப்பும், வட இந்தியாவிலிருந்தவர்களுக் கேற்பட்ட கலப்பும், தென்னிந்தியாவிலிருந்தவர்களுக்கு அவ்வாறான கலப்பின்மையும், சிறந்த போக்கு வரவுக்கான சாதனங்களும், ஒற்றுமைக்கு வேண்டிய மற்ற அநுகூலங்களும் இல்லாததனால் இவர்கள் ஒருவரோ டொருவர் கலந்து உறவாடக் கூடாமையுமே முக்கிய காரணங்களாம் என்று எண்ணுகிறார்கள்.

வேற்றுமையின் காரணம்

அன்றியும், வடநாட்டின்மீது படை யெடுத்தும், சௌகரியத்தை நாடியும் வந்த கிரேக்கர், யவனர், சாகர், பாரஸிகர் முதலான பல அந்நியர்கள் ஆரியர்கள் என்று வழங்கப்பெற்ற உத்தர தேசத்தவர்களோடு கலந்து கொண்

சங் கொஞ்சமாகத் தாங்களும் மாறி, அவர்களையு மாற்றி விட்டாற்போல், தென்னிந்தியாவில் யாதொன்றும் நடைபெறவில்லை. அந்த அந்நியர்கள் விந்திய, சாத்புரா மலைகளையும், நருமதை யாற்றையும் கடந்து தென்னிந்தியாவுக்கு வருவது மிகக் கஷ்டமாகவிருந்தது மல்லாமல், தென்னிந்தியத் திராவிடர்களும் அவர்களை வரவொட்டாமற் றடுத்தும் வந்தார்கள். ஆகையினாற்றான் வட இந்தியாவிலிருந்தவர்களுக்கும் தென்னிந்தியாவி லிருந்தவர்களுக்கும் வித்தியாசங்கள் பெருகி விட்டன.

ஆரியர்கள் என்று சரித்திரங்களிற் சொல்லப்பட்டு ஆரிய ஒழுக்கத்தைக் கொண்டொழுகின நமது வடநாட்டுக் குடிகள் அயல் நாடுகளிலிருந்து வந்தவர்களோ அல்லது இந் நாட்டிலேயே இருந்தவர்களோ?—அது எவ்வாறாயினுமாகுக. அவர்கள் முதன் முதல் பஞ்சாபில் ஸிந்து நதி தீரத்தில் உண்டு உடுத்து, தேவர்களைப் பாடிக் களித்து நாகரிக வளர்ச்சியில் இருந்ததன் விவரங்கள் நமக்குக் கிடைத்துள்ளன.

அப்பொழுது, அவர்கள் ஆடுமாடுகளை மேய்த்து வந்ததல்லாமல், பயிர்த்தொழிலும் செய்து வந்தார்கள். அவர்கள் தங்களுக்கு உபயோகமான பயிர்த்தொழிற் கருவிகளையும், யுத்தத்திற்கு வேண்டிய வில், அம்பு, ஈட்டி, கத்தி, கோடாலி முதலிய ஆயுதங்களையும், வண்டி, படகு முதலிய போக்கு வரவுக்கான சாதனங்களையும் செய்துகொள்வதற்கு ஒருவாறு கற்றிருந்தார்கள். அவர்களுக்கு வஸ்திரங்கள் நெய்யவும், தோல் பதனிடவும் தெரியும். அதனால், அவர்கள் அறிவிலும், நாகரிகத்திலும் தேர்ச்சி யடைந்தவர்களென்பது தெரிய வருகிறது. அவர்களுக்கு ஆட்டத்திலும், சங்கீதத்திலும், சூதாட்டத்திலும் பிரியம் அதிகம்.

ஆரியரின் பழக்க ஒழுக்கங்கள்

அந்தக் காலத்தில் ஆரியர்கள் தாங்கள் பயிரிட்ட கோதுமை, நெல் முதலிய தானியங்களையும், தாங்கள் மேய்த்து வந்த ஆடு மாடுகளின் பால், தயிர், வெண்ணெய் முதலியவற்றையும், கீரை, காய், கனி முதலான சாகங்களையும் உண்டு களித்திருந்தார்கள். சிலவிசேஷ காலங்களில் மாத்திரம் அவர்கள் மாமிசம் புசித்து வந்தார்கள். அவர்களில் இடையர்களும், வியவசாயிகளுமன்றி சித்திர வேலைக்காரரும், மண் வேலை, மர வேலை, இரும்பு முதலிய உலோக வேலை செய்கின்றவர்களும் இருந்தார்கள். அவர்களுள் அப்பொழுது யாதொரு வித்தியாசமும் இருந்ததில்லை.

உணவும் தொழில்களும்

ஆரியர்களிற் பல குடும்பத்தினர்கள் ஒரே யிடத்தில் தங்கி ஒரு தலைவனது அதிகாரத்திற்கு உட்பட்டிருந்தார்கள். ஒவ்வொரு குடும்பத்திலுமுள்ள மற்றவர்கள் அத்தலைவனுக்கடங்கி நடந்து வருவார்கள். அவனே குடும்பத்துக்கு இறைவன் போன்றவன். தகப்பனுக்குப் பின்னர் அவனுடைய மூத்த மகன் குடும்பத் தலைமையை வகித்து நடத்துவான். ஆரியர்கள் ஸ்திரீகளை மிகவும் கௌரவமாக நடத்திவந்தார்கள். விவாக மானதும் தன் கணவன் வீட்டிற்கு வரும் ஒரு ஸ்திரீயை அவளுடைய புக்ககத்தினர் எவ்வாறன பரிவுடன் வரவேற்றார்கள் என்பதைப்பற்றின அழகான பாடல்களை நாம் ருக் வேதத்தில் காணலாம். சாதாரணமாக ஒரு புருஷன் ஒரு ஸ்திரீயைத்தான் விவாகம் செய்து கொள்ளலாம். ஸ்திரீகள் சிற்சில சமயங்களில் உடன் கட்டை ஏறினார்களெனினும், அக் காலத்தில் விதவைகள் புனர் விவாகம் செய்துகொண்டதாகவும் தெரிய வருகிறது.

குடும்பம்

பல ஆரிய குடும்பங்களுக்கும் தலைவனாகத் தெரிந்தெடுக்கப்பட்டவனே அவர்களுக்கு அரசனாவான். அவர்க

ளுடைய வழக்குக்களைத் தீர்ப்பதும், யுத்தத்தில் அவர்களை முன்னின்று நடத்துவதும், தெய்வங்களுக்குக் கொடுக்கவேண்டிய பலிகளைக் கொடுத்துத் திருப்தி செய்விப்பதும் அவனுடையதொழில். குடும்பத்தைப்போலவே,

அரசன்

அரசாட்சியிலும் ஒரு தலைவனுக்குப் பின்பு அவன் மூத்தமகன் அரசனாவது வழக்கம். சில சமயங்களில் அனைவரும் ஒன்று சேர்ந்து வேறொருவனை அரசனாகத் தெரிந் தெடுப்பது முண்டு.

ஆரியர்கள் அக்காலத்தில் அக்நி, இந்திரன், வருணன், யமன் முதலிய தெய்வங்களை வணங்கி வந்தார்கள். குளிர் தேசத்திலிருந்ததனாலும், உணவைச் சமைக்க இன்றியமையாததனாலும், வஸ்துக்களின் அசுத்தங்களைப் போக்கிச்

தெய்வங்கள்

சுத்தப் படுத்துவதனாலும், அவர்கள் அக்நியை முதல் தெய்வமாகக் கொண்டாடி வந்தார்கள் போலும். அன்றியும், அவர்கள் அக்நியை மற்றத் தெய்வங்களின் முகமெனக் கருதி, அவர்களுக்குச் செலுத்த வேண்டிய காணிக்கைகளை அக்நியில் இட்டுவிட்டால் அக்நிதேவன் அவற்றைக் கொண்டுபோய் அவரவர்களுக்குச் செலுத்தி விடுவான் என்று எண்ணியிருந்தார்கள். இப்பொழுதுங் கூட ஹிந்துக்களின் வீடுகளில் நடைபெறும் சுபாசுப கருமங்கள் பலவும் அக்நியின் முன்னிலையிற்றான் நடந்து வருகின்றன. ஸிந்துநதிக்கரையில் வசித்துவந்த ஆரியர்கள் தாங்கள் செய்த சண்டைகளைப்பற்றியும், வணங்கிவந்த தெய்வங்களைப் பற்றியும் புகழ்ந்து பாடி யிருக்கிறார்கள். அந்தப் பாடல்களை

ருக்வேதம்

ருக்வேதம் என்று வழங்கும் முதல் வேதமாகும். அப்பொழுது எழுத்துக்கள் கண்டுபிடிக்கப் படாமையினால், அப்பாடல்கள் கர்ண பரம்பரையாக வந்து, பிற்காலத்தில் எழுதி வைக்

கப்பட்டன. இதற்கு முந்திய நூல் உலகத்தில் இல்லை யென்பது பல மேதாவிகளின் தீர்மானமான கொள்கை.

நாம் ருக்வேதத்திலிருந்து அக் காலத்திய ஆரியர்களின் நடை உடை பாஷை கொள்கை முதலியனவற்றையும், அவர்களுடைய அரச வம்சங்கள், சண்டைகள் முதலியனவற்றையும் கண்டறியலாம். ஸுதாஸ் என்னும் ஓர் அரசன் விசுவாமித்திரருடைய சகாயத்தைக் கொண்டு சண்டைக்கு வந்த பத்துக் கூட்டத் தலைவர்களை, வசிஷ்டருடைய உதவியைப் பெற்று வென்றான் என்று அதில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த ருக்வேதத்திற் சொல்லப்பட்டவை யாவும் கிறிஸ்து பிறப்பதற்குச் சுமார் 2,000 வருஷங்களுக்கும், 1,400 வருஷங்களுக்கும் இடையிலுள்ள 600 வருஷகாலத்தில் நடைபெற்றன வென்பது பல சரித்திராசிரியர்களுடைய அபிப்பிராயம். **பாலகங்கா தர திலகர்** என்னும் வேதியர் ருக்வேத காலத்தைக் கி.மு. 6,000 முதல் கி. மு. 4,000 வரையில் என வரையறுத்திருக்கிறார்.

ஸுதாஸ்

iv. ஆரிய ராஜ்யங்களும், பிராமண மதமும்

ஸிந்து நதிக் கரையில் உண்டு, களித்துத் தேவர்களைப் பாடித் துதி செய்து வந்த ஆரியர்கள் அங்கேயே இருந்து விடவில்லை. அவர்கள் நாளடைவில் பெருகிவிட்டதனால், கீழ்முகமாகச் சென்று கங்கை நதிக்கரை முழுவதும் பரவி விட்டார்கள். அவர்கள் தாங்கள் புதிது புதிதாகக் குடியேறிச் சென்ற நாடுகளில் ஏற்கெனவே இருந்த பழங் குடிகளைச் சண்டையினாலும், சமாதானத்தினாலும், கொள்வனை கொடுப்பனைகளினாலும் தமக்கு வசப்படுத்திக் கொண்டார்கள். சண்டைகளில் தோற்றுப்

ஆரியரும் பழங் குடிகளும்

போன சிலர் தங்களுடைய நாடுகளை விட்டுப் பிறநாடுகளுக்கு ஓடிப்போயு மிருக்கலாம்.

நீர்வளம், நிலவளங்களை யுடையதும், தேகாரோக்கியம் பொருந்தியதுமான கங்காநதி தீரத்தில் ஆரியர்கள் பல ராஜ்யங்களை உண்டுபண்ணிக் கொண்டார்கள். ஹிந்துஸ்தானத்தில் அப்பொழுது அவர்களால் ஏற்படுத்தப்பட்ட பதினெட்டு ராஜ்யங்கள் இருந்தன வென்று தெரியவருகிறது. அவைகளில் குரு, பாஞ்சால, கோசல, விதேக ராஜ்யங்கள் தாம் முக்கிய மானவை.

ஆரிய ராஜ்யங்கள்

குரு வம்சத்தினரது ராஜ்யம் கங்காநதியின் மேற்பாகத்தி லிருந்தது. அதற்குத் தலை நகரம் ஹஸ்திநாதபுரம் என்பது. குருவம்சத்தினர் சந்திரகுலத்தரசர்களௌன வழங்கப்பட்டு வந்தார்கள். ஸிந்து நதி தீரத்தில் ஸுதாஸ் மன்னவரோடு சண்டை செய்த பத்துக் கூட்டத் தலைவர்களான பரதர்கள் இவர்களுடைய முன்னோர்களே யாவர்.

குருநாடு

பாஞ்சால ராஜ்யம் அதற்குக் கீழ் அமைந்திருந்தது. கன்னோசிக் கருகிலிருந்த காம்பில்யா என்பது அதன் முக்கிய பட்டணம்.

பாஞ்சால நாடு

அதற்கும் கிழக்கில் கோசல ராஜ்யம் இருந்தது. அந்நாட்டரசர்கள் சூரிய குலத்தைச் சேர்ந்தவர்களௌனக் கருதப்பட்டு வந்தார்கள். அந்நாட்டின் தலை நகரம் அயோத்தி என்பது.

கோசல நாடு

விதேக ராஜ்யம் என்பது கோசல நாட்டிற்கும் கிழக்கில் இருந்தது. அதன் முக்கிய பட்டணம் மிதிலை. அந் நாட்டரசரான ஜநகர் கல்விக் கடல்.

விதேக நாடு

இவற்றை யன்றி ஹிந்துஸ்தானத்தில் மத்ஸ்ய ராஜ்யம், மகத ராஜ்யம், அங்க ராஜ்யம், வங்க ராஜ்யம் முதலான

இதர ராஜ்யங்கள்

பல ராஜ்யங்களும் இருந்தன. அந்த ராஜ்யங்கள் சமாதானமாகவும், சிற்சில சமயங்களில் ஒன்றோடொன்று சண்டை யிட்டும் வந்துள்ளன.

மஹா பாரதம்

ஹிந்துக்கள் ஐந்தாவது வேதமெனக் கொண்டாடும் * மகா பாரதம் என்னும் இதிகாசம் குருவம்சத்திற் பிறந்த திருதராஷ்டிரன், பாண்டு என்னும் இரண்டு சகோதரர்களின் புதல்வர்களான துரியோதனன் முதலான நூறுபெயர்களுக்கும் பாண்டவர்கள் ஐவருக்கும் ஹஸ்திநபுரத்தரசைப்பற்றி உண்டான பகை காரணமாகக் குருக்ஷேத்திரம் என்னுமிடத்தில் பதினெட்டு நாட்கள் வரையில் நடந்த கொடிய போரையும், மற்றும் பல பழங்கதைகளையும் விவரமாகக் கூறுகின்றது. அதில் சொல்லரிய துன்பங்களை யனுபவித்தும் தருமநெறி தவறாது நடந்தொழுகின பாண்டவர்பால் ஹிந்துக்கள் பகவான் எனக் கொண்டாடும் யாதவ அரசரான கிருஷ்ணரிருந்து அவர்களுக்கு வெற்றியை யுண்டு பண்ணியது விவரமாய்ச் சொல்லப்படுகின்றது. அதில் அதிகமான கற்பனைகளிருந்தாலும், அதிலிருந்தும் அக் காலத்தில் வட இந்தியாவில் அநேக ராஜ்யங்கள் இருந்தனவென்றும் அவைகள் சிற்சில சமயங்களில் ஒன்றோடொன்று சண்டை செய்து வந்தனவென்றும் நாம் நிச்சயமாய் அறியலாம். அல்லாமலும், அக்கதையில் கங்கா நதி தீரத்திலிருந்த ஆரியர்களின் நடை, உடை, பாவனை, ஆசாரம், கொள்கை முதலியவைகளைப் பற்றின விவரங்களும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

* பரதன் என்னும் அரசன் பரம்பரையில் பிறந்தவர்கள் பாரதர். அவர்கள் வரலாற்றைக் கூறுவது பாரதம். அளவும் விஷயப் பெருமையு முடைமையால் மஹா பாரதமென வழங்குகிறது.

சரித்திர மேதாவிகள் ஆரியர்கள் கங்கா நதி தீரத்தில் குடியேறிப் பரவி ராஜ்யங்களை ஸ்தாபித்துக் கல்வியிலும், நாகரிகத்திலும் தேர்ச்சி பெற்ற காலம் கி.மு. 1400 முதல் கி. மு. 600 வரையில் உள்ள 800 வருஷ காலத்திற்கு உட்பட்டதாகும் என்று எண்ணுகிறார்கள். அப்பொழுது, அவர்கள் பல மாறுதல்களை அடைந்துவிட்டார்கள்.

கங்காநதி தீரத்திற் குடியேறி வந்த ஆரியர்களின் குடும்பங்கள் பெருகப் பெருக, அவற்றின் பாதுகாப்பின் சம்பந்தமான பல வேலைகளும் அப்பொழுதைக் கப்பொழுது பெருகி வளரத் தலைப்பட்டன. ஆதலினால், அவர்களிற் சிலர் அவர்களை எதிர்த்து வந்த பகைவர்களைக் கொன்றும், வென்று துரத்தியும் குடிகளுள் அமைதியையுண்டுபண்ணி அவர்களது வாழ்க்கை சந்தோஷமும் தெளிவும் பொருந்தி விளங்குவதற்காக ஜன சமூகத்தை யடக்கியாளுந் தொழிலைச் செய்வதற்காக நியமிக்கப்பட்டார்கள். வேறு சிலர், தங்கள் நாடுகளுக்கும், குடும்பங்களுக்கும் இடி, மின்னல், மழை, காற்று, நெருப்பு, நோய் முதலியவற்றினால் துன்பம் நேரிடாமலிருக்கும் பொருட்டும், அவையாவும் ஓங்கி வளருவதன் பொருட்டும் தினமுட காலை, நண் பகல், மாலை என்னும் மூன்று வேளைகளிலுட் தெய்வ வணக்கம் செய்யவும், விசேஷ காலங்களில் விரத மிருந்து பிரார்த்தனைகளை நடத்தவும் நெருப்பின் முன்னிலையில் பலிகள் கொடுத்துப் பூஜைகள் செய்யவும் ஏற்படுத்தப்பட்டார்கள். மற்றும் சிலர், அந்த இரண்டு தொழிலினர்களுக்கு மடங்கி, அவர்கள் கட்டளைகளை மேற்கொண்டு, அவர்களுக்கு உதவியாக இருந்து வரலானார்கள்.

தொழிற் பிரிவினைகள்

இந்தத் தொழிற் பிரிவினைகள் முதலில் சௌகரியத்தின் பொருட்டே ஏற்பட்டனவாயினும், அவைகள் நாளடைவில் அவர்களுள் விசேஷமான வித்தியாசங்களை உண்டுபண்ணிவிட்டன. பிற்காலத்தில் அவர்கள் முறையே க்ஷத்திரியர் (ராஜந்யர்) என்றும் பிராமணர் என்றும் வழங்கப்பட்டு வந்ததையன்றி, இரண்டு தனி ஜாதியர்களுமாய் விட்டார்கள். ஜாதி பேதங்கள் இவ்விரண்டுடன் நில்லாமல், நாளடைவில் இன்னமும் பெருகி வரத் தலைப்பட்டன. வாணிபமும், வியவசாயமும் செய்து நாட்டின்

ஜாதி பேதங்கள்

செல்வத்தை வளர்த்து வந்தவர்கள் வைசியர் என்று தனிப்பட்ட ஒரு ஜாதியாராகவும், மேலே குறித்த மூன்று வகுப்பினர்களுக்கு மடங்கி அவர்களுக்குப் பலவிதத் தொண்டுகள் புரிந்த சாதாரண ஜனங்கள் சூத்திரர் என்று வேறு ஒரு ஜாதியாராகவும் ஏற்பட்டுவிட்டார்கள்.

தொழிற் பிரிவினைகள் உண்டான பின்பு, ஆரியர்கள் அவரவர்கள் ஏற்றுக்கொண்ட தொழில்களையே முற்றிலுங் கவனித்து வந்து அந்தத் தொழில்களிற் செம்மையாகப் பயின்று, அவற்றில் மிக்க மேம்பாட்டையடைந்து விளங்கினார்கள். எவ்விதமான கவலையுமில்லாது சுகஜீவனஞ் செய்து வந்த இரண்டாவது வகுப்பினராகிய புரோகிதர்கள் கல்வி, கேள்விகளிலும், தெய்வ வணக்கத்திலும், வேதமோதுவதிலும், யாகங்கள் செய்வதிலும் மிகுந்த தேர்ச்சியை யடைந்தார்கள். அவர்கள் தங்களுடைய மேன்மையைக் கருதிப் புதிதுபுதிதாகப் பல்வேறு சடங்குகளை உண்டு பண்ணிக்கொண்டு, அவற்றைச் செய்தாலன்றி முக்தியடைய முடியாதென்றும், பாவங்களைப் போக்க முடியாதென்றும், அனைவருக்கும் உபதேசித்து வரலானார்கள். சடங்குகளும், யாகங்களும் பெருகப் பெருக, அவற்றைச் செய்வதற்கான முறைகளும், தந்திரங்களும் அதி

கரித்தன, அவற்றை யெல்லாம் விவரித்துச் சொல்லும்

யஜுர், ஸாம வேதங்கள்

நூல் யஜுர் வேதம் எனப் பெயர் பெற்றது. யாக காலங்களில் தேவதைகளைச் சந்தோஷப்படுத்துவதற்காகவும் செய்பவர்களின் களிப்பிற்காகவும் அவர்கள் வீணைகானத்துடன் பாடிவந்த இனிய வேத பாசுரங்கள் யாவும் ஸாமவேதம் என்னும் பெயரைப் பெற்று விளங்கின.

அதர்வ வேதம்

ஆரியர்களல்லாத பழைய குடிகளின் பழக்கங்களிற் சில கொஞ்சமும் மாறுபடாமல் இருந்து வந்ததனால், சாமான்ய ஜனங்கள் பேய், பிசாசு, சூன்யம் முதலியன உண்டெனவும், அவற்றை மந்திரங்களினால் போக்கக் கூடுமென்றும், பகைவர்களையும், வியாதிகளையும், விஷங்களையுங்கூட மந்திரங்களினால் ஜயிக்கக் கூடுமென்றும் எண்ணினார்கள். அதனால், அவற்றிற்கான மந்திரங்களையும், சண்டை செய்யும் மந்திரங்களையும் ஒன்றாகத் திரட்டிப் பிறகு அவற்றை **அதர்வ வேதம்** என்னும் பெயருடன் வெளியிட்டார்கள்.

பிராமண ஆதிக்யம்

ஆரியர்கள் இப்பொழுது நான்கு வகுப்புக்களாகப் பிரிந்திருந்தாலும், ஒரே மதத்தைத் தழுவியும், ஒரே விதமான சடங்குகளைச் செய்தும், தங்கள் பழைய தெய்வங்களையே வணங்கியும் வந்தார்கள். ஆயினும், நாளடைவில் பிராமணர்களின் உதவி யில்லாமல் மற்ற வகுப்பினர்கள் எந்தவிதமான சடங்குகளையும் சொந்தமாகச் செய்து கொள்ள முடியாமற் போயிற்று. அதனால், புரோகிதர்களுக்கு அந்தஸ்தும், ஆதிக்யமும் பெருகி முடிவில் அவர்களுக்கு மதச் சடங்குகளே ஒரு பெருந் தொழிலாகவும் ஏற்பட்டு விட்டது. அல்லாமலும், புரோகிதர்களான பிராமணர்கள் கல்விகேள்விகளினா லுண்டான பெருமையி

ஞலும், சாஸ்திரப் பயிற்சியினுலும், வைதிகச் சடங்குகளை முன்னின்று நிறைவேற்றுவதனுலும் முதல் வகுப்பினராக மதிக்கப்படலானுர்கள்.

பிராமணர்கள் க்ஷத்திரியர்களுக்கும், வைசியர்களுக்கும் குறித்த வயதில் உபநயனம் செய்வித்துத் தங்களைப் போலவே அவர்களையும் த்விஜர்க ளாக்கினுர்கள். த்விஜர் என்ருல் இரு பிறப்பினை யுடையவர் என்று பொருள். தாய் வயிற்றிலிருந்து பிறப்பது ஒன்று, உபநயனம் முதலிய சடங்குகளால் அடையும் பிறப்பு மற்ருென்று. இந்த த்விஜர்கள் மட்டில் தான் வேதங்களை யோதலாம்.

த்விஜர்

ஆரியர்களிற் சாதாரண ஜனங்கள் பற்பல தெய்வங்களைக் கொண்டாடி வந்தார்களேனும், அவர்களில் அறிவு மிகுந்த சிலர் ஆதி யந்த மில்லாமல் சுயம்புவா யிருக்கிற கடவுள் ஒருவரே என்றும், அவருக்கு ஆக்கல், அளித்தல், அழித்தல் ஆகிய மூன்று தொழில்களும் பொருந்தியவை என்றும், அவற்றைச் செய்யும் பொழுது அவர் முறையே **பிரமன், மஹா விஷ்ணு, பரமசிவன்** எனப் பெயர்கள் பெறுகிருர் என்றும் எண்ணினுர்கள். கடவுளின் குணங்களை ஆராய்ச்சி செய்யத் தொடங்கினதினின்றும், சிருஷ்டிப் பொருள்களுக்கும், சிருஷ்டி கருத்தாவிற்கு முள்ள சம்பந்தத்தைக் கண்டறிய முயன்றதினின்றும், அவர்களுடைய வேதாந்தங்கள் உண்டாயின.

மும்முதற் கடவுளர்

வேதங்களையும், யாகச் சடங்குகளையும் பிராமணர்கள் நன்ருகக் கற்றிருந்தார்களாஞலும், கல்வி அவர்களோடு நின்று விடவில்லை. அப்பொழுது அவர்களுடன் கல்வி, கேள்விகளிலும், ஆத்ம ஞானத்திலும் போட்டி போடவல்ல க்ஷத்திரியர்களும்

க்ஷத்திரியர் களின் கல்வி

இருந்தார்கள். நாட்டின் பல விடங்களிலும் கலாசாலைகள் ஏற்பட்டு, அவற்றில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் கல்வி கற்று வந்தார்கள்.

பல கலைகள்

அப்பொழுது அவர்கள் சஸ்திர சிகிச்சை, வான சாஸ்திரம், பூகணிதம், பின்னக் கணக்கு, உச்சரிப்புச் சாஸ்திரம், வைத்தியம், இலக்கணம், காவ்யம், சட்டம் முதலிய பல கலைகளிலும் தேர்ச்சி யடைந்திருந்தார்கள். இவ்வாறாகச் சடங்குகளையும், ஜாதி பேதங்களையும் உண்டு பண்ணின பிராமண மதம் சில நன்மைகளுக்கும், சில தீமைகளுக்கும் காரணம் ஆயிற்று. அன்றியும், அது பழைய வேத மதத்தினின்றும் மிக வேறுபட்டும் இருந்தது.

I. மகத ராஜ்யத்தின் முன்னேற்றம்

i. மகத நாட்டின் உற்பத்தி

ஹிந்துஸ்தானத்தில், ஆரியர்கள் ஏற்படுத்தின ராஜ்யங்கள் ஒருகால் ஒன்றும், மற்றொருகால் மற்றொன்றுமாக முதன்மை பெற்று விளங்கின. அவ்வாறு மேன்மை பொருந்தி யிருந்தனவற்றுள் குருநாடு, பாஞ்சால நாடு, கோசல நாடு, காசி ராஜ்யம், விதேக ராஜ்யம் என்பவை சிலவாம்.

அவந்தி ; கோசலம்

அவற்றைப் பற்றின சரித்திரங்கள் நமக்குக் கி. மு. ஏழாவது நூற்றாண்டு முதல்தான் கால நிர்ணயத்துடன் கிடைத்துள்ளன என்னலாம். அப்போது முதலில் சிலகாலம் வரையில் உஜ்ஜயினிபுரத்தை ராஜதானியாகவுடைய அவந்தி ராஜ்யம் மேலானதாக விருந்தது.

அதற்குப் பின்பு கோசல ராஜ்யம், காசி விதேக ராஜ்யங்களை ஜயித்துத் தன்னதிகாரத்திற் குட்படுத்திக்கொண்டு, முதன்மையாக விளங்கிக்கொண்டிருந்தது. ஆனால், அதன் பெருமை சீக்கிரத்திலேயே அழிந்துபோய்விட்டது.

பிறகு சுமார் கி. மு. 650-ல் சைசுநாகவம்சத் தரசர்கள் மகத நாட்டில் ஆட்சிபெற்று அதை முன்னுக்குக் கொண்டு வந்தார்கள். அந்த வம்சத்தின் மூல புருஷரான சிசுநாகர் ராஜக்ருஹம் என்னும் பட்டணத்தைத் தமது ராஜ்யத்தின் தலைநகரமாகச் செய்து கொண்டார். ஆனால், மகத ராஜ்யத்தின் பெருமை அந்த வம்சத்தின் ஐந்தாவது அரசரான பிம்பிஸாரர் காலத்தில் தான் தொடங்கிற்று. அவருடைய ஆட்சியில் இரண்டு மஹா புருஷர்கள் தோன்றி இரண்டு புதிய மதங்களைக் கண்டு பிடித்தார்கள்.

சைசுநாக வம்சம்

ii. சமண பௌத்த மதங்கள்

நாகரிகத்திலும், கல்வி கேள்விகளிலும், ஆத்ம ஞானத்திலும் மிக்க தேர்ச்சியை யடைந்திருந்த ஆரியர்களிற் சிலர் மனிதர்கள் படுந் துன்பங்களையும், துயரங்களையும் கண்டு வருந்தின தல்லாமல், யாக்கை, ஆக்கம், சுகம், சௌந்தரியம் முதலிய யாவும் அநித்யமானவைகளென்றும், அவை மானிடர்களுக்குச் சமமாக அளிக்கப் படாமல் அதிகமாகவுங் குறைவாகவு மிருந்து வருவதைக் கண்டு பிறவியைத் துன்பமென்றும், வாழ்க்கையைப் பயனற்ற தென்றும் தீர்மானித்துப் பிறவித் துன்பத்தினின்றும் நீங்குவதற்கான வழியைக் கண்டு பிடிக்கவேண்டுமென்று முயன்று வந்தார்கள். அம் முயற்சியில் சிலர் வீட்டைத் துறந்து காட்டை யடைந்து கடுந்தவஞ் செய்யலானார்கள். நாளடைவில் இல்லறத்தை யொழித்துத் துறவறத்

ஆத்மாஞானம்

தைக் கைக்கொண்டு தான் பிறவிப் பெருங்கடலைக் கடத்தல் கூடும் என்னும் எண்ணம் ஜனங்களிடம் பரவி வரத் தலைப்பட்டது.

சமணமும் பௌத்தமும் உண்டானது

துறவிகளாகாமல் எவரும் வீடு பெற வியலாது என்னும் இக் கொள்கை ஆரியர்களுள் அதிகமாகப் பரவினபொழுது, அந்தணர்களுக்கு மாத்திரம் துறவு நிலை உண்டென்றும், மற்றவர்களுக் கில்லை என்றும் ஏற்பட்டதனால், அதற்குப் போட்டியாக மஹாவீரரும், கௌதம புத்தரும் க்ஷத்திரியர்களும் துறவிகளாகி வீடு பெறும் முறைகளை யமைத்தார்க ளென்றும், அதன் பின்னர் மற்றைய ஜாதியாரும் அம் முறைகளை யொட்டித் துறவிகளானார்கள் என்றும் தெரியவருகின்றது. இவ்வாறாகப் பௌத்தமும், சமணமும் பிராமண மதத்துக்குப் போட்டியாக உண்டாயின. என்றாலும், இவைகள் புதிய மதங்களல்ல என்பது சிலருடைய அபிப்பிராயம். இவ்விரண்டும் வெவ்வேறு மதங்களா அல்லவா என்பதைப்பற்றி அபிப்பிராய பேதங்களிருந்து வந்தாலும், ஆரியம், பௌத்தம், சமணம் என்னும் மூன்று முறைகளினுடைய கொள்கைகளும் மிகுந்த வேறுபாடுகளை யடைந்திருக்கவில்லை யென்பதும், பிந்திய விரண்டும் முந்தியதான ஆரிய மதத்திலிருந்தே பிரிந்து ஏற்பட்டவைக ளென்பதும் பலரும் ஒத்துக்கொள்ளக் கூடிய விஷயங்களாம். பரத நாட்டில் கையாளப்பட்டு வந்த எண்ணிறந்த முறைகளில் இவை சில என்பதுதான் உண்மையான கொள்கையாம்.

சமணம் என்னும் மதம் கி. மு. 599-ல் அவதரித்த மஹா வீரர் என்னும் பெயர் பூண்ட வர்த்தமானரால் கண்டு பிடிக்கப்பட்டது. அவர் க்ஷத்திரிய ஜாதியைச் சேர்ந்தவர்; சித்தார்த்தர் என்னும் பிரபுவின் புதல்வர். அவர்

விதேக ராஜ்யத்தின் தலைநகரான வைசாலி என்னும் நகரத்தைச் சார்ந்த ஒரு கிராமத்திற் பிறந்தவர்.

அவர், தமக்குச் சுமார் முப்பது வயதான பொழுது இல்லறத்தை நீத்துத் துறவறம் பூண்டார். சுமார் பன்னிரண்டு வருஷங்களளவும் அவர் திகம்பரராய் அங்குமிங்கும் அலைந்து திரிந்து தாம் உண்மையறிவைப்பெற்று விட்டதாகச் சொல்லி மஹாவீரர் என்றும் ஜினர் என்றும் வேறு பெயர்களை வைத்துக் கொண்டார். கோசல, விதேக, மகத ராஜ்யங்களில் அவர் சஞ்சரித்தபொழுது, நூற்றுக் கணக்கான க்ஷத்திரியர்கள் அவரைப் பின்பற்றி அவருக்குச் சிஷ்யர்களானார்கள். மகத ராஜ்யத்தை யாண்ட சைசுநாக வம்சத்தைச் சேர்ந்த பிம்பிஸாரரும், அவர் மகன், அஜாதசத்ருவும் ஜினரைச் சந்தித்துச் சம்பாஷித்தனரெனச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு கால் அது கற்பனையாகவும் இருக்கலாம். ஜினர் கி. மு. 527-ல் தமது எழுபத்திரண்டாவது வயதில் பாவா என்னுமிடத்தில் தேக வியோகமானார்.

ஜினர்

சமண மதத்தில் ஜாதி பேதமில்லாமல் எல்லா மதத்தினரும், மிலேச்சருங்கூடச் சேர்ந்து முக்தி பெறலாம் என்று அவர் போதித்து வந்தார். ஒருவன் பிறவித் துன்பத்தை யொழிக்க வேண்டுமானால், ஜினரையும், அவருடைய உபதேசங்களையும் நம்புவதுமன்றி, தீச் செயல்களையும், கொடுமைகளையும் நீத்து, மனத்தினாலும் பாப காரியங்களை நினையாதவனாகி உலகப்பற்றுக்களை விட்டுத் தரும நெறியில் நடந்தொழுகவேண்டும். சிலர் இல்லறத்தை விட்டகலாமல், அவர் போதித்து வந்த உண்மைகளை மட்டில் கைக்கொண்டும், மற்றுஞ் சிலர் தரும வழியில் நடந்தொழுகினதே யல்லாமல், துறவரம்

சமண மதக் கோள்கைகள்

பூண்டும் அவரை வழிபட்டார்கள். இவர்களிற் பிந்திய வர்கள் தாம் முக்தியடைய இயலும் என்றாலும், முந்திய வர்களும் முக்தி மார்க்கத்தில் வெகு தூரம் செல்லக் கூடும் என்பதும் ஜினருடைய அபிப்பிராயம். இவ்விரண்டு வகுப்பினர்களும் ஒற்றுமையோடு வாழ்ந்து வந்ததல்லா மல், இல்லற வாழ்க்கையி லிருந்தவர்கள் துறவிகளுக்கு உற்ற துணைவர்களுமானார்கள். மனிதர்களுக்கும் மிருகங் களுக்கு மன்றிப் புல், பூண்டு, காற்று, நெருப்பு முதலி யனவற்றிற்கும் ஜீவன் உண்டு என்பது சமணருடைய கொள்கை. அவர்கள் ஒரு பரம்பொருள் உண்டென் பதை நம்பவில்லை; ஜீவாத்மாவின் மேலான குணங்கள் யாவும் பரிபக்வத்தை யடைந்து உயர்ந்து, ஓங்கி, நன்றாய் விகசிப்பதுதான் பரமாத்மா வெனப்படுவது என்று எண்ணினார்கள். சமணர்கள் அஹிம்ஸையை மிகச் சிறந்ததாகப் பாராட்டி வந்ததனால், அவர்கள் பிற மதத் தினர்களுக்கு எவ்விதமான தீங்கையும் செய்ததில்லை.

வகுப்புக்கள்

சமண மதத்தைச் சேர்ந்த திகம்பர, சுவே தாம்பர வகுப்பினர்களை நாம் இப்பொழு தும் காணலாம். அவர்கள் பெரும்பாலும் நமது நாட்டின் மேற்கிலும், இராஜபுதனத்திலும் இருக் கிறார்கள். அவர்களுக்கு எக் காலத்திலும் பிராமண மதத் தில் பகை இல்லை.

மகத ராஜ்யத்தின் வடமேற்கில் ஆரிய வம்சத்தைச் சேர்ந்த **சாக்கியர்கள்** என்னும் ஒரு வகுப்பினர் இருந்தார் கள். அவர்களுடைய நாடு கோசல, மகத ராஜ்யங்களுக் கிடையில் ரோஹிணி நதியைச் சார்ந்திருந்தது. சாக் கியர்கள் பயிர்த் தொழிலையும், ஆடுமாடுகளை மேய்ப்பதை யும் முக்கிய ஜீவனோபாயமாகக் கொண்டொழுகினார்கள். அவர்கள் நாடு சுவேச்சாதிகாரம் பெற்றுக் குடியரசு முறையில் ஆட்சி செய்யப்பட்டு வந்தது. சிறியவரும்

பெரியவருமடங்கிய ஒரு சபையே அந் நாட்டைப் பரிபாலித்து வந்தது. ராஜரீகம் நடத்துவதும்,

சாக்கியர்கள்

நியாயம் செலுத்துவதும் அச் சபையின் பொறுப்பு. அச் சபை கூடும்பொழுது குடிகளினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தலைவன் அச் சபையில் அக்ராஸனம் வகித்துச் சபையை நடத்துவான். அம் முதல்வனுக்கு அரசனெனும் பட்டமும்

குடியரசு

உண்டு. ஒவ்வொரு கிராமத்திலும் அதன் பரிபாலனத்துக்கு வேண்டிய ஒரு சபை இருந்தது. அச் சபைகள் கிராமத் தோப்புக்களிற் கூடித் தத்தம் பொறுப்புக்களை நிறைவேற்றும்.

பௌத்த மதத்தைக் கண்டு பிடித்த சித்தார்த்தர் அந்தச் சாக்கிய வம்சத்தைச் சேர்ந்தவர். அவர் கி. மு. ஆறாவது நூற்றாண்டின் மத்தியில் நேபாளத்திலுள்ள கபிலவாஸ்து என்னும் நகரத்தினருகில் அவதரித்தார். அவருடைய தந்தை சாக்கிய வரசரான சுத்தோதனர் என்பவர். சுத்தோதனர் தமது மனைவியரான மாயா தேவியார் கருப்பவதியா யிருக்கையில் அவரைக் கபில வாஸ்துவிலிருந்து அவருடைய தாய் வீட்டிற் கனுப்பினார். அவ் வம்மையார் வழி நடுவில் பிரஸவ

புத்தர் பிறப்பு

வேதனைப்பட்டு லும்பினித் தோட்டத்தில் ஓர் ஒப்பற்ற ஆண் குழந்தையைப் பெற்றார். அக் குழந்தைதான் உலகம் புகழும் புத்தர் பிரானார்.

கௌதமர் என்றும் சித்தார்த்தர் என்றும் வழங்கப் பெற்ற அக் குழவி ஜனித்த பொழுது பல விநோதக் காட்சிகள் காணப்பட்டன வென்றும், ஒரு மகான் அக் குழந்தை ஒரு புத்தர் ஆவார் என்று சொன்னாரென்றும் சொல்லப்பட்டு வருகிறது. தாயைச் சீக்கிரத்திலேயே இழந்துவிட்ட கௌதமர் தமது மாற்றாந்தாயினால் வளர்க்கப்பட்டு வந்தார். அவர் செல்வத்திலும், மேன்மை

யிலும் வளர்ந்து வந்தாலும், க்ஷத்திரிய கலைகள் பலவற்றிலும் நன்றாகப் பயின்று தேர்ச்சியும் பெற்றார். அவருடைய தந்தையார் அவருந் தம்மை யொத்து க்ஷத்திரிய தருமத்தையே கைக்கொண்டொழுக வேண்டுமென வெண்ணி அவருக்குப் பிணி, மூப்பு, இறப்பு முதலிய துன்பங்கள் கண்களிற் படாதிருப்பதன் பொருட்டு, அவர் அரண்மனையை விட்டு வெளியே போகும் பொழுது கிழவர்களாவது, நோயாளிகளாவது கூன், குருடு செவிடு முதலான அங்கக் குறையுள்ளவர்களாவது வீதிகளில் வராதபடி கபிலவாஸ்துவின் குடிகளுக்குத் திட்டஞ் செய்திருந்தார். அவரிருப்பதற்கென்று ஓரழகான நந்தவனத்தின் மத்தியில் ஒரு சிறந்த மாளிகையையும் அரசர் அமைத்துக் கொடுத்தார்.

வாலிபம்

அன்றியும், அவருக்கு வயது சுமார் இருபதான பொழுது அத் தந்தையார் அவருக்கு யசோதரை என்னும் அழகு வாய்ந்த ஒரு பெண்மணியை விவாகஞ் செய்துவைத்தார். சீக்கிரத்திலேயே அந்தத் தம்பதிகளுக்கு ராகுலன் என்னும் ஒரு புத்திரனும் பிறந்தான்.

உலகத்தில் மனிதர் படும் கஷ்ட நஷ்டங்களைச் சிறிதும் அறியாமல், சுகத்திலும், செல்வத்திலும் வளர்ந்து வந்த சித்தார்த்தர் ஒரு நாள் வயது முதிர்ந்த ஒரு கிழவனையும், மற்றொரு நாள் ஒரு நோயாளியையும், இன்னமொரு நாள் ஒரு பிணத்தையுங் கண்டார். அல்லாமலும், அவர் பக்ஷிகளும் மிருகங்களும் தங்களுக்குள் சண்டை யிட்டு வலியவை மெலியவற்றை யடித்துக் கொன்று தின்பதையும், மனிதர்கள் அவை யனைத்தையும் வதைத்துக் கொன்று உயிர் வாழ்வதையுங் கண்டு மிகவும் மனம் நொந்தார். அப்பொழுது அவருக்கு உலகத்திலுள்ள உயிர்களின் கஷ்டங்களைப் போக்கி, அவைகளுக்குச் சுகத்தை யுண்டாக்கும்

அநுபவம்

வழியைக் கண்டு பிடிக்க வேண்டும் என்னும் பேரவா உண்டாயிற்று.

அவர் ஒரு நாள் நள்ளிரவில் அரண்மனைச் சுகங்களையும், அன்புள்ள மனைவியையும், அருமை மகனையும் திடீரென்று விட்டுப் பிரிந்து திரும்பியும் பாராமல் ஞானத்தை நாடிக் காடுகளில் திரியலுற்றார். விலங்குகளைக் கொன்று யாகங்கள் செய்வது பயனற்ற காரியம் என்று அவருக்குத் தோன்றவும், அவர் கல்வி கேள்விகளிற் சிறந்த இரண்டு பிராமணர்களை நாடி அவர்களுடைய சகல கலைகளையும் ஐயந்திரிபறக் கற்றார். அவற்றினின்றும் அவருக்குத் தாம் தேடிச் சென்ற உண்மை வழி கிடைக்கவில்லை. பிறகு, அவர் ஆறுண்டளவு உருவேலா என்னும் கானகத்தில் அகோரமான தவஞ் செய்தார். அதனால் உடம்பு மெலிந்ததே யன்றி, அவருக்கு யாதொரு பயனுங் காணக் கிடைக்கவில்லை. அப்பொழுது அவர் தவத்தினாலாவது யாதொன்றுமில்லை எனத் தீர்மானித்தார். பல வழிகளில் முயன்றும் அவருக்கு மெய்யறிவு உண்டாகவில்லை. என்றாலும், அவர் உண்மையை நாடிப் பல வருஷங்கள் வரையில் அல்லும் பகலும் உழைத்து வந்தார். கடைசியில் ஒரு நாள் அவருக்குத் திடீரென்று ஞானம் உதயமாயிற்று.

ஞானத்தை நாடினது

முடிவில் அவர் எல்லாவித துன்பங்களுக்கும் ஆசைதான் காரணம் என்பதைக் கண்டறிந்தார். ஆசையையொழித்துவிட்டால், எந்த விதமான கஷ்டமும் ஜீவனையணுகாது என்பதையும் அவர் நன்றாகத் தெரிந்து கொண்டார். பின்பு, அவர் ஆசையை யொழிக்கும் வழியைக் கண்டறிய வேண்டுமென்று முயன்று வந்தார். அவர், உண்மையான நம்பிக்கை, உண்மையான நாட்டம்,

உண்மை யறிவு

உண்மையான பேச்சு, உண்மையான செயல், உண்மையான ஜீவனமார்க்கம், உண்மையான முயற்சி, உண்மையான தியானம் ஆகிய இவைகளை யொருவன் கைக்கொண்டொழுகினால் அவனுக்கு ஆசை முற்றும் ஒழிந்து போம் என்னும் உண்மையைக் கண்டறிந்தார். இவைகளையன்றி நீதி வழுவாமலும், கற்றோரிடத்தில் மரியாதையுடனும், மனைவி மக்களிடம் அன்புடனும், தீவினைகளை யகற்றியும், சாந்தம், வணக்கம், திருப்தி, நன்றியறிவு, பூததயை முதலான குணங்களிற் பழகியும் அவற்றை அநுஷ்டித்தும் யாவரும் நடந்தொழுக வேண்டுமென்பதும் அவருடைய தீர்மானமான கொள்கை. இவ்வாறான மெய்ஞ்ஞானம் அவருக்கு உண்டான பிறகு அவர் புத்தர் என வழங்கப் பெற்றார்.

புத்தர் தாம் பல நாள் வருந்திக் கண்டறிந்த உண்மைகளை ஜனங்களுக்குப் போதித்து அவர்களையும் உண்மை யறிவுள்ளவர்களாக்க வேண்டுமென்று சுமார் 45 வருஷங்கள் வரையில் ஊர் ஊராகச் சென்று தமது கொள்கைகளைப் பிரசங்கித்தார்.

மதப் பிரசாரம்

அவர் சென்ற சென்ற இடங்கள் தோறும் ஆயிரக் கணக்கான ஜனங்கள் அவரைப் பின்பற்றி அவருக்குச் சிஷ்யர்களானார்கள். அவர்களும், அவ்வாறே, பெரிய பெரிய பட்டணங்கள் தோறும் சென்று பௌத்த மதத்தின் உண்மைகளைப் போதித்து வந்ததனால், அந்த மதம் பரவிச் செழிக்கலாயிற்று. புத்தர் தமது தயை, சாமர்த்தியம், சாந்தம் முதலான நற்குணங்களினால் கேட்பவர்களின் மனத்தைக் கவர்ந்து அவர்களைத் தமது வசமாக்கிக் கொண்டார். ஜாதிபேதமின்மையும், யாக யக்யங்கள் இல்லாமையும், எல்லோரும் சமம் என்று மதிக்கப்பட்டமையும் பௌத்த மதம்

எளிதிற் பரவினதற்குக் காரணங்களாம்.

மத வளர்ச்சி

கோசல, மகத தேசத்து மன்னர்கள் கூடப் புத்தரைக் கொண்டாடினார்கள். என்றும் அழியாததும், ஒப்பற்றதுமான புகழைச் சம்பாதித்துப் புத்தர் கி.மு. 480-ல் குசிநாகரம் என்னுமிடத்தில் பரகதியை யடைந்தார்.

சிஷ்யர்கள்

புத்தர் காலத்திற்குப் பின்பு, பௌத்த சந்நியாசிகள் அவருடைய மதத்தை வளர்த்து வந்தார்கள். ஜாதி மத வேற்றுமைகளின்றிப் புருஷரும், பெண்டிரும் துறவிகளாகி அவரை வழிபட்டு வந்தார்கள்.

பௌத்தர்கள் பிராமணர்களினின்றும் வேறுபட்டார்களெனினும், அவர்கள் பிராமணரையாவது அவர்களுடைய கொள்கைகளையாவது பழித்ததில்லை. புத்தர் தமது சிஷ்யர்கள் பிராமணருடன் எவ்வித சச்சரவுஞ் செய்யக் கூடாது என்று போதித்து வந்தார். அவ்விரு மதத்தினர்களும் பெரும்பாலும் ஒற்றுமையாகவே இருந்து வந்தார்கள். ஆயினும், பௌத்தமதம் உண்டானதன் காரணமாகப் பிராமண மதத்திற் பல திருத்தங்கள் ஏற்படலாயின. யாகங்கள் செய்வதும், பலி கொடுப்பதும் இன்றியமையாதன வல்ல என்னும் அபிப்பிராயம் பரவி வரத் தலைப்பட்டது.

பிராமணம் திருந்தியது

அல்லாமலும், முக்திக்குப் பக்தியே சிறந்தது என்னும் கொள்கை பரவவும், பலரும் பக்தி மார்க்கத்தைக் கடைப்பிடித்து நடந்தொழுகி வரலானார்கள். அதனால் பிராமண மதம் க்ஷீணிக்கவாவது, குறைவுபடவாவது இல்லை.

iii. சைசுநாக, நந்த வரசர்கள்

மகத ராஜ்யத்தை யாண்ட சைசுநாக வரசர்களுள் ஐந்தாம் அரசரான பிம்பிஸாரர் தாம் முதன்மையானவர்.

என்று நமக்குத் தெரியும் அல்லவா? அவர் சுமார் கி. மு. 582-ல் பட்டத்துக்கு வந்தார். அவர் அங்க நாட்டை ஜயித்துத் தமது ராஜ்யத்திற் சேர்த்துக் கொண்டார். அல்லாமலும், அவர் கோசல, லிச்சாவி ராஜ வம்சங்களி லிருந்து இரண்டு பெண்களை மணஞ் செய்துகொண்டு, அந் நாட்டரசர்களைத் தமக்குச் சிறந்த துணைவர்களு மாக்கிக் கொண்டார். அவர் மகத ராஜ்யத்தின் தலைநகரமான புதுராஜக்ருஹம் என்னும் பட்டணத்தைக் கட்டுவித்தார். மகத ராஜ்யத்தின் முன்னேற்றத்திற்கு அவர் தாம் முதல் முதலில் காரணமானவர். அவர் சமண மதத்தினரெனத் தெரிய வருகிறது. அவர் 28 வருஷ காலம், அதாவது கி. மு. 554 வரையில், ஆட்சி செய்தார். அவருக்கு சிரேணிகர் என்னும் பெயரும் உண்டு.

பிம்பிஸாரர்

பிம்பிஸாரருக்குப் பின்பு அவருடைய புதல்வரான கூனிகர் என்னும் அஜாதசத்ரு பட்டத்துக்கு வந்தார். அவர் கோசல விதேக நாடுகளின்மீது படை யெடுத்துச் சென்று, அவற்றைத் தமது வசமாக்கிக் கொண்டார். அவர் கோசல நாட்டரசரின் புதல்வியை மணந்துகொண்டு தமது தந்தைக்குச் சொந்தமா யிருந்த காசி ராஜ்யம் தமக்குஞ் சொந்தமென்பதை ஸ்தாபித்துக் கொண்டார். அவர் கண்டகி என்னும் ஆறு கங்காநதியில் சங்கமமாகு மிடத்தில் ஒரு சிறந்த கோட்டையைக் கட்டினார். அது பிற்காலத்தில் மகத ராஜ்யத்தின் ராஜதானியான பாடலிபுரம் என்னும் பெரிய நகரமாயிற்று. சுமார் கி. மு. 527-ல், அஜாதசத்ரு காலஞ் சென்றார். அவர் தமது தந்தையைக் கொன்று பட்டத்துக்கு வந்தார் என்றும், தாம் செய்த குற்றத்திற்கு என்ன பரிஹாரம் என்று புத்தரை யணுகிக் கேட்கப் புத்தர் அரசர் தாம் செய்த பாபத்திற்காக

அஜாதசத்ரு

அநுதாபப்பட்டதே போதுமானது என்று சொன்னு ரென்றும் ஒரு கதை வழங்குகின்றது. அது உண்மை யென்பதை நிச்சயமாய்ச் சொல்ல முடியாது.

தர்சகர்; உதையர்

அஜாதசத்ருவுக்குப் பின்பு அவர் மைந்தர்களான **தர்சகரும், உதையரும்** முறையே பட்டத்துக்கு வந்தார்கள். உதையர் கி. மு. 503-ல் அரசராளு ரென்று சொல்லப்பட்டிருக்கிறது. இவர் பாடலிபுரத்துக்கு அருகில் **குசுமபுரம்** என்னும் ஒரு நகரத்தைக் கட்டுவித்தார்.

பிந்திய சைசு நாகர்

உதையருக்குப் பின்பு நந்தி வர்த்தனரும், மஹாநந்தரும் ஒருவர் பின்னொருவராக மகதராஜ்யத்தை ஆண்டு வந்தார்கள். இவர்கள் தாம் சைசுநாக வம்சத்தின் கடைசி அரசர்கள். சிலர் இவர்கள் நந்த வம்சத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் எண்ணுகிறுர்கள். அஜாதசத்ருவுக்குப் பின் மகத ராஜ்யத்தை யாண்டு வந்த சைசுநாக வரசர்கள் மிகக் கொடியவர்களே யாயினும், வத்ச, அவந்தி நாடுகளை வென்று தமது ராஜ்யத்தைப் பெருக்கினுர்கள். மகத ராஜ்யத்தின் பெருமைக்கு அதன் அமைப்பும், செழிப்பும், போக்கு வரவுக்கான சாதனங்களும், செல்வமும், படையும் சிறந்த காரணங்களாயின.

நந்தவரசர்கள்

அவர்களுக்குப் பிறகு சுமார் கி. மு. 413 முதல் சற்றேறக் குறையத் தொண்ணூறு வருஷங்கள் வரையில் **நந்த வம்சத்** தரசர்கள் மகத ராஜ்யத்தை யாண்டு வந்தார்கள். அவர்கள் ஒன்பதின்மர். மஹாபத்ம **நந்தர்** என்பவர் அவ் வம்சத்தின் மூல புருஷர். அவருடைய தாய் தாழ்ந்த குலத்தினளான தனல் நந்த வம்சத்தினர் கேவலமாக எண்ணப்பட்டார்கள். இந்த அரசர்களைப் பற்றின விவரம் யாதொன்றும் கிடைத்திலது. ஆனுலும், இவர்களுக்கு

மிருந்த செல்வமும், பெரும்படையும் சொந்தமாயிருந்தன. மஹா பத்ம நந்தருக்கு 2,000 ரதங்களும், 4,000 கஜங்களும், 20,000 துரகங்களும், 2,00,000 பதாதிகளும் இருந்தனவென்று சொல்லப்பட்டிருக்கிறது.

iv. பாரஸிக, கிரேக்கப் படை யெழுச்சிகள்

டரையஸ்

சைசுநாக வம்சத் தரசர்கள் மகத ராஜ்யத்தை யாண்டு வந்த காலத்தில், இந்தியாவிற்கு மேற்கில் பாரஸிகர்கள் மிகப் பிரபலமாகி ஒரு பெரிய ராஜ்யத்தை ஸ்தாபித்தும், அதை மேன்மேலும் பெருக்கியும் வந்தார்கள். அவர்களி லொருவரான **டரையஸ்** என்பவர் கி. மு. 521 முதல் கி. மு. 485 வரையில் ஆட்சி பெற்றிருந்தார். அவர் ஆப்கானிஸ்தானம், பெலுசிஸ்தானம், மேற் பஞ்சாப், ஸிந்து முதலிய நாடுகளை வென்று தமது ராஜ்யத்திற் சேர்த்துக்கொண்டார். கி. மு. 516-ல், அவர் **ஸ்கைலாக்ஸ்** என்னும் தமது கப்பற்றலைவரை ஸிந்து நதியின் முகத்வாரத்தினின்று பாரஸிக நாட்டிற்குக் கப்பல் வழியாகச் செல்ல முடியுமா வென்பதைக் கண்டறிந்து வரும்படி யனுப்பினார். ஸ்கைலாக்ஸ் அவ்வாறே காந்தார நாட்டிலிருந்து ஸிந்து நதியின் வழியாக அதன் முகத்வாரம் வரையில் வந்து அதைச் சார்ந்த நாட்டின் அழகையும் செழிப்பையுங் கண்டறிந்து சென்றார். சீக்கிரத்திலேயே பஞ்சாப் மாகாணத்தைச் சேர்ந்த ஸிந்து நதியின் கீழ் நாடுகள் டரையஸ் மன்னருக்குச் சொந்தமாய்விட்டன. அவர் அந் நாட்டை ஒரு தனி மாகாணமாக்கி அதை க்ஷத்ரபான் என்னும் ஓர் அதிகாரியின் ஆட்சிக்கு உட்படுத்தினார்.

பாரஸிகரின் இந்தியநாடு

அந்நாடு, அக் காலத்தில் மிக்க வளம் பொருந்தியதும், செல்வம் நிறைந்ததும், ஜனப் பெருக்

குடையதுமா யிருந்தது. அதினின்றும் டரையஸ் மன்னருக்கு ஒன்றரைக் கோடி ரூபாய் வருமானங் கிடைத்தது. அது அவருக்கு அவருடைய ஆசியா நாடுகளிலிருந்து கிடைத்த மொத்த வருமானத்தில் மூன்றிலொரு பங்காயிற்று. இவ்வாறாக, அப்பொழுது இந்தியாவிற்கும் பாரஸிகத்திற்கும் கலப்பு ஏற்பட்டது. அதனால், டரையஸின் மைந்தரான ஸேர்க்ஸிஸ் என்பவருடைய சேனையில் இந்திய வில்லிகள் சேர்ந்து க்ரீஸ் முதலிய நாடுகளிற் சென்று சண்டை யிட்டார்கள் எனத் தெரிய வருகின்றது.

டரையஸ் இறந்துபோன சில வருஷங்களுக்கெல்லாம் பாரஸிகர் ஜயித்த ஸிந்து நாடுகள் தமது சுவாதீனத்தை அடைந்துவிட்டன. என்றாலும், இவ்விரண்டு தேசங்களுக்கும் வியாபாரத்தின் பொருட்டுப் போக்கு வரவுகள் ஏற்பட்டன. பாரஸிகப் படை யெழுச்சியினால் இந் நாட்டிற்குச் சில நன்மைகள் உண்டாயின. நில, நீர் மார்க்கமாக வாணிபம் பெருகினதல்லாமல், பரஸ்பர ஞானபிவிருத்தியும் உண்டாயிற்று. வலது புறத்திலிருந்து இடது புறமாக எழுதப்பட்ட காரோஷ்டி லிபி ஏற்பட்டதும் அப்பொழுதுதான். பின்பு, மௌரியர் காலத்தி லேற்பட்ட வட இந்திய ஏகாதிபத்ய நாகரிக வமைப்புக்களும் பாரஸிகருடைய செயற்கையினால் உண்டாயிருக்கக் கூடுமென்று எண்ணுவாருமுளர்.

பாரஸிகப் படை யெழுச்சியின் நன்மைகள்

மஹாபத்ம நந்தர் என்னும் நந்த வரசர் மகத நாட்டை ஆண்டு வந்த காலத்தில் மகா பராக்கிரமசாலியான அலெக்ஸான்டர் என்னும் கிரேக்க வரசன் இந்தியாவின் மீது படை யெடுத்து வந்தான். அவன் மாஸிடோனியா என்னும் தேசத்தவன். அவன் இருபது வயதிலேயே அந்த

நாட்டிற் கரசனானான். பின்னர்ச் சில வருஷங்களுக்குள் அவன் தனது ஒப்புயர்வற்ற பராக்கிரமத்தினால் க்ரீஸ் தேசம் முழுவதையும் ஜயித்துக் கொண்டு விட்டான். பின்பு சுமார் கி. மு. 334-ல், அவன் கீழ்ப் புறமாகப் பாரஸிக ராஜ்யத்தின் மீது படையெடுத்து வந்து அதையும் வென்றான். அப்பொழுது அவனுக்கு மனிதரால் கண்டு பிடிக்கப்பட்டிருந்த உலகம் முழுவதையும் ஜயித்து ஆட்சி செய்ய வேண்டுமென்னும் பேராசை உண்டாயிருந்தது. அவன் இந்தியாவின் செழிப்பையும், செல்வத்தையும், நாகரிகத்தையும் பற்றிக் கேள்விப்பட்டுத் தான் இந்தியாவையும் ஜயிக்க வேண்டுமென்று எண்ணங் கொண்டான்.

அலெக்ஸான்டர்

அலெக்ஸான்டர் கி. மு. 327-ம் வருஷம் நவம்பர் மாதத்தில், இந்தியாவின் மீது படையெடுத்து வந்தான். அவன் தனது சேனையின் பெரும் பாகத்தையும் கைபர்க் கணவாயின் வழியாய் இந்தியாவுக் கனுப்பிவிட்டு, மாரிக் காலத்தின் மத்தியில் ஒரு சிறிய படையைத் துணைக்கொண்டு வடபுறமாகச் சென்று இப்பொழுது சித்ரால் என வழங்கும் நாட்டையும் அதைச் சார்ந்த பிரதேசத்தையும் ஜயித்து இந்தியாவுக்கும் தனது நாட்டிற்கும் போக்கு வரவில் எவ்வித இடையூறும் நேரிடாவண்ணஞ் செய்துகொண்டான். பின்பு, அவன் தான் கைபர்க் கணவாயின் வழியாக அனுப்பின சேனையை நடத்தி வந்து கி. மு. 326-ம் வருஷத்தின் முதலில், அட்டாக் என்னும் பட்டணத்திற் கருகில் ஸிந்து நதியைக் கடந்து தக்ஷசிலை என்னும் நகரத்தை நோக்கி வந்தான். அப்பொழுது அவனது சேனையில் சுமார் 80,000 போர் வீரர்களிருந்தார்கள்.

இந்தியப் படையெழுச்சி

தக்ஷசிலை

தக்ஷசிலை (தக்ஷசீலம்) என்பது அக் காலத்தில் மிகப் பெரிய நகரமாயிருந்தது. அங்கே ஒரு சர்வ கலாசாலை யிருந்தது. அதில் கல்வி கற்பதற்கென்று நாலா பக்கங்களிலுமிருந்து நூற்றுக் கணக்கான மாணவர்கள் வந்து கூடுவார்கள். அந்தக் கலாசாலையில் வைத்திய சாஸ்திரங்களைக் கற்பதற்கான ஏற்பாடுகள் செம்மையாக அமைக்கப்பட்டிருந்தன வென்றும், அக் கல்வியின் பொருட்டே பலர் வந்தார்களென்றும் தெரியவருகின்றன. அந் நகரம் இருந்தவிடம் பாழாய்க் கிடப்பதை ராவல்பிண்டிப் பட்டணத்தின் வட மேற்கில் நாம் இப்பொழுதுங் காணலாம்.

அம்பி

அப்பொழுது, அம்பி என்னு மரசன் தக்ஷசிலையில் அரசு செலுத்திவந்தான். அவன் தனது சேனையுடன் எதிர்கொண்டு சென்று அலெக்ஸான்டரை வரவேற்று அவனோடு சமாதானஞ் செய்துகொண்டு அவனுக்குப் பணமும் படைகளும் கொடுத்துதவினான். அல்லாமலும், அவன் அலெக்ஸான்டரையும் அவனது சேனையையும் சில நாள்கள் வரையில் தன்னூரில் வைத்து உபசரித்தான்.

அலெக்ஸான்டரின் ஆஜ்ஞை

அலெக்ஸான்டர் தக்ஷசிலையிலிருந்து வட இந்திய மன்னர்கள் பலரும் தனக்குக் கீழ்ப்படிந்து கப்பங் கட்ட வேண்டுமென்று அவர்களுக்குச் சொல்லியனுப்பினான். அநேகவரசர்கள் அவ்வாறே செய்தார்கள். ஆனால், ஜீலம், சீனப் நதிகளின் மத்தியிலுள்ள நாட்டை யாண்டு வந்த புருஷோத்தமர் என்னும் ஓர் அரசர் மாத்திரம் அவனை யுத்த முனையிற் சந்திப்பதாகச்சொல்லியனுப்பிவிட்டு, ஒரு பெருஞ் சேனையையுந் திரட்டிக்கொண்டு சண்டைக்குத் தயாரானார்.

புருஷோத்தமர்

கி. மு. 326-ம் வருஷம் மே மாதத்தில் அலெக்ஸான்டர் ஜீலம் நதிக்கரையை வந்தடைந்தான். அவன் நதியின் கிழக் கரையில் புருஷோத்தமர் தமது சைநியத்துடன் யுத்தத்திற்குத் தயாராக விருப்பதையுங் கண்டான். அப்பொழுது ஆற்றில் வெள்ளம் அதிகமாக இருந்ததனால், கிரேக்க வரசன் அதைக் கடக்க முடியாமல் திகைத்து நின்றான். அவன் தனது சத்துருக்களை ஏமாற்றும்பொருட்டுத் தான் ஆறு வடிந்த பின்னர்த்தான் அதைக் கடப்பதாக ஒரு பொய்யான வதந்தியை யுண்டு பண்ணினான். அதைப் புருஷோத்தமர் உண்மை யென எண்ணும்படி ஏராளமான உணவுப் பொருள்களையுஞ் சேகரஞ்செய்தான். ஆனால், அவன் எதிரிகளறியாதபடி அருகிலிருந்த மரங்களை வெட்டித் தோணி

அணைகட்டல் யணைக்கு வேண்டிய கட்டு மரங்களையும், படகுகளையுஞ் செய்வித்தான். அணைக்கு வேண்டிய யாவுந் தயாரானவுடனே, அலெக்ஸான்டர் சுமார் பதினாறு மைல் வடக்கிற் சென்று ஆற்றைக் கடப்பதற்குத் தக்கதோர் இடத்தைக் கண்டறிந்தான். அங்கே ஒரு சிறிய தீவு இருந்ததனால் ஆறு அவ்விடத்தில் குறுகி, அதன் மறு கரை சமீபத்தில் இருந்ததென்றும், அதனால் அவ்விடத்தில் அணைகட்டுவது எளிதாகு மென்றும் எண்ணினான். அதன்றியும், அவன் ஆற்றைக் கடப்பது புருஷோத்தமருக்குத் தெரியாமல் இருப்பதற்கு அதுவே தக்க இடமாகு மல்லவா?

அலெக்ஸான்டர் தனது சேனையின் பெரும் பாகத்தையும் தான் முதலில் தங்கின விடத்திலேயே இருத்திவிட்டு, ஒரு சிறிய படையுடன் வடக்கிற் சென்றான். அவன் அதிலுமொரு பகுதியை நடுவழியில் வைத்து சண்டை தொடங்கினதும் அவர்கள் தன்னிடம் வந்து சேரவேண்டுமென்று அவர்களுக்குக்கட்டளை யிட்டுவிட்டு

எஞ்சிய 12,000 போர் வீரர்களடங்கிய படையுடன், தான் ஆற்றைக் கடத்தற்கு அணை கட்ட எண்ணியவிடம் வந்து சேர்ந்தான். அணை கட்டி முடிந்தது. அலெக்ஸாண்டர் நதியைக் கடந்து அங்கிருந்த தீவிற்கு வந்து சேர்ந்தான். அப்பொழுதுதான் அவனுக்கு அது தீவெனத் தெரிய வந்தது. அப்பொழுது அவன் அத் தீவினின்றும் எதிரிலுள்ள மறுகரைக்குப் போகும்பொருட்டு மற்றுமொரு அணை கட்டினான்.


புதிய கஷ்டம்

அது முடிந்ததும் அலெக்ஸாண்டர் ஜீலம் நதி முழுவதையுந் தாண்டிக் கறீ என்னும் மைதானத்தை வந்தடைந்தான். அதனை யறிந்த புருஷோத்தமர் தமது சதுரங்க சேனையுடன் அங்கே வந்து சேர்ந்தார். இந்திய வீரர்கள் கத்திகளையும், ஈட்டிகளையும், வில்லம்புகளையுங் கொண்டு சண்டை யிட்டார்கள். விற்கள் ஆளுயரமும், அம்புகள் ஒன்பதடி நீளமும் இருந்தனவாம். புருஷோத்தமர் மிக்க ஆண்மையுடன் போர் புரிந்தாரானாலும், யுத்தப் பயிற்சியிற் சிறந்திருந்த கிரேக்கர்கள் அவரை வெற்றி கொண்டு விட்டார்கள். ஆயினும் கிரேக்க வரசன் புருஷோத்தமருடைய வீரத்தையும், ஆண்மையையும் மெச்சித் தான் அவரிடமிருந்து ஜயித்த நாட்டை அவருக்குத் திருப்பிக் கொடுத்து விட்டதுமன்றிச் சீனாப் பியாஸ் நதிகளி னிடையிலுள்ள நாட்டையும் ஜயித்து அவருக்கே சொந்தமாகக் கொடுத்துவிட்டான்.

கறீ சண்டை

பின்பு, அலெக்ஸாண்டர் பியாஸைக் கடந்து அதன் கீழுள்ள நாடுகளையும் ஜயிக்க வேண்டுமென் றெண்ணினான். ஆனால், அவனுடைய படை வீரர்கள் அதற்குக் கொஞ்சமும் இணங்கி வரவில்லை. அதனால், கி. மு.

கிரேக்கர் திரும்பி விட்டது



ANCIENT INDIAN ARMS

326-ம் வருஷம் செப்டம்பர் மாதத்தில் அவன் தனது போர் வீரர்களுக்குத் திரும்பிப் போகும்படி உத்தரவளித்தான். மகத ராஜ்யம் அப்பொழுது மிகுந்த பராக்கிரமசாலியான ஓர் அரசனது ஆட்சியின் கீழ் ஓங்கி வளர்ந்திருந்ததனால், அலெக்ஸான்டர் அந் நாட்டைத் தன்னால் ஜயிக்க முடியாதென்று பயந்து திரும்பிப் போய் விட்டான் என்று எண்ணுவாருமுளர்.

அடையாளங்கள்

அவன் பீயாஸ் நதிக் கரையில் தனது வெற்றியைக் குறிப்பதான பன்னிரண்டு பலிபீடங்களைக் கட்டுவித்தான். அலெக்ஸான்டர் திரும்பிச் செல்லுகையில் ஸிந்து நதியைச் சார்ந்த பள்ளத்தாக்குக்களில் இருந்த பல ஜாதிக் கூட்டங்களை வென்றான். கி. மு. 323-ம் வருஷம்

மரணம்

ஜூன் மாதத்தில் அவன் பாபிலன் நகரத்தில் ஜுரத்தினால் இறந்து போனான்.

கிரேக்கப் படையெழுச்சியின் நன்மை

அலெக்ஸான்டர் இந்தியாவை விட்டுத் திரும்பின மூன்று வருஷங்களுக்கெல்லாம் அவனுடைய படையெழுச்சியின் அடையாளம் எதுவுங் காணப்படாமல் எல்லாம் முன்போலவே ஆயின. இந் நாட்டுக் குடிகளும் அதைப்பற்றி நினைத்தார்களில்லை. கிரேக்கப் படையெழுச்சி காரணமாக வாணிபமும், சாஸ்திர வாராய்ச்சியும் அதிகமானதல்லாமல், யூநானி வைத்திய முறையும், இந் நாட்டைப் பற்றின சரித்திர விவரங்களும் நமக்குக் கிடைத்தன. மேனாட்டினருக்கும் இந்தியாவைப்பற்றின அறிவு அதிகமாயிற்று. அல்லாமலும், பஞ்சாப், ஸிந்து நாடுகளிலிருந்த பல சிற்றரசர்கள் தாங்கள் தோல்வியடைந்து பலங்குன்றப் பெற்றதினின்றும், நமது நாட்டினர் போர்ப்

பயிற்சியின் சிறப்பையும், தாங்கள் ஒன்றுபட்டு ஒரு பெரிய வரசரின் மேலதிகாரத்திற் குட்பட்டு நடப்பது தான் நலம் என்பதையும் உணர்ந்தார்கள் என எண்ணவும் இடமுண்டு.

II. மௌரிய ராஜ்யம்

i. சந்திரகுப்தர்

அலெக்ஸாண்டர் இறந்த சமாசாரம் இந்தியாவிற் கெட்டினவுடனே, அவனுக்குப் புத்திரனில்லாததனால், அவன் ஜயித்த நாடுகளைத் தமக்குக் கிடைத்தவரையில் கவர்ந்து கொள்ள வெண்ணிப் பலர் கலகஞ் செய்து கொண்டு முன் வந்தார்கள். அவர்களில் சந்திரகுப்தர் என்பவர்தாம் முதன்மையானவர். அவர் நந்த வம்சத்தைச் சேர்ந்தவர். அலெக்ஸாண்டர் இந்தியாவின்மீது படை யெடுத்து வந்திருந்த பொழுது, அவர் தமது ராஜ்யத்தை விட்டுத் துரத்தப்பட்டிருந்தார். அவர் கிரேக்க வரசனை மகத ராஜ்யத்தின்மீது படை யெடுத்து வரும்படி வேண்டினார் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அவர் அலெக்ஸாண்டர் இறந்ததும் அவன் தனது இந்திய நாட்டின் ரக்ஷணைக்காக அமைத்து வைத்திருந்த சேனைகளைத் தாக்கித் தோற்கச் செய்தும் அவனுடைய உத்தியோகஸ்தர்களை யடியோடு தொலைத்தும் விட்டார். பின்பு அவர் பாடலிபுரத்தில் ஒரு பெருங் கலகத்தை மூட்டுவித்து அதில் தாம் பிரவேசித்து நந்த வம்சத்தினரை அடியோடு நாசஞ் செய்துவிட்டார். பின்னர் அவர் தம்மை யொருவரும் எதிர்க்க முடியாதபடி தமது அதிகாரத்தைப் பலப்படுத்திக்கொண்டு கி. பி. 322-ல் மகத ராஜ்யத்திற்கு அரச

சந்திரகுப்தர்

ராஞர். அவர்தாம் மௌரிய வம்சத்தின் மூல புருஷர். அவருடைய தாய் ஓர் இழிகுலத்தினள் என்றும், அவள் பெயர் முரா என்பதனுல் அவருடைய சந்ததியாருக்கு மௌரியர் எனப் பெயர் வந்தது என்றும் சொல்லப்பட்டு வருகின்றது.

சந்திரகுப்தர் வெகு சமர்த்தர்; ஒப்பற்ற புஜபல பராக்கிரமம் பொருந்தியவர்; ராஜ்ய பரிபாலன முறைகளிற் கைதேர்ந்தவர். அவர் சீக்கிரத்திலேயே பஞ்சாப் நாட்டையும் ஜயித்துக் கொண்டுவிட்டார்.

இந்தியாவுக்கு மேற்கில் அலெக்ஸாண்டர் ஜயித்த நாடுகளை அவனுடைய தளகர்த்தர்கள் பங்கிட்டுக் கொண்டதில் ஹிந்துகுஷ் மலைக்கப்புறமுள்ள பாக்ட்ரியா, பார்த்தியா நாடுகள் ஸெலியூகஸ் நிகேடார் என்னும் தளகர்த்தனுக்குக் கிடைத்தன. அவனுக்கு அலெக்ஸாண்டர் ஜயித்த இந்திய நாட்டையுங் கூடத் தனக்குச் சொந்தமாக்கிக்கொள்ள வேண்டுமென்னும் ஆசை உண்டாயிற்று. அவன், கி. மு. 305-ல், இந்தியாவின்மீது படை யெடுத்து வந்தான். ஆனல், சந்திரகுப்தர் அவனை எளிதிற் தோற்கடித்துத் துரத்திவிட்டார். கி. மு. 303-ல், இருவருக்கும் சமாதானம் ஏற்பட்டது. அதன் பயனுகச் சந்திரகுப்தருக்கு, காபூல்க். காண்டஹார், ஹீரெட் என்னும் பட்டணங்களைத் தலைநகர்களாகக் கொண்ட பரொபநிஸடெய், அரகோஷியா, அரியா என்னும் நாடுகள் கிடைத்தன. அந்நாடுகள் சேர்ந்து சற்றேறக் குறைய ஆப்கானிஸ்தானம், பெலுசிஸ்தானம் என்னும் நாடுகளுக்குச் சமம் ஆயின.

கிரேக்கப் படையெழுச்சி

அந்தச் சமாதானத்தில் மௌரிய வரசர் ஸெலியூகஸினுடைய பெண்ணையும் விவாகஞ் செய்துகொண்டார். அப்பொழுது இந்தியாவுக்கு வந்த கிரேக்க ராஜதூதரான

இண்டிகா

மேகாஸ்தனீஸ் என்பவர் எழுதி வைத்த இண்டிகா என்னும் புத்தகத்திலிருந்து நமது நாட்டைப்பற்றின பல விவரங்கள் நமக்குத் தெரியவருகின்றன. அவர் சந்திரகுப்தருடைய ராஜ்யத்தையும், ராஜரீகத்தையும் மிகப் புகழ்ந்து எழுதியிருக்கிறார்.

படை

சந்திரகுப்தர் தமது ஒப்புயர்வற்ற பராக்கிரமத்தினால் ஹிந்துஸ்தானம் முழுவதையும் ஜயித்துத் தமது ராஜ்யத்திற் சேர்த்துக்கொண்டார். இந்திய சரித்திரத்தில் முதன் முதல் ஒரு பெரிய ராஜ்யத்தை ஏற்படுத்தி அதை ஏகாதிபத்யமாய் ஆட்சி செய்தவர் இவர் தாம் என்பதை நாம் காணலாம். இவருடைய வெற்றிக்கு நன்றாகப் பயிற்சி செய்யப்பட்ட இவர் பெரும்படையே முக்கிய சாதனமாக விருந்தது. சந்திரகுப்தருக்கு 8,000 இரதங்களும், 9,000 கஜங்களும், 30,000 துரகங்களும், 6,00,000 பதாதிகளும் சொந்தமாக விருந்தன.

ராணுவ இலாகா

அந்தப் பெரும் படையைக் கவனித்து, அதற்கு வேண்டியனவற்றை யமைத்துக் கொடுப்பதன் பொருட்டுத் துரைத்தன வமைப்பில் ஒரு தனி இலாகா இருந்து வந்தது. ஒவ்வொன்றிலும் ஐந்து பெயர்களடங்கிய ஆறு சபைகளைக் கொண்டு ராணுவ இலாகா நடைபெற்றது. அவற்றுள் ஒரு சபை கப்பற் படைகளைக் கவனிக்கவும், மற்றொன்று போர்வீரர்களுக்கு வேண்டிய சாமான்களைத் தயாரித்து ஆங்காங்கு அனுப்பவும், மிகுதியான நான்கு சபைகளும் முறையே காலாட்படைகளையும், குதிரைப்படைகளையும், யானைப்படைகளையும், இரதங்களையுங் கவனித்துப் பரிபாலிக்கவும் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

மகத ராஜ்யத்தின் தலைநகரான பாடலிபுரம் 15-மைல் விஸ்தீரண முள்ளதாக விருந்தது. அதைச் சுற்றிலும் கனத்த மரத்தினாலாகிய மதில் இருந்தது. அதில் 64 வாயில்களும், அவற்றின்மீது அழகாகக் கட்டப்பட்ட சுமார் எழுநூறு கோபுரங்களு மிருந்தன. மதிலுக்கு வெளியில் அகலமும் ஆழமுமான அகழி இருந்தது. சந்திரகுப்தருடைய அரண்மனை, மரத்தினாற் கட்டப்பட்டிருந்தாலும், மிக அழகாக விருந்தது. அதனுடைய ஸ்தம்பங்கள் பொன் மயமான திராக்ஷைக்கொடிகளினாலும், வெள்ளிப் பறவைகளினாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. அரண்மனை கண்ணைக்கவரும் ஒரு நந்தவனத்தின் மத்தியிலிருந்தது. அதில் மச்சங்கள் துள்ளி விளையாடும் தடாகங்களும், பழந்தரும் மரங்களும், நறுமணங் கமழும் புஷ்பச் செடிகளும் ஏராளமாக இருந்தன.

பாடலி புரத்தின் வனப்பு

இவ் வழகிய பட்டணத்தைப் பரிபாலிப்பதற்கு முப்பது பெயர்களடங்கிய ஒரு நகர விசாரணைச் சபையிருந்தது. அச் சபை ஐவைந்து பெயர்களடங்கிய ஆறு சிறு சபைகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. கைத் தொழில்களைக் கவனித்து வந்த சபை தொழிலாளிகளின் சம்பளங்களையும், அவர்கள் ஒரு தினத்தில் செய்யவேண்டிய வேலையின் திட்டத்தையும் வரையறுத்து வந்தது. அல்லாமலும், சரக்குக்களின் குணத்தைக் கவனிப்பதும், தொழிலாளிகளைத் தீங்கின்றிக் காப்பதும் அச் சபையின் பொறுப்பாம்.

நகர பரிபாலனம்

இரண்டாவது சபை அந்நியர்களைக் கவனித்தும், அவர்களுக்கு வேண்டிய விடுதிகளையும், வழித்துணையாட்களையும், வைத்தியர்களையும் கொடுத்துதவியும், அவர்களில் இறந்து போனவர்களைத் தக்கபடி அடக்கஞ்செய்

தும், அவர்களுடைய சொத்துக்களைப் பாதுகாத்துச் சரியான வார்சுகளுக்கு ஒப்பிவித்தும் வந்தது.

2-வது சபை அதனால், அக்காலத்திற்கூட அந்நியர்கள் பற்பல நாடுகளிலிருந்து வெவ்வேறு வேலைகளை முன்னிட்டு இந் நாட்டிற்கு வந்தார்களென்பது தெரியவருகின்றது.

3-வது சபை மூன்றாவது சபை ஜனன மரணக் கணக்குக்களை ஒழுங்குபட வைப்பதன் பொருட்டுச் செய்யவேண்டிய வேலைகளைக் கவனித்து வந்தது.

மற்ற சபைகள் நான்காவது சபை வியாபார சம்பந்தமான விஷயங்களைக் கவனித்து வந்தது. வர்த்தகர்கள் சரியான அளவைகளை உபயோகித்து வருகிறார்களாவென்று மேற்பார்வை யிடுவதும், அவர்கள் செலுத்தவேண்டிய வரியை விதிப்பதும் அதன் பொறுப்பு. ஐந்தாவது, ஆறாவது சபைகள் முறையே வியாபாரச் சரக்குக்களின் உற்பத்தியைக் கவனித்துப் பழைய சரக்குக்களைப் புதியனவற்றோடு கலக்க வொட்டாமற் றடுத்தும் வியாபாரிகள் செலுத்த வேண்டிய வரிகளை வசூலித்தும் வந்தன.

பாதைகள்; மைல்தூண்கள் இவற்றை யன்றி, நகர விசாரணைச் சபையார் பொதுவில் கடைவீதிகள், துறை முகங்கள், கோவில்கள் முதலியனவற்றையுங் கவனித்து வந்தார்கள். ஆங்காங்குச் செப்பனிடப்பட்ட பாதைகளும், தூரத்தைக் குறிப்பதற்குத் தூண்களும் இருந்தன.

பாடலிபுரத்தைப் போன்று மற்று மநேக நகரங்களும் மேலே சொல்லப்பட்ட வண்ணமே நகர விசாரணைச் சபைகளினால் பரிபாலிக்கப்பட்டு வந்தன வென்று தெரிய வருகின்றது.

இவற்றை யல்லாமல், துரைத்தன வமைப்பில் ஒரு தனி வியவசாய இலாகா இருந்து வந்தது. நிலங்களை யளந்தும், குடியானவர்களுக்கு முறைப்படி தண்ணீர் தவறாமல் பாய்ந்து வருகின்றதா வென்று பார்வையிட்டும், நீர்க்கால்களைக் கவனித்தும் வருவதற்கென்று உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். கத்தியவாரிலுள்ள கிர்னார் என்னுமிடத்தில் மிகப் பெரிதான ஸுதர்சன என்னும் அழகிய ஏரி இவருடைய காலத்தில் தான் உண்டு பண்ணப்பட்டது. நாடுகளிற் சண்டைகள் நடந்து வந்த காலங்களிற் கூட வியவசாயிகள் தங்கள் பயிர்த் தொழிலைத் தீங்கின்றிச் செய்து வந்தார்கள். அரசருடைய வருமானங்களில் நிலவரிதான் முதன்மையானதாக இருந்தது.

வியவசாய இலாகா

இராஜ்யம் பல மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொன்றும் அரச வம்சத்தைச் சேர்ந்த ஒரு பிரதிநிதியின் அதிகாரத்திற்குட்பட் டிருந்தது. நாட்டின் எல்லா பக்கங்களிலும் துரைத்தன உத்தியோகஸ்தர்கள் பலரும் அவரவர்களுடைய வேலைகளைச் சரியாகச் செய்து வருகின்றார்களா வென்று அப்பொழுதைக் கப்பொழுது அரசருக்குத் தெரிவிப்பதன் பொருட்டுப் பலர் நியமிக்கப்பட் டிருந்தார்கள். இவர்கள் யோக்கியர்கள் என்றும், எப்பொழுதும் உண்மையையே அரசருக்கு எழுதி யனுப்பி வந்தார்கள் என்றும், இவர்களை யன்றி அக் காலத்திய இந்தியர்களே பொதுவில் மெய்யர்கள் என்றும் அறையன், மாக்ஸ் முல்லர் முதலானவர்கள் சொல்லி யிருக்கிறார்கள்.

பிரதிநிதிகள்

சாரணர்

சந்திரகுப்தர் முத்துச் சரங்கள் கட்டிய பொன் பல்லக்கிலும், குதிரையின் மீதும், யானையின் மீதும் ஏறிச்

செல்லுவார். அவர் பொற் பாத்திரங்களிலும், நவரத்தினங்க ளிழைக்கப் பெற்ற செம்புப் பாத்திரங்களிலும் சாப்பிடுவார். இரண்டு பெயர்கள் சேர்ந்து எளிதிற் றூக்க முடியாதனவான பொற் பாத்திரங்களும், சித்திர வேலைப் பாடுக ளமைந்த அழகான மேஜைகளும், நாற்காலிகளும் அரண்மனையில் நிரம்பிக் கிடந்தன. இவற்றைக் கொண்டு நாடு செழித்திருந்திருக்க வேண்டுமென்று நாம் அறியலாம். இல்லையேல், அரசருக்கு இவ்வளவு செல்வம் எவ்வாறு கிடைத்திருக்க முடியும்?

செல்வம்

சந்திரகுப்தருக்கு யானை, காண்டாமிருகம், எருது, ஆட்டுக்கடா இவைகளின் சண்டைகளையும், எருதுப் பந்தயங்களையும், குத்துச் சண்டைகளையும் பார்ப்பதில் பிரியம் அதிகம்.

விளையாட்டு

அவ் வேந்தர் குற்றஞ் செய்தவர்களைக் கடுமையாய்த் தண்டித்து வந்தார். அதனால், குடிகள் அவருக்குப் பயந்து அடங்கி நடந்துவந்தார்கள். ஆயினும், அவர்களுக்கு அவரிடம் அன்பில்லாதிருந்ததோடு, அவரைக் கொல்வதற்கும் பன்முறை முயற்சிகள் செய்தார்களெனத் தெரிய வருகின்றது. அரசர் ஒரே இடத்திற் படுத்துறங்காமலும், பகற் பொழுதில் வெவ்வேறு காலத்தில் படுத்துறங்கியும் ஜாக்ரதையாக இருந்திருக்கிறார்.

தண்டனைகள்

மேலே சொல்லப்பட்ட விவரங்களினின்றும் சந்திரகுப்தர் தமது ராஜ்யத்தை வெகு விமரிசையாக ஆண்டு வந்தாரென்பதும், நாடு செல்வம் நிரம்பித் தழைத் தோங்கி இருந்ததென்பதும் தெரிகின்றன வல்லவா? மெகாஸ்தனீஸ் தமது இண்டியாவில் சந்திரகுப்தர் ராஜ தந்திரங்களில் மிகவும்

சாணக்கியர்

வல்லவரான **சாணக்கியர்** என்னும் பிராமண மந்திரியின் உதவியைக் கொண்டுதான் தமது ராஜ்யத்தை மிக்க மேம்பாட்டுடன் ஆண்டுவந்தா ரென்றும் சொல்லியிருக்கிறார். **கௌடில்யர்** என்னும் மறுபெயர் பூண்ட அச் சாணக்கியருடைய **அர்த்த சாஸ்திரம்** என்னும் அரசநீதியை விவரிக்கும் நூல் ஒப்புயர் வற்றது. அக்காலத்தில் ராஜ்ய பரிபாலனத்தில் அநுஷ்டிக்கப்பட்ட முறைகளும், விதிகளும் அதில் சொல்லப்பட்டுள்ளன. சந்திரகுப்தருடைய அரசியலைப் பற்றின பல விஷயங்களை நாம் **முத்ரா ராக்ஷஸம்** என்னும் நாடகத்திற் கண்டறியலாம்.

நூல்கள்

சந்திரகுப்தருக்குப் பின், அவர் மைந்தர் **பிந்துஸாரர்** பட்டத்துக்கு வந்தார். அவர் தமக்குக் கிடைத்த ராஜ்யத்தைத் தமது தந்தையின் உயர்ந்த வழிகளைப் பின்பற்றிச் சுமார் 25 வருஷ காலம் ஒழுங்காக ஆட்சி செய்து வந்தார். அவர் மகத ராஜ்யத்தை அதிகமாகப் பெருக்கவுமில்லை, சிறியதாகச் சுருக்கவு மில்லை என்று சிலரும், அவருடைய காலத்திற்றான் மதராஸ் முதல் மங்களூர் வரையில் நேராக இழுக்கப்பட்ட கோட்டினுள் ளடங்கிய தக்ஷிணத்தின் வடபாகம் மகத ராஜ்யத்திற் சேர்க்கப்பட்டது என்று சிலரும் அபிப்பிராயப் படுகிறார்கள். பிந்துஸாரருக்குப் பிறகு அவர் குமாரர், அசோக வர்த்தனர் பட்டத்துக்கு வந்தார்.

பிந்துஸாரர்

ii. அசோகர்

சுமார் கி. மு. 272-ல் பட்டத்துக்கு வந்த அசோகர் யாது காரணம் பற்றியோ மூன்று வருஷம் வரையில் முடி சூட்டிக் கொள்ளவில்லை. அவர் தமது தந்தை மகத ராஜ்யத்தை ஆண்டு வந்த காலத்தில் முதலில் தக்ஷசிலையைத்

ஷிலை நகராகவுடைய வட மேற்கு மாகாணத்தையும், பின்னர் உஜ்ஜயினிபுரத்தை ராஜதானி யாகப் பெற்ற மேலிந்திய மாகாணத்தை யும் பிரதிநிதியாக விருந்து பரிபாலித்து அரசாட்சி முறைகளில் நன்ருகப் பயிற்சி பெற்ருர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர் புஜபல பராக்கிரமத்தில் தமது பாட்டனரான சந்திரகுப்தருக்கு எவ்விதத்திலும் குறைந்தவரல்லர். அவர் உண்டு களித் தும், வேட்டையாடியும், இன்பங்களி லீடுபட்டும் இருந் திருக்கிருர்.

ஆட்சிப் பயிற்சி

கி. மு. 261-ல், அசோகர் கலிங்க நாட்டின்மீது படை யெடுத்துச் சென்று அதை முழுவதும் வென்ருர். அந்த யுத்தத்தில் சிறை பிடிக்கப்பட்டவர்களின் தொகை ஒன்றரை லக்ஷம் என்றும், கொலையுண்டவர்கள் ஒரு லக்ஷம் பெயர் கள் என்றும், பஞ்சத்தினுலும், கொள்ளை நோய்களினுலும் மாண்டவர்கள் அநேக லக்ஷம் பெயர்கள் என்றும் அசோகரே சொல்லி யிருக் கிருர். அவர்கள் பட்ட துன்பங்களை யெல்லாம் நேரிற் கண்டு, அவற்றிற்குத் தாமே காரணம் என்று உணர்ந்த தேவர்களுக்குப் பிரியனுன பிரியதரிசி மஹாராஜா மனம் இளகி இனித் தாம் எப்பொழுதும் சண்டை செய்வதில்லை என்று தீர்மானித்துவிட்டார். அதுமுதல் அவருடைய வாழ்க்கையும் விசேஷ மாறுதலை அடைந்தது.

கலிங்கப் படையெழுச்சி

அசோகருடைய ராஜ்யம் ஹிந்துகுஷ் பருவதம் முதல் தெற்கே பாலாறு வரையில் பரவியிருந்தது. சென்னையி லிருந்து பெங்களூர் வழியாக மங்களூர் வரையில் ஒரு கோடிட்டால், அந்தக் கோட்டை அவருடையராஜ்யத்தின் தென் னெல்லையாகக் கொள்ளலாம். ஆப்கானிஸ்தானம், பெலு

ராஜ்யப் பரப்பு



THE INDIAN PUBLISHING HOUSE LTD

கிஸ்தானம், ஸிந்து ஆகிய இவற்றின் பெரும்பாகமும், மாளவம், கூர்ஜரம், வங்காளம், கலிங்கம், காஷ்மீரம், நேபாளம், ஆந்திரநாடு ஆகிய நாடுகளும் அவருடைய ராஜ்யத்திற் சேர்ந்தவைகளாம். அவர் இந்தப் பெரிய ராஜ்யத்தை நான்கு பிரதிநிதிகளின் உதவியைக்கொண்டு மிக்க விமரிசையாகத் தம்மை யொப்பாரும் மிக்காரும் இல்லையாம்படி ஆண்டு வந்தார்.

சமாதானம்

அசோகர் ஆயுதங்களைக் கொண்டல்லாமல், தருமத்தினாலும், நீதியினாலும் தமது கீர்த்தியை நிலைநாட்ட வேண்டுமென்று தீர்மானித்தும், புத்த, சமண மதங்களி லீடுபட்டும், ஜீவஹிம்ஸை செய்வதை நீத்துச் சாத்விக குணம் உண்டாகப் பெற்றுத் தரும வழியில் நடந்தொழுகலானார். அன்றியும், அவர் தரும மார்க்கத்தைத் தாம் அநுஷ்டிப்ப தல்லாமல், தமது ராஜ்யத்திலுள்ள குடிகளும் அதனை மேற்கொண்டொழுகச் செய்ய வேண்டுமென்றும் எண்ணினார்.

வேட்டை நின்று போனது

அதன் பயனாக அவர், கி. மு. 259-ல், வேட்டையாடுவதை அடியோடு நிறுத்திவிட்டார். அதைப் பற்றி அவர் தமது எட்டாவது கல்வெட்டில் பின்வருமாறு சாஸனஞ் செய்திருக்கிறார்.

‘ திவ்ய தேசயாத்திரை ’

சாஸனம்

‘முற்காலங்களில் மன்னர்கள் அடிக்கடி வேடிக்கையாகக் காடுகளிற் சென்று, வேட்டையாடியும், விளையாடியும் காலங் கழித்தார்கள். ஆனால், பிரிய தரிசி மஹாராஜர் தமது ஆட்சியின் பதினோராம் ஆண்டு முதல் வேட்டை முதலிய வீணான விளையாட்டுக்களை நீத்துத் தரும வழிகளைக் கைப்பற்றிப் பல திவ்ய தேசங்களுக்கும் புண்ணிய

தீர்த்தங்களுக்கும் யாத்திரை செய்து வந்தார். மேலும் பிரியதரிசி மஹாராஜர் பல விரதங்களை அநுஷ்டித்தும், தபோதனர்களுக்கும், பிராமணர்களுக்கும், துறவிகளுக்கும் தருமஞ் செய்தும், குடிகளுக்குப் பல கொடைகளை யளித்தும், பெரியோர்களின் அநுக்ரஹத்தைப் பெற்றும், தரும வழியை உபதேசஞ் செய்தும், பிரசுரம் செய்தும் வந்தார். பிரியதரிசி மஹாராஜா அது முதலாக நல் வழியிலேயே ஈடுபட்டு இன்புற்று வரலானார்.'

அசோகர் தாம் தரும வழியில் நடந்ததுடன், ஸிலோன், எகிப்து, ஸிரியா, மாஸிடோனியா முதலான அந்நிய நாடுகளுக்கும் பௌத்த ஸந்யாஸிகளை யனுப்பிப் பௌத்த மதத்தை நன்றாகப் பரப்பினார். மஹேந்திரர் என்னும் அவரது சகோதரரும், சங்கமித்திரை என்னும் அவருடைய சகோதரியும் ஸிம்மளத் தீவிற்குச் சென்று அங்கே புத்தருடைய நற்போதனைகளை யாவருமறியப் பரப்பினார்கள்.

பிரசாரவேலை

அசோகர் தாம் பௌத்த மதத்தில் ஈடுபட்டிருந்தாரேனும், பௌத்தர்கள் பிற மதத்தினர்களுக்கு எவ்விதத் தீங்கும் இழைக்கக் கூடாது என்று கண்டிப்பாய்த் திட்டஞ் செய்திருந்தார். அவருடைய 12-வது கல்வெட்டில் பின் வருமாறு செதுக்கப்பட்டிருக்கிறது.

மத விரோதமின்மை

'சகிப்பு'

'பிரியதரிசி மஹாராஜர் எல்லா மதத்தினர்களையும்—கிரஹஸ்தர்களையும், துறவிகளையும்—யாதொரு பக்ஷபாதமுமின்றி வந்தனை வழிபாடுகளுடன் உபசரிக்கிறார். சீலம் உள்ளவர்கள் எம்மதத்தினராயினும் அவர் அவர்களைப் போற்றுவார். எப்பொழுதும் மதத்வேஷம் கூடாது..........பிற

கல்வெட்டு

மதத்தைத் தூஷிப்பதால், ஒருவன் தன் மதத்தையே தூஷித்தவனாகின்றான்........தன்னைத் தான் அடக்கிக் கொள்வது மிகவும் மேலானது........தரும மார்க்கத்திலேயே கீர்த்தி யுண்டாகும் என்று அறிவிப்பதற்காகவே பிரியதரிசி மஹாராஜர் கல்வெட்டு ஒன்றைச் செதுக்கியுள்ளார்.'

நீதி மார்க்கம்

கி. மு. 256 முதல், அசோகர் மேலே கண்டுள்ளன போன்ற பல தரும வழிகளையும், நன்னடக்கைக்கான நீதி மார்க்கங்களையும், கற்பாறைகளிலும், குகைகளின் புறங்களிலும், அவற்றிற்கென்று நாட்டப்பட்ட கம்பங்களிலும் காரோஷ்டி லிபியிலும், பிராம்மி லிபியிலும் பெரிய எழுத்துக்களில் செதுக்கி வைத்தார் என்று தெரிய வருகின்றது. அவர் ஒரு கற்பாறையில், "பிரியதரிசி மஹாராஜா சொல்லுகிறார்:—பிள்ளைகள் தாய் தந்தையர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். சகல ஜீவன்களிடத்தும் அன்பு பாராட்டவேண்டும். எப்பொழுதும் உண்மையே பேசவேண்டும். இவையே ஒவ்வொருவரும் கொண்டொழுக வேண்டிய தரும வழியின் நீதிகளாம். சிஷ்யன் குருவை வணங்க வேண்டும். எவரும் உறவினர்களிடத்தில் மரியாதையாக நடந்து கொள்ள வேண்டும். இவை தாம் மிகப் பழமையான தருமத்தின் அளவாம். இவற்றை யநுஷ்டிக்க ஆயுள் பெருகும். இவற்றின்படி அனைவரும் நடக்கவேண்டும்," என்று செதுக்கி வைத்திருக்கிறார். குடிகளைச் சன்மார்க்கத்தில் நடத்துவதற்கான நீதிவழிகளைப் போதிப்பித்த அசோகர் தாமும் நன்னெறியிலேயே நடந்து அவர்களுக்கு வழி காட்டினார்.

கி. மு. 249-ல், அசோகர் தமது குருவான உபகுப்தருடன் பௌத்த மத சம்பந்தமான புண்ணிய ஸ்தலங்

களை நாடிச் சென்றார். அவர் புத்தர் பிரானார் பிறந்த லம்பினித் தோட்டத்தில் அவருடைய ஞாபகார்த்தமாக ஒரு ஸ்தம்பம் நாட்டினார். புத்தர் இருந்து, வளர்ந்து, மதப் பிரசாரஞ் செய்து, ஞானத்தைப் பெற்று, உயிர் நீத்துப் பரிசுத்தப் படுத்தின ஸ்தலங்களான கபிலவாஸ்து, சாரநாத், சிராவஸ்தி, கயை, குசிநாகரம் முதலான க்ஷேத்திரங்களுக்கும் அவர் சென்றிருந்தார். அவர் நேபாளத்துக்குச் சென்றிருந்த பொழுது, அவர் புத்திரி சாருமதி என்பவள் ஒரு கன்னிகா மாடத்தை யமைத்துக்கொண்டு அங்கேயே தங்கிவிட்டாள். அசோகர் தாம் சென்ற விடங்கள் தோறும் மடங்களுக்குப் பணம் உதவியும், பல ஞாபகச் சின்னங்களை உண்டுபண்ணியும் திரும்பினார்.

யாத்திரை

கி. மு. 243-ல், அசோகர் தரும மஹாமாத்திரர்கள் என்னும் பிரசாரகர்களை நியமித்து ஜீவஹிம்ஸை செய்யாதபடி ஜனங்களைக் கண்டிக்கவும், அவர்களுக்குத் தரும மார்க்கத்தைப் போதிக்கவும் ஏற்பாடு செய்தார். அவருடைய ஐந்தாவது கல்வெட்டில் செதுக்கி இருப்பதாவது :—

தர்ம மஹா மாத்திரர்

"இராஜாதிராஜர் பிரியதரிசி மஹாராஜர் கூறுகின்றார் :—நற்காரியங்கள் செய்வது என்றும் கஷ்டமே. அவற்றைச் செய்பவன் கஷ்டமான காரியத்தைச் செய்தவனாவான் .... நான் எனது ஆட்சியின் பதினன்காவது ஆண்டில் நீதி மார்க்கத்தைத் தெரிவிக்கக் கருதித் தரும மஹா மாத்திரர்களை நியமித்தேன். ஒவ்வொரு ஜாதியிலிருந்தும் தர்மாநுஷ்டானஞ் செய்பவர்களை நியமித்துத் தரும வழிகளை ஜனங்களுக்குப் போதிக்கும்படி நான் ஏற்பாடு செய்தேன்..........என்னுடைய ராஜ்யத்தின் எல்லையுள்ளும்,

கல்வெட்டு

அதற்கப்பாலுள்ள மித்திரர்களான மன்னர்களின் ராஜ்யங்களுள்ளும் தரும மஹா மாத்திரர்கள் நீதிகளைப் போதித்தும், தர்மாநுஷ்டானங்களைச் செய்யுமாறு ஜனங்களைத் தூண்டியும், தருமஞ் செய்தும், ஜனங்களைக் காத்தும் வருகின்றார்கள். என் சந்ததியார்களும், மகா ஜனங்களும் தர்மாநுஷ்டானஞ் செய்ய வேண்டியதன் பொருட்டாகவே இந்தக் கல்வெட்டு என்னால் செதுக்கி வைக்கப்பட்டது.''


வைத்திய சாலைகள்

பிரியதரிசி மன்னர் பிரயாணிகளின் சௌகரியத்தின் பொருட்டுச் சில சிறந்த ஏற்பாடுகள் செய்திருந்தார். அவர் மனிதர்களுக்கும், மிருகங்களுக்கும், பறவைகளுக்கும் உண்டாகின்ற வியாதிகளைத் தீர்ப்பதற்காகப் பல வைத்திய சாலைகளை ஏற்படுத்தினார். அவற்றைப் பற்றின விவரங்கள் அவருடைய இரண்டாவது கல்வெட்டில் செதுக்கப்பட்டன. அவை வருமாறு:—

கல்வெட்டு

''பிரியதரிசி மஹாராஜனாகிய நான் என் ஆணையின் கீழுள்ள எல்லாத் தேசங்களிலும், என்னுடைய ஆஜ்ஞைக்குட்படாத சேர, சோழ, பாண்டிய, கேரள ராஜ்யங்கள், இலங்கை, ஆன்டியோகஸ் ஆளும் க்ரீஸ் தேசம், அவருடைய ஆட்சியிலடங்கிய சிற்றரசர்களுடைய நாடுகள் ஆகிய இவற்றிலும் மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் வைத்திய சாலைகளைக் கட்டுவித்தேன். மருந்துக்கான பச்சிலைகள், மூலிகைகள், இதரமான மருந்துகள் முதலியவைகளைப் பிரியதரிசி மஹாராஜனான நான் வைத்திய சாலைகளுக் கனுப்புவேன். அல்லாமலும், ஆங்காங்குப் பச்சிலைகளையும், மூலிகைகளையும் வைத்துப் பயிராக்கவும் ஏற்பாடு செய்வேன். பாதைகளில் மனிதர்

பாதைகளும் சாலைகளும்



TRANSLITERATION

1. Devānapiyena piyadasina lājina visativasābhisitena
2. atana āgācha mahiyite hida budhe jāte sakyamunītī
3. silā vigadabhīchā kālāpita silāthabhecha usapāpite
4. hida bhagavam jāteti lumminigāme ubalikekate
5. athabhāgiyeha

களுக்கும், மிருகங்களுக்கும் நிழல் தரும் ஆல், மா, முதலான பல மரங்களை வைத்து வளர்த்திருக்கிறேன். ஆங்காங்குக் கிணறுகள் வெட்டிச் சத்திரங்களும் கட்டியிருக்கிறேன்."

அசோகருடைய காலத்தில் ஆயிரக் கணக்கான கட்டிடங்கள் கட்டப்பட்டன. அவற்றிற் பல பார்ப்பவர்களின் கண்ணையுங் கருத்தையுங் கவருவனவாக இருந்தன. அவற்

றைப் பார்த்தால் அக் காலத்திய சிற்பிகளின் ஒப்பற்ற திறமை நன்ருக விளங்கும். காலம் என்

கட்டிடங்கள்

னும் கூற்றின்வாய் வீழ்ந்து அவை முற்றும் அழிந்தொழிந்தன. வடமேற்கு எல்லைமாகாணம், பீஹார், நேபாளம், கத்தியவார், மைசூர், ஹைதராபாத், வட சர்க்கார் முதலான பல இடங்களிலும் அவற்றின் சின்னங்களையும், பின்னங்களையும் நாம் இப்பொழுதுங் காணலாம். அல்லாமலும், பூமியைத் தோண்டவும் அவைகள் பற்பல விடங்களில் புதிது புதிதாக அகப்படுகின்றன.

சபை

அசோகர் பௌத்த மதக் கொள்கைகளை ஒழுங்கு படுத்துவதற்கென்று ஒரு பெரிய பௌத்த சபையைக் கூட்டினுர் என்றுஞ் சொல்லப் பட்டிருக்கிறது.

சுமார் 40 வருஷகாலம் மிக்க பெருமையுடன் நீதி நெறி முறையில் பக்ஷபாதம் சிறிதுமின்றி மதக்கொள்கையில் ஒப்பற்ற ஸமரஸக் கொள்கையுடன் அரசியற்றி, உலகம் முழுவதும் என்றும் அழியாப் புகழை நாட்டித் தம்மின் மிக்கார் எக்காலத்திலும், எந்நாட்டிலும், எம்மதத்திலும் எவரும் இல்லை என்னும் நற்பெயரெடுத்து அந்த மன்னவர் பெருமான் பரகதியை யடைந்தார்.

குணம்

“அசோகர் மகா பராக்கிரமசாலி, ஆனுலும் சாந்த முள்ளவர்; மிக்க கியாதி பெற்றவர், ஆனுலும் வணக்க முடையவர்; பக்ஷபாதமில்லாமல் நியாயம் நடத்துபவர், ஆனுலும் தயை பொருந்தியவர்; மதத்தில் பற்று உள்ளவர், ஆனுலும் பிறமதத்தில் பகை கொள்ளாதவர்; புஜபல பராக்கிரம முடையவர், ஆனுலும் சண்டையில் விருப்பமில்லாதவர்; யுத்தஞ் செய்வதில் நிபுணர், ஆனுலும் சமாதானத்தையே நாடுபவர்; சிரமம் பாராமல் உழைப்பவர், ஆனுலும்

இன்னும் அதிகமாக உலகத்துக்கு உழைக்கக் கூட வில்லையே என்று மனவருத்த மடைபவர்,'' என்று அவருடைய குணங்களைத் தொகுத்துச் சொல்லலாம்.

அசோகர் இறக்கவும், மகத ராஜ்யம் க்ஷீணிக்க வாரம்பித்தது. அவருக்குப் பின் பட்டத்துக்கு வந்த மௌரிய வம்சத் தரசர்கள் கி. மு. 184 வரையில் மகத ராஜ்யத்தை ஆண்டு வந்தார்கள். ஆனால், அவர்கள் அனைவரும் பலம் குறைந்தவர்கள்.

ராஜ்யம் க்ஷீணித்தல்

அவர்கள் காலத்தில் அந்த ராஜ்யம் ஐக்கிய மாகாணங்கள் முதல் நருமதை நதிவரையில்தான் பரவி யிருந்தது. உத்தேசம் கி. மு. 225-ல், கோதாவரி கிருஷ்ணா நதிகளின் மத்தியி லுள்ளதான ஆந்திர நாடு சுய ஆட்சியைப்பெற்று மகத ராஜ்யத்தி னின்றும் பிரிந்துவிட்டது.

ஆந்திர ராஜ்யம்

அதற்குச் சுமார் பதினைந்து வருஷங்களுக்குள் கலிங்க நாடும் **காரவேலர்** என்னும் சமணவரசர் காலத்தில் சுவாதீனம் பெற்று விட்டது. சற்றேறக் குறைய அதே காலத்தில் காபூல் நாடும், பஞ்சாப், ஸிந்து நாடுகளின் பெரும் பாகமும் ஸெலியூகஸ் நிகேடாரின் வம்சத்தைச் சேர்ந்த கிரேக்க வரசர்களால் ஜயிக்கப்பட்டு மகத ராஜ்யத்தி னின்றும் பிரிந்து போய்விட்டது.

காரவேலர்

ஆதலின், அசோகருக்குப் பிந்திய மௌரிய அரசர்கள் மிகச் சிறிய நாட்டையே தமக்குச் சொந்தமாகக் கொண்டு ஆண்டு வந்தார்கள்.

காபூல், பஞ்சாப், ஸிந்து

மௌரிய வம்சத்தின் கடைசி யரசன் **பிருகத்ரதன்** என்பவன். அவனை அவனது சேனைத் தலைவனான புஷ்ய **மித்ரா ஸங்கா** என்பவன் கொன்று கி. மு. 184-ல் தான் மகத ராஜ்யத்திற்கு அரசனானான்.

பிருகத்ரதன்

III. அநேக அரச வம்சங்கள்

(கி. மு. 300 முதல் 200 வரையில்)

i. சுதேச அரச வம்சங்கள்

ஸங்கா வம்சத்தரசர்களின் மூல புருஷனை புஷ்ய மித்ரன் என்பவன் விதிசா என்னும் நாட்டரசன். அவன் மௌரிய சேனைக்குத் தலைவனாகவு மிருந்தான். பிருகத்ரதன் என்னும் மௌரிய மன்னவன் சேனையைப் பார்வையிட வந்திருந்த பொழுது, புஷ்யமித்ரன் அவனைக் கொன்று விட்டுத் தான் மகதராஜ்யத்திற்கு அரசனானான்.

புஷ்ய மித்ரன்

மகத ராஜ்யத்தைச் சேர்ந்த பல நாடுகள் சுவாதீனத்தைப் பெற்று அதினின்றும் பிரிந்து போய் விட்டதனால், புஷ்யமித்ரனுக்கு மிகச் சிறிய ராஜ்யந்தான் கிடைத்தது. அதையுங்கூட அவன் காப்பாற்றிக் கொள்வது மிகக் கஷ்டமாய் முடிந்தது.

அசோகர் இறந்து போன சுமார் பதினைந்து வருஷங்களுக்குள், கலிங்க நாட்டை மகத ராஜ்யத்தினின்றும் பிரித்துச் சுவாதீனத்தைப் பெற்று ஆட்சி செய்த காரவேலர் என்னும் கலிங்க வரசர் பன்முறை அவனுடைய ராஜ்யத்தின் மீது படையெடுத்து வந்து, புஷ்யமித்ரன் பாடலிபுரத்தை விட்டோடிப் போகும்படி செய்து விட்டார்.

அவர் காலத்தில் கலிங்க ராஜ்யத்தில் இப்பொழுதிய ஒரிஸ்ஸா என்னும் மாகாணமும், வடசர்க்காரும், நிஜாம் ராஜ்யத்தின் கீழ்ப்பாகமும் சேர்ந்திருந்தன. கலிங்க நாட்டினர் திராவிட வகுப்பினர். அவர்கள் சிறந்த மாலுமிகள்; வியாபாரத்திலும் கைதேர்ந்தவர்கள். அவர்கள் இந்து மகாசமுத்

கலிங்கர்கள்

திரத்தில் புதிய நாடுகளைக் கண்டு பிடித்தார்கள். அவ்வி டங்களில் இப்பொழுதும் அவர்களுடைய சந்ததியார்கள் இருந்து வருகிறார்கள். கலிங்கநாடு முதன் முதல் ஒரு நந்த வரசரின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. ஆனால், சீக்கிரத் திலேயே அது தனது சுவாதீனத்தைப் பெற்று விட்டது. மறுபடி அதை அசோகர் வென்றார் அல்லவா? அசோகர் காலத்திற்குப் பின்பு காரவேலர் அதனை மகத ராஜ்யத்தி னின்றும் பிரித்து விட்டார் என்பது ஏற்கெனவே சொல் லப்பட் டிருக்கின்றது.

பின்னர் சுமார் கி. மு. 155-ல், மீனண்டர் என்னும் க்ரேக்க வரசன் மகத ராஜ்யத்தின் மீது படையெடுத்து வந்தான். ஆனால், புஷ்யமித்ரன் அவனை அடித்துத் துரத்தி விட்டான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதே சமயத்தில் அக்நிமித்ரன் என்னும் அரச குமாரன் விதர்ப்ப ராஜனைத் தோற்கச்செய்து ஜயம் பெற்றான். இவ்வெற்றிகள் காரணமாக புஷ்யமித்ரன் ஓர் உயர்ந்த அசுவமேத யாகம் செய்தானென்று **பதஞ்சலி** தமது வியாகரண பாஷ்யத்திலும், காளிதாஸன் தனது **மாளவிகாக்நிமித்ரம்** என்னும் நாடகத்திலும் எழுதியிருக்கிறார்கள். இதினின் றும் பிராமணமதம் மறுபடியும் கொஞ்சம் முன் வரலாயிற் றென்று தெரிய வருகின்றது. அன்றியும், புஷ்யமித்ரன் பிராமணர்களை ஆதரிக்கவும், ஸம்ஸ்கிருத பாஷையில் பல நூல்கள் எழுதப்பட்டன. பதஞ்சலியின் வியாகரண மஹாபாஷ்யமும், ஹிந்துக்கள் கொண்டொழுகும் சட்டமான மானவ தர்ம சாஸ்திரமும் இப்பொழுதுதான் எழுதப் பட்டன. மஹாபாரதம் தொகுக்கப்பட்ட தும் இப்பொழுதுதான் என்று சிலர் எண்ணுகிறார்கள். மற்றுஞ் சிலர் புஷ்யமித்ரன் பிராமணர்களை ஆதரித்து

அசுவமேதம்

பிராமணர் கள் ஆதரிக் கப்பட்டது

வந்ததை யல்லாமல், பௌத்தர்களுக்கும், சமணர்களுக்கும் தீங்கிழைத்தானென்றும் எண்ணுகிறார்கள். ஆனால், அது எவ்வளவு வரையில் உண்மை என்பதை நிச்சயமாய்ச் சொல்ல முடியாது.

புஷ்யமித்ரனுக்குப் பின், ஸங்கா வம்சத் தரசர்கள் கி. மு. 72 வரையில் மகத ராஜ்யத்தை ஆட்சி செய்திருந்தார்கள். அந்த வம்சத்தின் கடைசி யரசன் தேவபூதி என்பவன். அவனை அவனுடைய பிராமண மந்திரியான வாஸுதேவ கான்வா என்பவன் கொன்று விட்டுத் தான் பட்டத்துக்கு வந்தான். இவன் கான்வாயன வம்சத்தின் முதலரசன்.

ஸங்கா வம்சம்

கான்வா வம்சம்

கான்வாயன வம்சத்தினர்கள் கி. மு. 27 வரையில் தான் மகத ராஜ்யத்தை ஆண்டுவந்தார்கள். அந்த வம்சத்தின் கடைசி அரசன் ஆந்திர வம்சத்தரசரால் கொலையுண்டு போனான்.

ii. விதேச அரச வம்சங்கள்

அலெக்ஸான்டருக்குப் பிள்ளை யில்லாததனால், அவன் ஜயித்த ராஜ்யத்தை அவனுடைய தளகர்த்தர்கள் பங்கிட்டுக் கொண்டார்கள் என்றும், அவர்களுள் ஒருவனான ஸெலியூகஸ் நிகேடார் என்பவனுக்கு ஸிரியா முதலான மேலாசியா நாடுகள் கிடைத்தன வென்றும் ஏற்கெனவே சொன்னோ மல்லவா? அவனுடைய சந்ததியார்கள் அவனால் சந்திரகுப்தருக்குக் கொடுத்துவிடப்பட்ட பரோபநிஸெடெய், அரகோஷியா, அரீயா என்னும் நாடுகளொழிந்த மற்ற ராஜ்யத்தைச் சுமார் கி. மு. 250 வரையில் அரசாட்சிசெய்து வந்தார்கள். சுமார் கி.மு. 248-ல், காஸ்பியன் கடலுக்குத் தென்கிழக்கிலிருந்த பெர்ஸியா தேசத்தின் வடபாகமான பார்த்தியா என்னும் நாடும், ஹிந்து

ஸெலியூகஸின் சந்ததியார்

குஷ் மலைக்கும் ஆக்ஸஸ் நதிக்கும் மத்தியி லிருந்த பாக்ட்ரியா என்னும் நாடும் அதினின்றும் பிரிந்து தனித்தனி வரசரின் கீழ் சுவாதீனத்தை யடைந்துத் தனி ராஜ்யங்கள் ஆய்விட்டன. பார்த்தியா ராஜ்யம் முதலாவது மித்ரடாடிஸ் என்பவருடைய ஆட்சியில் மேன்மை பொருந்தியிருந்தது. அவர் கி. மு. 171 முதல் கி. மு. 136 வரையில் ஆட்சிசெய்துவந்தார். அவர் சுமார் கி. மு. 138-ல், ஸிந்து நதிக்கும் ஜீலம் நதிக்கும் மத்தியிலுள்ளதும் தக்ஷசிலையைத் தலை நகராக வுடையதுமான நாட்டை ஜயித்துத் தனது ராஜ்யத்திற் சேர்த்துக் கொண்டார். அவருக்குப் பின் சுமார் கி. பி. 20-ல் பட்டத்துக்கு வந்த கந்தோபரஸ் என்னும் பார்த்திய மன்னவரும் ஒரு பெரிய ராஜ்யத்தை ஆண்டு வந்திருக்கிறார். என்றாலும், பார்த்திய வரசர்கள் தங்களுடைய இந்திய நாட்டைச் சரியானபடி அடக்கியாளக் கூடவில்லை. அதை யாண்டு வந்த க்ஷத்ரபதிகள் சில சமயங்களில் பார்த்திய வரசர்களுக் கடங்கியும், சிற்சில பொழுது சுவேச்சையாயும், இருந்து வந்துள்ளார்கள். கடைசியில் பார்த்தியா ராஜ்யமும் சாகருடைய படை யெழுச்சியில் அழிந்துபட்டது. அசோகர் காலத்திற்குப் பிறகு பாக்ட்ரியா நாட்டுக் கிரேக்க வரசர்கள் மௌரிய ராஜ்யத்திற் சேர்ந்திருந்த ஆப்கானிஸ்தானம், பஞ்சாப் நாடுகளை வென்று தங்களுடைய ராஜ்யத்திற் சேர்த்துக்கொண்டு விட்டார்கள். ஆனால், சீக்கிரத்திலேயே இந்நாடுகள் பாக்ட்ரியாவினின்றும் பிரிந்து தனித்தனியான சிறிய ராஜ்யங்கள் ஆய்விட்டன.

பார்த்தியா; பாக்ட்ரியா

பாக்ட்ரியாவை யாண்ட கிரேக்க வரசர்களில் ஐந்தாமவனான மீனண்டர் என்பவன் பிரசித்தி பெற்றவன். அவன் சுமார் கி. மு. 160 முதல் கி. மு. 140 வரையில் காபூலில் ஆட்சிசெய்து வந்தான். காபூல், ஸிந்து நதிப் பிர

தேசம், கத்தியவார், மேற்குக் கடற்கரையைச் சார்ந்த மற்றுஞ் சில நாடுகள் ஆகிய இவையனைத்தும் அவனுடைய ராஜ்யத்திற் சேர்ந்திருந்தன. அன்றியும், அவன் மதுரை, ஸாகேதம், ராஜபுதனத்திலுள்ள நகரீ முதலியவற்றின்மீது படையெடுத்து வந்து கொள்ளையடித்துச் சென்றான் என்றும் தெரிய வருகின்றது. அவன் கி. மு. 155-ல், மகத ராஜ்யத்தின்மீது படையெடுத்து வந்தான் என்றும் புஷ்யமித்ரா ஸங்கா அவனை முறிய அடித்துத் துரத்திவிட்டான் என்றும் ஏற்கெனவே சொல்லப்பட்டுள்ளன.

மீனாண்டர்

மீனாண்டர் நீதிநெறி தவறாத மன்னன் என்றும், அவன் பௌத்த மதத்தைக் கைக்கொண்டான் என்றும், அவனுடைய பௌத்தமதப் பிரசாரங்கள் **மிலிந்தப்ரச்நம்** என்னும் நூலில் தொகுக்கப்பட்டிருக்கின்றன என்றும், பௌத்த நூல்களில் மீனாண்டரை மிலிந்தன் என்று கூறியுள்ளார்கள் என்றும், நில மார்க்கமாக இந்தியாவின் மீது படை யெடுத்து வந்த கடைசி ஐரோப்பியன் மீனாண்டரே யாவான் என்றும் தெரியவருகின்றன. அவனைப்பற்றின சில விவரங்கள் அவனுடைய நாணயங்களி னின்றும் வெளியா யிருக்கின்றன.

மதப்பிரசாரம்

பாக்ட்ரியா, ஆப்கானிஸ்தானம், பஞ்சாப் முதலிய நாடுகளி லிருந்து வந்த கிரேக்கர்கள் அந்நாடுகளுக்கும் அவர்களுடைய தாய் நாட்டிற்கும் இடையில் உண்டான பார்த்தியா ராஜ்யத்தினால் பிரிக்கப்பட்டதனால், தங்களுடைய பழைய வழிகளை முற்றிலும் மறந்து இந்நாட்டினர்களோடு கலந்து உறவாடியும ஹிந்துக்களும், பௌத்தர்களும் ஆகிவிட்டார்கள். கி.மு. 140க்கும் 130க்கும் இடையில் மத்திய இந்தியாவுக்கு வந்த ஒரு

கிரேக்கர் ஹிந்துக்களானது

கிரேக்க ராயபாரி வைஷ்ணவ மதத்தைக் கைக்கொண்டு பீல்ஸா என்னும் நகரத்திற் கருகில் தனது விஷ்ணு பக்தியை வெளியிடுவதான ஒரு ஸ்தம்பத்தை நாட்டிச் சில சாஸனங்களையும் செய்திருக்கிறான். இன்னமொரு கிரேக்கன் நாக பக்திமேலிட்டு ஒரு குளத்தை வெட்டுவித்தான். இவ்வாறாக அந்தக் கிரேக்கர்கள் கொஞ்சங் கொஞ்சமாக இந்நாட்டுக் குடிகளுடன் கலந்து இந்தியர்களே ஆய்விட்டார்கள். பாக்ட்ரியர்களுடைய அரசாட்சியும் சுமார் கி. மு. 130-க்கும் முன்னமேயே மத்திய ஆசியாவிலிருந்தும் இந்தியாவின்மீது நாடோடிகளான சாகர் என்னும் ஜாதியார் படையெடுத்து வந்ததன் காரணமாக அழிந்து போய் விட்டது.

பார்த்தியா, பாக்ட்ரியா ராஜ்யங்களை யழித்தும், இந்தியாவின் மீது படையெடுத்தும் வந்த **சாகர்கள்** மங்கோலிய வகுப்பைச் சேர்ந்தவர்கள். அவர்கள் துருக்கிஸ்தானத்தின் கீழ்ப் பாகத்தில் வசித்து வந்தார்கள். அவர்கள் முதலில் நாடோடிகளாக விருந்தார்கள்.

சாகர்

சுமார் கி. மு. 160-ல், **யூசிகள்** என்னும் மற்றொரு நாடோடிகள் சாகர்களை அவர்களுடைய நாட்டினின்றும் துரத்திவிட்டு அதைத் தாங்கள் கைப்பற்றிக்கொண்டார்கள். தம் மிருப்பிடத்தை விட்டுத் துரத்தப்பட்ட சாகர்கள் பாக்ட்ரியா நாட்டிற்கு வந்து அங்கிருந்த கிரேக்கர்களை அவர்களுடைய நாட்டினின்றுந் துரத்திவிட்டுத் தாங்கள் அதைத் தங்களுக்குச் சொந்தமாக்கிக்கொண்டு அரசு செலுத்தவும் ஆரம்பித்து விட்டார்கள். அன்றியும், அவர்கள் ஆப்கானிஸ்தானம், பஞ்சாப், மாளவம், ஸிந்து, கூர்ஜரம், கத்தியவார் முதலான நாடுகளிலும் பரவிவிட்டார்கள். சீக்கிரத்திலேயே அவர்களில் இரண்டு முக்கிய

சாக ராஜ்யங்கள்

மான அரச வம்சங்கள் ஏற்பட்டு அவர்கள் மஹாராஷ்டிரத்திலும், மாளவத்திலும் ஆட்சி செய்யத் தொடங்கினார்கள். அந்த அரசர்களுக்கு **க்ஷத்ரபான்** அல்லது **க்ஷத்ரபதி** என்று பெயர். மாளவம், ஸிந்து, கூர்ஜரம், மஹாராஷ்டிரம்

சாக வம்சங்கள்

முதலான மேனாடுகளில் தமது அதிகாரத்தை நிலை நிறுத்தி ஆட்சி செய்து வந்த இரண்டு சாக வம்சங்களுக்கும் மேனாட்டுச் சாகர்கள் என்று பெயர். அவர்கள் மத்திய இந்தியாவின் மேற்பாகத்தையும், ஆந்திரர்கள் அதன் கீழ்ப்பாகத்தையும் ஆண்டு வந்தார்கள்.

சாகாதிபதிகள் பாரஸிகப் பட்டமாகிய க்ஷத்ரபதி என்னும் பெயரை வைத்துக்கொண்டதினின்றும் அவர்கள் பார்த்திய நாட்டு மன்னர்களுக்குக் கட்டுப்பட்டிருக்கக் கூடுமென்று சிலர் எண்ணுகிறார்கள். அதற்கேற்றவாறு அப்பொழுது பார்த்திய மன்னர்களிற் சிலர் வலிமை மிக்கவர்களாகவு மிருந் திருக்கிறார்கள்.

மேனாட்டுச் சாகா க்ஷத்ரபதிகளில் மாளவத்தை யாண்டு வந்த **ருத்ரதாமர்** என்பவர் சிறந்த பராக்கிரம

ருத்ரதாமா

சாலி. அவர் சுமார் கி. பி. 130-ல் பட்டத்துக்கு வந்தார். அவர் ஆந்திர வரசனோடு சண்டையிட்டு ஜயம் பெற்று அவர்கள் கைப்பற்றிக்கொண்ட மஹாராஷ்டிர சாக ராஜ்யத்தைத் தமது ராஜ்யத்திற் சேர்த்துக் கொண்டுவிட்டார். புலிமாயி என்னும் ஆந்திர வரசன் அவரது மருமகனானதினால் அவர் அம்மன்னனை அவ்வளவில் விட்டு விட்டார்.

அவர் பிராமண மதத்தை ஆதரித்தார். அவர் தாம் யுத்தத்திலன்றி மற்ற எப்பொழுதும் மனிதரைக் கொல்வதை நிறுத்துவதாகச் சபதஞ் செய்து கொண்டு அதன்படி தாம் சாகுமளவும் நடந்தொழுகினதாகச் சாஸனஞ் செய்திருக்கிறார். அவ்வாறே, அவர் தாம் ஜனங்கள் மீது

வரிகளைச் சுமத்தி அவர்களைத் துன்புறுத்தாமல், தமது சொந்தப் பொக்கிஷத்திலிருந்து பல பொதுக் கட்டிடங்களுக்காகவும், இதரமான பொது வேலைகளுக்காகவும் பணத்தைச் செலவு செய்து வந்ததாகவும் கூறியுள்ளார்.

அரசரின் நற்காரியங்கள்

அவர் காலத்தில் ஸுதர்சன ஏரியின்கரை புயற்காற்றினால் உடைந்துவிடவும், அவர் அதை முன்னிலும் மும்மடங்கு பலமாகக் கட்டுவித்தார். தாம் அங்ஙனம் செய்ததையும் அவர் சிலா சாஸனஞ் செய்திருக்கிறார். மாளவ மேனாட்டுச் சாகர்கள், குஷான் அரசர்களுக்கு உட்பட்டு ஆட்சி செய்து வந்தார்கள். குஷான் ராஜ்யம் அழிந்து போகவும், அவர்கள் சுவாதீனம் பெற்றுவிட்டார்கள். கி. பி. நான்காவது நூற்றாண்டின் கடைசியில், மேனாட்டுச் சாகர்களுடைய அதிகாரம் முற்றிலும் அழிந்து விட்டது. சந்திரகுப்த விக்ரமாதித்யர் என்னும் குப்தவரசர் இருபத்தோராவது க்ஷத்ரபதியைக் கொன்று அவனுடைய ராஜ்யத்தையும் தமது குப்த ராஜ்யத்திற் சேர்த்துக்கொண்டு விட்டார்.

சாக ராஜ்யம் அழிந்தது

சாகர்களைத் துரத்திவிட்டுத் துருக்கிஸ்தானத்தில் வந்து குடியேறின யூசிகள் சுமார் பதினைந்து வருஷங்கள் வரையில் அங்கேயே வசித்து வந்தார்கள். ஆனால், அவர்களைச் சீன தேசத்தின் வடமேற்கிலிருந்து துரத்தியனுப்பிய ஹ்யூங்னு என்னும் ஜாதியார் அவர்களைத் துருக்கிஸ்தானத்திலிருந்துந் துரத்தி விட்டார்கள். அதனால், யூசிகள் பாக்ட்ரியா நாட்டில் வந்து குடியேறினார்கள். அப்பொழுது அவர்கள் ஊர் ஊராகச் செல்வதை விட்டு அங்கேயே தங்கிவிட்டார்கள். அன்றியும், அவர்கள் நூறு வருஷங்

யூசிகள்

களுக்குள் நாகரிக வளர்ச்சியுண்டாகப்பெற்று ஒரு பராக்கிரமமுள்ள ஜாதியார் ஆனார்கள். அவர்களுள் ஐந்து வகுப்புக்கள் ஏற்பட்டு ஒவ்வொன்றும் ஒவ்வொரு தலைவனது அதிகாரத்திற் குட்பட்டிருந்தது. அந்த வகுப்புக்களில் ஒன்றிற்குக் **குஷான்** என்று பெயர்.

கி. பி. முதலாவது நூற்றாண்டின் மத்தியில் குஷான் வகுப்பைச் சேர்ந்த **முதலாம் காட்பீஸஸ்** என்பவன் மற்றைய வகுப்புக்களைத் தன்னதிகாரத்திற் குட்படுத்திக் கொண்டு, ஹிந்துகுஷ் மலையைக் கடந்து பாக்ட்ரியா, பார்த்தியா நாடுகளை வென்று ஒரு ராஜ்யத்தை ஸ்தாபித்தான்.


காட்பீஸஸ்

அவன் மகனும், தந்தையைப் போலவே, முயன்று தனது ராஜ்யத்தை வட இந்தியாவின் பெரும்பாகம் வரையில் பரப்பினான். அவனுடைய ராஜ்யம் கிழக்கில் காசி வரையிலும், தெற்கில் ஸிந்துதேசம் வரையிலும் பரவியிருந்தது. அதன்றியும், அவனுடைய ராஜ்யம் ரோம, பாரஸிக, சீன ராஜ்யங்களின் எல்லைகள் வரையில் பரவி, அதற்கு முன்னிருந்த பல சிறிய ராஜ்யங்களையெல்லாம் அடியோடு தொலைத்து விட்டதனால், அசோகர் காலத்திற்குப் பின்பு தடைப்பட்டிருந்த மேனாட்டு வியாபாரம் மறுபடியும் செம்மையாக நடந்து வரலாயிற்று.

ராஜ்யத்தின் பரப்பு

குஷான் வம்சத்தரசர்களில் கி. பி. 120-ல், பட்டத்துக்கு வந்த **கனிஷ்கர்** என்பவர் தாம் பிரசித்தி பெற்றவர். அவருடைய ராஜ்யம் மேற்கில் மத்திய ஆசியாவிலுள்ள பாமிர் பீடபூமி முதல் கிழக்கில் விந்தியபருவதம் வரையில் பரவியிருந்தது. கனிஷ்கருடைய பெயர் திபெத், சீனா, மங்கோலியா முதலான தேசங்களிலும் தெரிந்திருந்தது. பௌத்தர்கள் அவரை மிகவும் கொண்டாடி வந்தார்கள்.

கனிஷ்கர் ராஜ்யம்



கனிஷ்கா
காலத்திய
இந்தியா
டர்க்கிஸ்டான்
சைநிஸ் டர்க்கிஸ்டான்
ஆப்கானிஸ்தான்
காஷ்மீர்
புருஷபுரம்
உஜ்ஜினி
பொம்பாய்
மதராஸ்
இந்து
மகா சமுத்திரம்

கனிஷ்கர் காஷ்மீர நாட்டை ஜயித்துத் தமது ராஜ்யத்திற் சேர்த்துக் கொண்டார். அவர் அங்கே **கனிஷ்கபுரம்** என்னும் ஓர் அழகிய பட்டணத்தை அமைத்தார். கனிஷ்கர் மேனாட்டுச் சாகர்களைவென்று தம்முடைய அதிகாரத்திற் குட்படுத்தினார் என்று எண்ணவும் இடமுண்டு.

கனிஷ்கரின் வெற்றிகள்

அவர் பாமிர் பீடபூமிக்குக் கிழக்கிலும், திபெத்துக்கு வடக்கிலுமுள்ள துருக்கிஸ்தானத்தின் மீது இருமுறை படையெடுத்துச் சென்றார். முதலில் அவர் தோல்வியடைந்ததனால், சீன வரசனுக்குக் கப்பங் கட்டவும் நேர்ந்தது. ஆனால், இரண்டாவது படையெழுச்சியில் அவர் முற்றிலும் ஜயம்பெற்றார். அதன் பயனாக அவருக்குக் **காஷ்கர், யார்க்கண்ட், கோடன்** என்னும் நாடுகள் கிடைத்தன. அவர் கட்டி வந்த கப்பமும் தள்ளுண்டு போயிற்று. அவையன்றியும், அவர் சீன தேசத்தரசரது ஆட்சிக்குட்பட் டிருந்த ஒரு சிற்றரசரிடமிருந்து அவருடைய நன்னம்பிக்கைக் கடையாளமாகச் சிலரை ஜாமீனாகப் பெற்றார். கனிஷ்கர் அவர்களைச் செம்மையாக நடத்திவந்தார் என்றும், அதனால் அவர்களும் பௌத்த சந்யாசிகளுக்காகவும், மடங்களுக்காகவும் ஏராளமான பணம் கொடுத்துதவினார்களென்றும் சொல்லப்பட் டிருக்கின்றன. பஞ்சாபில் அவர்களிருந்த விடுதிக்குச் **சீனபுக்தி** என்னும் பெயர் வழங்கி வந்தது.

சீனபுக்தி

கனிஷ்கருடைய ராஜ்யத்துக்கு இப்பொழுது பெஷாவர் என்று வழங்கும் **புருஷபுரம்** தான் தலைநகராகவிருந்தது. அங்கே அவர் 400 அடி உயரமுள்ள மிகப்பெரிய ஒரு ஸ்தூபியையும், அதனருகில் ஒரு பெரிய மடத்தையும் அமைத்தார். இவைகள் பிற்காலத்தில் மகம்மதியர்களால் இடித்துத் தகர்க்கப்பட்டன.

புருஷபுரம்

கனிஷ்கர் தாம் பட்டத்துக்கு வந்த சில வருஷங்கள் கழித்துப் பௌத்த மதத்தைத் தழுவினார். அவருக்குப் பௌத்த சாஸ்திர ஆராய்ச்சியில் பல சந்தேகங்கள் உண்டாயின. அவர் பௌத்த சமயத்தைக் கொண்டொழுகினவர்களுக்குள் பல முரணான கொள்கைகள் இருந்து வருவதைக் கண்டு கலங்கினார். அவற்றை யெல்லாம் ஒப்பிட்டுப் பார்த்து உண்மையைக் கண்டறிந்து யாவருக்கும் பொதுவான ஒரேவிதக் கொள்கைகளைத் தீர்மானிக்கக் கருதி, அவர் ஒரு பெரிய பௌத்த சபையைக் கூட்டவேண்டுமென எண்ணினார். அவருடைய குருவான **பார்சுவர்** என்பவர் அதை ஆமோதிக்கவும், காஷ்மீரத்தில் சுமார் கி. பி. 100-ல் ஒரு மகாசபை சேர்ந்தது. அந்தச் சபைக்கு **வாசுமித்ரர்** அக்ராஸனாதிபதியாகவும் **புத்த சரிதம்** என்னும் நூலை யியற்றிய **அசுவகோஷா** வென்பவர் உப-அக்ராஸனாதிபதியாகவும் நியமிக்கப்பட்டார்கள். சுமார் ஐந்நூறு பெயர்கள் கூடிப் பழமையான கிரந்தங்கள் யாவற்றையும் பரிசோதித்து அவற்றிற்குத் தகுந்த வியாக்யானங்களையுஞ் செய்தார்கள். பௌத்த வேதாந்தக் களஞ்சியம் என்னும்படியான **மஹாவிபாஷா** என்னும் நூல் அப்பொழுது தான் உண்டாயிற்று.

நூல்கள்

அந்த வியாக்யானங்களைத் தாமிரத் தகடுகளில் சாஸனஞ்செய்து அவற்றை அதற்கென்று கட்டப்பட்ட ஒரு ஸ்தூபியின்கீழ்ப் புதைத்து வைத்து விட்டார்கள்.

ஹிந்துக்களானது

சுமார் 25 வருஷகாலம் ஆட்சிசெய்திருந்து கனிஷ்கர் காலஞ் சென்றார். அவருக்குப் பின்பு குஷான் ராஜ்யம் க்ஷீணிக்க வாரம்பித்தது. குஷான் வம்சத்தரசர்களும் தங்களுடைய கிரேக்கப் பழக்க வழக்கங்களை விட்டு நாளடைவில் ஹிந்துக்களாய் விட்டார்கள் என்பதை அவர்

களுடைய பெயர்களினாலும், நாணயங்களினாலும் அறிந்து கொள்ளலாம்.

iii. புதிய பௌத்த மதமும், அப்போதையக் கல்வி வாணிபம் முதலியனவும்

கௌதமபுத்தர் உண்டுபண்ணின பௌத்த மதத்திற்கும், கனிஷ்கர் காலத்தில் ஜனங்கள் கொண்டொழுகின பௌத்த மதத்திற்கும் விசேஷ வித்தியாசங்கள் ஏற்பட்டு விட்டன. இந்நாட்டிலிருந்த பல சாமான்ய ஜனங்களும், கிரேக்கர், பாரஸிகர் முதலான பல அந்நியர்களும் பௌத்த மதத்தைத் தழுவிக் கொண்டது தான் பல வேற்றுமைகள் உண்டானதற்கு முக்கிய காரணம் ஆயிற்று. முந்திய காலத்திய பௌத்தர்கள் கௌதமருக்கு யாதொரு விதமான சிலையையும் உண்டு பண்ணவில்லை. அவரை உருவப்படுத்தி வணங்குவதை அவர்கள் பிசகென்று எண்ணியிருந்தார்கள். எப்பொழுதாவது அவர் தங்களுடைய மத்தியிலிருப்பதாகக் குறிப்பிட வேண்டுமென அவர்களுக்குத் தோன்றினால், அவர்கள் அவருக்கென்று ஓர் இடத்தை அமைத்து அதைக் காலியாக விட்டிருந் தார்கள். அல்லது அவ்விடத்தில் யாதானுமொரு அடையாளத்தை வைத்தார்கள். சிற்சில பொழுது அவர்கள் அவருடைய அடிச்சுவடுகளை வைப்பதுமுண்டு. ஆனால், பிற்காலத்திய பௌத்தர்கள் சாக்கிய முனியைப்போன்றும், போதி சத்வரைப் போன்றும், புத்தரைப்போன்றும் பலவாறு அவருக்கு உருவமமைத்தார்கள். அவரைக் குறிப்பனவான சிலைகள் முதலில் மரத்திலும், பின்னர்க் கல்லிலும் நூற்றுக் கணக்கான வகைகளிற் செதுக்கப் பட்டுள்ளன. இந்த மாறுதல் கிரேக்க அல்லது பாரஸிகக் கலப்பினால்

பௌத்தமதம் மாறுபட்டதன் காரணங்கள்.

உண்டானது போலும். கடமையின் சிறப்பையும், நன்னடக்கையின் மேன்மையையும், உயிர்களினிடத்து அன்பையும் முக்கியமாகக் கொண்டொழுகின பௌத்த மதம் பல மாறுதல்களை அடைந்துதான் தன்னைப் புதிதாக அநுஷ்டித்த அந்நியர்களின் மனத்தைக் கவரக்கூடியதாயிற்று. அல்லாமலும், இதர மதங்களின் கொள்கைகளில் சிலவற்றைப் பௌத்த மதம் தழுவ வேண்டியதும் இன்றியமையாததாய் முடிந்தது.

கலப்பற்றதும், நீதிவழியையே சிறந்ததாகக் கொண்டதுமான பழைய பௌத்தமதம் **ஹீனயானம்** என்றும் பல மாறுதல்களையடைந்தும், புதிய பழக்கங்களை அநுஷ்டித்தும் உண்டான புதிய பௌத்தமதம் **மஹாயானம்** என்றும் வழங்கி வரலாயின. கனிஷ்கர் காலத்திலிருந்த

ஹீனயானம்; மஹாயானம்

நாகார்ஜுனர் என்பவர் மஹாயான பௌத்தமதக் கொள்கைகளை நாடெங்கும் பரப்பினதன்றி, அவற்றை யெல்லாந் தொகுத்து ஒரு சிறந்த நூலையும் இயற்றினார். **சரகர்** என்னும் வைத்திய சாஸ்திரி இருந்ததும் அவருடைய காலத்திற்றான்.

கனிஷ்கருடைய காலத்தில் கல்வியும், சிற்பமும், வாணிபமும் முன்னேற்றத்தை யடைந்தன. அவ்வரசருடைய ஆதரவே அதற்கு ஒரு சிறந்த காரணமாம். அசோகரைப்போல் கனிஷ்கரும் அநேக கட்டிடங்களைக் கட்டுவித்தார். அவருடைய காலத்தில் உண்டான நூற்றுக்

கல்வி அபிவிருத்தி

கணக்கான விக்ரஹங்களும், பிரதிமைகளும் பிற்காலத்தில் காசி, வடமதுரை, அமராவதி முதலான பல விடங்களிலும் ஏராளமாகக் கிடைத்தன. அவற்றினின்றும் அக் காலத்திய சிற்பிகளின் திறமையை நன்றாக அறியலாம்.

பஞ்சாப், காந்தாரம் முதலிய வட நாடுகளில் கிரேக்கர்கள் மிகவும் அழகிய ஒரு புதுமாதிரியான கட்டிடங்களையும், சிற்பங்களையும் அமைத்துவந்த

இருவித சிற்பங்கள்

பொழுது, மத்திய இந்தியாவிலும், தக்ஷிணத்திலும் சுதேசச் சிற்பிகளும், கட்டிட நிபுணர்களும் வேறுவிதமான சிற்பங்களையும் கட்டிடங்களையும் உண்டாக்கி வந்தார்கள்.

குஷான் அரசர்கள் காலத்தில் வியாபாரமும் விருத்தியை யடைந்தது. மேலாசியா நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் நிலமார்க்கமாக வாணிபம் நடந்து

வியாபாரம்

வந்தது. அப்பொழுது சீன தேசத்திலிருந்து இந் நாட்டிற்குப் பட்டாடைகள் கொண்டு வரப்பட்டன எனத் தெரியவருகின்றது.

கடல் மார்க்கமான வியாபாரம் மட்டில் பெரும்பாலும் தென்னிந்தியாவோடுதான் நடந்தேறி வந்தது. அப்பொழுது, இங்கே சில சிறந்த துறைமுகப் பட்டணங்களும் இருந்தன. அவற்றைப்பற்றின விவரங்கள் பின்னாற் சொல்லப்படும்.

iv. ஆந்திர ராஜ்யம்

ஆந்திரர்கள் தென்னாட்டுத் திராவிடர்களிற் சேர்ந்தவர்கள். அவர்கள் பேசும் பாஷை தெலுங்கு. அவர்களுடைய நாட்டிற்குத் **தெலிங்காணம்** என்று பெயர். அந் நாடு கோதாவரிக்கும் கிருஷ்ணாவிற்கும் இடையில் இருந்தது. **தரணிக்கோட்டை** என்பது அதன் தலைநகரம்.

தெலிங்காணம்

சந்திரகுப்தர் மகத ராஜ்யத்தை யாண்டு வந்த காலத்தில் ஆந்திர ராஜ்யம் மேன்மை பொருந்தி யிருந்தது என்று மெகாஸ்தனீஸ் சொல்லி யிருக்கிறார். அசோகருடைய ஆட்சியில் அது அவருக் கடங்கிக் கப்பமும்

செலுத்தி வந்ததாகத் தெரியவருகின்றது. ஆயினும், அது அவருடையராஜ்யத்திற் சேர்க்கப்படாமல் ஒருதனி அரச வம்சத்தாரால் ஆளப்பட்டு வந்தது. அவர்களுக்குச் சாத வாகனர் அல்லது சாலிவாகனர் என்று பெயர். அவர்களிற் பலர் சாதகர்ணி என்னும் பெயரை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அது ஒருபிருதுப் பெயர் போலும்.

சாதவாகனர் — அவர்களில் முப்பது அரசர்கள் சுமார் 450 வருஷங்கள் வரையில் அந்த ராஜ்யத்தை ஆட்சி செய்து வந்திருக்கிறார்கள். அசோகர் காலத்திற்குப் பின்பு மகதராஜ்யத்திற் சேர்ந்தனவும், அதற்கடங்கி யிருந்தனவுமான பல நாடுகள் சுவாதீனத்தைப் பெற்றுவிட்டன வென்று ஏற்கெனவே சொல்லப்பட்ட தல்லவா? அவற்றுள் ஆந்திர ராஜ்யமும் ஒன்று.

சிமுகர் — சிமுகர் என்னும் அரசரது ஆட்சியில்தான் அந்த ராஜ்யம் சுவாதீனத்தை யடைந்தது. அல்லாமலும், ஆந்திர வரசர்களில் ஒருவர் கடைசி கான்வாயன வரசனைக் கொன்று மகதராஜ்யத்தைத் தமது ராஜ்யத்திற் சேர்த்துக் கொண்டுவிட்டார் என்றும் சிலர் எண்ணுகிறார்கள்.

அந்த ராஜ்யம் பதின்மூன்றாவது, பதினான்காவது சாதவாகன அரசர்களான கௌதமிபுத்ர சாதகர்ணி, புலிமாயி என்பவர்களுடைய ஆட்சியில் உந்நத நிலைமையி

உந்நத நிலை — லிருந்தபொழுது விந்திய பருவதம் முதல் மைசூர் வரையிலும், மேற்குக் கடலிலிருந்து கிழக்குக் கடல் வரையிலும் பரவியிருந்தது.

கௌதமிபுத்ர சாதகர்ணி என்பவர் சுமார் கி.பி. 126-ல் மேனாட்டுச் சாக க்ஷத்ரபானான நாகபாணன் என்பவனையும், அவனுடைய சந்ததியாரையும் அடியோடு நாசஞ் செய்து தொலைத்துவிட்டு அந்த ராஜ்யத்தையும் தமது

ராஜ்யத்திற் சேர்த்துக் கொண்டார். ஆனால், ருத்ரதாமர் என்னும் மாளவ சாகாதிபதி புலிமாயி என்னும் ஆந்திர வரசனை வென்று ஆந்திரர்கள் மேனாட்டுச் சாகர்களிடமிருந்து பிடுங்கிக் கொண்ட மஹாராஷ்டிரத்தைத் தமது ராஜ்யத்திற் சேர்த்துக்கொண்டார் என்றும், சாதவாகன மன்னன் தமது மருமகனாதினால் அவனை அம்மட்டில் விட்டுவிட்டார் என்றும் ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கின்றன.

நாகபாணன்

ஹாலா

சுமார் கி. பி. 225-ல் ஆந்திர ராஜ்யம் க்ஷீணித்து விட்டது. அதைப் பற்றின விவரம் ஒன்றும் கிடைத்திலது. சாதவாகன அரசர்களில் ஒருவரான ஹாலா என்பவர் ப்ராகிருத பாஷையில் **சப்தசதகம்** என்னும் நூலை இயற்றினாரெனச் சொல்லப் பட்டிருக்கிறது.

கட்டிடங்கள்

சாதவாகன அரசர்கள் காலத்தில் மேலிந்தியாவில் அநேக அழகான குகைக் கோயில்கள் மலைகளைக் குடைந்து கட்டப்பட்டன.

V. தென்னிந்திய ராஜ்யங்கள்

துங்கபத்திரை நதிக்குத் தெற்கிலிருந்து கன்யாகுமரி வரையிலுமுள்ள நாட்டைத் தென்னிந்தியா வென்று சொல்லலாம். அதுதான் **தமிழகம்**; திராவிடர்கள் வெகு நீண்டகாலமாக இருந்தவிடம். தமிழகம் மிகப் பழமையானது. நாகரிக வளர்ச்சிக்கும், கல்விக்கும், வியாபாரம், கைத்தொழில் முதலியவற்றின் அபிவிருத்திக்கும் அது பல்லாயிரம் வருடங்களாகப் பெயர் பெற்றிருந்தது. அந்நாட்டுப் பழங் குடிகளான திராவிடர்கள் இந்தியா முழுதும் பரவியிருந்தார்கள் என்று முன்னமே சொல்லப்பட்டிருக்கின்ற

திராவிடர்

தல்லவா? தென்னிந்தியாவின் பெருமையை ஒரு பெரிய வர் பின்வருமாறு வருணித்துக் கூறியுள்ளார்:—

வேதம் நிறைந்த தமிழ் நாடு—உயர்
வீரம் செறிந்த தமிழ் நாடு—நல்ல
காதல் புரியும் அரம்பையர் போலிளங்
கன்னியர் சூழ்ந்த தமிழ் நாடு.

காவிரி தென் பெண்ணை பாலாறு—தமிழ்
கண்டதோர் வையை பொருனைநதி—யென
மேவிய யாறு பல வோடத்—திரு
மேனி செழித்த தமிழ் நாடு.

முத்தமிழ் மாமுனி நீள் வரையே—நின்று
மொய்ம்புறக் காக்குந் தமிழ் நாடு—செல்வம்
எத்தனை யுண்டு புவி மீதே—அவை
யாவும் படைத்த தமிழ் நாடு.

நீலத் திரைக்கட லோரத்திலே—நின்று
நித்தஞ் தவஞ் செய் குமரி யெல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே புகழ்
மண்டிக் கிடக்குந் தமிழ் நாடு.

கல்வி சிறந்த தமிழ் நாடு—புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ் நாடு—நல்ல
பல்விதமாயின சாத்திரத்தின் மணம்
பாரெங்கும் வீசுந் தமிழ் நாடு.

வள்ளுவன் தன்னை உல கினுக்கே—தந்து
வான்புகழ் கொண்ட தமிழ் நாடு—நெஞ்சை
அள்ளும் சிலப்பதிகார மென் றோர்மணி
யாரம் படைத்த தமிழ் நாடு.

சிங்களம் புட்பகம் சாவக—மாதிய
தீவு பலவினுஞ் சென்றேறி—அங்கு

தங்கள் புலிக்கொடி மீன்கொடியும் நின்று
சால்புறக் கண்டவர் தாய் நாடு.

விண்ணை யிடிக்கும் தலை யிமயம்—எனும்
வெற்பை யடிக்கும் திறனுடையார்—சமர்
பண்ணிக் கலிங்கத் திருள் கெடுத்தார் தமிழ்ப்
பார்த்திவர் நின்ற தமிழ் நாடு.

சீன மிசிரம் யவன ரகம்—இன்னும்
தேசம் பலவும் புகழ் வீசிக்—கலை
ஞானம் படைத் தொழில் வாணிபமும்மிக
நன்று வளர்த்த தமிழ் நாடு.

தேர்ச்சி

திராவிடர்கள் நடித்தல், சித்திரித்தல், சிற்ப வேலை செய்தல் ஆகிய இவற்றில் சிறந்த நிபுணர்கள். அவர்களுக்குக் கப்பற்படை இருந்து வந்ததனால், அவர்கள் யவனர், ரோமர் முதலான அந்நிய நாட்டினரோடு வியாபாரம் செய்து வந்திருக்கிறார்கள். அவர்களுடைய பாஷைகளும் பழக்க வொழுக்கங்களும் வட இந்தியாவினின்றும் வேறுபட்டிருந்தன.

நான்கு வகுப்புக்கள்

வட இந்தியாவில் அக்காலத்தில் இருந்தவைபோன்ற ஜாதிகளும், ஜாதிபேதங்களும் தென்னிந்தியாவில் இல்லையென்றும், தொழிற் பிரிவினைகளுக் கேற்றவாறு அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்று நான்கு வகுப்புக்கள் மட்டில் இருந்தனவென்றும், இவைகள் வரம்பு கடத்தற்கு அரியவைகள் அல்லவென்றும், இப்பொழுதுள்ள வேறுபாடுகள் ஆரிய வொழுக்கக் கலப்பினால் உண்டானவைகள் என்றும் சில சரித்திர மேதாவிகள் எண்ணுகிறார்கள். அந்நியர்களின் படையெழுச்சிகளினால் வட

இந்தியா பல்வேறு வேற்றுமைகளை யடைந்து விட்டதுபோலன்றித் தென்னிந்தியா தனது மிகப் பழைய வழிகளினின்றும் விசேஷமாக மாறுபடாததினின்றும், தமிழர்களுடைய கல்வியின் உறுதி நன்றாக விளங்குகின்றது. நாம் தமிழ் நாட்டில் அடிமைகளில்லை என்பதைக்கொண்டும் ராஜ்ய பரிபாலனத்தை அரசர்கள் குடிகளின் பிரதிநிதிகளைக் கொண்டு தான் நடத்தி வந்தார்கள் என்பதைக் கொண்டும், அவ்வரசர்கள் கடலைக் கடந்து சென்று வெளிநாடுகளை வென்றார்கள் என்பதைக் கொண்டும், கிராம பரிபாலன முறைகள் வியக்கத்தக்க பெருமை வாய்ந்து குடிகளுக்கான நன்மைகளைச் செய்து வந்தன என்பதைக் கொண்டும் தமிழர்களுடைய பெருமையை அறியலாம்.

தமிழர் பெருமை

தமிழர்கள் மிளகு, ஏலக்காய், கிராம்பு முதலிய வாசனைப் பொருள்களையும், முத்து, மாணிக்கம், கோமேதகம், மரகதம் முதலான விலையுயர்ந்த சாமான்களையும் அயல் நாடுகளுக் கனுப்பி, அவற்றினின்றும் ஏராளமான திரவியத்தைச் சம்பாதித்தார்கள். அப்பொழுது அவர்களுக்கு மேற்குக் கடற்கரையில் முசுரியும், வைக்கரையும், கிழக்குக் கடற்கரையில் கோற்கையும், காவிரிப்பூம்பட்டினமும் சிறந்த துறைமுகங்களாக விருந்தன.

துறை முகங்கள்

நாம் தமிழருடைய கல்வியின் தேர்ச்சியையும் நாகரிகத்தின் வளர்ச்சியையும் பத்துப் பாட்டு, எட்டுத் தொகை, குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை முதலான நூல்களைக்கொண்டு நன்றாக அறியலாம். அந்நூல்களி னின்றும் தென்னிந்திய சரித்திர சம்பந்தமான பல விவரங்களும் நமக்குக் காணக் கிடைக்கின்றன.

நூல்கள்

இத்தகைய பெருமை வாய்ந்த தமிழ் நாட்டில் மூன்று பெரிய ராஜ்யங்கள் இருந்தன. அவை பாண்டிய ராஜ்யம் சேர ராஜ்யம், சோழ ராஜ்யம் என்பன. பாண்டிய ராஜ்யத்தில் மதுரை, திருநெல்வேலி, திருவாங்கூரின் தென் பாகம் ஆகிய இந்த ஜில்லாக்கள் அடங்கி யிருந்தன.

மூன்று தமிழ் ராஜ்யங்கள்

அந்த ராஜ்யத்தின் தலைநகரம் மதுரை. சேர ராஜ்யம் என்பது மலையாளம், கொச்சி, திருவாங்கூரின் மேல்பாகம் ஆகிய ஜில்லாக்கள் அடங்கியது. அதன் தலைநகரம் வஞ்சி. சோழ ராஜ்யம் என்பது வடபெண்ணை முதல் தஞ்சை ஜில்லாவின் தென்பாகத்திலுள்ள வெள்ளாறு வரையில் பரவி யிருந்தது. அதன் தலைநகரம் உறையூர்.

பாண்டிய அரசர்களில் நெடுஞ்செழியர் என்றொருவர் இருந்தார். அவருடைய காலம் கி. பி. இரண்டாவது நூற்றாண்டு. ஏழாவது நூற்றாண்டில் மதுரையில் ஆட்சிபெற்றிருந்த சுந்தர பாண்டியர் கியாதிபெற்றவர். அவருக்குக் கூன் பாண்டியர் என்றும் நெடுமாறர் என்றும் பெயர்கள் உண்டு. சைவ சமயத்தைச் சேர்ந்த திருஞானசம்பந்தர் என்னும் பக்தர் அவரைச் சமண மதத்தைவிட்டுச் சைவ மதத்தைத் தழுவப் பண்ணினர். சுந்தரருக்குப்பின் அநேக அரசர்கள் பாண்டிய நாட்டை ஆண்டு வந்தார்கள். ஆனால், கடைசியில் சோணாட்டு மன்னர்கள் அதை வென்று தமது ராஜ்யத்திற் சேர்த்துக் கொண்டு விட்டார்கள்.

பாண்டிய அரசர்கள்

பாண்டிய நாடழிந்தது

பாண்டிய வரசர்கள் தங்களுடைய சமஸ்தானத்தில் வித்வான்களை வைத்து ஆதரித்துத் தமிழ்க் கல்வியைப்

கல்வி

பெருக்கினார்கள். மதுரையிலிருந்த முதல், இடை, கடைச்சங்கங்களைப்பற்றிக் கேள்விப்படாத தமிழர்கள் இருக்கமாட்டார்கள்.

சேரநாடு

சேரவரசர்களுள் செங்குட்டுவர் என்றொருவர் இருந்தார். அவர் காலத்தில் அந்நாடு மேன்மை யடைந்திருந்தது. அது அப்பொழுது வியாபாரத்திலும் தழைத்திருந்தது. வைக்கரையும், முசுரியும் அதன் துறைமுகங்களேயாம். அந்நாட்டைப் பற்றின விவரம் யாதொன்றும் கிடைக்கவில்லை. அதுவும் சோழ ராயஜ்த்திற் சேர்ந்து தனது பெருமையை இழந்துவிட்டது.

கரிகாலன்

சோழ ராஜ்யம் மிகப் பழமையானது. அசோகர் அதைத் தமததிகாரத்திற் குட்பட்ட ஒரு தனி ராஜ்யமாக அங்கீகரித்தார். புகார் (காவிரிப்பூம் பட்டினம்) நகரை உண்டு பண்ணின கரிகாலனுக்கு முன்னிருந்த சோழ அரசர்களைப்பற்றின விவரம் ஒன்றும் தெரியவில்லை. அவன் சுமார் கி. பி. 100-ல் இருந்தானெனத் தெரியவருகிறது. அவனுக்குப் பின் ஒன்பதாவது நூற்றாண்டு வரையில் அந்நாட்டைப்பற்றின சரித்திரம் கிடைத்திலது. சில காலம் சோழ வரசர்களுடைய அதிகாரம் குறைந்து சேரவரசர்கள் மேம்பட்டிருந்தார்களெனத் தெரியவருகின்றது. நான்காவது நூற்றாண்டி னிடையில் ஸமுத்ரகுப்தர் தென்னிந்தியாவின்மீது படையெடுத்து வந்தபொழுது, சோழ ராஜ்யத்தின் தலைநகராக விருந்த காஞ்சீபுரம் பல்லவருடைய ஆதீனத்தி லிருந்தது. யுவான் சுவாங் காஞ்சிக்கு வந்திருந்த பொழுது சோழ ராஜ்யம் மிகச் சிறியதாக இருந்ததென்றும், அதன் சுற்றளவு சுமார் 500-மைல்தான் இருந்ததென்றும், அது பல்லவருடைய அதிகாரத்திற்

கடங்கி யிருந்ததென்றும் எழுதியிருக்கிறார். சோழவரசர்களுக்குக் கப்பற் படைகள் இருந்தன. சோணாடு வியாபாரத்திலும், செல்வத்திலும் தழைத்திருந்தது. சோழவரசர்கள் அக்காலத்திலேயே வியவசாயத்திற்கான வசதிகளை ஏராளமாக உண்டுபண்ணினார்கள்.

IV. குப்த ராஜ்யம்

(கி. பி. 300 முதல் 600 வரையில்)

i. குப்த வம்சத்தின் பிறப்பும், வளர்ச்சியும்

ஆந்திர, குஷான் ராஜ்யங்கள் அழிந்துபோன காலம் முதல் சுமார் நூறு வருஷங்கள் வரையில், அதாவது கி. பி. 225 முதல் கி. பி. 320 வரையில், வட இந்தியாவைப்பற்றின விவரங்கள் ஒன்றுங் கிடைக்கவில்லை.

குப்தவம்சம் அப்பொழுது அங்கு ஒருபெரிய ராஜ்யமாவது, பராக்கிரமசாலியான அரசராவது இருந்திருக்கவில்லை. நான்காவது நூற்றாண்டின் முதலில் புதிதாக ஓர் அரச வம்சம் தலைகிளம்பிற்று. அதற்குக் குப்தவம்சம் என்று பெயர்.

பாடலிபுரத்திற் கருகில் மிகச் சிறியதான ஒரு ராஜ்யத்தை ஆண்டுவந்த **சந்திர குப்தர்** என்னும் சிற்றரசர் லிச்சாவி வம்சத்தைச் சேர்ந்த **குமாரதேவி** என்னும் அரச கன்னிகையை மணந்து அவளுடைய குடும்பத்தவர்களுக்குச் சொந்தமாயிருந்த நாட்டையும் ஸ்திரீதனமாகப் பெற்றார். பின்னர் அவர் தமது ராஜ்யத்தைக் கொஞ்சங் கொஞ்சமாகப் பெருக்கி யமுனா நதி கங்கையில் சங்கமாகுமிடம்

குப்த ராஜ்யம்

வரையிலுள்ள நாடுகளை ஜயித்து அவற்றைக் கி. பி. 320 முதல் கி. பி. 325 வரையில் விமரிசையாக ஆண்டு வந்தார். அவர் தாம் பட்டத்துக்கு வந்த காலம்முதல் ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்தினதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

ஸமுத்ர குப்தர்

சந்திரகுப்தருக்குப் பின் அவர் மைந்தர் ஸமுத்ரகுப்தர் என்பவர் பட்டத்துக்கு வந்தார். அவர் சுமார் 50 வருஷ காலம் ராஜ்ய பாரம் நடத்தினார். அவர் மகா பராக்கிரமசாலி. அவர் பட்டத்துக்கு வந்தபொழுது கங்காநதி தீரத்தில் அநேக சிறிய ராஜ்யங்கள் சுவாதீனத்தைப் பெற்று இருந்தன. ஸமுத்ர குப்தர் அவற்றையெல்லாம் வென்று அந்நாட்டரசர்கள் தமது அதிகாரத்தை ஒப்புக்கொள்ளும்படி செய்தார். பின்பு அவர் மத்திய மாகாணத்திலும், கலிங்க நாட்டிலுமிருந்த பல முரட்டுக் காட்டுவாசிகளை ஜயித்தார்.

படையெழுச்சி

அதன் பின்னர் அவர் சூடிய நாகபுரியின் வழியாகத் தக்ஷிணத்தின்மீது படை யெடுத்து வந்து அங்கிருந்த பதினோரரசர்களை வென்று தம்முடைய அதிகாரத்திற் குட்படுத்தினார். அவர் தெற்கில் காஞ்சீபுரம் வரையில் வந்து தாம் தக்ஷிணத்தில் வென்ற நாடுகளிலிருந்து ஏராளமான திரவியத்தைச் சம்பாதித்துக்கொண்டு மஹாராஷ்டிரத்தின் வழியாகத் தமது நாட்டிற்குத் திரும்பினார்.

ராஜ்யத்தின் பரப்பு

ஆயினும், மேற்கில் சம்பல், யமுனா நதிகள் முதல் கிழக்கில் ஹூக்ளி வரையிலும், வடக்கில் இமயமலைமுதல் தெற்கில் நருமதையாறு வரையிலும் உள்ளநாடுதான் அவருடைய ராஜ்யத்திற் சேர்ந்திருந்தது. காமரூபம், நேபாளம், ராஜபுதனம், பஞ்சாப், மாளவம் முதலிய நாடு

கள் அவருடைய அதிகாரத்திற் குட்பட்டுக் கப்பஞ் செலுத்தி வந்தன.

மேகவர்ணன்

அப்பொழுது ஸிம்மளத் தீவை யாண்டுவந்த மேகவர்ணன் என்னும் அரசன் ஸமுத்ர குப்தருக்கு விலையுயர்ந்த காணிக்கைகளை யனுப்பிப் புத்த கயையில் பௌத்தர்களுக்கென்று ஒரு மடத்தைக் கட்டுவதற்கு உத்தரவைப் பெற்றான். குப்தவரசர் ஸட்லிஜ் நதிக்கப்பால் ஆட்சி பெற்றிருந்த குஷான் அரசர்களை வெல்லுவதற்கு முயன்றாரில்லை.

அசுவமேதம்

ஸமுத்ரகுப்தர் தமது வெற்றிகளைக் குறிக்க ஓர் அசுவமேதயாகஞ் செய்து, அதற்கென்று பொன்னாணயங்களை யடித்து ஏராளமாக வழங்கினார். அன்றியும், அவர் தமது வீரச்செயல்களையும், வெற்றிகளையும் ஒரு கவிவாணரைக் கொண்டு பாடுவித்து அப்பாடல்களைக் கற்களிற் செதுக்கி வைத்தார். அசோகர் தீட்டிவைத்த தரும மார்க்க நீதிகளின் கீழ் இவர் தமது வீரத்தைக் குறிக்கும் வெற்றிகளைச் செதுக்கியிருப்பது விந்தையே யாகும்.

நாணயங்கள்

ஸமுத்ர குப்தர் சிறந்த கவிவாணர். அவருக்குச் சங்கீதத்திலும் பிரியம் அதிகம். அவருடைய பொன் நாணயங்களில் அரசர் மஞ்சத்தின்மீது உட்கார்ந்து வீணை வாசிப்பதைப் போன்ற உருவம் செதுக்கப்பட்டுள்ளது. மேனாட்டுச் சரித்திர மேதாவி யொருவர் அவரை இந்திய நேபோலியன் என்று சொல்லலாம் என்றெழுதியிருக்கிறார்.

ஸமுத்ர குப்தருக்குப் பிறகு சுமார் கி. பி. 375-ல் அவர் மைந்தர் இரண்டாவது சந்திர குப்தர் பட்டத்துக்கு

வந்தார். அவர் விக்ரமாதித்யர் என்னும் பிருதுப் பெயரை வைத்துக் கொண்டார். சாகர்களை வென்ற காரணத்தினால் அவருக்குச் சாகாரி என்னும் பெயரும் வந்துள்ளது.

விக்ர மாதித்யர்

அவ்வரசர் மேனாட்டுச் சாகர்களின்மீது படையெடுத்துச் சென்று மாளவம், கூர்ஜரம், கத்தியவார் முதலிய நாடுகளை வென்று தமது ராஜ்யத்திற் சேர்த்துக் கொண்டார். அதனால், அவருடைய ராஜ்யம் மேற்குக் கடற்கரை வரையில் வியாபித்து விட்டது. அதினின்றும் கடல்மார்க்கமாய் அந்நிய நாடுகளோடு வியாபாரஞ் செய்வதற்குச் சௌகரியம் உண்டாயிற்று. அப்பொழுது உஜ்ஜயினிபுரம் கல்விக்கும் நாகரிகத்துக்கும், வியாபாரத்திற்கும் சிறந்த உறைவிடமாக விருந்தது.

பரப்பு

உஜ்ஜயினி

விக்ரமாதித்யர் வைதிக வைஷ்ணவராக விருந்தும், பௌத்த சமண மதத்தினர்களைப் பரிவுடன் பார்த்து வந்திருக்கிறார். அவர் அயோத்தியைத் தமது ராஜ்யத்தின் தலைநகராகச் செய்து கொண்டு அங்கே ஒரு நாணய சாலையை எற்படுத்தினார். ஆயினும், பாடலிபுரம் தனது சிறப்பை முற்றிலும் இழந்து விடவில்லை. அது ஆறாவது நூற்றாண்டில் ஹூணர்களால் அழித்து விடப்பட்டதெனினும், ஷர்ஷா என்னும் மகம்மதிய வரசர் அதைப் புதுப்பித்தார். விக்ரமாதித்யரைப் பற்றின பல விவரங்கள் நமக்குப் பாஹியன் என்னும் சீன யாத்திரிகர் எழுதி வைத்த கதைகளினின்றும் கிடைத்துள்ளன.

தலைநகரம் மாறினது

பாஹியன் பௌத்த சமயத்தினர். அவர் மத ஆராய்ச்சியின் பொருட்டும், சமய நூல்களைச் சம்பாதிக்கக்



குப்த ராஜ்யம்

கருதியும் இந்நாட்டிற்கு வந்து இங்கே பத்து வருஷம் இருந்தார். பாடலிபுரத்தில் மட்டில் அவர்

பாஹியன் மூன்று வருஷகாலம் இருந்தார். அவர் பாடலிபுரத்தி லிருந்த அசோகருடைய

அரண்மனையைக் கண்டு மிக்க வியப்படைந்தார். புத்தத் திருவிழாவும் அவருக்கு மிகுந்த ஆச்சரியத்தை யுண்டாக்கிற்று. சித்திரிக்கப்பட்ட இருபது அழகிய ரதங்களில் புத்த விக்ரஹங்களை வைத்து, வாத்ய கோஷத்துடன் ஊர்வலம் வரும் கோலத்தைக் கண்டு அவர் களித்தார். மஹாயான வகுப்பினருக்கொன்றும், ஹீனயான வகுப்பினருக்கொன்றுமாகக் கட்டப்பட்டிருந்த இரண்டு மடங்களில் சுமார் எழுநூறு சந்யாசிகள் இருந்தார்களென அவர் சொல்லி யிருக்கிறார்.

புத்தத் திருவிழா

அவர் மகத நாட்டுக் குடிகள் செல்வம் நிறைந்தும், சுகமாகவும் இருந்ததன்றி, மிகுந்த தரும சிந்தையுள்ளவர்களாகவு மிருந்தார்கள் என்றும், எளியவர்களுக்குத் தரும சாலைகளும், பிரயாணிகளுக்கு விடுதிகளும், நோயாளிகளுக்குத் தரும வைத்திய சாலைகளும் அமைக்கப் பட்டிருந்தனவென்றும் சொல்லியுள்ளார். அவரால் பௌத்தமதம் அப்பொழுது வடநாட்டில் மேன்மை பொருந்தி யிருந்ததென்றும், ஆயிரக் கணக்கான பிக்ஷுக்கள் மடங்களில் வசித்திருந்தார்களென்றும் தெரியவருகின்றன. ஆயினும், கயை, ச்ராவஸ்தி, கபிலவஸ்து, குசிநகரம் என்னும் பட்டணங்கள் யாது காரணம் பற்றியோ ஜனத்தொகையிலும் செல்வத்திலும் குறைந்து கொஞ்சங் கொஞ்சமாகப் பாழடைந்து வரலாயின.

பாஹியன் சொன்னவை

பாஹியன் விக்ரமாதித்யருடைய ஆட்சியை மிகவும் புகழ்ந்து எழுதியிருக்கிறார். 'அவருடைய உத்யோகஸ்தர்கள் குடிகளினுடைய வியவஹாரங்களில் தலையிட்டுக் கொள்வதில்லை. குற்றஞ் செய்தவர்களுக்கு இலகுவான தண்டனைகள் விதிக்கப்பட்டன. குடிகள் எவ்வித

அரசாட்சியின் சிறப்பு

கட்டுப்பாடுமின்றித் தமதிஷ்டம்போல் போகவும் வரவும் கூடும். வரிகள் மிதமாக விதிக்கப்பட்டிருந்தன. உத்யோகஸ்தர்கள் குடிகளைத் துன்புறுத்திப் பரிதானம் வாங்குவதில்லை. பாதைகளில் திருடர் பயங் கிடையாது. ஜனங்கள் பொதுவில் பௌத்தமத முறைகளைப் பின்பற்றிப் பெரும்பாலும் ஜீவஹிம்ஸையை நீத்தும், மதுபானத்தை யொழித்தும், தருமவழிகளில் நடந்தும் வந்தார்கள்,' என்றும் அவர் கூறியிருக்கிறார். அப்பொழுது பலகாறைகளும், பொன் வெள்ளி நாணயங்களும் உபயோகிக்கப்பட்டு வந்தன.

குப்த வரசர்கள் வைஷ்ணவர்களானதனால், பிராமணர்களை ஆதரித்து வந்ததல்லாமல், யாகங்களையும் செய்வித்தார்கள். அவர்கள் அநேக கோயில்களையும் கட்டுவித்தார்கள். சுருங்கச் சொல்லுவோமானால், விக்ரமாதித்யர் தமது ராஜ்யத்தை மிக்க விமரிசையாக ஆட்சிசெய்து வந்தாரெனத் தெரியவருகின்றது. கி. பி. 413-ல் அவர் காலஞ் சென்றார்.

பிராமண மதம்

ii. குப்தராஜ்யத்தின் அழிவு

விக்ரமாதித்யருக்குப் பின்பு மகதராஜ்யம் க்ஷீணிக்கத் தொடங்கி விட்டது. அவருடைய பெயரரான **ஸ்கந்தகுப்தர்** காலத்தில் மங்கோலிய ஜாதியைச் சேர்ந்த ஹூணர் என்னும் ஒரு முரட்டு ஜாதியார்கள் இந்தியாவின் மீது படை யெடுத்து வந்து கங்காநதி தீரம் வரையிலுமுள்ள நாடுகளை ஜயித்துக்கொண்டு விட்டார்கள். அவர்கள் கொள்ளையையும் கொடுமையையும் விரதமாகக் கொண்டிருந்தார்கள் போலும்.

ஹூணர்

அவர்கள் தலைவனான தோரமாணு என்பவன் குப்த ராஜ்யத்தை யழித்துப் பஞ்சாப், ராஜபுதனம், மத்திய இந்தியா ஆகிய இவற்றைச் சேர்த்து ஒரு ராஜ்ய மாக்கி மகாராஜா என்னும் பெயர் பூண்டு அதனை யாண்டு வந்தான். அவனுக்குப் பின் அவன் மகன் மிஹிராகுலன் என்பவன் கி. பி. 510 முதல் கி. பி. 540 வரையில் அந்நாட்டை யாண்டுவந்தான். அவன் மிகக் கொடியவன்;

மிஹிரா குலன்

தீமையே உருவெடுத்தாற் போன்றவன். அவனிழைத்த துன்பங்களைப் பொறுக்க முடியாமற் பல வட இந்திய சிற்றசர்கள் ஒன்று சேர்ந்து அவனுடைய அதிகாரத்தைக் குலைத்து, அவனையும் நாட்டை விட்டுத் துரத்திவிட்டார்கள். அவர்களில் மாளவ வரசரான யசோதர்மர் என்பவரும், குப்த வம்சத்தைச் சேர்ந்த நரஸிம்ஹ குப்தரும் முதன்மையானவர்கள்.

ஹூணர் தொலைந்தது

ஐந்தாவது நூற்றாண்டின் கடைசியில் பிரபாகர வர்த்தனர் என்னும் ஒரு சிற்றசர் தம்மை யொத்த பல சிற்றரசர்களைத் துணைக்கொண்டு மகத ராஜ்யத்தை யழித்த ஹூணர்களை அடியோடு தொலைத்துவிட்டார். அன்றியும் துருக்கியர்கள் ஆறாவது நூற்றாண்டின் கடைசியில் இந்தியாவிற் கப்புறம் இருந்த ஹூணர் நாட்டின் மீது படை யெடுத்து வந்து அதை நாசஞ்செய்து விட்டார்கள்.

iii. பௌத்தமத க்ஷீணமும் ஹிந்துமத வளர்ச்சியும்

மும்மதங் களும்

அசோகர் பௌத்த மதம் விசேஷமாகப் பரவவும் தமது குடிகளின் பெரும்பாலரும் அதை அநுஷ்டிக்கவும் செய்து வந்த காலத்திற் கூட, பிராமண சமண மதங்கள் இறந்து படவில்லை. அம்மூன்று மதங்களும் கால

வேறுபாட்டிற்கும் இட வேறு பாட்டிற்கும், அரசகர்ளின் ஆதரவிற்கும் இணங்க ஓங்கி யுயர்ந்தும், தாழ்ந்துகுறைந்தும் வந்துள்ளன. ஆயினும், ஐந்தாவது நூற்றாண்டுமுதல் பௌத்த மதம் க்ஷீணிக்க வாரம்பித்து விட்டது.

பௌத்தமதத்தை நாகரிகமற்ற பல அந்நிய ஜாதியினர் அநுஷ்டித்த காரணத்தினால், அது பல மாறுதல்களை யடைந்து விட்டதென்று ஏற்கெனவே சொல்லப்பட்டுள்ளது. பௌத்தமதத்தின் அபிவிருத்தியையும் ஜனங்களுக்கு அதன்பால் உண்டான அபிமானத்தையுங் கண்ட பிராமணர்கள் தாங்களும் பௌத்தர்களுடைய வழிகளைப் பின்பற்றி அந்நியர்களைத் தமது மதத்திற் சேர்த்துக்கொண்டும், விக்ரஹங்களையும், உத்ஸவங்களையும் ஏற்படுத்தியும், சாமன்ய ஜனங்களின்கொள்கைகளிற் சிலவற்றைத் தாங்கள் ஒப்புக்கொண்டும், தங்களுடைய மதத்தின் கோட்பாடுகளையும், மனோரத சிருஷ்டிகளையும் பதினெட்டுப் புராணங்களாகத் தொகுத்து அவற்றை யாவருமறிய வெளியிட்டும் வந்தார்கள். அல்லாமலும், அவர்கள் யாகயக்யங்கள் இன்றியமையாதனவென்று சொல்லிவந்ததை விட்டுத் தரும சாஸ்திரக் கொள்களைக் கொண்டாடி வரலானார்கள். அதனால், பழைய பிராமண மதத்திற்கும் பௌத்த மதத்திற்கும் உண்டாயிருந்த வேற்றுமைகள் மறைந்தொழிந்தன. பல்வேறு மாறுதல்களைப் பெற்றும், பௌத்தமதத்தைப் பெரிதும் ஒத்தும் இருந்த பிற்காலத்திய பிராமண மதந்தான் **ஹிந்துமதம்** எனப்படுவது என்று பலர் அபிப்பிராயப்படுகிறார்கள். பிராமணமதம், தன்னிலிருந்தே உண்டாகிச் சில நூற்றாண்டுகள் வரையில் தனிமையாக உலாவிவந்த பௌத்த மதத்தை ஆகருஷித்துக் கொண்டதுதான் பௌத்தமதம் மறைந்ததன் முக்கியகாரணமாகும். அல்

பௌத்தமத க்ஷீணம்

ஹிந்துமதம்

லாமலும், சிற்சில சமயங்களில் சில ஹிந்து வரசர்கள் பௌத்தர்களை ஹிம்ஸித்தும் வந்திருக்கிறார்கள்.

ஹிந்து மதத்தின் பூர்வ பாகம் வேதங்களையும், ஸ்மிருதிகளையும், ஆகமங்களையும் ஆதாரமாகக் கொண்டுளது என்றும், அதன் உத்தரபாகம் தென்னிந்தியரின் நடை, அநுஷ்டானம், மதம், கிரந்தங்கள் ஆகிய இவற்றினின்றும் உண்டாயிற்று என்றும் சிலர் எண்ணுகிறார்கள். அதற்கிணங்கத் தென்னிந்தியாவில் ஆரியமதக் கொள்கைகளினால் எவ்வித மாறுபாட்டையு மடையாத பல அம்சங்கள் இருந்திருக்கின்றன. ஆரிய மதத்திலும் முதலில் காணக்கிடைக்காத தெய்வங்களைப் பற்றின பல விவரங்கள் பிற்காலத்தில், அதாவது ஆரிய வொழுக்கங்கள் தென்னாட்டில் பரவ ஏற்பட்டதின் பின்பு, காணப்படுகின்றன. ருத்ரன் என்னும் ஆரியக் கடவுள் திராவிடக் கடவுளான சிவனேயாம். ஹிந்துமதம் திராவிடக் கலப்பினால் பற்பல மாறுபாடுகளை யடைந்த பிராமணமதம் என்பது சிலருடைய கொள்கை. தென்னாட்டுத் திராவிடமதம் ஆரியமதத்தோடு சம்பந்தப்பட்டுச் சில மாறுதல்களை யடைந்து ஹிந்துமதமாயிற்று என்று சொல்லுவாரும் இருக்கிறார்கள். ஆரியக் கலப்பு ஏற்படுவதற்கு மிக நீண்ட காலத்திற்கு முன்பே, தென்னாட்டில் சைவ மதம் பரவியிருந்தது என்பது திண்ணம். சிவன், கிருஷ்ணன், ராமன், துர்க்கை முதலான தெய்வங்களைப் பற்றியாவது புனர்ஜநனம் உண்டென்பதைப்பற்றியாவது வேதங்களில் விசேஷமாக யாதொன்றும் சொல்லப்படவில்லை என்னும் காரணத்தினால் அவர்கள் திராவிடக் கடவுள்கள் என்றும், கடவுளரது அவதாரங்களைப்பற்றின அபிப்பிராயம் திராவிடருடையது என்றும் பிற்காலத்தில் ஆரியர்கள் அவற்றையெல்லாம் தங்களுடைய பிராமண

ஆரிய திராவிட மதங்கள்

மதத்திற் சேர்த்துக்கொண்டுவிட்டார்கள் என்றும் சிலர் நினைக்கிறார்கள். சிவன் திராவிடக் கடவுள் என்பதைப் பற்றி மட்டில் அபிப்பிராய பேதமே பெரும்பாலும் இல்லை என்று சொல்லலாம்.

பழமையான சைவம்

மிகப்பழமையான காலம் முதற்கொண்டு ஜனங்கள் சிவனை லிங்கரூபமாக வணங்கி வந்திருக்கிறார்கள். மஹாபாரத, இராமாயணங்களில் லிங்கபூஜை வர்ணிக்கப்பட்டிருக்கிறது. தென்னிந்திய சரித்திர மேதாவி யொருவர் புதிய கற்கால மனிதர்கள்கூட லிங்கபூஜை செய்தார்கள் என்று சொல்லுகிறார்.

ஆரிய அக்நிகள் திராவிட அநக்நிகளின் நாட்டில் நூதனமாகக் கண்ட பலவற்றைத் தாங்கள் அநுஷ்டித்தும், அவர்களுடைய தெய்வங்களிற் சிலரைத் தம்முடைய தெய்வங்களோடு பொருத்தியும் உறவாடினார்கள்.

மதக்கலப்பு

பிராமண மதத்திற்கே ஆதிகாலம் முதற்கொண்டு அத்தகைய மதவிரோதமின்மையும் சமாதானமும் இயற்கைக்குணங்களாக ஏற்பட்டவையாம். அதனால், தமிழ் நாட்டில் சைவம் விசேஷமாகப் பரவிவந்ததைக் கண்ட ஆரியர்கள் சிவனைத் தங்களுடைய தெய்வமாகவுங் கொண்டு, ஆரிய ருத்ரக் கடவுளும், திராவிடச்சிவனும் ஒருவரே என்றுஏற்படுத்தி விட்டார்கள். நாளாவட்டத்தில் இந்திரன், வருணன் வாயு, சூரியன், பிரமன், விஷ்ணு முதலான பல தெய்வங்களையும் சிவனுள் அடக்கிக்கொண்டு விட்டார்கள். உபநிஷத்துக்கள் உண்டானபொழுது சிவனையே பெருந்தெய்வமாகக் கொண்டாடினார்கள். அல்லாமலும், சிவனுக்கு இரண்டு ரூபங்கள் உண்டென்றும், திகம்பரராயுள்ள உருவம் உலகப்பற்றையும், ஆசையையும் ஒழித்து ஆநந்தத்தில் மூழ்கிக்கிடக்கும் நிலைமையை உணர்த்துகின்றது என்று

பரமசிவன்

ஆரியரும், யானைத்தோலையுடுத்திப் பித்தனாய் அமைந்துள்ள வடிவம் பேய்க்கணங்களுக்கு தலைவனாய் நன்காடுகளில் சஞ்சரிக்கும் சம்ஹாரநிலைமையை உணர்த்துகின்றது என்று திராவிடர்களும் எண்ணினார்கள். சிவனையல்லாமல், கந்தனையும், கிருஷ்ணனையும் ஆரியர்கள் தங்களுடைய தெய்வமாக்கிக் கொண்டார்கள்.

தோல்காப்பியம்

தொல்காப்பியர் காலத்தில் தமிழர்கள் ஆரியர்களுடைய கொள்கைகளிற் சிலவற்றைக் கைக்கொண்டார்கள் எனத் தெரிய வருகின்றது.

அடுத்த நூற்றாண்டில் அசோகருடைய முயற்சியினால் பௌத்தமதம் தென்னிந்தியாவிலும் பரவின பொழுது, அந்தப் புதுமதம் தமிழரின் மதாபிவிருத்திக்கு ஒரு சிறந்த சக்தியாக ஏற்பட்டது. ஏறக்குறைய அதே

தெற்கில் பௌத்தமும், சமணமும்

காலத்தில் தென்னாட்டில் சமண மதமும் பரவ ஏற்பட்டது. ஆனால், சமணர்கள் துன்புறும் மனிதர்களைக் காட்டிலும், மிருகங்களைப் பக்ஷமாயும், தயையுடனும் நடத்தி வந்ததனால், அந்தமதம் முன்னுக்கு வரவில்லை.

மணிமேகலை என்னும் சிறந்த நூலில் சைவம், வைஷ்ணவம், பௌத்தம், சமணம் என்னும் எல்லா மதங்களும் சச்சரவின்றிச் சமாதானத்தோடிருந்து வந்தனவென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் சமண மதம் மட்டில் சீக்கிரத்திலேயே தன் மேன்மையை யிழந்து விட்டது. பின்னால், நாளடைவில் பௌத்த பிராமண மதங்களிற்

பிராமணமும் பௌத்தமும்

சிறந்தவைகளெனக் கருதப்படும் பலவற்றையும் தமிழ் நாட்டினர் கைக்கொண்டு விட்டதனால் அவ்விரண்டு மதங்களும் மறைந்துபோய் ஹிந்துமதம் பரவ ஏற்பட்டது.

சங்க நூல்களிற் பலவும், மற்றும் பல தமிழ்க் காவ்யங்களும் சைவ, வைஷ்ணவ மதங்களைப்பற்றியே கூறுகின்றன. முதலில் குறைவாகவே இருந்துவந்த வைஷ்ணவமதம் சங்க காலந்தொடங்கிக் கொஞ்சங் கொஞ்சமாக முன்வரலாயிற்று. அல்லாமலும், புகார், மதுரை முதலான பழைய பட்டணங்களிலும் கிருஷ்ணனுக்கும், சிவனுக்கும் கோயில்கள் இருந்தனவெனத் தெரிய வருகின்றது. இந்தச் சைவ, வைஷ்ணவ சமயங்கள் பௌத்தமதத்திற் சிறந்தவைகளெனக் கண்டவற்றைத்தாம் ஆகருஷித்துக்கொண்டு முன்னேற்றத்தையடையவும், தென்னிந்தியாவிலும் பௌத்த மதம் மறைந்தொழிந்து போயிற்று.

சைவம்; வைஷ்ணவம்

சிவனையும், விஷ்ணுவையும் முதல் தெய்வங்களாகக் கொண்டொழுகின ஹிந்து மதத்தில் நாளடைவில் சக்தி பூஜை ஏற்பட்டுக் குரூரமான பலிகளும், மதுபானமும் அதிகமாயின. அப்பொழுது மதச்சீர்திருத்தம் இன்றியமையாததாக ஏற்பட்டது. சுமார் கி. பி. 700-ல், குமரிலபட்டரும், 800-ல் ஸ்ரீமத் சங்கராசாரியரும் தோன்றி ஹிந்து மதத்தைச் சீர் திருத்தினார்கள்.

சீர்திருத்தம்

iv. குப்தவரசர்கள் காலத்தில் வட இந்தியாவின் நிலைமை

குப்த வரசர்கள் காலத்தில் வட இந்தியா கல்வி, கேள்விகளிலும், நாகரிக வளர்ச்சியிலும் உந்நத நிலையைப் பெற்றிருந்தது. அப்பொழுது, மனு நூலை ஆதார மாகக்கொண்ட சட்டங்கள் உண்டாயின. சொத்துக்களை விற்கவும், வாங்கவும், தானஞ்செய்யவும், உரிமையாகப் பெறவும் சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. அந்தக்

ஸம்ஸ்கிருத நூல்கள்

காலத்தில் மிகச்சிறந்த வித்வான்கள் இருந்து பெரிய பெரிய நூல்களை யியற்றி யிருக்கிறார்கள். சாகுந்தலம், விக்ரம-ஊர்வசீயம், மாளவிகா-அக்நிமித்ரம், என்னும் நாடகங்களையும் ரகுவம்சம், குமாரஸம்பவம், மேகசந்தேசம் என்னும் காவியங்களையும் இயற்றிய காளிதாஸ மகாகவி விக்ரமாதித்யருடைய சமஸ்தான வித்வான்களில் ஒருவர். அவரையன்றி, அச்சபையில் இன்னும் எட்டு மஹா வித்வான்கள் இருந்தார்கள் என்றும், அந்த ஒன்பதின்மரும் ராஜசபையின் நவரத்தினங்கள் என்றும் வழங்கப்பட்டு வருகின்றன.

நவ ரத்தினங்கள்

சில மேதாவிகள் அந்த நவரத்தினங்களிற் சேர்ந்தவர்களெனக்கருதப்படும் சிலர் வெவ்வேறு காலங்களி லிருந்தவர்களென்றும் எண்ணுகிறார்கள். மற்றுஞ் சிலர் காளிதாஸர் கூட விக்ரமாதித்யருடைய சபையில் இருந்தவரல்லர், விக்ரமாதித்யர் என்னும் பிருதுப்பெயர் பூண்ட யசோதர்மர் என்னும் மாளவ அரசரின் சபையிலிருந்தவர் என்று அபிப்பிராயப் படுகிறார்கள். அது எவ்வாறாயினுமாகுக.

ஸம்ஸ்கிருத வித்வான்களும் நூல்களும்

குப்த வரசர்கள் காலத்திலிருந்து ஹர்ஷருடைய காலத்திற்குள் அநேக பெரிய வித்வான்கள் இருந்து மிகப்பெரிய நூல்களை இயற்றினார்கள் என்பது மட்டில் யாவருக்கும் ஒப்ப முடிந்த விஷயம். ப்ருஹத்ஸம்ஹிதை என்னும் நூலையியற்றிய வராஹமிஹிரர் என்னும் வான சாஸ்திரியும், நிகண்டுவை எழுதின அமரஸிம்ஹரும், வைத்திய சாஸ்திரத்தைச் செய்த தன்வந்திரியும், வியாகரணம் இயற்றிய வரருசியும், யாஜ்ஞவல்க்யர் என்னும் தருமசாஸ்திர பண்டிதரும், ஆரியபட்டர், ப்ரம்மகுப்தர் என்னும் வானசாஸ்திரிகளும், காதம்பரி, தசகுமார சரித்திரம் என்னும் கற்பனைக் கதைகளை

எழுதிய பாணரும், தண்டியும், வாமனர், ஜயாதித்யர் என்னும் வையாகரணிகளும், நீதிசதகத்தையும், பட்டிகாவ்யத்தையும்செய்த பர்த்ருஹரியும், இன்னும் பலரும் இருந்த காலம் அதுவே. சிற்பம், சித்திரம் ஆகிய இவற்றைப் பற்றின சாஸ்திரங்களும் அப்பொழுதே மிக்க மேம்பாட்டை அடைந்திருந்தன.

V. ஏழாவது, எட்டாவது நூற்றாண்டுகள்

i. ஹர்ஷர் ராஜ்யம்

ஹூணர்களைச் சண்டையிட்டுத் துரத்தி ஜயம்பெற்ற பிராபகரவர்த்தனர் கி. பி. ஏழாம் நூற்றாண்டின் முதலில் ஒரு சிறிய ராஜ்யத்தை ஏற்படுத்தினார். அதற்கு **ஸ்தாணேசுவரம்** என்னும் பட்டணம் தலைநகராக விருந்தது. அவர் கி. பி. 605-ல் இறக்கவும், அவருடைய மூத்த மைந்தரான ராஜ்ய வர்த்தனர் பட்டத்துக்கு வந்தார். மாளவ வரசன் தமது சகோதரியான ராஜ்ய ஸ்ரீ என்பவளுடைய புருஷரான க்ருஹவர்மன் மௌகாரி என்பவரைக்கொன்று, அவ்வம்மையையுஞ் சிறைப் படுத்தினனென ராஜ்ய வர்த்தனர் கேள்வியுற்று ஒரு பெரும்படையுடன் சண்டைக்குப் புறப்பட்டுச் சென்று மாளவ வரசனை வென்று திரும்பி வரும்பொழுது, மாளவ வரசனது நண்பனை **சசாங்கன்** என்னும் வங்காள மன்னவன் அவரை வஞ்சனையினாற் கொன்றுவிட்டான். அப்பொழுது, அவருடைய தம்பியான **ஹர்ஷ வர்த்தனர்** என்பவர் கி. பி. 606-ல், பட்டத்துக்கு வந்தார்.

ஹர்ஷர் அரசரானது

ஹர்ஷர் சிறையினின்றும் தப்பியோடி விந்தியமலையைச் சார்ந்த காடுகளில் வசித்திருந்த தமது சகோதரியைத் தேடிச்சென்று அழைத்து வந்தார். பின்னர் அவர் தமது பெரும் படையைக்கொண்டு விக்ரமாதித்யர் காலத்தில் மகத ராஜ்யத்திற் சேர்ந்திருந்த நாடுகள் முழுவதையும், நேபாளம், பீஹார், வங்காளத்தின் பெரும்பாகம் ஆகிய இவற்றையும் வென்ருர். அவர் மாளவம், கூர்ஜரம், ஸௌராஷ்டிரம் என்னும் நாடுகளையும் வென்ருரெனத் தோன்றுகின்றது. அதனல், அவருடைய ராஜ்யம் ஹிமயமலை முதல் நருமதை வரையில் பரவி யிருந்தது. அதையன்றிக் காமரூபம், வல்லபி என்னும் நாட்டரசர்கள் அவருக் கடங்கிக் கப்பங்கட்டி வந்தார்களெனத் தெரிய வருகின்றது. ஹர்ஷர் தென்னிந்தியாவின் மீது படையெடுத்துச் செல்லவும், இரண்டாவது புலிகேசன் என்னும் சாளுக்கிய மன்னவன் அவரை முழுவதும் வென்று விட்டான்.

பரப்பு

ஹர்ஷர் நியாயம் நடத்துவதில் நிபுணர். அவர் தமது உத்தியோகஸ்தர்களையே முற்றும் நம்பி விடாமல் தாமே நேரில் ஊர் ஊராகச் சென்று துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனஞ் செய்து வந்தார். ஹர்ஷர் குற்றவாளிகளைக் கடுமையாய்த் தண்டித்தார்.

பரிபாலனம்

வியவசாயிகள் தமது வருமானத்தில் ஆறிலொரு பங்கை வரியாகச் செலுத்தி வந்தார்கள். துரைத்தன உத்யோகஸ்தர்களுக்குச் சம்பளத்திற் கீடாக மானியங்கள் விடப்பட்டிருந்தன.

ஹர்ஷர் சிறந்த கல்விமான். அவருடைய ஆதரவின் கீழ்க் கல்வியும், கைத்தொழில்களும் விசேஷ அபிவிருத்தியை யடைந்தன. பாணன் என்னும் கவிஞர் ஹர்ஷ


MLECHCHHA
KAPISA
LAMPAKA
UDYANA
Kabul
GANDHARA
Ohind
Nagarahara
(Ghazni)
Purushapura
SIMHA-
PURA
Srinagar
KASHMIR
Jammu
JALANDHAR
FA-LA-NA
O-FAN-CHA
Multan
Chinabhukti
O-CHA-LI
Sthanes
Vira
BRAHMANA
PURA
MATIPURA
GOVISANA
Ahichatra
Sravasti
Kapilavastu
Kusinagara
Kathmandu
NEPAL
KAMARUPA
PUNDRA-
VARDHANA
Indraprasta
(Delhi)
Mathura
Kanauj
KAPITHA
O-TIEN-PO-CHI-LO
Bhinmal
Abu
Anandapura
MAHESVARAPURA
Gwalior
JEJAKA
BHUKTI
Prayaga
Kasi
Vaisali
Pataliputra
Nalanda
Rajagriha
Champa
KARNA
SVARNA
Gaya
Buddha
gaya
KI-CHA
VALABHI
MOLAPO
Valabhi
Ujjain
UJJAINI
Girnar
SURASHTRA
Barukachcha
UDRA
MAHA
KOSALA
KONGODA
Ellora
Ajanta
Devagiri
Paithan
KONG-KIN-NA-PO-LO
(PULAKESI)
KALINGA
EASTERN
CHALUKYA
CHANAKA
TAKA
CHOLA
DRAVIDA
(PALLAVA)
Kanchi
Mahaballipuram
MALAKUTA
SIMHALA

ஹர்ஷ ராஜ்யம்

ரைப்பற்றி ஹர்ஷசரிதம் என்னும் நூலை இயற்றினார்.

கல்வியும் நூல்களும்

ஹர்ஷர் தாமே நாகானந்தம், ரத்னாவளி, ப்ரியதர்ஸிகா என்னும் நாடகங்களையும், சில சிறிய காவியங்களையும், ஒரு வியாகரண நூலையும் செய்திருக்கிறார்.

ஹர்ஷருக்கு மதவிஷயத்தில் வேறுபாடு இருந்ததில்லை. அவர் தாம் பௌத்தமதத்திற் பற்றுள்ளவராக விருந்தும், சிவனையும், விஷ்ணுவையும் பூஜித்து வந்ததாகத் தெரிய வருகின்றது. ஹர்ஷர் கி. பி. 640-ல் கன்னோசி

பௌத்தசபை

நகரில் ஒரு பெரிய பௌத்த சபையைக் கூட்டினார். அதற்கு அவருடைய சிற்றரசர்கள் பலரும், பல்லாயிரம் பௌத்த சந்யாசிகளும், சமணர்களும், பிராமணர்களும் வந்திருந்தார்கள். அச்சபைக்கு அப்பொழுது இந்தியாவுக்குப் பௌத்த சமய நூல்களைச் சம்பாதிப்பதின் பொருட்டும், புண்ய ஸ்தலங்களுக்கும், தீர்த்த விசேஷங்களுக்கும் யாத்திரை செய்வதற்காகவும் வந்திருந்த யுவான்சுவாங் என்னும் சீனரும் வரவழைக்கப்பட்டிருந்தார். அவர் செய்த பிரசங்கங்களைக் கேட்டு ஹர்ஷரும், அங்கு வந்திருந்த பலரும் பரவசரானார்கள்.

அச் சபையையன்றி, கன்னோசியில் புத்தருக்கு வெகு விமரிசையாக ஒரு திருவிழாவும் நடந்தேறிற்று. அதன்


உத்ஸவம்

பொருட்டு ஹர்ஷர் ஏராளமான பொருளைச் செலவு செய்தார். பொன்னாலாகிய புத்த விக்ரஹம் ஊர்வலம் வரும்பொழுது, அரசர், முத்துக்களையும், பொன்னாற் செய்த புஷ்பங்களையும் மற்றும் பல விலையுயர்ந்த வஸ்துக்களையும் வாரி வழங்கினார்.

யுவான்சுவாங் இந்நாட்டில் பதினைந்து வருஷ காலந் தங்கியிருந்து பற்பல விடங்களுக்குஞ் சென்று தாம்

யுவான் சுவாங்

கண்ட வற்றையும், கேட்டனவற்றையும் விவரமாக எழுதி வைத்தார். அவர் தெற்கில் காஞ்சிபுரம் வரையில் சென்றிருந்தார். அவர் வழிகளில் திருடர் பயம் உண்டென்றும், பௌத்த மடங்களில் மிகக் குறைவான சந்யாசிகளே இருந்தார்களென்றும், சசாங்கனைப்போன்ற சில ஹிந்து வரசர்கள் பௌத்தர்களைத் துன்புறுத்தி, ஹிந்து மதத்தைப் பரப்பினார்களென்றும் கூறியுள்ளார். அவர் சென்றவிடங்கள் தோறும் மிகுந்த மரியாதையுடன் வரவேற்கப்பட்டதல்லாமல், பொருளுதவியையும் பெற்றார். கி. பி. 645-ல் அந்த யாத்திரிகர் 657 பௌத்த நூல்களையும், பொன், வெள்ளி, சந்தனமரம் ஆகிய இவற்றில் செதுக்கிய பல புத்த விக்ரஹங்களையும் எடுத்துக்கொண்டு தம்மூருக்குத் திரும்பிச் சென்றார்.



நற்காரியங்கள்

ஹர்ஷர் பிரயாகையிலும் ஐந்து வருஷங்களுக்கொரு முறை ஒரு பெரிய சபையைக் கூட்டிப் புத்தரையும், ஆதித்தனையும், பரமசிவனையும் பூஜை செய்து பௌத்தர்களுக்கும், பிராமணர்களுக்கும் அளவற்ற சன்மானங்களைச் செய்தனுப்பினார். யுவான்சுவாங் வந்திருந்த பொழுது கி. பி. 643-ம் வருஷத்தில் அத்தகைய ஆறாவது திருக்கூட்டம் நடந்தேறிற்று. ஹர்ஷர் அசோகரைப் பின்பற்றித் தாம் ஜீவஹிம்சையை யொழித்தும், குடிகளை யொழித்து விடுமாறு கட்டளையிட்டும் வந்ததல்லாமல், சாலைகளையும், சத்திரங்களையும், வைத்திய சாலைகளையும்

அமைத்து வைத்தார். கி. பி. 648-ல், அவர் தேகவியோகமானார்.

ii. ராஜபுத்திர வம்சங்கள்

ஹர்ஷருடைய காலத்திற்குப் பிறகு மகம்மதியர்கள் இந்தியாவை ஜயித்து அவர்களுடைய ராஜ்யங்களை ஏற்படுத்த வாரம்பித்த காலம் வரையில் சுமார் ஐந்நூறு வருஷ காலம் ராஜபுத்திரர்கள் என்னும் ஜாதியார் முன்னேற்றத்தை யடைந்து ஆட்சி செய்து வந்தார்கள். இந்தியாவின் மீது படையெடுத்து வந்து பல ராஜ்யங்களை ஸ்தாபித்த சாகர், பல்லவர், கூர்ஜரர், ஹூணர் முதலான ஜாதியர்கள் நாளடைவில் ஹிந்து மதத்தையும், ஹிந்துக்களுடைய ஆசார அநுஷ்டானங்களையும் தழுவிக் கொண்டதையல்லாமல், அவர்களுடைய பெண்களையும் மணந்துகொண்டு கலந்து உறவாட ஏற்பட்டபொழுது, அவர்களிற் புஜபல பராக்கிரமம் பொருந்தி யிருந்தவர்கள் க்ஷத்திரியர்கள் என மதிக்கப்பட்டார்கள். ஆயினும், ராஜபுத்திரர்க ளனைவரையும் அந்நியர்களெனவே மதித்துவிடலாகாது. பழைய அரச வம்சங்களின் சந்ததியார்களும் ஆரிய ஒழுக்கங்களையும், பழக்கங்களையும் அநுஷ்டித்து வந்த பல பழங் குடிகளுங்கூடப் பிற்காலத்தில் ராஜபுத்திரர்களென வழங்கப்பட்டு வந்துள்ளார்கள். சிசோதியர், பரிஹாரர், சோஹனர், பரமாரர், சோலாங்கியர், சாளுக்கியர், கூர்ஜரர், தோமரர், முதலியவர்கள் முந்திய வகுப்பிலும், ராஷ்டிரகூடர், ராதர், சாந்தளர், பாலர், சேனர் முதலானவர் பிந்திய வகுப்பிலும் சேர்ந்தவர்கள் எனத் தெரியவருகின்றது. என்றாலும், அவர்களை இரண்டு வகுப்புக்களாகப் பிரித்து வேறுபடுத்திச் சொல்வது முடியாத காரியம் ஆகும்.

ராஜ புத்திரர்கள்

பல வகுப்புக்கள்

ராஜபுத்திரர்கள் ஆதியில் பற்பல ஜாதிகளைச்சேர்ந்தவர்களாக விருந்தும், அவர்கள் ஹிந்துக்களான பின்பு தமக்குள் எவ்விதமான வித்தியாசத்தையும் பாராட்டிக்கொள்ளாமல், விவாகங்கள் செய்து கொண்டும், எல்லோரும் தாங்கள் ராஜபுத்திரர்கள் என்று சொல்லிக் கொண்டும், ஆண்மை, பராக்கிரமம், உண்மை உதாரம் முதலிய நற்குணங்களைப் பொருதியும், ஜாதிக்கட்டுப்பாட்டுடனும் இருந்து வரலானார்கள்.

கட்டுப்பாடு

ராஜபுத்திரர்கள் தங்களுடைய ஸ்திரீகளின் கௌரவத்தை மிகுந்த உறுதியுடன் பாதுகாத்து வந்தார்கள். புருஷர் இறந்து விட்டால், ஸ்திரீகள் உடன்கட்டை ஏறி விடுவார்கள். அந்நியர்கள் அவர்களுடைய கோட்டைகளை முற்றுகைசெய்து பிடித்துக்கொண்டார்களேயானால், அவர்களுடைய பெண்டிர்கள் பெரிய தீயை மூட்டி அதில் உயிருடன் வீழ்ந்து மாண்டு போவார்கள். உயிரைவிட கற்பே சிறந்தது என்பது அந்த ராஜபுத்திரப் பெண்களின் கொள்கை.

ராஜபுத்திரப் பெண்டிர்

ராஜபுத்திரர்கள் ஹோமகுண்டத்தினின்றுந் தோன்றினார்கள் என்னும் ஒரு கற்பனைக் கதையும் வழங்கி வந்துள்ளது. அவர்கள் இந்தியாவின் பல பாகங்களிலும் அநேக ராஜ்யங்களை ஏற்படுத்திக்கொண்டு அவற்றை ஐந்நூறு வருஷங்கள் வரையில் ஆண்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் உண்டு பண்ணின ராஜ்யங்களில் முக்கியமான சிலவற்றின் சரித்திரத்தை மட்டில் நாம் கவனிப்பது அவசியமாகும். அதற்கு முன், நமது நாட்டின் மீது படை யெடுத்து வந்து சுமார் ஐந்நூறு வருஷ காலம் அரசு செலுத்தியும், இந்நாட்டினரைத் தங்களுடைய மதத்திற் சேர்த்துக்கொண்டும் மிக்க மேம்பாட்டுடன்

விளங்கின மகம்மதியர்களின் உற்பத்தியைக் குறித்தும், முந்திய இந்தியப் படையெழுச்சிகளைக் குறித்தும் சிறிது தெரிந்து கொள்ளுவோம்.

iii. இஸ்லாமும், மகம்மதியப் படை யெழுச்சியும்

கி. பி. 570-ல் அரேபியாவிலுள்ள **மெக்கா** என்னும் பட்டணத்தில் **மகம்மது** என்றோர் அற்புதமான புண்ணிய புருஷர் அவதரித்தார். அவர் தமது சிறுவயது முதற் கொண்டே பற்பல தெய்வங்களை வணங்கியும், முரட்டுக் குணங்களிற் பழகியும் வந்த அராபியரிடம் வெறுப்புக் கொண்டிருந்தார்.

மகம்மது நபி

அவர் பரம்பொருள் ஒருவரே யென்றும், அவர் முன்னிலையில் அனைவரும் சமானரென்றும் எல்லோரும் அவரைத்தான் நாடித் தொழவேண்டு மென்றும், ஆண்மக்கள் பெண்மக்களிடத்திலும், குழந்தைகளிடத்திலும் அன்புடனும், தயையுடனும் நடந்துகொள்ள வேண்டுமென்றும், எவரும் மதுபானம் செய்யலாகாதென்றும், யாவருந் தினந்தோறும் ஐந்துமுறை தெய்வ வணக்கஞ் செய்ய வேண்டு மென்றும்போதித்து வரத்தொடங்கினர். அப்போதனைக ளடங்கிய மதந்தான் **இஸ்லாம்** எனப்படுவது. அவரும், அப்பொழுதுஒரு நபி ஆனர்.

மதபோதனை

மகம்மது தங்களுடைய புராதன வழக்கங்களை யெல்லாம் மாற்றிவிட முயன்றுவருகிறு ரென்று அவரிடங் கோபங் கொண்ட அராபியர்கள் அவரைக் கொல்ல முயன்றபொழுது, அவர் கி. பி. 622-ல் மெக்காவிலிருந்து மெடீனுவுக்கு

ஹிஜ்ரா

ஓடிப்போய் விட்டார். அன்று முதற்கொண்டு தான் மகம்மதியர்கள் தங்களுடைய வருஷங்களை வேறாகக் கணக்கிட்டு வருகிறார்கள். அவர்களுடைய சகாப்தத்திற்கு ஹிஜிரா என்று பெயர். ஹிஜிரா என்றால் ஓட்டம் என்று பொருள்.

மெடீனாக் குடிகள்

மெடீனா ஜனங்கள் மெக்காவிலிருந்த முரட்டு மனிதர்களைப்போ லல்லாமல் அவரைக் கொண்டாடியும், அவருடைய நற்போதனைகளைக் கேட்டும், அவற்றின் உண்மைகளைச் சிரமேற்கொண்டொழுகியும் வந்ததல்லாமல், அவரைத் தமது மெடீனாவுக்குத் தலைவராகவும் ஆக்கினார்கள்.

மெக்காவின் மீது படையெழுச்சி

கி. பி. 630-ல், மகம்மது ஒரு பெருஞ் சேனையுடன் மெக்காவின்மீது படை யெடுத்துச் சென்று அதைப் பிடித்துக்கொண்டார். நாள் செல்லச்செல்ல அவருடைய அதிகாரமும் அதிகரித்துக் கொண்டே வந்தது. கி. பி. 632-ல் மகம்மது நபி இறந்த பொழுது அரேபியாவின் பெரும்பாகமும் அவருடைய ஆட்சிக்குட்பட்டிருந்தது.

மதவளர்ச்சி

அவருடைய காலத்திற்குப் பின்பு மகம்மதியர்கள் பாரஸிகம், ஸிரியா, எகிப்து, சிறிய ஆசியா முதலான நாடுகளை வென்று அந்நாட்டு ஜனங்களை மகம்மதியர்களாக்கி விட்டார்கள். மகம்மது இறந்த நூறு வருஷங்களுக்குள் இஸ்லாம் மதம் ஸ்பெயின் தேசம் முதல் ஸிந்துநதி வரையில் பரவிப்போயிற்று.

இந்தியாவின் வடமேற்கிலுள்ள **ஸிந்து நாட்டை** மிஹிராகுலருடைய, சந்ததியார்கள் ஆண்டுவந்தார்கள்.

ஸிந்துநாடு ஹர்ஷருடைய காலத்தில் ஹூணரைத் துரத்திவிட்டு அதைப் பிராமணர்கள் கைப்பற்றிக்கொண்டு விட்டார்கள். அப்பொழுது அவர்கள் ராஜபுத்திரர்களென மதிக்கப்பட்டார்கள்.

கி. பி. 711-ல், அந்த வம்சத்தைச் சேர்ந்த தாஹிர் என்பவன் ஸிந்து நாட்டை ஆட்சி செய்துகொண்டிருந்தான். அப்பொழுது சில ஸிந்து நாட்டுக் கப்பற் கொள்ளைக்காரர்கள் ஸிம்மள நாட்டிலிருந்து பாரஸிக கவர்னருக்குக் காணிக்கைகளைக் கொண்டு செல்லும் கப்பல்களை வழிப்பறித்ததனால், மகம்மதியர்கள் ஸிந்து நாட்டின் மீது படையெடுத்து வந்தார்கள். மகம்மது பின் காஸிம் என்பவர் தாஹிரை வென்று கொன்று விட்டு

காஸிமின் படையெழுச்சி ஸிந்து நாட்டைக் கைப்பற்றிக் கொண்டு அங்கே ஒரு மகம்மதிய ராஜ்யத்தை ஏற்படுத்தினார். அப்பொழுது ஸிந்து நதி தீரத்திலிருந்த பல ஜாதியர்களும் ஒற்றுமையை நீத்துத் தம்முள் சண்டையிட்டு வந்ததனால், அவர்களிற் சிலர் மேளதாளங்களுடன் மகம்மதியரை வரவேற்று அவர்களுடன் சேர்ந்து கொண்டார்கள்.

காஸிம் தமது விரோதிகளிடமிருந்து அவர்களுடைய நன்னடக்கைக்காக ஜாமீன் பெற்றுக் கொண்டு, அவர்களைத் தயையுடன் நடத்தவேண்டுமென உத்தரவு செய்தார். காஸிம் அவர்களுக்காவது, அவர்களுடைய சொத்துக்

நற்குணங்கள் களுக்காவது எவ்விதமான தீங்கையுமிழைக்கவில்லை. அவர்களுடைய கோவில்களையும் அவர் தீண்டவில்லை. மகம்மதிய வழக்கப்படி அவர் அவர்களுக்குத் தலைவரியை மட்டில் விதித்தார். சிற்சில பொழுது மகம்மதியர்கள் ஹிந்துக்க

ளுடைய கோயில்களைத் தகர்த்து விக்ரஹங்களை உடைத்தார்களாயினும், யாத்திரிகர்கள் செலுத்தி வந்த வரியினின்றும் அவர்களுக்கு விசேஷ வருமானங் கிடைத்து வந்ததனால், அவர்கள் பொதுவில் ஹிந்துக்களுக்குத் துன்பத்தை யுண்டு பண்ண வில்லை.

காஸிமுக்குப் பின்பு அராபியர் சுமார் இருநூறு வருஷங்கள் வரையில் இந்தியாவின் மீது படையெடுத்து வரவில்லை. அவர்கள் இன்னும் அதிகமான நாட்டை ஜயிக்க வேண்டுமென்று முயற்சியும் செய்ய வில்லை. அவர்களுக்குத் துருக்கியர்களுடன் சண்டையிட்டுத் தங்கள் நாட்டைக் காப்பாற்றிக் கொள்வதே பெருந்தொழிலாக விருந்தது.

200 வருஷ அமைதி

iv. ஹிந்துஸ்தானத்துச் சிற்றரச வம்சங்கள்

ஹர்ஷர் காலத்திற்குப் பின்பு அவருடைய பெரிய ராஜ்யம் சிதறிப் பல சிறிய ராஜ்யங்களாயின வென்று ஏற்கெனவே சொல்லப்பட்டதல்லவா? அவற்றுள் கூர்ஜர பரிஹாரருடைய ராஜ்யம் முதன்மையானது.

எட்டாவது நூற்றாண்டின் முதலில் கூர்ஜர பரிஹாரர்கள் ராஜபுதனத்தில் வலியவர்களாகி ஆட்சிசெய்து வந்தார்கள். சில வருஷங்களுக் கெல்லாம் வத்ஸ ராஜர் என்னும் கூர்ஜர மன்னவர் கன்னோசியையும், வங்காளத்தையும் வென்று தமது ராஜ்யத்தில் சேர்த்துக் கொண்டார். என்றாலும், அந்த நாடுகள் கூர்ஜர வரசர்களது வசத்திலேயே இருந்துவிடவில்லை. கி. பி. 840-ல் பட்டத்திற்கு வந்த வத்ஸராஜரின் கொள்பெயரரான போஜர் கன்னோசியை மறுபடியும் வென்று, அவ்விடத்தில் ஆட்சி பெற்றிருந்த பாலர்களை

பரிஹாரர்

போஜர்

வங்காளத்துக்குத் துரத்தி விட்டுக் கன்னோசியைத் தமது ராஜ்யத்தின் தலைநகரமாக்கிக் கொண்டார். பின்னர் மகத, திருட் நாடுகளும் கூர்ஜர ராஜ்யத்தில் சேர்த்துக்கொண்டு விடப்பட்டன. அவ்வாருகப் பரிஹார போஜருடைய ராஜ்யம் வடக்கில் பஞ்சாபி லிருந்து தெற்கில் நருமதை யாறு வரையிலும், கிழக்கில் வங்காளத்திலிருந்து மேற்கில் கத்தியவார் வரையிலும் பரவியிருந்தது.

பரப்பு

போஜருடைய காலத்திற்குப்பின்பு பரிஹார ராஜ்யம் க்ஷீணிக்க வாரம்பித்தது. ராஷ்டிரகூடர்கள் பரிஹார ராஜ்யத்தின்மீது படையெடுத்து வந்து உஜ்ஜயினிபுரத்தையும், கன்னோசியையும் அடியோடு நாசஞ் செய்து விட்டார்கள். அதுமுதல் பரிஹாரருடைய மேன்மை யழிந்துபோக ஏற்பட்டது.

அப்பொழுது சாளுக்கியர், பரமாரர், யாதவர், சாந்தளர் என்னும் பெயர்களைப் பூண்ட பல ராஜ்வம்சங்கள் தனித்தனி ராஜ்யங்களை உண்டாக்கிக் கொண்டன. அதே காலத்தில் போஜர் கையினுல் தோல்வியை யடைந்து நொந்து பட்ட பாலர்கள் மகத, திருட் நாடுகளை மறுபடியும் வென்று பீஹார் நாட்டின் கீழ்ப்பாகத்தையும் கைப்பற்றிக் கொண்டார்கள்.

பல ராஜ புத்திர வம்சங்கள்

ஆயினும், கி. பி. 1019 வரையில் கன்னோசியில் பரிஹாரவரசர்கள் ஆண்டுவந்திருக்கிறார்கள். ஆனுல், பதினேராவது நூற்றாண்டில், சுமார் கி.பி. 1040-ல், சந்திரதேவன் என்னும் கஹர்வார் ராஜபுத்திரவாசன் பரிஹாரரைக் கன்னோசியிலிருந்து துரத்திவிட்டுத் தான் அந்நாட்டிற்கு அரசனுனன். கன்னோசியிலிருந்து துரத்தப்பட்ட பரிஹார வரசன்

கஹர்வார்

டில்லிக்கு ஓடிப்போய் அங்கே ஒரு சிறிய ராஜ்யத்தை உண்டு பண்ணிக்கொண்டு, அதற்கு அரசனானான்.

பரிஹாரவரசர்கள் ஹிந்துக்கள். அவர்களிற் சிலர் கல்வியையும், வித்வான்களையும் ஆதரித்து வந்தார்கள். அவர்கள் காலத்தில் காசி ஒரு சிறந்த வித்யா பீடமாக விருந்தது. அவர்கள் அந்நகரில் அநேக சிவாலயங்களைப் புதுப்பித்தார்கள். அராபியர் மேன்மேலும் இந் நாட்டின்மீது படையெடுத்து வாராதிருந்ததன் காரணம் அவர்கள் பரிஹாரர்களுக்கு அஞ்சியிருந்ததெனத் தெரியவருகின்றது.

காசி

கூர்ஜாம், ஸிந்து, பஞ்சாப், ராஜபுதனம் முதலிய நாடுகள் ஒழிந்ததும், பழைய மகத ராஜ்யத்திற் சேர்ந்தது மான ஒரு சிறிய ராஜ்யத்தைப் பழைய குப்த வம்சத்தவர்களின் தாயாதிகள் ஆண்டு வந்தார்கள். சௌகரியத்தின் பொருட்டு இவர்களைப் பிற்காலத்திய குப்தர்கள் என்று சொல்லலாம். அந்த வம்சத்தின் கடைசி அரசனான ஜீவித குப்தன் இறந்து விடவும், அவனுடைய ராணி ராஜ்யத்தை ஆள முயன்றாள். ஆனால், நாட்டில் கலகங்கள் ஏற்பட்டுவிட்டதனால், வங்காளத்தைக் கூர்ஜர மன்னரான வத்ஸராஜர் பிடித்துக் கொண்டு விட்டார்.

பிற்கால குப்தர்கள்

அப்பொழுது வங்காளத்துக் குடிகள் கோபாலரைத் தங்களுக்கு அரசராகத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். அவரும், அவருடைய சந்ததியாரும் பால வம்சத்தரசர்கள் ஆவர்.

பால அரசர்கள்

அவருடைய சந்ததியிற்றோன்றிய தேவபாலர் என்னும் பாலவரசர் கல்வியையும், கைத்தொழிலையும் ஆதரித்து வந்ததையன்றி நாளந்த நகரத்திலிருந்த பெரிய கோயிலையும் புதுப்பித்தார். அவருடைய ஆட்சியின் முப்பத்

தெட்டாம் வருஷத்தில் அவருடைய அநுமதியின்மேல் நாளந்த நகரத்தில் ஜாவா வரசரால் கட்டுவிக்கப் பட்ட பௌத்தக் கோயிலின் சம்ரக்ஷணைக்காக அவர் ஐந்து கிராமங்களை இனமாகத் தந்தார்.

அவருடைய கடைசிக் காலத்தில் பரிஹாரபோஜர் பாலராஜ்யத்தின் மீது படையெடுத்து வந்து கன்னோசியைக்கைப்பற்றிக் கொண்டு விட்டார். பின்னர், போஜர் மகத நாட்டின் மீதும் படையெடுத்துச் சென்று பாலர்களை முத்ககிரி என்னுமிடத்தில் வென்று பீஹாரையும், வங்காளத்தின் வட பாகத்தையும் தமது ராஜ்யத்திற் சேர்த்துக் கொண்டார்.

தோல்வி

ஆனல், சுமார் கி. பி. 950-ல் பட்டத்துக்கு வந்த இரண்டாவது கோபாலர் என்னும் பாலவரசர் மகத நாடு முழுவதையும் வென்று கொண்டு விட்டார். அவருடைய பேரரான மஹிபாலர் என்பவர் வங்காளத்தின் வடபாகத்தையும் ஜயித்துத் தமது ராஜ்யத்தைப் பெருகச் செய்தார். மஹிபாலர் பௌத்தர்களை யாதரித்து நாளந்தாவில் எரிந்துபோன புத்தக்கோயிலை மறுபடியும் கட்டுவித்தார். காசியிலும் அவர் சில பௌத்தக்கோயில்களைப் புதுப்பித்தார்.

அதிகார வளர்ச்சி

அவருடைய ஆட்சியில் சோழவரசர் அவர் நாட்டின் மீது படையெடுத்து வந்து அதன் சில பாகங்களை ஜயித்துக் கொண்டார். பன்னிராண்டாவது நூற்றுண்டின் முதலில் சேன வம்சத்தவர்கள் பாலர்களுடைய நாடுகளைக் கைப்பற்றிக்கொண்டு தாங்கள் அரசாளத் தொடங்கினர்கள்.

சேனவம்சம்

பாலவரசர்கள் பௌத்தர்கள். ஆயினும், அவர்கள் ஹிந்துக்களோடு விவாஹங்கள் செய்துகொண்டு இவர்

களையும் பக்ஷமாய் நடத்திவந்தார்கள். அல்லாமலும், அவர்களிற் சிலர் பிராமணர்களுக்கும், அவர்களுடைய கோயில்களுக்கும் ஏராளமான சன்மானங்களைச் செய்திருக்கிறார்கள்.

மதத்தரிப்பு

அவ்வாறிருந்தும், சேனவரசர்கள் பாலவரசர்களுடைய நாட்டைக் கைப்பற்றிக்கொண்டதற்கு மதவேற்றுமை தான் முக்கிய காரணம். சேனவரசர்கள் ஹிந்து மதத்தினராவர்.

ஜயதேவர்

சேனவம்சத்தரசர்களில் கி.பி. 1119-ல் பட்டத்துக்கு வந்த லக்ஷ்மண சேனர் என்பவர் கியாதி பெற்றவர். ஜயதேவர் என்னும் கவி அவருடைய சமஸ்தான வித்வானேயாவர். சேனவரசர்கள் ஒரு நூறு வருஷம் ஆட்சி பெற்றிருந்து சுமார் கி. பி. 1200-ல், மகம்மதிய அதிகாரத்திற்கு உட்பட்டு விட்டார்கள்.

சாந்தளர்

பரிஹார ராஜபுத்திர வம்சம் க்ஷீணித்து விட்டபொழுது, அநேக ராஜபுத்திர வம்சங்கள் முன்வரலாயினவென்று ஏற்கெனவே சொல்லப் பட்டிருக்கிற தல்லவா? அவைகளில் முதன்மையானது இப்பொழுது பண்டில் கண்ட் என வழங்கிவரும் ஜேஜாகபுக்தியை ஆண்ட சாந்தள வம்சம் எனப்படுவது. முதலில் சாந்தள வரசர்கள் பரிஹாரருடைய ஆட்சிக்குட்பட்ட சிற்றரசர்களாக இருந்தார்கள். ஆனால், பத்தாவது நூற்றாண்டில் யசோவர்மன் என்னும் சாந்தளவரசன் சுவேச்சாதிகாரத்தை யடைந்து ஜெஜாகபுக்திக்கு அரசனானன். மதனவர்மன் என்னும் அரசனுடைய காலத்தில் சாந்தள ராஜ்யம் உயர்நிலை பெற்றிருந்தது. அவனுடைய மைந்தனான பரமார்த்தன் காலத்தில், மகம்மதியர்கள் அவனுடைய நாட்டின் மீது படை

உயர்நிலை

யெடுத்து வந்து கி.பி. 1208-ல் களஞ்சாரைப் பிடித்துக் கொண்டார்கள். ஆனல், அவனுடைய மைந்தன் மகம்மதியரையோட்டிவிட்டுக் களஞ்சாரைக் கைப்பற்றிக்கொண்டு விட்டான். அது முதல் அக்பருடைய காலம்வரையில் சாந்தளர்கள் சுவேச்சையாக ஆட்சி செய்து வந்திருக்கிறார்கள்.

சாந்தள ராஜ்யம் அழிந்துபட்ட பின்பு, ஒன்பதாவது நூற்றாண்டின் முதலில் உண்டான சேடி ராஜ்யத்தை சேடி என்னும் வேறு ஒரு வகை ராஜ புத்திரர்கள் ஆட்சி செய்து வந்தார்கள். மத்திய இந்தியாவின் கீழ்ப்பாகம் தான் சேடி என்னப்பட்ட ராஜ்யம். அந்த வம்சத் தரசர்களில் விக்ரமாதித்யன் என்னும் பிருதுப் பெயரைப் பூண்டு பொன்னாணயங்களை வெளியிட்ட காங்கேயனும் அவன் மகன் கர்ணனும் முக்கிய மானவர்கள்.

சேடி

நகரமும் கோயிலும்

கர்ணன் காசியில் கர்ணமேரு என்னும் ஒரு பெரிய சிவாலயத்தைக் கட்டினன். அவன் திருபுரிக்கருகில் கர்ணவதி என்னும் ஒரு புதிய நகரத்தை உண்டாக்கி அதனைத்தன் ராஜ்யத்தின் தலைநகரமாக்கிக் கொண்டான்.

கர்ணனுக்குப்பின்பு சேடி ராஜ்யம் அழிய வாரம்பித்து விட்டது. பரமார ராஜபுத்திரர்கள் கிளம்பி அவர்களுடைய அதிகாரத்தைக் குலைத்து விட்டார்கள். கடைசி சேடியரசன் கி.பி. 1196-ல் யாதவ அரசன் கையினல் கொலையுண்டு போனன்.

சேடியின் அழிவு

முதலில் பரமார ராஜபுத்திரர்கள் பரிஹாரர்களுக்கடங்கி மாளவ நாட்டை யாண்டு வந்தார்கள். ஆனல், ஒன்பதாவது நூற்றாண்டின் கடைசியில் இரண்டாவது வாக்பதிராஜன் என்னும் அரசன் சுவேச்சாதிகாரத்தைப் பெற்றுக் கொண்டான். அவனுக்குப்பின் பட்டத்திற்கு

வந்த போஜர் சிறந்த கல்விமான். அவர் தமது தலைநகரான தாராவென்னும் பட்டணத்தில் ஒருபெரிய

போஜர்

சர்வ கலாசாலையை ஏற்படுத்தினார். அதில் கல்வியின் பொருட்டு மாணவர்கள் வந்து கூடியிருந்தார்கள். சர்வ கலாசாலையின் கட்டிடச்சுவர்களின் கற்பாறைகளில் நாடகங்களும், காவியங்களும் செதுக்கப் பட்டிருந்தன. 250 சதுரமைல் விஸ்தீரணமுள்ள. போஜ புரத் தேரியும் அவராலே தான் கட்டப்

கல்வி

பட்டது. பிற்காலத்தில் அந்த சர்வகலா சாலையை மகம்மதியர்கள் ஒரு மசூதியாகச் செய்து விட்டார்கள். மாளவ தேசத்து ஹிந்துக்கள் அந்தக் கட்டிடத்தை இன்றும் போஜராஜர் கலாசாலை என்று வழங்கி வருகிறார்கள். போஜவரசர் காலத்தில் கட்டப்பட்ட கோயில்களின் இடிந்து

கட்டிடங்கள்

பாழாய்க் கிடக்கும் சின்னங்கள் கூட ஆச் சரியமானவைகளாக விருக்கின்றன. மகம் மதியர்கள் போஜபுரத்தேரியையும் இடித்துப் பாழாக்கி விட்டார்கள். கடைசிப் பரமார வரசரை அல்லாஉத்தீன் கில்ஜி வென்று மகம்மதியராக்கி விட்டார்.

* கூர்ஜர சாளுக்கியரும் முதலில் பரிஹார வரசர்களுக் கடங்கிய சிற்றரசர்களாகவே யிருந்தார்கள். ஆனால், கி.பி. 943-ல், மூலராஜா என்பவன் ஆட்சியில் அவர்கள் சுவேச் சாதிகாரம் பெற்று வடகூர்ஜர நாட்டைப் பதின்மூன்றாம் நூற்றாண்டின் கடைசி வரையில் ஆண்டுவந்தார்கள். சமண மதத்தை யாதரித்தும், பல சமண கோயில்களையும், மடங் களையும் அமைத்தும் வந்த குமாரபாலன்

கூர்ஜர சாளுக்கியர்

இறந்துபோன ஐம்பது வருஷங்களுக்குள் சாளுக்கிய ராஜ்யம் க்ஷீணித்துவிட்டது. பதின்மூன்றாம் நூற்றாண்டின் முதலில் மாளவம் சுவேச்சாதிகாரத்தைப் பெற்றும், சிலவருஷங்

களுக்குப் பின்னர் குஜராத்தின் வடபாகம் மகம்மதியர்களது வசப்பட்டும் போயின. பதினன்காம் நூற்றாண்டின் முதலில் அல்லாஉத்தீன் கில்ஜி சாளுக்கியரை அவர்களுடைய நாட்டை விட்டுத் துரத்தி விடவும், அவர்கள் தக்ஷிணத்திலுள்ள தேவகிரிக்கு ஓடிப்போய் விட்டார்கள்.

மேலே சொல்லப்பட்ட ராஜபுத்திர வம்சங்களையன்றி, இன்னும் சில அரச வம்சங்களும் இருந்து வந்துள்ளன. அவர்களில் ஒரு வகுப்பினர் மதுரையிலும் மற்றொரு வகுப்பினர் மீவாரிலும், பின்னுமொரு வகுப்பினர்கள் அஜ்மீரிலும் ஆட்சி செய்து வந்திருக்கிறார்கள்.

கூர்ஜர போஜனது காலத்திற்குப் பின்பு பரிஹார ராஜவம்சம் க்ஷீணித்து விட்ட காலம் முதல் அஜ்மீர் நாட்டை சோகன் ராஜபுத்திரர்கள் பல தலைமுறைகள் வரையில் ஆட்சி செய்து வந்தார்கள். அந்த வம்சத்தைச் சேர்ந்த சோமேசுவரன் என்னுமரசன் டில்லியை யாண்டு வந்த பரிஹார வரசனது ஒரே பெண்ணை மணஞ்செய்து கொண்டதனல், அவர்கள் மைந்தரான பிருதிவி யரசர் இரண்டு நாடுகளுக்கும் அரசரானர். கி. பி. 1193-ல் அவருடைய ராஜ்யமும் மகம்மதியர்களுக்குச் சொந்தமாய் விட்டது.

சோகன்

பரிஹாரர்களுக்குப் பிற்காலத்தில் தோமரர்கள் என்னும் பெயரும் வந்துள்ளது. இவர்களிடமிருந்து சந்திரதேவன் கவர்ந்து கொண்ட கன்னேசி நாட்டை அவன் சந்ததியார்கள் ஒரு நூறு வருஷங்களுக்கு மேல் ஆண்டு வந்தார்கள். அந்த வம்சத்தின் கடைசியரசர் ஜயசந்திரர் என்பவர். அவர் பிருதிவியின் மாமனர். சில வருஷங்களுக்குள்ளேயே அவருடைய ராஜ்யமும் மகம்மதியர்களுக்குச் சொந்தமாகி விட்டது.

ஜய சந்திரர்

V. சாளுக்கியர்கள்

சாளுக்கியர்

ஆந்திர தேசத்தை யாண்டு வந்த சாதவாகனர் க்ஷீணித்து விட்ட காலம் முதல் சுமார் மூந்நூறு வருஷங்கள் வரையில் தக்ஷிணத்தைப்பற்றின விவரம் யாதொன்றும் கிடைத்திலது. ஆறுவது நூற்றுண்டின் மத்தியில் பாதாமி சாளுக்கியர்கள் முன்னேற்றத்தை யடைந்து தக்ஷிணத்தை ஆளத் தொடங்கினார்கள்.

புலிகேசன்

சுமார் கி. பி. 550-ல், முதற் புலிகேசன் என்னும் சாளுக்கிய மன்னவன் வெங்கி நாட்டை வென்று வாதாபி என்னுமிடத்தில் தனது அதிகாரத்தை ஸ்தாபித்தான். சாளுக்கிய வரசர்களில் இரண்டாவது புலிகேசன் என்பவன் தான் கீர்த்தி பெற்றவன். அவன் கி. பி. 608-ல் பட்டத்துக்கு வந்தான். அவன் சாளுக்கிய ராஜ்யத்தை நருமதை நதி முதல் பாலாறு வரையிலும், அராபிக்கடல் முதல் வங்காள விரி குடா வரையிலும் பரப்பினான்.

இரண்டு வம்சங்கள்

கி. பி. 609-ல், இரண்டாவது புலிகேசன் தன் தம்பியான விஷ்ணுவர்த்தனனை வெங்கி நாட்டிற்கு ராஜப் பிரதிநிதியாக நியமித்தான். சில வருஷங்களுக்கெல்லாம், விஷ்ணுவர்த்தனன் சுவேச்சாதிகாரம் பெற்றுக் கொண்டுவிட்டான். அவனுடைய சந்ததியாருக்குக் கீழ் நாட்டுச் சாளுக்கியர் என்னும் பெயர் வந்தது. அப்பொழுது புலிகேசனுடைய சந்ததியார்கள் மேனாட்டுச் சாளுக்கியர்கள் என வழங்கப் பெற்றார்கள். கீழ் நாட்டுச் சாளுக்கியர்கள் கி. பி. 1070வரையில் விஷ்ணுவர்த்தனனுடைய நாட்டை யாண்டு வந்தார்கள். பிறகு அவர்களுடைய ராஜ்யம் சோழ ராஜ்யத்திற் சேர்ந்து போயிற்று.

புலிகேசன் தென்னிந்தியாவின் மீது படையெடுத்து வந்த ஹர்ஷரைத் தோற்கச் செய்து துரத்தி விட்டா னென்று ஏற்கெனவே சொல்லப் பட்டிருக்கின்றதல்லவா?

புலிகேசன் வெற்றிகள்

அஃதன்றியும், அவன் சேர சோழ பாண்டியர்களுடனும், பல்லவர்களுடனும் பன்முறை சண்டை செய்திருக்கிறான். அதுவுமல்லாமல், அஜாந்த குகையில் எழுதப் பட்டுள்ள ஒரு சித்திரத்தினின்றும் புலிகேச னுக்கும், பாரஸிக மன்னனுக்கும் நட்பு ஏற்பட்டிருந்த தென்றும், ஒரு நாட்டிலிருந்து மற்றொன்றிற்கு ராஜ தூதர் கள் அனுப்பப்பட்டு வந்தார்களென்றும் தெரிகின்றன.

கடைசியில் காஞ்சீபுரத்தை யாண்டு வந்த நரஸிம்ம வர்மன் என்னும் பல்லவ வரசன் அவனை வென்று வாதா பியைக் கொள்ளையிட்டு அவனையுங் கொன்று விட்டான். அது முதல் பதின் மூன்று வருஷங்கள் வரையில் சாளுக் கியர்களுடைய அதிகாரங் குறைந்து பல்லவர்களுடைய அதிகாரம் மேம்பட்டிருந்தது. அப்பொழுதும், அதற்குப்

ராஷ்டிர கூடர்

பின்னரும் சாளுக்கியர்களுக்கும், பல்லவர் களுக்கும் அநேக சண்டைகள் நடந்து வந்தன. கடைசியில், கி.பி. 753-ல் மேனாட் டுச் சாளுக்கிய வம்சம் அழிந்து போயி ற்று. ராஷ்டிர கூடர்கள் அவ்வதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டு தக்ஷிணத்தில் சுமார் 225 வருஷகாலம் ஆட்சி புரிந்து வந்தார்கள். அவர்கள் அநேக கோயில்களைக் கட்டி னார்கள். அவற்றுள் எல்லோராவிற் கட்டப்பட்ட கைலா சர் கோவில் மிகவும் அழகானது.

அதற்குப் பின்பு சாளுக்கிய வம்சத்தைச் சேர்ந்த தயிலப்பா என்பவன் அந்த வம்சத்தை மறுபடியும் அது

கல்யாணிச் சாளுக்கியர்

தனது முன்னோர்கள் காலத்திலிருந்த நிலைமைக்குக் கொண்டு வந்தான். அவனுடைய சந்ததியார்களுக்குக் கலயாணிச்சாளுக்கியர்கள் என்று பெயர். இவர்களும் சற்றேறக்குறைய இரண்டு நூற்றாண்டுகள் வரையில் மேன்மையடைந் திருந்தார்கள். கி. பி. 1190-ல், இவர்களுடைய அதிகாரமும் சீர் குலைந்து போயிற்று.

அதற்குச் சில வருஷங்களுக்கு முன் விக்ரமாங்கன் என்னும் சாளுக்கிய வரசனுடைய சேனாதிபதியான பிஜ்ஜலன் என்பவன் தனது எஜமானனுடைய நாட்டைத் தான் அபகரித்துக் கொண்டு சுமார் 20 வருஷகாலம் ஆட்சி செய்து வந்தான். அப்பொழுது அவனுடைய

லிங்காயத்துக்கள்

பிராமண மந்திரியான பஸவன் என்பவனால் உண்டாக்கப்பட்ட லிங்காயத்துக்கள் என்னும் வீரசைவர்கள் ஏற்பட்டார்கள். அவர்கள் வேதங்களையும், பல ஜன்மங்கள் உண்டென்பதையும் ஒத்துக் கொள்வதில்லை. அவர்கள் பிராமணர்களிடம் மிகுந்த விரோதம் பாராட்டி வந்தார்கள்.

சாளுக்கிய வம்சம் க்ஷீணித்து விட்ட பொழுது, மைசூர் ராஜ்யத்தை யாண்டுவந்த ஹோய்ஸலரும், தேவ

மைசூரும் தேவகிரியும்

கிரியை யாண்டு வந்த யாதவர்களும் சிறிது காலம் முன்னேற்றத்தை யடைந்திருந்தார்கள். பதினான்காம் நூற்றாண்டின் முதலில் அல்லா உத்தீன் கில்ஜி அவர்களுடைய நாட்டின் மீது படையெடுத்து வந்து அந்த இரண்டு வம்சங்களையும் தொலைத்துவிட்டார்.

vi. பல்லவர்கள்

இவர்கள் அந்நியர்கள் என்றும், முதலில் ஆப்கானிஸ்தானம் முதலிய வடமேற்கு நாடுகளில் வந்து குடியேறினார்கள் என்றும், அங்கிருந்து தெற்கு முகமாக வந்து

தென்னிந்தியாவில் பரவினதை யல்லாமல், இவர்கள் சமண, பௌத்த, ஆரிய முறைகளைக் கைக்கொண்டு ஒழுகிவரத் தலைப்பட்டார்கள் என்றும் தெரிய வருகின்றன. இவர்களில் அதிகாரம் பெற்று ராஜரீகம் நடத்தினவர்கள் ஆரிய மதாநுஷ்டானத்தைக் கொண்டு ஆரிய

பல்லவர்கள்

முறைப்படி ஆட்சி செய்து வந்திருக்கிறார்கள். அதனால், இவர்கள் பிராமணரையும், அவர்கள் கல்வியையும் போற்றி வந்தார்கள். இவர்கள் காலத்தில் கட்டப்பட்ட கோயில்கள் எண்ணிறந்தன. இப்பொழுது தென்னிந்தியாவிலுள்ள கள்ளர், மறவர், வன்னியர் முதலிய ஜாதியார்கள் பல்லவ வம்சத்தைச் சேர்ந்தவர்கள் என்று கருதப் படுகிறார்கள்.

சாதவாகன வம்சம் அழிந்ததும், பல்லவர்களும் முன்னேற்றத்தை அடைந்தார்களென்று தெரிய வருகின்றது. இரண்டாவது நூற்றாண்டில் அவர்களுடைய ராஜ்யம் கிருஷ்ணாநதி முதல் காவேரியாறு வரையில் பரவியிருந்தது. அதற்குக் **காஞ்சீபுரம்** தலைநகராயிருந்தது. பல்லவ

மஹேந்திர வர்மன்

அரசர்களில் **சிவஸ்கந்த வர்மன்** பெரியவன். அவன் ஓர் அசுவமேத யாகஞ் செய்தானென்றும் சொல்லப்பட் டிருக்கிறது. ஆறாவது நூற்றாண்டின் முதலில் பல்லவ ராஜ்யத்தை யாண்டுவந்த **மஹேந்திரவர்மன்** என்பவனைத் தான் சாளுக்கிய புலிகேசன் வென்று வெங்கி நாட்டைப் பிடுங்கிக் கொண்டு வாதாபியில் சாளுக்கிய அதிகாரத்தை ஸ்தாபித்தான். மஹேந்திர வர்மன் வட ஆற்காடு, திரிசிராப்பள்ளி ஜில்லாக்களில் பெரிய பெரிய மலைக் கோயில்களைக் கட்டிவைத்தான். அரக்கோணத்திற் கருகிலுள்ள **மகேந்திரவாடி** என்னும் ஊர் அவன் தான் உண்டாக்கினது போலும்.

இரண்டாவது புலிகேசனைத் தோற்கச் செய்து கொன்ற **நரஸிம்மவர்மர்** காலத்தில் தான் யுவாஞ் சுவாங் என்னும் சீன யாத்திரிகர் காஞ்சிக்கு வந்திருந்தார்.

நரஸிம்ம வர்மர். நரஸிம்மவர்மர் சென்னைக்குச் சுமார் முப்பது மைல் தெற்கிலுள்ள **மகாபலிபுரம்** என்றும் **மாமல்லாபுரம்** என்றும் **திருக்கடன்மல்லை** என்றும் வழங்கும் ஏழு கோவிற் பட்டணத்திலுள்ள பல ரதங்களையும், கோயில்களையும், கல் வெட்டுக்களையும் அமைத்து வைத்தார் என்று சொல்லப்பட் டிருக்கிறது. காஞ்சீபுரத்திலுள்ள ஏகாம்பரேசுவரர் கோயிலும் இவரால் தான் கட்டப்பட்டதென்று தெரிய வருகின்றது. இவருக்கு **மஹாமல்லர்** என்னும் பிருதுப் பெயரும் உண்டு.

பல்லவ அழிவு முதலில் சாளுக்கியர்களுடனும், பிறகு ராஷ்டிர கூடர்களுடனும், அதற்குப் பின்பு சங்க வம்சத்தினருடனும் பல சண்டைகள் செய்து, நாளடைவில் பல்லவ ராஜ்யம் சீர் குலைந்து விட்டது. பிற்காலத்தில் பல்லவர்கள் கப்பங் கட்டுஞ் சிற்றரசர்களாகவும், தமிழ் நாட்டரசர்களுடைய சமஸ்தானங்களில் உத்தியோகஸ்தர்களாகவும் இருந்து வந்தார்கள். ஆரிய முறைகளும் ஸம்ஸ்கிருத பாஷையும் இவர்களால் தான் தமிழ் நாட்டிற் பரவிற்றென்பது பல மேதாவிகளின் தீர்மானமான கொள்கை.

vii. பிற்காலச் சோழர்கள்

ஸ்தல ஸ்தா பனங்கள் கி. பி. 907-ல் பட்டத்துக்கு வந்த **பராந்தகர்** காலந் தொடங்கித் தான் சோணாட்டைப் பற்றின விவரங்கள் கிடைத்துள்ளன. அவர் பல்லவர்களை முற்றிலும் வென்று பாண்டியனையும் ஜயித்தார் என்று தெரிய வருகின்

றது. அவருடைய சிலா சாஸனங்களிலிருந்து சோழ நாட்டில் ஸ்தல சுய ஆட்சியின் சம்பந்தமாகப் பஞ்சாயத்துச் சபைகள் மிகவும் விமரிசையாக அமைக்கப்பட்டிருந்தன வென்றும், அச்சபைகள் தங்கள் கடமைகளைக் குடிகளின் பொதுநலத்தை நாடிச் செவ்வனே நடத்தி வந்தன வென்றும் தெரிய வருகின்றன.

பராந்தகருக்குப் பின்பு பட்டத்துக்கு வந்த சோழ வரசர்களில் கி. பி. 985-ல் ஸிம்மாஸன மேறிய **ராஜராஜ தேவர்** கியாதி பெற்றவர். அவர் சேர ராஜனது கப்பற் படைகளை நாசஞ் செய்து, வெங்கிநாட்டை யாண்டு வந்த சாளுக்கியர்களைத் தோற்கச் செய்து பாண்டியனிடமிருந்து குடகு நாட்டை ஜயித்துத் தம்முடைய அதிகாரத்தையும் சிறப்பையும் விருத்தி செய்து கொண்டார். அவர் ஸிம்மளத் தீவையும் வென்று தமது ராஜ்யத்திற் சேர்த்துக் கொண்டார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர் லக்ஷத்தீவுகளையும் ஜயித்தாரெனத் தெரிய வருகின்றது. தஞ்சாவூரிலுள்ள **பிருகதீசுவரர்** கோயிலும், வட ஆற்காடு ஜில்லாவில் **மேல்பாடி** என்னும் ஊரிலுள்ள **சோளேசுவரர்** ஆலயமும், **திருவையாற்றிலுள்ள லோக மஹா தேசுவரர்** கோயிலும் அவர் கட்டியவைகளாம். அவர் பிருகதீசுவரர் கோயிலின் சுவர்களில் தமது வெற்றியைப் பற்றின விவரங்களைச் செதுக்கி வைத்திருக்கிறார். அவற்றை நாம் இப்பொழுதும் காணலாம்.

ராஜ ராஜ தேவர்

அவர் தம்முடைய பெரிய ராஜ்யத்தைப் பல மாகாணங்களாகப் பிரித்து, ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு பிரதி நிதியை நியமித்தார். மாகாணங்கள் ஜில்லாக்களாக வகுக்கப்பட்டு ஒவ்வொன்றும் ஒவ்வோர் அதிகாரியின் மேற் பார்வைக்கு உட்பட்டிருந்தது. ஜில்லாவில் அடங்

கிராமபரிபாலனமும் பிரதிநிதிகளும்

கிய கிராமங்களின் வியவகாரங்களை நடத்துவதற்கு ஆங்காங்குச் சபைகள் இருந்தன. அச்சபைகளுக்குப் புருஷரையன்றி ஸ்திரீகளும் அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். செங்கற்பட்டு ஜில்லாவில் உத்தரன்மேரூரில் கிடைத்த ஒரு சாஸனத்தில் பெருங்கரநாயகி என்னும் ஒரு ஸ்திரீ நீதிமுறைச் சபையின் அங்கத்தினளாக இருந்தாளெனக் கண்டிருக்கிறது. இராஜராஜர் வித்வான்களையும், சிற்பிகளையும் பரிவுடன் ஆதரித்து வந்தார். அவருடைய குடிகள் சந்தோஷமாகவும், சௌக்கியமாகவும் வாழ்ந்து வந்தார்கள். அரசர் தமது குடிகளினிடமிருந்து ஆறிலொரு பங்கு வரி வாங்கினார். கி. பி. 1017-ல் அவர் காலஞ் சென்றார்.

ராஜேந்திர சோழ தேவர்

அவருக்குப் பின் அவர் மைந்தர் ராஜேந்திர சோழ தேவர் என்பவர் பட்டத்துக்கு வந்தார். இவர் தந்தையினும் கியாதி பெற்றவர். இவர் பேகு என்னும் நாட்டை ஜயித்து அங்கே தமது வெற்றியைக் குறிக்கும் இரண்டு ஸ்தம்பங்களை நாட்டினார். இவர் அண்டமான், நிகோபார் தீவுகளையும் வென்று தமது ராஜ்யத்திற் சேர்த்துக் கொண்டார். இவர் வங்காள மன்னனை மஹிபாலனை ஜயித்துக் கங்கை கோண்டான் என்னும் பிருதுப் பெயரை வைத்துக்கொண்டார்.

கட்டிடங்கள்

இவர் திரிசிராப்பள்ளிக் கருகில் கங்கை கோண்ட சோழபுரம் என்னும் பட்டணத்தையும், அதில் ஒரு பெரிய கோயிலையும் கட்டு வித்தார். அன்றியும் இவர் அவ்வூரில் பதினாறு மைல் நீளமுள்ள ஒரு ஏரியையும் வெட்டி வைத்தார். அந்தப் பட்டினமே அவருடைய ராஜ்யத்தின் தலைநகராக விருந்தது. அது அழிந்து பாழாய்க் கிடப்பதை நாம் இன்றும்

காணலாம். கங்கை கொண்ட சோழரின் மருமகர் ராஜ ராஜ நரேந்திரர் என்பவர்.

நரேந்திரர் சாளுக்கிய வம்சத்தைச் சேர்ந்தவர்; இராஜ மஹேந்திரத்தைத் தலைநகராகவுடைய வெங்கி நாட்டை ஆண்டவர்களுள் முதன்மை யானவர். அவர் வித்வான்களைப் பரிவுடன் ஆதரித்து வந்தார். அவருடைய சமஸ்தான வித்வானான நன்னய்யபட்டர் என்பவர் மஹாபாரதத்தைத் தெலுங்கு பாஷையில் இயற்றி யிருக்கிறார்.

நரேந்திரர்

கங்கைகொண்ட சோழருக்குப் பின்பு சோழ வம்சத்தைச் சேர்ந்த இரண்டு அரசர்கள் அந்த ராஜ்யத்தை முறையே யாண்டு வந்தார்கள். அவர்களிற் பிந்தியவன் கி. பி. 1074-ல் கொலையுண்டு போனான். அப்பொழுது நரேந்திரர் மைந்தரும், கங்கை கொண்டசோழரின் தௌஹித்ரருமான குலோத்துங்க சோழர் சோழ வரசரானார். இவரும் இவர் சந்ததியாரும் சாளுக்கிய சோழர்கள் எனவழங்கப்பட்டுவந்தார்கள். குலோத்துங்கர் தமது மகன் விக்ரமன் என்பவனை வெங்கி நாட்டிற் கதிபதி யாக்கினார்.

குலோத்துங்கர்

குலோத்துங்கர் கி. பி. 1086-ல் தமது ராஜ்யத்தி லுள்ள நிலங்களை யளந்து எல்லை கட்டும்படி ஏற்பாடு செய்தார். க்ஷாமகாலத்தில் அவர் வரியைக் குறைத்தும், தள்ளியும் வியவசாயிகளை ரக்ஷித்தார். அவர் வியவசாயத்திற்கு வேண்டிய வாய்க்கால்களையும், அணைகளையும், பாலங்களையும் கட்டுவதற்கும், மராமத்துச்செய்வதற்கும் மிகுதியான பொருளைச் செலவிட்டார். அவர் சுங்கவரியை அடியோடு தள்ளி விட்டார். அவர் பல அரசர்களை வென்று

நிலவரித் தீர்மானம்

வெற்றிகள்

தமது ஆட்சியைப் பெருகச் செய்தார். அவர் கலிங்கநாட்டை வென்ற செய்தியை வர்ணித்து அவரது சமுக வித்வான்களி லொருவராகிய ஜயங்கொண்டார் என்பவர் கலிங்கத்துப் பரணி என்னும் நூலை யியற்றினார் என்பர்.

குலோத்துங்கருடைய காலத்தில் தென்னிந்தியாவில் ஸ்ரீமத் ராமாநுஜாசாரியர் என்னும் வைஷ்ணவ மதாசாரியர் விசிஷ்டாத்வைத மதத்தைப் போதித்து வந்தார்.

மதாசாரியர்கள்

குலோத்துங்கருக்குமுன் னிருந்த சோழ வரசன் சைவனானதனால், ராமானுஜர் ஸ்ரீரங்கத்தை விட்டுச் சிலநாள் மைசூருக்குச் சென்றிருந்து அவன் இறந்த பிறகு திரும்பவும் ஸ்ரீரங்கம் வந்து சேர்ந்தார். இவர் போதித்து வந்த விசிஷ்டாத்வைத மதம் ஸ்ரீமத் சங்கராசாரியருடைய அத்வைத மதத்திற்கு மாறானது.

அவருக்குப் பின் 12-வது நூற்றாண்டில் ஸ்ரீமத் மத்வாசாரியர் தோன்றி த்வைத மதத்தைப் போதித்து வந்தார். இந்த மூவரும் ஹிந்து மதத்தை முன்னுக்குக் கொண்டு வந்த சிறந்த மதாசாரியர்கள் ஆவர்.

குலோத்துங்கருக்குப் பின் பட்டத்துக்குவந்த சோழ வரசர்கள் பலங்குறைந்தவர்கள். அவர்களது காலத்தில் சோழ ராஜ்யம் சீர்குலைய வாரம்பித்துக் கடைசியில் மகம்மதியருக்குச் சொந்தமாய் விட்டது. ஆனாலும், அவர்கள் காலத்தில் கவிச்சக்ரவர்த்தியாகிய கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தியார் முதலிய சிறந்த கவிகள் தோன்றி

தமிழ்க் கல்வி

இராமாயணம், மூவருலா, நளவெண்பா முதலிய நூல்களை இயற்றினார்கள். அல்லாமலும், அப்பொழுது தான் பர்ணந்தி முனிவர் நன்னூல் என்னும் இலக்கண நூலைச் செய்தார்.

சோழவரசர்கள் கிழக்கில் மலேயாவுடனும், மேற்கில் எகிப்து முதலான தேசங்களுடனும் வியாபாரம் செய்து வந்திருக்கிறார்கள். அப்பொழுது அவர்களுடைய

கப்பற்படை

நாட்டிற்குக் காவிரிப்பூம் பட்டினம் முக்கிய துறைமுகமாக விருந்தது. சோழவரசர்களுக்கு நிலப்படை, நீர்ப்படை ஆக இரண்டும் இருந்தன. துரைத்தன உத்தியோகஸ்தர்களுக்குச் சம்பளமோ அல்லது மான்யமோ கொடுக்கப்பட்டிருந்தது.

கிராமங்கள் ஒரு பொதுச் சபையினால் பரிபாலிக்கப்பட்டு வந்தன. கிராமத்தலைவர்கள் வருஷாவருஷம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அந்தப் பொதுச் சபையையன்றிப்

கிராம பரிபாலனம்

பல சிறு பஞ்சாயத்துச் சபைகளும் இருந்தன. அவைகள் கிராம சம்பந்தமான வேலைகளைத் தம்முள் பிரித்துக்கொண்டு செய்து வந்தன. கிராம உத்யோகஸ்தர்கள் அச்சபைகளுக்கடங்கி நடந்து வந்தார்கள். சபைக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்குச் சட்டங்கள் இருந்தன. அந்தோ! இவை யாவும் எவ்வாறு முற்றும் அழிந்து போயின.

VI. மகம்மதியர் முன்னேற்றம்

i. துருக்கியர் படையெழுச்சி

ஸிந்து நாட்டை அராபியர்கள் கைப்பற்றிக்கொண்ட காலம் முதல் சுமார் இருநூறு வருஷங்கள் வரையில் மகம்மதியர்கள் இந்தியாவின்மீது படையெடுத்து வரவில்லை என்று ஏற்கெனவே சொல்லப் பட்டிருக்கிற தல்லவா? ஒன்பதாவது நூற்றாண்டின் மத்தியில் மகம்மதியர்கள் ஆப்கானிஸ்தானத்தின்மீது படையெடுத்து வந்து காபூலை ஜயித்துக்கொண்டு விட்டார்கள். அப்பொழுது அங்கே ஆட்சி பெற்றிருந்த ஹிந்து அரசர்கள் பஞ்சாபை நோக்கி ஓடிப் போனார்கள். பத்தாவது நூற்றாண்டின் இறுதியில் அராபியருடைய அதிகாரம் குறைவுபட்டு விட்டது. அப்பொழுது அல்ப்டிஜின் என்னும் ஒரு துருக்கிய அடிமை தன்னைப் போன்ற சில அடிமைகளைத் துணைக்கொண்டு கஜினிப்பட்டணத்தின் மீது படையெடுத்துவந்து அங்கிருந்த ஹிந்துவரசரைத் துரத்திவிட்டு அதைக் கைப்பற்றிக் கொண்டான். ஹிந்துக்கள் மகம்மதியரைச் சண்டையிட்டுத் துரத்தவாவது, தாங்கள் இழந்துவிட்ட நாடுகளைக் கைப்பற்றிக்கொள்ளவாவது யாதொரு முயற்சியும் செய்தார்களில்லை.

துருக்கியர்

அல்ப்டிஜினுக்குப் பின்பு அவனுடைய அடிமையான ஸபக்டிஜின் என்பவன் கி. பி. 976-ல் கஜினியில் அரசனானான். அவன் இந்தியாவின்மீது படையெடுத்துவந்து ஜயபாலர் என்னும் ஹிந்து அரசரை வென்று தனக்குக் கப்பங் கட்டும்படி செய்தான். கி.பி. 991-ல் ஜயபாலர் சாந்தள, பரிஹார ராஜபுத்திரர்களைத் துணைசேர்த்துக்கொண்டு மற்றொரு முறை சண்டையிட்டார். ஆனால், அந்தச் சண்டையில்

ஜயபால

ராஜபுத்திர வரசர்கள் அடியோடு தோற்றுப்போனார்கள். அதன்பயனாக ஸபக்டிஜினுக்குப் பெஷாவர்நாடு முழுவதும் கிடைத்து விட்டது. கி. பி. 997-ல் அவன் இறக்கவும், அவன் மைந்தர் கஜினிமுஹ்மூது என்பவர் பட்டத்துக்கு வந்தார்.

ii. கஜினி மஹ்மூது
[கி. பி. 997 - கி. பி. 1030]

மஹ்மூது சிறந்த போர்வீரர். சேனையை யுத்த முனையில் நடத்துவதில் அவர் வெகு கெட்டிக்காரர். அவரிடத்தில் இதரமதப் பகையும், விடாமுயற்சியும் குடிகொண்டிருந்தன. அதனால், அவர் செழுமையும், வளமையும் பொருந்திய இந்தியாவின்மீது சுமார் பதினேழுமுறை வரையில் படையெடுத்து வந்து, ஹிந்துக்களுடைய கோயில்களை யிடித்தும், அவற்றிலுள்ள பொருள்களைக் கொள்ளையடித்தும், ஏராளமான விலையுயர்ந்த பொருள்களைக் கொண்டுபோய்க் கஜினிப்பட்டணத்திற் சேர்த்தார்.

கஜினி மஹ்மூது

அவர் முதன் முதல் தமது தந்தையுடன் பன்முறை சண்டையிட்டுத் தோல்வியை யடைந்த ஜயபாலருடன் பெஷாவர் என்னுமிடத்தில் போர்புரிந்து அவரையும், அவருக்குத் துணையாகவந்த பல அரசகுமாரர்களையும் சிறைப்படுத்தினார். ஜயபாலர் தமக்கு நேர்ந்த அவமானத்தைச் சகிக்க முடியாமல் தீமூட்டி யதில் விழுந்து இறந்து போனார். அந்தப் படையெழுச்சியில் மஹ்மூதுவுக்குப் பத்து லக்ஷம் ரூபாய் விலை பெறத்தக்க கண்டாபரணங்களும் கணக்கில்லாத திரவியமுங் கிடைத்தன.

பெஷாவர் சண்டை

மறுபடி, கி. பி. 1008-ல், மஹ்மூது ஜயபாலரின் மைந்தர், அநந்த பாலரையும் வெற்றி கொண்டு விட்டார்.

பஞ்சாப் நாடுகளில் ஆட்சி பெற்றிருந்த பலவரசர்களும் ஒன்று சேர்ந்து பேஷாவரில் மறுபடியும் மகம்மதியர்களை யெதிர்த்துச்சண்டை செய்தார்களேனும், ஹிந்து வரசர்கள் தோல்வியை யடைந்து விட்டார்கள். ஹிந்து அரசர்களின் பக்கம் வீராவேசத்துடன் சண்டை செய்த காக்கரின் சேனைக்குப் பயந்து மஹ்மூது திரும்பியோடிப் போய்விடத் தீர்மானித்தபொழுது, அநந்தபாலர் யுத்த முனையினின்றும் ஓடிப்போய்விட்டாரென்று ஒரு பொய் வதந்தி பிறந்ததனல், ஹிந்துக்களுடைய சேனை முதுகு காட்டியோடத் தலைப்பட்டது. தெய்வச் செயலாய்த் தங்களுக்குத் தக்க சமயம் வாய்த்ததைக் கண்ட மகம்மதியர்கள் அவர்களை அடியோடு தோற்கச் செய்து விட்டார்கள்.

2-வது பேஷாவர் சண்டை

அதற்குப் பின், மஹ்மூது சத்துருக்களால் ஜயிக்க முடியாததென்று பலரும் எண்ணியிருந்த நாகர்கோட்டையை எதிர்த்துத் தகர்த்து அளவிடவொண்ணுத செல்வத்தைக் கவர்ந்துகொண்டு கஜினிக்குத் திரும்பினர். அதைப் பார்ப்பதற்கு நாலா பக்கங்களி லிருந்தும் ஜனங்கள் திரண்டு திரண்டு சென்றார்கள் என்று சொல்லப்படுகிறது.

நாகர் கோட்டை

அளவற்ற செல்வம் எளிதிற் கிடைக்கப் பெற்ற மஹ்மூது மேலும்மேலும்இந்தியாவின் மீதுபடையெடுத்து வரத் தலைப்பட்டார். அப்பொழுது வடமேற்கில் ஆட்சி பெற்றிருந்த காந்தார, டில்லி, கன்னேசி, மகத, மாளவ நாட்டரசர்கள் தங்களுடைய சச்சரவுகளை நீத்து ஒன்று சேர்ந்து மஹ்மூதை வர வொட்டாமல் தடுத்து நாட்டைக் காத்திருக்கக்கூடும். ஆனல், அவர்கள் ஒருவர்

ஐக்கிய மின்மை

மீதொருவர் கொண்டிருந்த அழுக்காற்றினாலும், விரோ தத்தினாலும் ஒன்றுபட இயலாமற் போயிற்று. நமது நாட்டின் அழிவிற்கு இத்தகைய அழுக்காறும், ஐக்கிய மின்மையும் பல நூற்றாண்டுகளாகச் சிறந்த காரணங்க ளாக இருந்து வந்தனவன்றி, இப்பொழுதும் அவைகாரண மாகவே நமது நாடு முன்னேற்றத்தை அடைய முடியாமல் திகைக்கின்றது.

கி. பி. 1018-ல், மஹ்மூது மறுபடியும் இந்தியாவின் மீது படையெடுத்து வந்து ஸப்த ஸிந்துவையுங் கடந்து, மதுரையைக் கைப்பற்றிக் கொண்டார். அவர் அசுரர்க ளாலன்றி மனிதர்களால் கட்டப்படக் கூடாதவை என்று எண்ணத்தகும் வனப்பு வாய்ந்த, கண்ணைக் கவரும் கோயில்களை முற்றிலும் இடித்து விக்ரஹங்களையும், நகைகளையும் அபகரித்துக் கொண்டார். கன்னோசி நகரமும் அவ்வாறே எதிர்த்துக் கொள்ளை கொள்ளப் பட்டது. அதன் பின்னர் இரண்டு வருஷங்களுக்குள் லாகூரும், குவாலியரும் அவருக்குக் கீழ்ப்பட்டு விட்டன.

நகரங்கள் சீரழிந்தது

கி. பி. 1024-ல், அவர் இந்நாட்டின்மீது மற்றுமொரு முறை படையெடுத்து வந்தார். அந்தக் காலத்தில் கூர்ஜர நாட்டிலுள்ள **ஸோமநாதபுரம்** என்னும் பட்டணத்தில் பிர சித்திபெற்ற ஒரு கோயிலிருந்தது. மஹ்மூது அதனைக் கொள்ளையிட்டு அங்குள்ள செல்வத்தை அபகரிக்க எண் ணினார். அவரது வரவைக் கேள்வியுற்ற ஸோமநாத புரத்து ஜனங்கள் ஒரு பெருஞ் சேனையைச் சேர்த்துக் கொண்டு மஹ்மூதைக் கோயிலுக்குள் நுழையாதபடி தடுக்க முயன்றார்கள். அயல் நாட்டுச் சிற்றரசர் களிற் சிலர் தங்கள் சேனைகளை யனுப்பி அவர்களுக்கு உதவி புரிந்தார்கள். பெண்டிர்கள் தங்களுடைய ஆபா

ஸோமநாதபுரம்

ணங்களை விற்று அந்தச் சண்டைக்கு வேண்டிய சாதனங்களை யமைத்துக் கொடுத்தார்கள். ஹிந்துக்கள் எதிர் பார்த்த வண்ணமே மஹ்மூது வந்து சேர்ந்தார். ஸோமநாத ஸ்வாமியின் கோயில்வாசலில் இருதிறத்தாருக்கும் கொடிய சண்டை நடந்தது. முதலில் ஹிந்துக்கள் தாம் ஜயமடைவார்களெனத் தோன்றிற்று. ஆனால், மகம்மதியர்கள் அதிக ஊக்கத்துடனும், வீராவேசத்துடனும் சண்டை செய்து, ஹிந்துக்களைத் தலைவிரி கோலமாகச் சிதறவடித்துக் கோயிலுக்குள் நுழைந்து விட்டார்கள். தோற்றுப் போனவர்களிற் பலர் படகுகளிலேறிக் கடல்மார்க்கமாகத் தப்பியோடிப் போனார்கள். மஹ்மூது கோயிலுக்குள் நுழைந்ததும், ஹிந்துக்கள் அவருக்கு ஏராளமான பணம் கொடுப்பதாகச் சொல்லி விக்ரஹத்தை உடைக்காமலிருக்கும்படி வேண்டிக் கொண்டார்கள். ஆனால், மஹ்மூது தாம் விக்ரஹமுடைப்பவரேயன்றி விக்ரஹம் விற்பவரல்லர் என்று சொல்லித் தமது கதையினால் லிங்கத்தை உடைத்துத் தள்ளினார். அவர் அந்தக் கோயிலி லிருந்து ஏராளமான பொருளைக் கைக்கொண்டு தம்மூருக்குத் திரும்பிச் சென்றார். கி. பி. 1030-ம் வருஷம் ஏப்ரல் மாதத்தில் மஹ்மூது கஜினியில் இறந்து போனார்.

கல்வி

மஹ்மூது இந்தியாவினின்று கவர்ந்து சென்ற ஏராளமான திரவியத்தை நல்வழிகளில் செலவிட்டார். அவருடைய சமஸ்தானத்தில் அல்பிரூனி என்னும் வானசாஸ்திரியும், பராபி என்னும் வேதாந்தியும், பருகி என்னும் பாரஸிகக் கவியும், இன்னும் பலரும் ஆதரிக்கப்பட்டு மிகப் பெரிய நூல்களை இயற்றியிருக்கிறார்கள். மஹ்மூது அவர்களின் பொருட்டு வருஷத்தில் 22 லக்ஷம் ரூபாய் செலவிட்டு வந்தார்.

அன்றியும், அவர் கஜினியில் ஒரு சர்வ கலாசாலையையும், ஒரு புஸ்தகசாலையையும், ஒரு பொருட்காட்சிச்

சாலையையும் ஏற்படுத்தினார். அவர் கஜினியில் ஓர் அழகிய மசூதியை யமைத்து அதைச் சிறந்த சிற்பிகளையும், சித்திரிப்பவர்களையும், பொன் வெள்ளி வேலைக்காரர்களையுங்கொண்டு அலங்கரித்து அவர்களைத் தத்தம் தொழில்களில் தேர்ச்சியடையும்படி உற்சாகப்படுத்தினார். அவர் ராஜரீகத்தில் கைதேர்ந்தவரல்லர். அதனால், அவர் துரைத்தன வமைப்பில் எவ்வித சிறந்த ஏற்பாட்டையுஞ் செய்யவில்லை. ஆயினும், அவர் நடுவு நிலைமையுடன் நியாயம் நடத்திவந்தார் என்பதை விளக்கப் பல கதைகள் வழங்கி வந்துள்ளன.

நற்கோடைகள்

iii. மகம்மது கோரி

[கி. பி. 1184 – கி. பி. 1206]

மஹ்மூதுக்குப் பின் பட்டத்துக்கு வந்த கஜினி அரசர்கள் பலம் குறைந்தவர்கள். அவர்களுடைய காலத்தில் கஜினி ராஜ்யம் சீர்குலைந்து விட்டது. கஜினி அரசர்களில் பெஹ்ராம் என்றொருவன் இருந்தான். அவன் மிகக் கொடியவன். அவனுடைய அதிகாரத்திற் கடங்கிக் கோரில் ஆட்சி செய்துவந்த சிற்றரசன் தன்னுடைய மருமகனாக விருந்தும், பெஹ்ராம் அவனைக் கொன்றுவிட்டான். உடனே அச்சிற்றரசனுடைய தம்பி பெஹ்ராமின் மீது படையெடுத்துச் சென்று அவனைக் கஜினியினின்றுந் துரத்தி விட்டான். ஆனால், சீக்கிரத்திலேயே பெஹ்ராம் திரும்பி வந்து கோரி அரசனையும் அவன் மந்திரியையும் சிறைப்படுத்தினான். அவன் கோரி மன்னன் முகத்திற் கரியைப்பூசி, அவனை எருதின்மேல் அதன் பின்புறத்தை நோக்கின வண்ணமாக ஏற்றி, ஊர்வலம் வரச்செய்தான். பின்னர் அவன் அவனைக்கொன்று அவனுடைய மந்திரியைக் கழுவேற்றினான்.

பெஹ்ராம்

அதையறிந்த அலாவுதீன் என்னும் அவனுடைய சகோதரன் பெஹ்ராமை வென்றுத் துரத்திவிட்டுக் கஜினிப் பட்டணத்தையும் தீயினூற் சுட்டெரித்தான். அதனுல், அவனுக்கு ஜஹான்ஸாஸ் அதாவது ஜகத்தை எரித்தவன் என்னும் பெயர் உண்டாயிற்று. அதற்குப் பின்பும் பெஹ்ராமின் சந்ததியார்கள் கி. பி. 1184-ம் வருஷம் வரையில் லாகூரில் ஆட்சி செய்து வந்திருக்கிறுர்கள். அலாவுதீன் வம்சத்தினர்களும் கோரில் ஆண்டு வந்தார்கள். ஆனுல், மகம்மது கோரி என்னும் மறுபெயர் பூண்ட ஷஹாப் உத்தீன் மன்னர் அப்பொழுதிருந்த குஸ்ரூ வென்னும் கஜினியரசனைச் சிறையிலிட்டுவிட்டு அவனுடைய ராஜ்யத்தை வென்று தமது கோரி ராஜ்யத்திற் சேர்த்துக் கொண்டார். சில வருஷங்களுக்குள் கடைசிக் கஜினி அரசனும், அவன் மகனும் கொலையுண்டு போனுர்கள்.

கோரி

கஜினி மஹ்மூதைப் போலவே மகம்மது கோரியும் இந்தியாவின் மீது படையெடுத்து வந்து ஏராளமான பணத்தைச் சம்பாதிக்க வேண்டுமென்று எண்ணினுர். அஃதன்றியும், அவருக்கு இந்தியாவில் தமது அரசாட்சியை நிலையாக ஸ்தாபிக்க வேண்டுமென்னும் விருப்பமும் இருந்தது. அதனுல் அவர் இந்நாட்டின் மீது பதினேழுமுறை படையெடுத்து வந்தார். அப்பொழுது வட இந்தியாவில் ஆட்சி பெற்றிருந்த பல ராஜபுத்திரவரசர்களிலும் கன்னேசியரசரான ஜயசந்திரரும், டில்லி அஜ்மீர் அரசரான பிருதிவியும் தாம் முதன்மையானவர்கள். அவ்விரண்டு மன்னர்களும் ஒற்றுமையின்றித் தங்களுள் அடிக்கடி சண்டையிட்டு வந்தார்கள். பிருதிவி மன்னவர் ராணி ஸம்யுக்தையை ஸ்வயம்வர மண்டபத்தினின்றுந் தூக்கிச் சென்று மணந்து கொண்டதன் காரண

ஜயசந்திரரும் பிருதிவியும்

மாக அவள் தந்தையான ஜயசந்திரர் அவர் மீது அடங்காக் கோபங்கொண்டு அவரை எவ்விதத்திலாவது தண்டிக்க வேண்டுமெனக் கருதி, அவர் கோரியைத் தமக்குத் துணை வரும்படி வேண்டினார். இந்தியாவின் மீது படையெடுத்து வருவதற்குத் தக்க சமயம் எங்ஙனம் வாய்க்குமென்று ஆவலுடன் எதிர் பார்த்திருந்த மகம்மது கோரி உடனே ஜயசந்திரரது வேண்டுகோளுக்கு இணங்கினார்.

கி. பி. 1191-ல் **ஸ்தானேசுவரம்** என்னுமிடத்தில் கோரிக்கும் பிருதிவிராஜருக்கும் பெரும்போர் நிகழ்ந்தது.

ஸ்தானேசுவரத்தில் சண்டை

அதில் மகம்மதியர்கள் தோல்வியடைந்து போனார்கள். கோரி தமது போர்வீரர்களை அவமானப் படுத்தி, அவர்களுக்கு நற்புத்தி உண்டாகுமாறு செய்வதன் பொருட்டு, அவர்களின் கழுத்துக்களில் வாற்கோதுமைப் பைகளைக்கட்டி அவர்கள் குதிரைகளைப் போன்று தங்களுணவைப் பைகளினின்றுந் தின்று

தண்டனை

கொண்டே கஜினிப் பட்டணத்து வீதிகளைச் சுற்றி வரும்படி செய்தார். மறுபடியும் கி. பி. 1193-ல், அதே இடத்தில் இருதிறத்தாருக்கும் இரண்டாவது முறை சண்டை நடந்தது. அதில் மகம்மதியர்கள் ஜயமடைந்தார்கள். பிருதிவி ராஜர் சண்டையில் கொலையுண்டு போனார்.

கி. பி. 1194-ல் கோரி மகம்மது ஜயசந்திரர் மீதும் படையெடுத்து வந்து அவரையும் வென்று அவருடைய நாட்டையுங் கைப்பற்றிக்கொண்டு விட்டார். தன்வினை தன்னைச் சுட்டது. ஹிந்துஸ்தானத்தில் மாளவம் ஒழிந்த மற்றைய நாடுகள் கோரியின் வசமாயின. வெகு காலமாகக் கல்வியைப் பெருக்கிவந்த நாளந்தசர்வ கலாசாலையை மகம்மதியர்கள் அடியோடு அழித்து விட்டார்கள். கோரியரசர் தாம் ஜயித்த இந்திய நாட்டை ஆளுவதற்குத் தமது

சேனைத்தலைவர்களிலொருவரான குத்புதீன் ஐபேக் என்பவரைப் பிரதிநிதியாக ஏற்படுத்தினார்.

குத்புதீன்

பின்னர்க் கோரியரசர் கி. பி. 1206-ல் காக்கர் மீது படையெடுத்துச் சென்றபொழுது, அவர்கள் அவர் படுத்துறங்கும் சமயம் பார்த்து அவரைக் கொன்று விட்டார்கள். அவருக்குப் பிள்ளையில்லாததனால், அவருடைய ராஜ்யம் முற்றிலும் சிதைவுண்டு போயிற்று. ஆனாலும், அவருடைய இந்திய ராஜ்யத்தை யாண்டு வந்த குத்புதீன் சுவாதீனம் பெற்று டில்லியில் அரசரானார்.

iv. மாமலூக் ஸுல்தான்கள்

[கி. பி. 1206 - கி. பி. 1290]

குத்புதீன் ஐபேக் கி. பி. 1206-ல் லாகூரில் ஸிம்மாஸனம் ஏறி டில்லி சுல்தான் ஆனார். டில்லியில் ஆண்ட மகம்மதிய வரசர்களில் குத்புதீன் தான் முதல்வர். அவர் இளமையில் கோரி மகம்மதுவுக்கு அடிமையாக இருந்தவர். அதனால், அவருக்கும், அவர் வம்சத்திற் சேர்ந்து அவருக்குப் பின் பட்டத்துக்கு வந்த சிலருக்கும் அடிமை யரசர்கள் அல்லது மாமலூக் ஸுல்தான்கள் என்று பெயர் வந்தது.

குத்புதீன் தைரியமும், சாமர்த்தியமும் உள்ளவர். அவருடைய செங்கோலில் குடிகள் தீங்கின்றிச் சுகமாக வாழ்ந்திருந்தார்கள். அவருடைய காலத்தில் ஓநாயும் ஆட்டுக் குட்டியும் ஒரே துறையில் பயமின்றித் தண்ணீரருந்தின வென்று சொல்லப் பட்டிருப்பதினின்றும், நாம் அவர் தமது குடிகளை நடுவு நிலைமையுடன் பார்த்து வந்தார் என்று கொள்ளலாம். ஐபெக் உதார குணமுடையவர். அவருக்கு லக்பக்ஷ் அதாவது லக்ஷக் கணக்கிற் கொடுப்பவர் எனப் பெயர் வந்துள்ளது.

ஆட்சியின் பெருமை

கட்டிடங்கள்

அவர் டில்லியில் ஒரு பெரிய மசூதியைக் கட்டுவித்தார். அவர் அதை டில்லிக் கருகாமையி லிருந்த சுமார் இருபத்தேழு ஹிந்து, சமண கோயில்களை யிடித்து அந்தச் சாமான்களைக் கொண்டு கட்டுவித்ததாகச் சொல்லப்பட் டிருக்கிறது. அதன் அருகில் சுமார் 250 அடி உயர முள்ள ஒரு ஸ்தூபியையும் அவர் கட்டு வித்தார் என்று சிலர் எண்ணுகிறார்கள். மற்றுஞ் சிலர் அவர் அதை முழுவதும் கட்டவில்லை, அது அவரால் ஆரம்பிக்கப்பட்டு, அவருக்குப் பின் வந்த இல்டுட்மிஷ் என்பவரால் முடிக்கப்பட்டது என்கிறார்கள். இல்டுட்மிஷ் தான் அதைமுற்றிலும் கட்டினார் என்று எண்ணுவாரு முளர். இது ஒரு மகானின் ஞாபகார்த்தமாகக் கட்டப் பட்டது போலும். கி. பி. 1210-ல், போலோ விளையாடும் பொழுது, குத்புதீன் குதிரையினின்றுங் கீழே விழுந்து இறந்து போனார்.

இல்டுட்மிஷ்

அவருக்குப்பின் அவருடைய மருமகரான இல்டுட்மிஷ் அரசரானார். அவர் அழகிலும், அறிவிலும், குணத்திலும், சீலத்திலும் தம்மையொப்பார் இல்லையாம்படியும் தயை, ஈகை, இரக்கம் முதலான நற்குணங்களைப் பொருந்தியும், பெரியோரிடத்தும், கற்றோரிடத்தும் அன்பு பாராட்டியும் நடந்துவந்தார்.

தார்த்தாரியர்

அவருடைய காலத்தில் சிங்கிஸ்கான் என்னும் தார்த்தாரியன் இந்தியாவின்மீது படையெடுத்துவந்தான். ஆனால், சீக்கிரத்திலேயே அவன் மேனாடுகளின் புறமாகச் சென்றொழிந்தான். தார்த்தாரியர்கள் நாடோடிகள்.

இல்டுட்மிஷ் அஜ்மீரில் ஒரு பெரிய மசூதியைக் கட்டினார். உஜ்ஜயினியிலிருந்த பெரிய காளி கோயில் அவரால் இடித்துத் தகர்க்கப்பட்டது.

நாணயம்

இல்டுட்மிஷ் 175 தானியமணி எடையுள்ள டங்கா என்னும் வெள்ளி நாணயத்தை வெளியிட்டார். அதில் எழுத்துக்கள் அரபி பாஷையில் செதுக்கப்பட்டிருந்தன. என்றால், அந்த நாணயம் சற்றேறக்குறைய நமது ரூபாயையொத்திருக்க வேண்டும்.

இல்டுட்மிஷ் இறந்துபோன காலம் முதற் பத்து வருஷங்கள் வரையில், அதாவது கி. பி. 1236 முதல் கி. பி. 1246 வரையில், அவருடைய ராஜ்யத்திற்கு அவருடைய பிள்ளைகளினால் துன்பம் நேரிட்டது. அவருடைய மகனான ருக்னுத்தீன் பிரோஸ்ஷா என்பவன் ஏழு மாத காலந்தான்

ருத்னுத்தீன்

ஆட்சி செய்திருந்தான். அவன் ஆடிப் பாடி, உண்டு களித்துச் சிற்றின்பத்திலும் துன்மார்க்கருடைய சகவாசத்திலும் பணத்தையெல்லாஞ் செலவிட்டு வந்ததனால், குடிகள் அவனிடம் வெறுப்புற்று அவனையும் அவன் தாயையும் சிறைப் படுத்தினார்கள். அவனும் சீக்கிரத்திலேயே இறந்து போனான்.

ரஜியா

அவனுக்குப்பின் அவனுடைய சகோதரியான ஸுல்தான் ரஜியா வென்பவள் பட்டத்துக்கு வந்து மூன்றரை வருஷங்கள் வரையில் டில்லியில் ஆட்சி செய்து வந்தாள். அவளிடம் அரசர்களுக்கிருக்க வேண்டிய பல நற்குணங்களும் அமைந்திருந்தன. என்றாலும், துருக்கியர்கள் அவளைப் பெண்ணென வெறுத்தார்கள்.

பெண்ணரசு

அவள் டில்லியில் அரசு புரிந்த அதே காலத்தில் எகிப்து தேசத்தில் ஒருபெண்ணும், பார்ஸ் என்னும் நாட்டில் ஒரு பெண்ணும் ஆண்டு வந்தார்கள். இதுவுமொரு அதிசயமேயல்லவா?

கி. பி. 1240-ல், அவளுடைய பிரபுக்கள் அவளுக்கு விரோதமாகக் கிளம்பி அவளையும் அவள் புருஷனையும் கொன்று விட்டார்கள். அவளுக்குப் பின் பட்டத்துக்கு வந்த அவள் தம்பியும், மருமகனும் பயனற்றவர்கள். அவர்கள் காலத்தில் தார்த்தாரியர்கள் மறுபடியும் இந்தியாவின் மீது படையெடுத்து வந்தார்கள்.

நாஸர் உத்தீன்

அவர்களுக்குப் பின்பு இல்டுட்மிஷின் மூன்றாவது குமாரரான **நாஸர் உத்தீன்** என்பவர் டில்லியில் அரசரானார். அவர் மிகுந்த தெய்வபக்தியுள்ளவர். அவர் தமது காலத்தைப் படிப்பிலும், தெய்வ வணக்கத்திலுமே கழித்து வந்ததனால், ராஜ காரியங்களைக் கவனிப்பதற்குத் தமது மாமனாரான, **பால்பன்** என்னும் அடிமையை நியமித்துக் கொண்டார்.

நற்குணங்கள்

அவர் தமது செலவிற்கு வேண்டிய பணத்தைக் கொரானை யெழுதி விற்று அதினின்றுஞ் சம்பாதித்துக் கொண்டார். அவருடைய உணவை ராணியாரே வேலைக்காரருடைய உதவி யின்றிச் சமைத்து வந்தார். கி. பி. 1266-ல், அவர் மரிக்கவும் பால்பன் அரசரானார்.

கியாஸ் உத்தீன் பால்பன் வெகு சமர்த்தர்; சிறந்த போர்வீரர். அவர் நாஸர் உத்தீன் காலத்தில் சுமார் 20 வருஷ காலம் மந்திரியாக விருந்தார். அவர் அப்பொழுதைக் கப்பொழுது கலகஞ் செய்து வந்த ஹிந்துக்களை யடக்கியும், துருக்கியப் பிரபுக்கள் தங்களுள் செய்து வந்த சண்டைகளைத் தமது பராக்கிரமத்தினால் நிறுத்தியும் வட மேற்கு மாகாணத்தைப் பலப்படுத்தி மங்கோலியர்களை வர வொட்டாமற் றடுத்தும், நாட்டிற்கு அமைதியை உண்டுபண்ணினார். ஆயினும், அவர் கலகஞ்செய்தவர்களைக் கொஞ்சமும் இரக்கமின்றி வதைத்துக் கொன்றார். அவர்

ஆங்காங்கு ஒற்றர்களை நியமித்து அவர்கள் அவ்வவ்விடங்களில் நடைபெறும் யாவற்றையும் தமக்கு அறிவிக்கும்படி ஏற்பாடு செய்திருந்தார். அவர் ஹிந்துக்களைத் தமது ராஜாங்கத்தில் எவ்வித உத்தியோகத்திற்கும் நியமித்துக் கொள்ளவில்லை.

வெற்றிகள்

துக்ரில் என்னும் வங்காள கவர்னர் பால்பனுக்கு விரோதமாகக் கிளம்பி சுவாதீனம் பெற்றுவிட வெண்ணினான். ஆனால், அவனுடைய எண்ணம் நிறைவேறவில்லை. பால்பன் தாமே நேரில் வங்காளத்திற்குச் சென்று கலகத்தை யடக்கித் துக்ரிலைக் கொன்று வெற்றியுடன் திரும்பினார். அவர் அப்பொழுது தமது மகனை வங்காள கவர்னராக நியமித்தார். அவனும், அவனுடைய சந்ததியாரும் சுமார் ஐம்பது வருஷம் வரையில் வங்காளத்தில் ஆட்சி செய்து வந்தார்கள்.

பால்பன் மரணம்

கியாஸ் உத்தீனின் மூத்த மகனான மகம்மது வெகு சமர்த்தன். கி. பி. 1285-ல், அவன் மங்கோலியரோடு சண்டை செய்து வருகையில் கொலையுண்டு போனான். அதைக் கேள்வியுற்ற பால்பன் சோகத்தில் மூழ்கி வாய் விட்டலறினார். புத்ர சோகத்தினால் அவர் தேகம் மெலிந்தும், மனம் நொந்தும், நெஞ்சம் உருகியும் இரண்டு வருஷங்களுக்கெல்லாம் இறந்து போனார். அவர் இறந்த மூன்று வருஷங்களுக்குள் அடிமை யரசர்கள் டில்லி ராஜ்யத்தை இழந்து விட்டார்கள்.

கலகங்கள்

கியாஸ் உத்தீனின் பேரனான கைகுபாத் என்பவன் சிற்றின்பங்களில் காலத்தைக் கழித்ததனால், அவனுடைய மந்திரி தனது கொடுமையினாலும், பேராசையினாலும் நாட்டின் அமைதியை முழுவதும் போக்கி விட்டான். அதனால்,

நாலா பக்கங்களிலும் கலகங்கள் ஏற்பட்டன. அப்பொழுது கில்ஜி வம்சத்தைச்சேர்ந்த ஆப்கானியர் ஜயமடைந்து ராஜ்யத்தைக் கைப்பற்றிக்கொண்டு விட்டார்கள்.

V. கில்ஜி வம்சத்தரசர்கள்

[கி. பி. 1290 - கி. பி. 1320]

கில்ஜி வம்சத்தின் முதலரசர் ஜலால் உத்தீன் என்பவர். அவர் வயது சென்றவர்; பலஹீனர்; மிகுந்த தயாள குணமுடையவர். அவர் கொலையாளிகளையும், குற்றவாளிகளையும், ராஜத்ரோஹிகளையும் ஒருங்கே தண்டியாமற் பரிவுடன் நடத்தி வந்ததனால், நாட்டில் அமைதி குறைந்து வரத்தலைப்பட்டது. அல்லாமலும், அவர் டம்பத்தை நீத்து விநயத்துடன் நடந்து வந்ததனாலும், சாதாரண ஜனங்களுக்கு அவரிடம் அசட்டை உண்டாயிற்று. அவர் ஐந்து வருஷ காலந்தான் ஆட்சி செய்தார். கி.பி. 1296-ல், அவருடைய மருமகரான **அல்லாஉத்தீன்** என்பவர் அவரைக் கொன்றுவிட்டுத் தாம் ஸிம்மாஸனம் ஏறினர்.

ஜலால் உத்தீன்

அல்லாவுத்தீன் தமது சிற்றப்பனது ஆட்சியிலேயே விந்திய பருவதத்தைக் கடந்து மஹாராஷ்டிரத்தின் மீது படையெடுத்துவந்து தேவகிரியை எதிர்த்து ஆங்கு ஆண்டு வந்த அரசனைச் சிறைப்படுத்தினர். தென்னிந்தியாவின் மீது முதன் முதல் படையெடுத்துவந்த மகம்மதிய வரசர் அல்லாவுத்தீன் தான். அல்லாவுத்தீன் தமது சிற்றப்பனைக் கொன்று பட்டத்துக்கு வந்ததுமன்றி, அவருடைய பிள்ளைகளைச் சிறையிலிட்டு அவர்களுடைய கண்களையும் குருடாக்கி விட்டார். தமது கொடுமைக்காகக் குடிகள் தம்மைப் பழிக்காமலிருத்தற் பொருட்டு, அவர் அவர்களுக்கு அளவற்ற பொன்னை வழங்கினர். ஆனல், சீக்கிரத்திலேயே அவர் தமக்குக் குடிகளினலேற்படக் கூடிய

தேவகிரி

துரோகமும், கொடுமையும்

தீங்கு யாதொன்றுமில்லை என்று கண்டு கொண்டு ஜலால் உத்தீனுக்குத் துரோகஞ் செய்து தமது பணத்தைப் பெற்றுத் தம் மிடம் அன்பு பாராட்டிய பிரபுக்களைச் சிறையி லடைப்பித்து அவர்களுடைய சொத்துக்களையும் தாம் கவர்ந்து கொண்டார்.


அல்லாவுத்தீன் சிறந்த பராக்கிரமசாலி; ஒப்பற்ற போர்வீரர். அவருக்கு எழுதப் படிக்கத் தெரியாது. அவர் கி. பி. 1298-ல் கூர்ஜர நாட்டின் மீது படையெடுத்துச் சென்று, அதைக் கைப்பற்றிக் கொண்டார். அன்றியும் அவர் அப்பொழுது இந்தியாவின் மீது பல முறை படை யெடுத்துவந்த தார்த்தாரியரை வென்று துரத்தினர். தார்த்தாரியர் என்னும் அந்த மங்கோலிய நாடோடிகள் எல்லை மாகாண ங்களில் வந்து வசித்ததனுலும், இந்தியப் படையெழுச்சி யின் பொழுதெல்லாம் அவர்களிற் சிலர் இங்கேயே தங்கிவிட்டதனுலும், நாளடை வில் அவர்கள் இந்நாட்டில் அதிகமாகக் காணப்பட்டார்கள். ஆனல், அவர்கள் மகம்மதியர்களாகிப் புது மகம்மதியர்கள் என்னும் பெயர் வழங்கப் பெற்றார்கள்.

தார்த்தாரியர்

புது மகம் மதியர்கள்

ஒருகால் டில்லியில் இருந்த மங்கோலியர்கள் (அவர் களுக்கு முகலாயர் என்னும் பெயரும் வழங்கி வந்தது) கலகஞ் செய்தார்களென்று அல்லாவுத்தீன் அவர்களை முற் றும் கொன்றுவிடும்படி கட்டளையிட்டார். அவ்வாறே அவர்களுடைய பெண்களும், குழந்தை களுங்கூடக் கொலையுண்டு போனர்கள். 'இதுவரையில் இந்நாட்டில் புருஷர்களு டைய துர்நடைக்காக ஸ்திரீகளையும், சிசுக்களையும் கொல் வது என்னும் தீயவழக்கங் கிடையாது' என்றொரு சரித்

கொடுமை


FIRST
MUHAMMADAN
EMPIRE
1312–88
Peshawar
KASHMIR
PUNJAB
Lahore
Multan
uch
Delhi
RAJPUTANA
MARWAR
Kanauj
OUDH
NEPAL
BHUTAN
BUNDELKAND
Gaur
ASSAM
Sonargaon
Sindh
Patan
MEWAR
MALWA
Ujjain
Dhar
CUTCH
GUJARAT
Cambay
Broach
KHANDESH
Mahanadi R.
GANGAS
CUTTACK
BIHAR
BENGAL
ORISSA
Surat
Devagiri
BERAR
Warangal
BAHMINIS
KAKATIYAS
Rajamahendri
Vijayanagar
VIJAYANAGAR
Madura
Tanjore

திரக்காரர் எழுதியுள்ளார். முதன் முதல் அக்கொடுமை யைச்செய்த அல்லாவுத்தீன் மீது குடிகளுக்கு வெறுப்பு உண்டாயிற்று.

கர்வம்

அல்லாஉத்தீன் செல்வத்திலும், அதிகாரத்திலும் விருத்தி யடைந்து வந்ததனால், கர்வங் கொண்டு தாம் அலெக்ஸாண்டரை யொத்து ஒரு பெரிய சாம்ராஜ்யத்தை உண்டுபண்ண வெண்ணினார். அவர் தம்முடைய நாணயங்களில் தமது பெயரை 'இரண்டாவது அலெக்ஸாண்டர்' என்று செதுக்கி வைததார்.

சித்தூர்

கி. பி. 1303-ல், அல்லாஉத்தீன் சித்தூரை முற்றுகை செய்தார். அப்பொழுது அவர் தந்திரத்தினால் பீம் சிங்கைச் சிறைப்படுத்தினார். பீம்ஸிங்கின் மனைவியான பத்மினி உபாயத்தினால் தனது கணவனை மீட்டுக் கொண்டு வந்து விட்டாள். பின்னர் அல்லாஉத்தீனுக்கும் ராஜபுத்திரர் களுக்கும் கடும் போர் நிகழ்ந்தது. அதில் பீம்ஸிங்க் கொலையுண்டு போனதனால், பத்மினியும் மற்ற அரசகுலப் பெண்களும் தீக்குளித்து விட்டார்கள். அதனுடன் சித்தூரும் அழிந்து போயிற்று.

தக்ஷிணப் படையெழுச்சி

பின்னர் அல்லாஉத்தீன் தமது சேனைத் தலைவனான **மாலிகாபூர்** என்பவனைப் பெருஞ் சேனையுடன் தக்ஷிணத்தை ஜயித்து வரும்படி அனுப்பினார். மாலிகாபூர் **வாரங்கல்** நாட்டையும், மைசூர் ராஜ்யத்தின் முக்கிய பட்டணமான துவாரசமுத்திரத்தையும் கைப்பற்றிக் கொண்டு ராமேசுவரம் வரையில் படை யெடுத்துச் சென்று எதிர்ப்பட்ட நாடுகளைக் கொள்ளை கொண்டு ஏராளமான திரவியத்துடன் டில்லிக்குத் திரும்பினான். அல்லாமலும், அவன் கூர்ஜர மன்னனுடைய மிகவும்

அழகு வாய்ந்த மகளைச் சிறைப்படுத்திக் கொண்டு வந்து அல்லாஉத்தீன் மகனுக்கு மணஞ் செய்வித்தான்.

பிரதாபருத்ரர்

மாலிகாபூர் வாரங்கல் நாட்டின் மீது படை யெடுத்துச் சென்ற பொழுது, அந்நாடு இரண்டாவது பிரதாப ருத்ரரால் ஆட்சி செய்யப்பட்டிருந்தது. அவர் சாதவாகன வம்சத்தினர். முதலாவது பிரதாபருத்ரர் என்பவர் வாரங்கல் நாட்டின் முதலரசர். அவர் கி. பி. 1187 முதல் 1196 வரையில் அந் நாட்டை யாண்டு வந்தார்.

ருத்ரம்மா

வாரங்கலில் பிரதாப ருத்ரருடைய வம்சத்தைச் சேர்ந்த ருத்ரம்மா என்றொரு அரசியும் ராஜ்யபாரம் செய்திருக்கிறாள். அவளுடைய காலத்தில் வாரங்கல் நாட்டுக் குடிகள் சௌக்கியமாகவும், சந்தோஷமாகவும் இருந்தார்களென்று சொல்லப் பட்டிருக்கிறது. மகம்மது துக்ளக்கின் படையெழுச்சிக்குப் பின்பு வாரங்கல் தனது சிறப்பை முழுவதும் இழந்து விட்டது.

கட்டிடங்கள்

அல்லாஉத்தீன் கட்டிடப் பிரியர். அவர் டில்லிக் கருகாமையில் ஒரு புதிய நகரை உண்டு பண்ணினார். அன்றியும், அவர் குத்பிமினாரைப் போன்றதும், ஆனால் அதைவிட மிகப் பெரியதுமான, ஒரு ஸ்தூபியைக் கட்டவேண்டுமெனத் திர்மானித்துத் தொடங்கிய வேலை முடிவுபெறாமலே நின்று விட்டது.

கொடிய சட்ட திட்டங்கள்

அல்லாஉத்தீனுடைய குடிகள் அவருக்குப் பயந்து நடுங்கிக் காலங் கழித்துவந்தார்கள். அவர் மிகவும் கொடியவர். அவர் தமது பிரபுக்கள் மதுபானஞ் செய்யக்கூடாதென்றும், அவர்கள் தம் உத்தரவில்லாமல் தங்களுடைய பெண் பிள்ளைகளுக்கு மணஞ்செய்விக்கக் கூடாதென்றும், அவர்கள் ஒருவர் வீட்டிற் கொரு

வர் போகக் கூடாதென்றும், அவர்கள் ஒருவருக் கொரு வர் விருந்து செய்துஉபசரிக்கக்கூடாதென்றும், அவர்கள் சபைகூடிப் பேசக்கூடாதென்றும் திட்டஞ் செய்திருந் தார். அவர் காலத்தில் ஹிந்துக்கள் குதிரையேறிச் சவாரி செய்யலாகா தென்றும், கத்தி முதலிய ஆயுதங்களை யெடுத்துச் செல்லலாகாதென்றும் நிபந்தனைகள் செய்யப் பட்டிருந்தன. அல்லாமலும், அவர் ஹிந்துக்கள் மிக்க தரித்திரர்களாகி ஆஸ்தி என்பது கொஞ்சமும் இல்லாது இருந்தாலன்றித் தமது அதிகாரத்திற் கடங்கி நடக்க மாட்டார்கள் எனக்கருதி அவர்களுடைய சொத்துக்களை முழுவதும் அபகரித்துக் கொண்டு விட்டார்.

அவர் தமது அதிகாரத்தை மீறி நடந்தவர்களைக் கடுமையாய்த் தண்டித்தார். அதனால், நாட்டுக் குடிகள் பயந்து, நடுங்கி உயிர் வாழ்ந்து வந்தார்கள். அவரிடம் ஜனங்களுக்குக் கொஞ்சமும் அன்பு கிடையாது. நாட்டி லுள்ள எல்லாப் பொருள்களுக்கும் விலை கள் ஏற்படுத்தப் பட்டு அவற்றின்படியே விற்கப்பட்டும் வாங்கப்பட்டும் வந்தன. வர்த்தகர்களும், குடியானவர்களும் குறி த்த விலைப்படியே சரக்குக்களை விற்றும் வாங்கியும் வருகின் றார்களா வென்று கவனிப்பதற்குப் பல உத்தியோகஸ்தர் கள் நியமிக்கப்பட் டிருந்தார்கள். இவ்வாறாகக் குடிகள் தமது சகல சுதந்திரங்களையு மிழந்து, அடிமைகளை யொத்துக் காலங் கழித்து வந்தார்கள். ஆனால், அவரு டைய அந்திய காலத்தில் நாட்டிற் கலகங்கள் பெருகி அமைதி குன்றி விட்டது. அன்றியும், அப்பொழுது பல சிற்றரசர்கள் சுவாதீனம் பெற்று விட்டார்கள். கி. பி. 1316-ல் அல்லாஉத்தீன் இறந்து போனார்.

குடிகளின் துன்பம்

அவருக்குப் பின் அவர் மகன் முபாரக் என்பவன் பட்டத்துக்கு வந்தான். அவன் சோம்பேறி; மிகக்

மூபாரக்

கொடியவன்; சிற்றின்பப் பிரியன். அவனுக்கு ராஜ்யத்தை யாளுந் திறமை யில்லை. உண்ண உணவும், உடுக்க வஸ்திரமுமில்லாமல் வரியின் கொடுமையினாலும், சட்டதிட்டங்களின் உபத்திரவத்தினாலும் பரிதவித்து வந்த ஹிந்துக்கள் அவன் காலத்தில் கொஞ்சம் தீமையின்றி வாழ நேர்ந்தது.

துர்நடத்தை

மூபாரக் தனது கௌரவத்தையும், மானத்தையும் கொஞ்சமும் மதியாமல் அசப்பியமான பேச்சுக்களைப் பேசியும், துன்மார்க்கரது நட்பிற் பழகியும், தெய்வத்தை மறந்தும், ரம்ஜான் முதலான வ்ரதங்களை நீத்தும், மனம் போன போக்கில் நடந்தும் காலத்தைக் கழித்தான். அன்றியும், அவன் செய்த கொடுமைகளைச் சொல்லவும் ஒண்ணாது.

கொடுமைகள்

தேவகிரி யரசரான ஹரிபால தேவர் கலகஞ் செய்யவும், மூபாரக் அவரை உயிரோடு தோலையுரித்து விடும்படி கட்டளை யிட்டான். அவன் தனக்கு விரோதமாய்க் கிளம்பின தனது தாயாதி யொருவனையும், நிரபராதிகளான அவனுடைய 29 சகோதரர்களையும் கொன்று விட்டான். அவன் தன்னுடைய சகோதரர்கள் மூவரைக் கண்களைக் குத்திக் கொன்றான்; குற்றமொன்றுஞ் செய்யாத கூர்ஜர வரசனைச் சிரச்சேதஞ் செய்தான்; தேவகிரி யரசன் கலகஞ் செய்தானெனக் கேள்வியுற்று, அவனுடைய காதுகளையும், மூக்கையும் அரிந்து தள்ளினான். இத் தகைய தீச்செயல்களைச் செய்வதில் அவனுக்கு உற்ற துணையாகவிருந்த குஸ்ருகான் என்னும் இழி குலத்தினன் கி. பி. 1321-ல் அவ்வரசனைக் கொன்று விட்டுத் தான் ஸிம்மாஸனம் ஏறினான்.

குஸ்ருகானின் தீய செயல்களைச் சொல்லவும் நாவெழாது. அவன் முபாரக்கின் உற்றாருறவினர்களுக்கும், மனைவி மக்களுக்கும் இழைத்த தீங்கிற்கு எல்லை யில்லை. அவனை மகம்மதியர்களும், ஹிந்துக்களும் ஒருங்கே

குஸ்ருகான் வெறுத்தார்கள்; அவனுக்கு விரோதமாகக் கிளம்பிக் கலகஞ் செய்தார்கள். அவர்கள் அப்பொழுது பஞ்சாப் கவர்னராக விருந்த கியாஸ் உத்தீன் துக்ளக் என்பவரைத் தங்களுக்குத் துணையாகக் கொண்டு குஸ்ருகானோடு போர் புரிந்து அவனைக் கொன்று விட்டார்கள். பின்பு, துக்ளக் ஜனங்களின் வேண்டுகோளின்படித் தாமே டில்லியில் அரசரானார்.

VI. துக்ளக் வம்சம்

[கி. பி. 1321 கி. பி. 1414]

கியாஸ் உத்தீன் துக்ளக் நான்கு வருஷ காலந்தான் டில்லியில் அரசு புரிந்தார். அவர் குடிகள் செலுத்தி வந்த கடுமையான வரிகளைக்குறைத்து வியவசாயிகளுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ததனால், நாடு முன்போல் செழித்து

கியாஸ் உத்தீன் துக்ளக் ஜனங்களும் சந்தோஷமாக வாழ்ந்து வரலானார்கள். அவர் வங்காளத்தையும், தக்ஷிணத்தின் பெரும் பாகத்தையும் தமது வசமாக்கிக் கொண்டார். அவர் டில்லிக் கருகில் துக்ளகபாத் என்னும் ஒரு நகரைக் கட்டுவித்தார். ஒரு வீடு இடிந்து மேலே விழுந்து அவர் மரண மடைந்தார்.

அவருக்குப் பின் அவர் மைந்தர் ஜுனா மகம்மது துக்ளக் என்பவர் பட்டத்துக்கு வந்தார். அவர் 26 வருஷம் ராஜ்யபாரம் நடத்தினார். அவர் சிறந்த புத்திமான்; கல்விக்கடல்; பெர்ஸியன், அரபி ஆகிய இரண்டு பாஷைகளிலும் தேர்ச்சி பெற்றவர்; கவி பாடுந் திறமை வாய்ந்

தவர்; கணிதம், வான சாஸ்திரம், தர்க்கம், வேதாந்தம் முதலிய கலைகளை நன்றாகக் கற்றவர்; பேசுந் திறமுடையவர்; மிகுந்த தெய்வ பக்தி யுள்ளவர். இவற்றை யன்றி, அவர் விடா முயற்சியும் ஆச்சரியமான ஞாபக சக்தியும் உடையவர். அவர் தமது சமஸ்தானத்தில் அநேக வித்வான்களை வைத்து ஆதரித்தும், வைத்திய சாலைகளையும், அன்ன சத்திரங்களையும் ஏற்படுத்தியும் வந்தார். இப்ன்படுடா வென்பவர் அந்த வித்வான்களி லொருவர். இவ்வாறான பலநற்குணங்களையும் பொருந்தி யிருந்த அவருக்குப் பயித்தியக்காரத் துக்ளக் எனப் பெயர் வந்ததற்குக் காரணம் அவருடைய மூர்க்கமும், பிடிவாதமுமே யாகும். அல்லாமலும், அவர் சாத்தியமான காரியம் எது வென்றும் அசாத்தியமான காரியம் எது வென்றும் கண்டறிந்து நடப்பதில்லை. முடியாத காரியமாக விருந்தாலும் மனத்தில் நினைத்து விட்ட வொன்றை எப்படியாயினுஞ் செய்து முடித்தே தீர வேண்டுமென்பது அவருடைய பிடிவாதம். அதனால், அவர் பல கொடுமையான காரியங்களையும் செய்ய நேரிட்டது. எவ்வித நற்காரியமாக விருந்தாலும், அதைச் சரியான காலத்தில், சந்தர்ப்பங்களையும் சௌகரியங்களையும் நோக்கியன்றோ செய்ய வேண்டும்? அவர் இவ்வுண்மையை ஒரு பொழுதும் கவனித்து நடந்து வரவில்லை.

மகம்மது துக்ளக் குணம்

அவர் தமது ராஜ்யத்தைத் தென்னிந்தியாவில் கிருஷ்ணா நதி தீரம் வரையில் பரப்பினார். அவர் தாம் பெருக்கின பெரிய ராஜ்யத்திற்குத் தலைநகர் மத்தியிலிருக்க வேண்டு மென்று எண்ணங் கொண்டு, டில்லியை விட்டுத் தேவகிரியைத் தமக்கு ராஜதானியாக்கிக் கொள்ள ஏற்பாடு செய்தார். அவர் டில்லியிலிருந்த ஜனங்

தலைநகரம் மாறினது

களை யெல்லாம் தங்கள் பொருள்களையும், ஆடு மாடுகளை யும், தேவகிரிக்குக் கொண்டு சென்று அங்குக் குடியேற வேண்டும் என்று உத்தரவு செய்தார். டில்லியி லிருந்து தேவகிரி நாற்பது நாள் பிரயாண மிருக்கும். ஐயோ! பாவம்! அந்த ஏழை ஜனங்கள் பசியினாலும், தாகத் தினாலும், களைப்பினாலும், பற்பல நோய்களினாலும் வருந்தி நடுவழியிலேயே ஆயிரக் கணக்கில் மடிந்து போனார்கள். சிலரே தேவகிரியை அடைந்தார்கள். அரசருடைய வேலை யாட்கள் ஒரு குருடனைத் தேவகிரிக்கு இழுத்துச் செல் லும்பொழுது அவனுடைய அங்கங்கள் வழியில் அற்று விழவும், ஒரு கால் மட்டில் அந்நகர் வந்து சேர்ந்தது. தேவகிரியில் அவர்களுக்கு உணவுப் பொருள்கள் கிடைக் காமையினால், அவர்கள் பசியினால் வருந்திக் கஷ்டப்பட் டார்கள். அதனைக் கண்ட துக்ளக் அவர்களைத் திரும்ப வும் டில்லிக்குப் போய் விடும்படி உத்தரவு செய்தார்.

அயல்நாட்டுப் படையெழுச்சி

மகம்மது துக்ளக்குக்குப் பாரஸிகம், நேபாளம் சீனா முதலிய தேசங்களைப் பிடிக்க வேண்டுமென்று எண்ணம் உண்டாயிற்று. அதன் பொருட்டு அவர் பெரும் படைகளைத் திரட் டியும், அதற்காக மிகவும் ஏராளமான பணத்தைச் செலவிட்டும் வந்தார். இமய மலையைக் கடந்து சென்று சீன தேசத் தைப் பிடிக்கும் வண்ணம் அனுப்பப்பட்ட அந்தப்பெரும் படைகள் குளிருக்கும், பனிக்கும் ஆற்றாமல் அடியோடு மடிந் தொழிந்தன.

கல்வியின் பொருட்டும், தமது ராஜ்யத்தின் மீது படையெடுத்து வந்த மொகலாயர்களுக்கு லஞ்சம் கொடுக் கும் பொருட்டும் அவர் அளவில்லாதபடி செல்வத்தைச் செலவு செய்ததனால், பொக்கிஷத்திற் பணமில்லாமற் போயிற்று. அப்பொழுது அவர் வரிகளை யதிகப்படுத்தி

யும், செம்பு நாணயங்களை வெள்ளி நாணயங்களுக்குச் சமமாக உபயோகிக்க வேண்டுமென்று குடிகளுக்கு உத்தரவிட்டும் ஜனங்களைத் துன்பப் படுத்தினார். அதனால் வியாபாரமும், வியவசாயமும் அழிய வாரம்பித்தன. குடிகளிற் பலர் நாட்டைக் கைவிட்டுக் காடுகளிற் புகுந்து வசிக்கத் தொடங்கினார்கள். அவர் அதனைக் கண்டு கடுஞ்சினங் கொண்டு தமது சேனையை யனுப்பி யந்த ஏழைக் குடிகளிடங் கொஞ்சமும் இரக்க மில்லாமல் விலங்குகளைக் கொல்வது போல் அவர்களனைவரையும் அப்படியே வேட்டையாடிக் கொன்றார். அதனால் நாடெங்கும் குழப்பமும், கலகங்களும் அதிகமாயின. அந்தச் சமயத்தில் வங்காளமும், தக்ஷிணமும் சுவாதீனம் பெற்றுவிட்டன; மாளவமும் கூர்ஜரமும் கலகஞ் செய்தன. அப்பொழுதுதான் தக்ஷிணத்தில் பஹ்மனி, விஜயநகர ராஜ்யங்கள் ஏற்பட்டன. கி.பி. 1351-ல் துக்ளக் கூர்ஜரத்தி லுண்டான கலகத்தை யடக்க முயன்று வருகையில், அதிகமான மீனுணவை உண்டதனால், தாத்தா என்னும் இடத்தில் இறந்து போனார்.

நாணயங்கள்

மனித வேட்டை

மகம்மது துக்ளக்குக்குப் பின்பு அவருடைய தாயாதியான பிரோஜ்ஷா பட்டத்துக்கு வந்தார். அவர் 40 வருஷகாலம் அரசு புரிந்தார். அவர் வங்காளத்தையும், தக்ஷிணத்தையும் ஜயித்துத் தமது ராஜ்யத்தைப் பெருக்க வேண்டுமென்றெண்ணி அதன் பொருட்டு மிகவும் பாடுபட்டு முயன்றாராலும், அந்த எண்ணம் ஈடேறவில்லை.

முயற்சி வீணானது

பிரோஜ்ஷா தமது குடிகளுக்குப் பல நன்மைகளைச் செய்தார். அவர் காலத்தில் ஜனங்கள் சந்தோஷமாகவும்,

சௌக்கியமாகவும் இருந்து வந்தார்கள்.

பிரோஜ்ஷாவின் நற்காரியங்கள்

அவர் அநேக சத்திரங்களையும், மசூதிகளையும், பள்ளிவாசல்களையும் கட்டி வைத்தார்; பாய்ச்சலுக்கு அநுகூலமாகப் பல வாய்க்கால்களை வெட்டி வைத்தார். பானிப்பட்டு முதல் பிகானீர் வரையிலுமுள்ள யமுனை வாய்க்கால் அவரால் தான் வெட்டப்பட்டது. இவற்றையன்றி, அவர் சில புதிய பட்டணங்களையும் உண்டாக்கினர்.

அவர் குற்றவாளிகளுக்குக் குரூரமான தண்டனைகளை விதிக்கக்கூடா தென்று நியாயாதிபதிகளுக்கு உத்தரவிட்டார். அவர் வியாபாரிகள் செலுத்திவந்த வரிகளையும், புறம்போக்கு நிலங்களில் ஆடு மாடுகளை மேய்ப்பதற்காக ஜனங்கள் செலுத்தி வந்த வரிகளையும் தள்ளி விட்டார். நாஸ்திகர்களையும், லஞ்சம் வாங்குபவர்களையும் அவர் தமது ராஜ்யத்தை விட்டுத் துரத்தி விட்டார். பிரோஜ்ஷா பல வைத்தியசாலைகளையும், பள்ளிக்கூடங்களையும் ஸ்தாபித்து அடிமைகள் கூடக் கல்வி கற்பதற்கான ஏற்பாடுகளை அமைத்து வைத்தார்.

பிரோஜ்ஷாவின் நற்காரியங்கள்

அவர் வயது முதிர்ந்த போர்வீரர்களுக்கும், யுத்தத்தில் காயமடைந்து கை கால் முதலிய உறுப்புக்களை யிழந்த சிப்பாய்களுக்கும் ஆயுள் பரியந்தம் உபகாரச் சம்பளம் கொடுத்து உதவினர். அவருடைய ஆட்சியின் பெருமையும், குணத்தின் நேர்மையும் அவரே எழுதி வைத்துள்ள விவரங்களினின்றும் நன்கு புலப்படுகின்றன. "எனக்கு முன் ராஜ்யபாரம் நடத்தி வந்த அரசர்களிற் சிலர் அற்பமான காரணங்களை முன்னிட்டு மகம்மதியர்களைக் கொன்றும், சிறிய குற்றங்களைச் செய்ததற்காக ஜனங்களைக் கை கால்களை வெட்டியும், கண்களைக் குத்தியும், மூக்கையும் காதுகளையும் அறுத்தும், எலும்புகளை நொறுக்கியும், உயிருடன்

தோலை உரித்தும், சிலுவையி லடித்தும், கண்டங் கண்டமாக வெட்டியும் வந்துள் ளார்கள். இக் கொடிய வழக்கங்களை நிறுத்தி விடும்படி கடவுள் எனக்கு நற் புத்தியைப் புகட்டி யிருக்கிருர். எனக்கு முன் டில்லியில் ஆட்சி செய்த அரசர்களுக்குக் கடவுள் அருள் செய்யுமாறு அவர்களின் பொருட்டுத் தெய்வ வணக்கஞ் செய்யும்படி நான் தீர்மானித்திருக்கிறேன்.

அவர் சாஸனம்

மேய்கால் வரியையும், வியாபாரிகள் செலுத்தி வந்த வரிகளையும் நான் தள்ளிவிட்டேன். அவற்றை வசூல் செய்வதில் எனது உத்தியோகஸ்தர்கள் குடிகளுக்குப் பலவித தீங்குகளைச் செய்வதனுல், குடிகள் வருந்துவதை விட நான் வருமானத்தை யிழப்பதே மேன்மையானது என்பது என் அபிப்பிராயம். நாஸ்திகர்களையும், லஞ்சம் வாங்குபவர்களையும், குடிகளைக் கெட்ட வழிகளிற் பழக் கும் ஏற்பாடுகளை யமைத்து வருபவர்களையும் நான் நாட் டை விட்டுத் துரத்திவிடுவேன். குடிகளுக்கு வணக்கத் தின் சிறப்பை உணர்த்துமாறு நான் பட்டாடைகளையும் விலையுயர்ந்த ஆபரணங்களையும் நீத்து விட்டேன். பொதுக் கட்டிடங்களின் பொருட்டு நான் எனது வருமானத்தின் பெரும் பகுதியைச் செலவிட்டு வந்தேன். நான் மகம்மது துக்ளக்கினுல் பலவிதமான துன்பங்களை யனுபவித்தவர் களின் உற்ருர், உறவினர்களை வரவழைத்து அவர்களுக்கு உபகாரச் சம்பளங்கள் கொடுத்து, அவர்களைப் பெரியவர் களின் முன்னிலையில் அவர்கள் அவர் செய்த தீங்குகளை யெல்லாம் மறந்து விட்டதன்றி அவரையும் மன்னித்து விட் டதற் கடையாளமாக அவர்களுடைய கையொப்பங்களை வாங்கி அவற்றை அவருடைய மசூதியில் புதைத்து வைத்தேன். நான் வித்வான்களுக்கும், சண்டையிற்

மன்னிப்பு

காயப்பட்டுத் திரும்பி வந்த யுத்த வீரர்களுக்கும், வயது முதிர்ந்த சிப்பாய்களுக்கும் அவர்களுடைய ஆயுள் பரியந்தம் உபகாரச் சம்பளம் கொடுக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறேன். சிலர் எனக்கு விஷத்தைக் கொடுத்துக் கொல்லுமாறு செய்த முயற்சிகள் வீணாயின," என்று அவர் எழுதியிருக்கிறார்.

பிரோஜ்ஷா இவ்வாறாகக் குடிகளுக்குப் பல நன்மைகளைச் செய்து, அவர்களுடைய அன்பையும், நன்றியறிவையும் அவற்றிற்குக் கைம்மாறாகப் பெற்றுக் கி. பி. 1388-ல் காலகதியை யடைந்தார். இறக்கும் பொழுது அவருக்கு வயது தொண்ணூறு.

பிரோஜ்ஷாவுக்குப் பின் பட்டத்துக்கு வந்த துக்ளக் அரசர்கள் கொஞ்சமும் பலமில்லாதவர்கள். அவர்கள் காலத்தில் **மாளவம், கூர்ஜரம், காண்டேஷ், ஜான்பூர், வங்காளம்** முதலான வட இந்தியாவின் பெரும் பாகமும் சுவாதீனத்தைப் பெற்றுத் தனித்தனி மகம்மதிய ராஜ்யங்கள் ஆயின.

பலமகம்மதிய ராஜ்யங்கள்

தக்ஷிணத்தில் ஒரு கொடிய பஞ்சம் உண்டாகி, அதனால் ஆயிரக் கணக்கான ஜனங்கள் மாண்டுபோனார்கள். அப்படிப்பட்ட கொடிய சந்தர்ப்பத்தில் கி. பி. 1398-ல் ஸாமர்கண்ட் அரசனை **தைமூர்** என்னும் மங்கோலிய தார்த்தாரியன் இந்தியாவின்மீது படையெடுத்து வந்தான்.

தைமூர்

தைமூர் உலகத்தில் கொலையையும் கொள்ளையையுமே தனக்குப் பெருந் தொழிலாகக் கொண்டொழுகினான். பஞ்சாபிலும் டில்லியிலும் அவன் கொன்ற ஜனங்களின் கணக்கை எண்ணிமுடியாது. அவன் கொள்ளையடித்துச்சென்றபொருள்களையும் அளவிட முடியாது. டில்லிக் கருகில் நடந்த பெருஞ் சண்டையில் துக்ளக் மன்னவன் முற்றிலுந்

தோல்வியடைந்து தைமூருக்குப்பயந்து ஸிம்மாஸனத்தை விட்டு ஓடிப்போய்விட்டான். தைமூர் டில்லியைப் பதி னைந்து நாட்கள்வரையில் கொள்ளையிட்டும் குடிகளைக் கொன்றும் ஏராளமான திரவியத்துடன் தன்னூருக்குத் திரும்பிச் சென்றான்.

துக்ளக் வம்சம் அழிந்தது

தைமூருக்குப் பயந்து நாட்டைவிட்டுக் கி.பி. 1398-ல் ஓடிப்போய்விட்ட துக்ளக் ஏழு வருஷ காலம் கழித்து டில் லிக்குத் திரும்பும் வரையில் அவனுடைய மந்திரி ராஜ்யத்தைப் பார்த்து வந்தான். திரும்பி வந்த துக்ளக் கி. பி. 1413 வரை யில் டில்லியில் பேருக்கு மட்டில் அரசனாக இருந்து வந்தான். அவன் இறந்துவிடவும், துக்ளக் வம் சம் அவனோடு அற்றுப்போயிற்று. அவனுடைய கடைசிக் காலத்தில் டில்லியில் பஞ்சமும் கொள்ளை நோய்களும் உண்டாகி, ஜனங்கள் ஆயிரக்கணக்கில் மடிந்து போனார் கள். இரண்டு மாதகாலம் டில்லியில் ஒரு குருவிகூடக் கண்களிற் காணப்படவில்லை.

vii. துருக்கிய ராஜ்யத்தின் அழிவு

ஸையத் வம்சம்

தைமூர் தான் இந்தியாவினின்றும் திரும்பிப்போன பொழுது கிஸிர்கான் என்பவனைப் பஞ்சாப் கவர்னராக நியமித்துச் சென்றான். கடைசித் துக்ளக் அரசன் இறந்தவுடன், அவன் தான் தைமூ ரின் பிரதிநிதி யென்று சொல்லிக்கொண்டு டில்லியில் அரசனானான். அவனும், அவனுக் குப்பின் பட்டத்துக்கு வந்த மூன்று அரசர்களும் ஸையத் வம்சத்தரசர்கள் என வழங்கப் பெற்றார்கள். அவர்கள் காலத்தில் டில்லியும், அதைச் சார்ந்த மிகச் சிறிய நாடுந் தான் அவர்களுடைய ஆட்சிக்கு உட்பட்டிருந்தன. அதைக்கூட ஆளுந் திறமையற்றுக் காலங்கழித்த ஸையத் வம்சம் கி. பி. 1451-ல் முடிவுற்றது.

அவர்களுக்குப் பின் சுமார் எழுபது வருஷ காலம் டில்லியில் ஆண்டு வந்த அரசர்களுக்கு லோடி வம்சத்தினர் என்று பெயர். அவர்களின் முதல் அரசன் பெலால் லோடி என்னும் ஆப்கானியன்.

பெலால் லோடி

அவன் பஞ்சாபையும் ஜான்பூரையும் ஜயித்துத் தனது ராஜ்யத்திற் சேர்த்துக்கொண்டான். தைமூரின் படையெழுச்சிக் காலம் முதல் சுவேச்சாதிகாரம் பெற்றுச் சுமார் 75 வருஷகாலந் தனி ராஜ்யமாக விருந்த ஜான்பூர் மறுபடியும் டில்லி ராஜ்யத்திற் சேர்ந்து போயிற்று. கி. பி. 1489-ல் பெலால் லோடி இறந்து போகவும், அவன் மகன் ஸிகண்டர் என்பவன் பட்டத்துக்கு வந்தான். ஸிகண்டர் பீஹார், டிரூட் நாடுகளை வென்று தனது ராஜ்யத்தைப் பெருகச் செய்தான். இவ்வாறாக, டில்லி ராஜ்யம் முன்னிலும் பெரிதாயிற்று. அவனுடைய ஆட்சியில் ஹிந்துஸ்தானத்தில் ஒரு பெரிய பூகம்பம் உண்டாயிற்று. அவன் கி. பி. 1517-ல் இறந்து போனான்.

பரப்பு

ஸிகண்டருக்குப் பின் அவன் மகன் இப்ராஹீம் லோடி பட்டத்துக்கு வந்தான். இப்ராஹீம் மிகக் கொடியவன். அவன் ஆப்கானிய பிரபுக்களைத் தனது முன்னிலையில் கைகட்டி வாய் பொத்திக் கொண்டு அசையாமல் நிற்கும்படி செய்தான். அவன் தனது குடிகளை மிகவும் குரூரமாக நடத்தி வந்தான். அவனுக்கு ராஜ்யத்தை யாளுந்திறமை கொஞ்சமேனுங் கிடையாது. அவனுடைய காலத்தில் நாடெங்குங் கலகங்கள் உண்டாயின. 'அந்தச் சமயத்தில் இப்ராஹீமின் சிற்றப்பனான அல்லாஉத்தீன் என்பவனும், பஞ்சாபில் கவர்னராக விருந்த தௌலத்கான் லோடி என்பவனும் அப்பொழுது காபூலில் ஆட்சி செய்து வந்த

இப்ராஹீம்

முகலாய பாபரைத் தங்களுக்குத் துணை வரும்படி வேண்டினார்கள். இந்தியாவின்மீது படையெடுத்து வந்து, இங்கு ஒரு ராஜ்யத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்று எண்ணி, அதற்குத் தக்க சமயத்தை எதிர்ப்பார்த்திருந்த பாபர் அவ்வேண்டுகோளுக் கிணங்கினார். அவர் லோடி யரசனைச் சண்டையில் வென்று கொன்றுவிட்டு, டில்லி ராஜ்யத்தைக் கைப்பற்றிக் கொண்டு விட்டார். அதனுடன் துருக்கிய ஆட்சியும் அழிவுற்றது.

viii. வட இந்திய மகம்மதிய ராஜ்யங்கள்

துக்ளக் அரசர்களுடைய ஆட்சியின் கடைசியில் டில்லி ராஜ்யத்தினின்றும் பல நாடுகள் பிரிந்து போய்த் தனித்தனி அரசர்களுடைய ஆளுகைக்கு உட்பட்டு விட்டனவென்று ஏற்கெனவே சொல்லப் பட்டுள்ளது. அவற்றைப் பற்றின விவரங்களைக் கொஞ்சம் கண்டறிந்து கொள்வதும் அவசியமாகும்.

ஜூனு மகம்மது துக்ளக்கின் கொடுமையைச் சகிக்க முடியாமல் குடிகள் கலகப்பட்ட பொழுது வங்காளம் சுமார் கி. பி. 1340-ல், தனி ராஜ்யமாய் விட்டது. அது முதல் சற்றேறக் குறைய 235 வருஷங்கள் வரையில் அது ஒரு தனி ராஜ்யமாகவே இருந்து வந்தது. அதைத் தமது ராஜ்யத்திற் சேர்த்துக் கொள்ளுமாறு பிரோஜ்ஷா மிக முயன்றும் அவருடைய எண்ணம் ஈடேறவில்லை. வங்காளம் கி. பி. 1414 முதல் சிறிது காலம், அதாவது சுமார் 30 வருஷம் ஹிந்து அரசர்களால் ஆளப்பட்டு வந்தது. அவர்களிலொருவன் மகம்மதியப் பெண்ணை மணஞ் செய்து கொண்டு தானும் மகம்மதியனாய்விட்டான். வங்காளத்தை யாண்ட மகம்மதியர்கள் பல சிறந்த கட்டிடங்களைக் கட்டினார்கள் என்றும் அவர்களுடைய ஆட்சியில்

வங்காளம்

இராமாயண, மஹா பாரதங்கள் வங்காள பாஷையில் மொழி பெயர்க்கப் பட்டன என்றும் தெரியவருகின்றன. அன்றியும், அவர்களிற் சிலர் ஹிந்துக்களை அன்புடன் நடத்தி வந்திருக்கிறார்கள்.

டில்லி ராஜ்யத்தினின்றும் பிரிந்து விட்ட மாளவம் கி. பி. 1401-ல் கோரி வம்சத்தைச் சேர்ந்த ஓரரசனது அதிகாரத்திற்கு உட்பட்டிருந்தது. அது முதல் சுமார் 130 வருஷ காலம் மாளவம் ஒரு தனி ராஜ்யமாகவே இருந்து வந்தது. அந்நாட்டைக் கோரியரசர்கள் முப்பது வருஷந்தான் ஆண்டு வந்தார்கள். பின்னர் அது கில்ஜி வம்சத்தினருக்குச் சொந்தமாய் விட்டது.

மாளவம்

கில்ஜி வம்சத்தின் முதல் அரசனான மஹ்மூது கான் சித்தூரையாண்டு வந்த ராஜபுத்திர வரசரோடு சண்டைக்குச் சென்றான். அதில் எவருக்கும் ஜயாபஜயம் ஏற்படவில்லை. ஆயினும், சித்தூரரசர் தமது வெற்றியைக் குறிக்க ஒரு பெரிய கோபுரத்தைக் கட்டுவித்தார். ஸுல்தானும் தனது வெற்றியைக் குறிக்க ஏழு உப்பரிகைக ளடங்கிய ஒரு பெரிய கட்டிடத்தைக் கட்டுவித்தான். மாளவத்தை யாண்ட கில்ஜி அரசர்களில் கி.பி. 1469-முதல் கி. பி. 1501 வரையில் அரசு செலுத்தி வந்த நாஸிருத்தீன் என்பவன் ஒருவன். அவன் தனது தந்தையைக் கொன்று பட்டத்துக்கு வந்தான்.

மஹ்மூது கான்

கி. பி. 1617-ல் ஜஹாங்கீர் என்னும் முகலாய மன்னர் மாளவநாட்டின் தலைநகராக விருந்த மாண்டூ என்னும் பட்டணத்திற்கு வந்திருந்த பொழுது, தாம் நாஸிருத்தீனுடைய கோரியைப் பன்முறை கால்களினு லுதைத்து, அதைத் தோண்டி எலும்புகளை யெடுத்துச் சுட்டு மிகுந்ததை நருமதை யாற்றில் போட்டு விடும்படி உத்தரவு

செய்ததாகத் தாமே சொல்லி யிருக்கிறார். அவருக்கு முன் ஷர்ஷா என்னும் அரசர் அந்தச் சமாதிக்கு

கொடுமையும் பெற்ற தண்டனையும்

வந்திருந்த பொழுது அந்தக் கல்லறையின் தலைப் பக்கத்தைத் தடிகளினு லடிக்கும்படி கட்டளை யிட்டதாகச் சொல்லப் பட்டிருக்கிறது. நாஸிருத்தீனுக்குப் பின்பு அவன் மகன் பட்டத்துக்கு வந்தான். கி. பி. 1531-ல் பஹதுர்ஷா என்னும் கூர்ஜர வரசன் அவனையும் அரச வம்சத்தைச் சேர்ந்த மற்றும் பலரையும் கொன்று விட்டு மாளவத்தைத் தனது ராஜ்யத்திற் சேர்த்துக் கொண்டு விட்டான்.

கூர்ஜர நாடு கி. பி. 1297-ல் கில்ஜி வம்சத் தரசரான அல்லாஉத்தீன் என்பவரால் ஜயிக்கப்பட்டு அவரது அதிகாரத்திற் குட்பட்ட ஒரு கவர்னரால் ஆளப்பட்டு

ஜபர்கான்

வந்தது. அது முதல் சுமார் நூறு வருஷங்கள் வரையில் அந்நாட்டை டில்லி அரசரின் அதிகாரத்திற் கடங்கிய கவர்னர்கள் தாம் ஆண்டு வந்தார்கள். ஆனால், கி. பி. 1391-ல் கவர்னராக நியமனம் பெற்றுக் கூர்ஜரத்தைப் பரிபாலித்து வந்த ஜபர் கான் கி. பி. 1401-ல் சுவேச் சாதிகாரம் பெற்று விட்டான்.

கூர்ஜர மன்னர்களில் ஆமதுஷா என்பவனும் அவனுடைய பேரப்பிள்ளையின் பேரனான பஹதுர்ஷா என்பவனும் சிறந்தவர்கள். ஆமதுஷா தனது

ஆமதுஷா

ராஜ்யத்தையும், இஸ்லாம் மதத்தையும் வெகுதூரம் வரையில் பரவச் செய்தான். அவன் செய்த சண்டைகளில் தோல்வியையே அறியான். அவன் ஆமதுநகரம் என்னும் ஓர் அழகிய பட்டணத்தை உண்டாக்கினான். பஹதுர்ஷா மாளவத்தை ஜயித்துக் கொண்டு விட்டதையன்றி ஆமதுநகரத்து ஸுல்தானுடை

னும் போர்ச்சுகீசியருடனும் சித்தூரரசருடனும் சண்டைகள் செய்து வெற்றி பெற்றான். ஆனால், அவன் கி. பி. 1535-ல் ஹுமாயூன் என்னும் முகலாய மன்னருடன் சண்டையிட்டுத் தோல்வியை யடைந்து மாளவத்திற்கு ஓடிப்போய் விட்டான். பின்னர் ஹுமாயூன் ஷர்ஷாவுடன் சண்டை செய்யச்சென்ற பொழுது, அவன் கூர்ஜரத்துக்குத் திரும்பி வந்து விட்டான். அவனுக்குப்பின் கூர்ஜரத்தில் குழப்பங்களும், கலகங்களும் அதிகரித்து விட்டன. கி. பி. 1573-ல் அக்பர் அதை வென்று தமது ராஜ்யத்திற் சேர்த்துக்கொண்டு விட்டார்.

காண்டேஷ் — காண்டேஷ் என்னும் சிறிய ராஜ்யம் கி. பி. 1382 முதல் கி. பி. 1599 வரையில் தனி ராஜ்யமாகவிருந்து, அக்பருடைய முகலாய ராஜ்யத்திற் சேர்த்துக்கொள்ளப்பட்டது.

ix. பஹ்மனி ராஜ்யம்

ஜாபர்கான் — மகம்மது துக்ளக்கின் கடைசிக் காலத்தில் அவருடைய ராஜ்யத்தில் கலகங்கள் உண்டாயின வென்றும், அப்பொழுது தக்ஷிணம் சுவாதீனம் பெற்று விட்டது என்றும் ஏற்கெனவே சொல்லப்பட்டுள்ளது. டில்லி ஸுல்தானுடைய உத்தியோகஸ்தர்களி லொருவரான ஹஸன் ஜாபர்கான் என்பவர் கி. பி. 1347ல், தௌலதாபாத்தைக் கைப்பற்றிக் கொண்டு ஒரு தனி ராஜ்யத்தை உண்டு பண்ணினார். அவர் அப்பொழுது ஸுல்தான் அல்லா உத்தின் ஹஸன் பஹ்மனி என்று பெயர் வைத்துக் கொண்டார். பஹ்மன் என்ற வொரு பாரஸிக மன்னன் வம்சத்தில் தோன்றியதனால், அவருக்கும், அவர் சந்ததியாருக்கும் பஹ்மனி எனப் பெயர் வந்தது என்று சிலரும், ஜாபர்கான் ஒரு பிராமணரிடத்தில் அடிமையாக விருந்து அவருடைய

அநுக்ரஹத்தினால் தாம் உயர்ந்த பதவிக்கு வந்ததனால், அந்தப் பிராமணருடைய பெயர் என்றும்

பஹ்மனி ராஜ்யம்

அழியாதபடி அவர் தமது பெயருடன் பஹ்மனி என்பதைப் பட்டமாகப் பூண்டு கொண்டார் என்று சிலரும் எண்ணுகிறார்கள். அது எவ்வாறாயினும், அவர் உண்டு பண்ணின ராஜ்யத்திற்கு, பஹ்மனி ராஜ்யம் எனப் பெயர் வந்தது.

அவர் அந்த ராஜ்யத்தை வடக்கில் பேன் கங்கா நதி முதல் தெற்கில் கிருஷ்ணா நதி வரையிலும், மேற்கில் அரபிக் கடலிலிருந்து கிழக்கில் பாங்கீர் பட்டணம் வரையிலும் பரப்பினார். அந்த ராஜ்யத்திற்கு

பரப்பு

முதலில் குல்பர்க்கா என்னும் பட்டணம் தலை நகரமாக விருந்தது. பின்னர் ஆமதுஷா என்னும் ஸுல்தான் காலத்தில் மகம்மதாபாத்-பீடார் என்பது தலை நகரமாயிற்று.

பீடார் வெகு அழகான பட்டணம். அது சமுத்திர மட்டத்திற்குச் சுமார் 2,500 அடி உயரத்தில் கட்டப் பட்டிருந்தது. அதன் கோட்டை சுற்றிலுமுள்ள அகழி யிலிருந்து வெட்டி யெடுக்கப்பட்ட கற்களினா லமைக்கப் பட்டுச் சத்துருக்களினால் எளிதிற் பிடிக்க

பீடாரின் வனப்பு

முடியாதபடி வலிமைபொருந்தி யிருந்தது. கோட்டையின் சுவர் சுமார் 4,500 கஜம் நீளமும், 15 கஜம் அகலமும், 12 கஜம் உயரமும் உடையது. கோட்டைக்குள் அரண்மனைகளும் மசூதிகளும், தங்கசாலை, மருந்துக் கிடங்கு, படைவீடு முதலியனவும் இருந்தன. கோட்டையைக் காப்பதற்குப் பல பீரங்கிகள் சுற்றிலும் வைக்கப்பட்டிருந்தன. அவைகளில் ஒன்று 23 அடி நீளமும், 19 அங்குலம் அகலமுள்ள வாய்ப்புறமும் உள்ளது. அந்தக் காலத்தில் அக்கோட்டை எளிதில் ஜயிக்க முடியாததெனவே பலராலும் கருதப்

பட்டது. அது தக்ஷிணத்திற்கு ஒரு திறவு கோல் போன்று மிருந்தது. கோட்டைக்கு மேற்கில் மாமரங்களும், புளிய மரங்களும் நிறைந்த தோப்பு ஒன்றிருந்தது. நகரம் கோட்டையைச் சார்ந்திருந்த தெனினும், கோட்டைக்கும் நகரத்துக்கும் இடையில் ஒரு பெரிய மைதானம் அமைந்திருந்தது. நகரத்தின் வீதிகள் மிகவும் அகலமாக விருந்தன. வீதிகளின் இருபுறத்திலும் வீடுகள் வெகு அழகாகக் கட்டப்பட்டிருந்தன. கிணறுகளில் தண்ணீர் ஆழத்திலிருந்த போதிலும், அந்நகரம் மிகுந்த நீர்வளம் பொருந்தி யிருந்த தென்றே சொல்ல வேண்டும்.

இத்தகைய வனப்பு வாய்ந்த பீடாரைத் தலைநகரமாகப் பெற்ற பஹ்மனி ராஜ்யம் சுமார் இருநூறு வருஷங்கள் வரையில் முதன்மை பெற்றிருந்தது. அந்த ராஜ்யத்தை அல்லாஉத்தீனுக்குப் பின்பு அநேக ஸுல்தான்கள் ஆண்டு வந்தார்கள். அவர்களில் ஹுமாயூன் என்பவர் ஒருவர். அவர் கி. பி. 1457 முதல் கி. பி. 1461 வரையில் ஸுல்தானாக விருந்தார். அவருக்கு **க்வாஜா மஹ்முது காவான்** என்னும் ஓர் உயர்ந்த மந்திரி இருந்தார். அவர் ஹுமாயூன் காலத்திற்குப் பின்பும் மந்திரியாக விருந்தார்.

காவான்

அவர் ராஜ்ய பரிபாலனத்திலன்றி யுத்த முனையிற் சேனைகளை நடத்திச் சண்டை செய்வதிலும் நிபுணர். அவர் காலத்தில் பஹ்மனி ராஜ்யம் வெகுதூரம் பரவி யிருந்தது. ஆனால், தக்ஷிணத்தில் ஒரு கொடிய பஞ்சம் ஏற்பட்டு ஜனங்கள் மடிந்து போனார்கள்.

கி. பி. 1481-ல் பட்டத்துக்கு வந்த மகம்மதுஷாவென்னும் ஸுல்தான் **கோண்டபல்லி**யை எதிர்த்துச் சண்டை செய்த பொழுது, மந்திரியான காவானின் வேண்டுகோளின்படி அவர் சில பிராமணர்களைக் கொன்று காஜீ

என்னும் பட்டத்தைப் பூண்டார். அவர் மகம்மதுஷாவின் வெற்றிகள் கொண்டபல்லியிலிருந்த கோயிலை யிடித்து அங்கே ஒரு மசூதியைக் கட்டினார். பின்னர் அவர் காஞ்சீபுரத்தை எதிர்த்து வந்து அங்கிருந்து ஏராளமான பொருள்களைக் கொள்ளைகொண்டு சென்றாரெனச் சொல்லப்பட்டிருக்கிறது.

அப்பொழுது காவானுக்கு விரோதிகளான சிலர் அவர் ராஜத்ரோகி என அவர் மீது குற்றஞ்சாட்டி அவர் எழுதினதாகச் சொல்லி அவருடைய கை காவான் கொலையுண்டது யொப்பம் போட்டிருந்த ஒரு பொய் நிருபத்தையும் ஸுல்தானுக்குக் காட்ட ஸுல்தான் தமது குடிவெறியில் காவானைக் கொன்று விடும்படி உத்தரவு செய்தார். கி.பி. 1481-ம் வருஷத்தில் காவான் கொலையுண்டுபோனார். அவர் இறக்கவும், பஹ்மனி ராஜ்யம் க்ஷீணிக்கத் தலைப்பட்டது.

மேடோஸ் டெய்லர் என்பவர் காவானைப்பற்றி 'அவர் அக்காலத்திலும், அவருக்கு முந்தியும், இருந்த மகம்மதியர்கள் யாவரினுஞ் சிறந்தவர். அவர் செய்தன போன்ற புத்திசாலித்தனமான சீர் திருத்தங்களும், அவரிடத்திருந்தன போன்ற திறமையும், தைரிய காவானின் சிறப்பு மும், அவர் நடத்திவந்ததை யொத்த நடுவு நிலைமையான நியாயமும், அவரளித்தன போன்ற நற்கொடைகளும், அவரிடத்துக் குடிகொண்டிருந்தவை யொத்த ஒப்புரவும், தேர்ச்சியும் வேறு எந்த மகம்மதியரிடத்திலு மில்லை. அவர் பீடாரில் ஒரு பெரிய கல்லூரியை அமைத்து நடத்தி வந்ததையல்லாமல், தமது பணத்தைக் கொண்டு பல கோட்டைகளையும் கட்டுவித்தார்,' என்று கூறியிருக்கிறார். பெரிஷ்டா

என்னும் சரித்திராசிரியரும் காவானைப் புகழ்ந்து எழுதியுள்ளார்.

மஹ்மூதுஷா

பஹ்மனி ராஜ்யத்தின் கடைசி யரசன் மஹ்மூதுஷா என்பவன். அவன் கி. பி. 1492 முதல் கி. பி. 1518 வரையில் ஆட்சி பெற்றிருந்தான். அவன் உபயோகமற்றவன். அவன் துஷ்ட சிநேகிதர்களைச் சேர்த்துக்கொண்டு ராஜ காரியங்களைக் கவனியாமல் சிற்றின்பங்களிலேயே தனது காலத்தைக் கழித்து வந்தான். அதனால், அவன் கீழிருந்த மாகாண கவர்னர்கள் சுவேச்சாதிகாரம் பெற்றுத் தனித்தனிச்சிற்றரசர்கள் ஆய்விட்டார்கள். அப்பொழுது பஹ்மனி ராஜ்யத்தின் அழிவினின்றும் தக்ஷிணத்தில் பீடார், பீரார், ஆமது நகரம், பீஜப்பூர், கோலகொண்டா என்னும் ஐந்து சிறிய மகம்மதிய ராஜ்யங்கள் ஏற்பட்டன.

VII. விஜயநகர ராஜ்யம்

i. விஜயநகரத்தின் பிறப்பும், வளர்ச்சியும்

மகம்மது துக்ளக்கின் தென்னிந்தியப் படையெழுச்சியில், அவர் கி. பி. 1323-ல் வாரங்கல் நாட்டையும், கி. பி. 1327-ல் துவார சமுத்திரத்தையும் கைப்பற்றிக்கொண்டு விட்டார் என்று ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது. அவருடைய கொடுமை காரணமாக நாட்டில் கலகங்கள் உண்டாகி ராஜ்யம் பிரிவுபட்டது என்பதையும் நாம் அறிவோம். அவ்வாறு பிரிவுபட்டவற்றுள் ஒன்றான பஹ்மனி ராஜ்யத்தைப் பற்றின விவரம் இதற்குமுன் வரையப்பட்டுள்ளது.

துக்ளக்கின் கொடுமையே பஹ்மனி ராஜ்யத்தைப் போன்று விஜய நகர ராஜ்யமும் ஏற்பட்டதற்குக் காரண

மாம். வாரங்கலோ அல்லது துவார சமுத்திரமோ துக்ளக் வசமானபொழுது, அந்நாட்டரசருக்குக் கப்பங்கட்டியும், அவருடைய அதிகாரத்திற் குட்பட்டும் ஐந்து சகோதரர்கள் இருந்தார்கள். அவர்கள் சங்கமா என்பவரின் புதல்வர்கள். அவர்களில் ஹரிஹரர் புக்கர் என்பவர்கள் தாம் முக்கியமானவர்கள். அவர்கள் மகம்மதியருடைய கொடுமையை எவ்விதத்தாலும் தடுக்க வேண்டுமென்று முன் வந்தார்கள்.

ஹரிஹரர் புக்கர்

அவர்கள் தங்கள் நாட்டைவிட்டுத் துங்கபத்திரையின் வடகரையிலிருந்த ஆனைக்குந்தி சமஸ்தானத்திற்கு வந்து சேர்ந்தார்கள். அங்கே நாளடைவில் ஹரிஹரர் மந்திரியாகவும், புக்கர் பொக்கிஷதாரராகவும் உத்தியோகத்தில் அமர்ந்தார்கள். சிறிது காலத்திற்கெல்லாம் மகம்மதியருடைய உபத்திரவங்கள் ஆனைக்குந்திக்கும் பரவிவரத்தலைப்பட்டன.

ஆனைக்குந்தி

அப்பொழுது பம்பா என்னும் ஊரில் வித்யாரண்யர் என்னும் ஒரு பிராமண குரு இருந்தார். மகம்மதியர்கள் தேவாலயங்களை யிடித்தும், ஊர்களைச் சுட்டெரித்தும் குடிகளைக் கொன்றும் இழைத்து வந்த தீமைகளைக் கேட்க அவர் மனம் நொந்தார். அவர் தமது சிஷ்யர்களுக்குத் தேசாபிமானம் உண்டாகும்படி போதிக்கலானார்.

வித்யாரண்யர்

அவருடைய நற்போதனைகளைக் கேட்டு வந்த ஹரிஹரரும், புக்கரும் தங்களுடைய குருவின் நியமனப்படி துங்கபத்திரையின் தென்கரையில் ஒருபெரிய நகரத்தை உண்டு பண்ணினார்கள். அவர்கள் அதற்குத் தமது குருவின் பெயரை யொட்டி வித்யாரண்யம் என்று பெயரிட்டார்கள்.

விஜயநகரம்

அந்தப் புதிய நகரம் ஏற்பட்ட செய்தி சீக்கிரத்திலேயே நாலாப் பக்கங்களிலும் பரவிற்று. அப்பொழுது மகம்மதியர்கள் இழைத்து வந்த துன்பங்களைப் பொறுக்க முடியாமல் பரிதவித்த ஹிந்துக்கள் அங்கே வந்து குடியேறினார்கள். அங்கே அவர்கள் தீங்கின்றிச் சுகமாய் வாழ்ந்து வந்தார்கள்.

பழைய கிஷ்கிந்தை

அந்த நகரம் உண்டான இடமே முன்பு சுக்ரீவன் ஆண்டுவந்த கிஷ்கிந்தை என்றும், ஹம்பி என்பதுதான் இராமாயணத்தில் சொல்லப்பட்ட பம்பை என்றும் எண்ணப்படுகின்றன. மிகவும் ஜயகரமான புண்ணியப் பிரதேசத்தில் கட்டப்பட்டதனால் அந்த நகரத்துக்கு விஜயநகரம் என்று பெயர் வந்தது.

நகரச் சிறப்பு

விஜயநகரம் மிகவும் அழகான பட்டணம். ஹரிஹரர் அதைச் சத்துருக்கள் எளிதிற் கைப்பற்றாவண்ணம் சுற்றிலும் உறுதியும், உயரமுமான மதில்களை யெழுப்பி, ஆழமும் அகலமுமான அகழிகளை வெட்டிப் பலப்படுத்தினார். அந்த நகரம் ஏழாண்டளவு கட்டப்பட்டது. அது அக்காலத்திலிருந்த நகரங்கள் எல்லாவற்றிலும் மிகப் பெரியது. அதில் ஆகாயத்தை அளாவும் அநேக மாட மாளிகைகள் சித்திரவேலைப் பாடுகள் விளங்கக் கட்டப்பட்டிருந்தன. எங்கும் பழந்தரும் மரங்கள் அடர்ந்த உத்தியானங்களும், மலர்கள் நிறைந்த பூஞ்சோலைகளும் அழகாக வளர்ந்து காண்பவர்களின் கண்ணையும் கருத்தையும் கவர்ந்து பொலிந்தன. நகரத்தைச் சுற்றி நான்கு பக்கங்களிலும் வளம் பொருந்திய நன்செய், புன்செய் நிலங்கள் சமமாக அமைந்திருந்தன. உழவர்களும், வியாபாரிகளும் நெருங்கித் தத்தம் தொழில்களை விமரிசையாக நடத்தி நாட்டைச் செழிக்கச் செய்து வந்தார்கள். துங்கபத்திரை யாற்றி

னின்றும் புறப்படுகின்ற பல வாய்க்கால்கள் நாட்டின் பல பக்கங்களிலும் நுழைந்து சென்று பயிர்த் தொழிலை வளர்த்து வந்தன.

அந்தப் பெரிய பட்டணத்தின் கடை வீதிகள் மிகவும் அழகுள்ளவை. அங்கே வியாபாரிகள் விலையுயர்ந்த சாமான்களை ஏராளமாகத் தருவித்து விற்று வந்தார்கள். அந்தக் கடைகளில் சிறந்த வஸ்திரங்களும், உயர்ந்த ரத்தினங்களும் மலைகள் போலக் குவிந்து கிடக்கும். அவற்றைக் கொள்வதன் பொருட்டும், தாங்கள் கொண்டுவந்த சரக்குக்களைக் கொடுப்பதன் பொருட்டும் எண்ணிறந்த ஜனங்கள் கூட்டங்கூட்டமாக நிறைந்து இருப்பார்கள். சுருங்கச்சொல்லுவோமானால் அந்நகரம் அமராவதியோ அல்லது அளகாபுரியோ என்று சொல்லத் தகுந்த பெருமை வாய்ந்து விளங்கிற் றென்பது மிகையாகாது.

வாணிபம்

அத்தகைய சிறப்பு வாய்ந்த விஜயநகரத்தைத் தலைநகராக வுடைய ராஜ்யத்தை ஹரிஹரர் மிகுந்த கீர்த்தியுடன் ஆட்சி செய்து வந்தார். துங்கபத்திரா நதியின் வடகரைவரையிற் பரவியிருந்த பஹ்மனி ராஜ்யத்திற்கும், அவ்வாற்றின் தென்கரை முதல் கன்னியாகுமரி வரையிற் பரவிவிட்ட விஜயநகர ராஜ்யத்திற்கும் பற்பல காரணங்களை முன்னிட்டு அடிக்கடி சண்டைகள் நடந்து வரலாயின.

பஹ்மனி விஜயநகரம்

விஜயநகர அரசர்களில் **கிருஷ்ண தேவராயர்** என்பவர் மிகச் சிறந்தவர். அவர் கி. பி. 1509 முதல் கி. பி. 1530 வரையில் ஆட்சி செய்திருந்தார். அவர் ஒப்பற்ற பராக்கிரமசாலி. அவர் அப்பொழுது வியாபாரத்தின் பொருட்டு இந்தியாவுக்கு வந்திருந்த போர்ச்சுகீசியருக்கு அநுகூலமாக இருந்தார். அவர் அவர்களுடைய உதவி

யைக் கொண்டு மகம்மதியரைப் பன்முறை யெதிர்த்துச் சண்டை செய்து ஜயம் பெற்றார். அவருக்குச் சுற்றிலுமுள்ள நாடுகளை வென்று தமது ராஜ்யத்தைப் பெருக்க வேண்டுமென்னும் எண்ணம் உண்டாயிற்று. அவர் மைசூரின்மீது படை யெடுத்துச் சென்று சிவசமுத்திரத்தையும், ஸ்ரீரங்க பட்டணத்தையும் கைப்பற்றிக்கொண்டு மைசூரைத் தமக்கு சுவாதீனஞ் செய்துகொண்டார். பிறகு, அவர் ஒரிஸா, கோலகொண்டா நாடுகளின் மீது படை யெடுத்துச் சென்று ஜயம் பெற்றார். அவர் பீஜப்பூர் ஸுல்தானுடன் சண்டை செய்து ரைச்சூர் மாகாணத்தைப் பிடித்துக் கொண்டு, குல்பர்க்காவிலிருந்த கோட்டையைப் பிடித்துச் சமன் செய்து விட்டார். இவ்வாறாக அவருடைய ராஜ்யம் தென்னிந்தியா முழுவதும் பரவி விட்டது.

கிருஷ்ண தேவராயர்

அந்தப் பெரிய ராஜ்யத்தை அவர் மிகுந்த கீர்த்தியுடன் பரிபாலித்து வந்தார். அவருடைய அதிகாரத்தின் கீழிருந்த பல சிற்றரசர்கள் அவருக்குக் கப்பஞ் செலுத்தி வந்தார்கள். அவர்கள் யுத்த காலங்களில் ராயருக்குச் சைந்யங்கள் கொடுத்தும் உதவி வந்தார்கள்.

சிற்றரசர்கள்

கிருஷ்ணதேவராயர் கல்வி கேள்விகளிற் சிறந்தவர். அவர் தம்முடைய சமஸ்தானத்தில் அநேக வித்வான்களை வைத்து ஆதரித்து வந்தார். அவர்களுள் அவருடைய மந்திரியான திம்மரசும், பெத்தண்ணவும் முக்கியமானவர்கள். அந்த அரசருக்கே கவிபாடுந் திறமை யுண்டு. தெலுங்கு பாஷையில் அவர் மிகுந்த தேர்ச்சி பெற்றவர். அவர் தெலுங்கில் ஆமுக்த மால்யத என்னும் மிகச் சிறந்த காவ்யத்தை இயற்றி யிருக்கிறார்.

வித்வான்களும் கல்வியும்

அது ஆழ்வார்கள் பன்னிருவருள் ஒருவரான பெரியாழ்வாரின் சரித்திரத்தைக் கூறுவது. ராயர் பார்ப்பதற்கு வெகு லக்ஷணமாக இருப்பார்.

கிருஷ்ண தேவர் தாம் வைஷ்ணவரா யிருந்தும் மற்றைய சமயத்தின ரிடத்தும் அன்பாக விருந்தார். அவர் சண்டையில் தோற்றுப் போன சத்துருக்களையும், தமது வசப்பட்ட கைதிகளையும் தயையுடன் நடத்தி வந்தார்.

குணம் அவர் தம்மிடம் வருபவர்களை முகமலர்ச்சியுடன் வரவேற்று, இனிமையாகப் பேசிச் சந்தோஷப் படுத்தி யனுப்புவார். அவர் தமது குடிகளினிடத்து அன்பு பாராட்டி, அவர்களுடைய நன்மையையே நாடி உழைத்து வந்தார்.

கிருஷ்ண தேவர் அளவற்ற செல்வத்தைச் செலவு செய்து அநேக ஆலயங்களையும், தர்ம சாலைகளையும் கட்டி வைத்தார்.

கட்டிடங்கள் காஞ்சீபுரத்திலுள்ள தேவாதிராஜன் கோயிலின் ஒரு கோபுரம் அவர் கட்டியது என்று சொல்லுகிறார்கள். அதற்கிணங்க அக்கோபுரத்திற்கு இன்னமும் ராயகோபுரம் என்னும் பெயர் வழங்கி வருகின்றது. கிருஷ்ண தேவராயர் கி. பி. 1530-ல் காலஞ் சென்றார்.

கிருஷ்ணதேவருக்குப் பின்பு முறையே அச்சுத தேவ

க்ஷீணம் ராயரும், சதாசிவ ராயரும் பட்டத்துக்கு வந்தார்கள். அவர்கள் காலத்தில் பல சிற்றரசர்கள் சுவேச்சாதிகாரத்தைப் பெற்று விட்டார்கள். அதனால், விஜயநகர ராஜ்யம் க்ஷீணிக்கலாயிற்று.

ராமராயர் விஜய நகர ராஜ்யத்தைக் கொஞ்சம் முன்னுக்குக் கொண்டு வந்தா ராயினும், அவர் மகம்மதியர்களை அதிக அலக்ஷியமாகவும், குரூரமாகவும் நடத்தி வந்ததனாலும், பல தடவைகளில் ஹிந்துக்கள் மகம்மதிய ஸ்திரீ

களை அவமானப் படுத்தியும் அவர்களுடைய மசூதிகளை யிடித்தும் தீங்கிழைத்ததனாலும் பீஜப்பூர், கோலகொண்டா, ஆமதுநகரம் ஆகிய நாடுகளை யாண்டுவந்த ஸுல்தான்கள் தங்களுக்குள் இருந்த விரோதங்களை மறந்து மூவரும் ஒன்று சேர்ந்து விஜயநகரத்தை எதிர்த்துச் சண்டை யிட்டார்கள். கி. பி. 1565-ல், தலைக்கோட்டை என்னுமிடத்தில் நடந்த அந்தச் சண்டையில் மகம்மதியர்கள் வெற்றிபெற்றார்கள். ராமராயரும், அவர் சகோதரர் வெங்கடாத்திரி என்பவரும் போர் முனையில் மாண்டுபோனார்கள்.

ராமராயரின் கொடுமைகள்

தலைக் கோட்டை

மகம்மதியர்கள் விஜயநகாத்தில் ஹரிஹரர் கட்டி வைத்த அழகிய மாட மாளிகைகளையும், கூடகோபுரங்களையும் இடித்துத் தகர்த்து, நகரத்தை முழுவதும் பாழாக்கி விட்டார்கள். பல்லாரி ஜில்லாவில் துங்கபத்திரை யாற்றின் கரையிலுள்ள ஹம்பி என்னும் கிராமத்திற் கருகில் பாழாய்க்கிடக்கின்ற மாளிகைகளையும் வௌவாலும் குரங்கும் வாசஞ் செய்து வருகின்ற பல தேவாலயங்களையும், இடிந்து போன கோட்டைச் சுவர்களையும், தூர்ந்து போன அகழிகளையும் நாம் இன்னமும் காணலாம்.

ஹம்பியின் சின்னங்கள்

ராம ராயருக்குப் பின்பு அவருடைய மற்றொரு சகோதரராகிய திருமலை ராயர் சந்திரகிரிக்கு ஓடிப் போய் விட்டார். சந்திரகிரிக் கோட்டையில் அவரும், அவருடைய சந்ததியாரும் கொஞ்சகாலம் வரையில் ஆண்டுவந்தார்கள். சந்திரகிரியில் ஆட்சி செய்துவந்த ஸ்ரீரங்க ராயரின் அதிகாரத்திற்குட் பட்டிருந்த ஒரு நாயக்கரிட

பிந்திய ராயர்கள்

மிருந்துதான் ஆங்கிலேயர்கள் சென்னபட்டணத்தை வாங்கிக் கொண்டார்கள். விஜயநகர ராஜ்யம் அழிந்ததி னின்றும் உண்டான பல சிறிய தென்னிந்திய ராஜ்யங் களிலும் திருமலை நாயக்கர் ஆண்ட மதுரைதான் சிறந்தது.

விஜயநகரத்தரசர்கள் செழித் தோங்கிச் செல்வத் தில் மூழ்கி யிருந்தார்கள். அரண்மனையில் ஓர் அறை முழுவதுந் தந்தத்தினல் அமைக்கப் பட்

அரண்மனை

டிருந்தது. கம்பங்கள் தந்தத்தினற் செய் யப்பட்ட ரோஜாப் புஷ்பங்களினுலும், தாமரைப் பூக்களினுலும் அலங்கரிக்கப் பட்டிருந்தன.

அரசர்கள் தங்கள் உத்திரவுகளை வாய்மொழியாகவே செய்து வந்தார்கள். அவற்றை யவர்களுடைய உத்தி யோகஸ்தர்கள் புஸ்தகங்களிற் பதிவு செய்து கொண்டார் கள். ராஜ்யம் சுமார் நூறு மாகாணங்களாகப் பிரிக்கப் பட்டு ஒவ்வொன்றும் ஒரு ஒரு பிரபுவின்

பரிபாலனம்

அதிகாரத்திற் குட்பட்டிருந்தது. அந்தப் பிரபுக்கள் அரசருக்கு வரி செலுத்தி வந்ததை யன்றிச் சேனைகளும் கொடுத்துதவினர்கள். குடி கள் தங்களுடைய வருமானத்தில் ஆறிலொரு பங்கை வரி யாகச் செலுத்தி வந்தார்கள். குற்றஞ் செய்தவர்கள் கடு மையாய்த் தண்டிக்கப் பட்டார்கள்.

விஜய நகரத் தரசர்கள் ஸம்ஸ்கிருத தெலுங்கு வித்வான்களைத் தமது சமஸ்தானத்தில்

கல்வி

வைத்து ஆதரித்து வந்தார்கள். அவர் களிற் சிலர் தாங்களே சிறந்த கல்விமான் களாகவும் இருந்தார்கள்.

ராயர்கள் அநேகம் பலமான கோட்டைகளையும், விவசாயத்திற்கு வேண்டிய ஏரி, குளம், வாய்க்கால் முத லான சாதனங்களையும் அமைத்தார்கள். போர்ச்சுகீசிய சிற்பிகளைக் கொண்டு அவர்கள் அழகான மாளிகைகளையும்,

சித்திரங்களினாலும், சிற்பங்களினாலும் அலங்கரிக்கப்பட்ட கோயில்களையும் கட்டி வைத்தார்கள். ஹஸார ராமஸ்வாமி கோயிலின் சுவர்களில் செதுக்கப்பட்டிருந்த இராமாயணக் கதையை யுணர்த்தும் அழகிய சித்திரங்கள் கண்ணைக் கவரும் வனப்பு வாய்ந்தவைகள். இவற்றினின்றும் அந்த அரசர்கள் சகல கலைகளையும் பரிவுடன் ஆதரித்து வந்தார்களெனத் தெரிய வருகிறது.

கட்டிடங்கள்

கி. பி. 1498-ல் முதன் முதல் இந்தியாவுக்கு வந்து கி. பி. 1510-ல் **கோவா** நகரில் வியாபாரத்திற்கான ஏற்பாடுகளை அமைத்துக் கொண்டு இந்நாட்டில் தங்கிய போர்ச்சுகீசியர்கள் சிற்பிகளாகவும், சித்திரப்பவர்களாகவும் வேலைகளில் அமர்ந்து வந்ததையன்றி, சிற்சில பொழுது சண்டைகளில் உதவியும், எல்லாக் காலத்திலும் வியாபாரஞ் செய்து நாட்டின் குடிகளுடன் கலந்தும் வந்திருக்கிறார்கள். அன்றியும், அவர்களில் **நியூன்ஸ், பேஸ்** போன்ற சிலர் எழுதிவைத்ததினின்றும் ராயர்களைப் பற்றின பல விவரங்கள் நமக்குக் கிடைத்துள்ளன.

போர்ச்சுகீசியர்

ii. ஐந்து தக்ஷிண மகம்மதிய நாடுகள்

மஹ்மூதுஷாவின் ஆட்சியில் பஹ்மனி ராஜ்யம் சிதைவுண்டு ஐந்து சிறிய ராஜ்யங்களாய் விட்டது என்று ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கின்றதல்லவா? அவற்றின் கதி என்னவாயிற்றென்பதைச் சற்றுக் கவனிப்பதும் அவசியமாகும். பஹ்மனி ராஜ்யத்தினின்றும் முதன் முதல் பிரிந்துபோன ராஜ்யம் **பீரார் மாகாணம்** என்பது. அதுதான் பழைய ஹிந்து வரசர்கள் காலத்தில் விதர்ப்பம் என்று வழங்கப்பட்ட நாடு. மஹ்மூதுஷாவின் ஆட்சியில் பீராரிலடங்கிய ஒரு ஜில்லாவைப் பரிபாலனம் செய்து

வந்த கவர்னர் ஒருவன் சுவேச்சாதிகாரத்தைப் பெற்று பீரார் ஸுல்தான் ஆனான். கி. பி. 1574 வரையிலும் அவன் சந்ததியார்கள் அங்கே அரசு செலுத்தி வந்தார்கள். அப்புறம் அது ஆமதுநகர ராஜ்யத்திற் சேர்த்துக் கொள்ளப்பட்டுக் கி. பி. 1596-ல் அக்பர் வசமாய் விட்டது.

பீரார்

பஹ்மனி ராஜ்யத்தினின்றும் பல சிறிய ராஜ்யங்கள் உண்டானபொழுது, அதன் தலைநகரமும், அதைச்சார்ந்த சிறிதுநாடும் மஹ்மூதுஷாவின் மந்திரியான காஸிம் என்பவனுடைய அதிகாரத்திற்குட்பட்டிருந்து, நாளடைவில் ஒருதனி ராஜ்யம் ஆய்விட்டன. அதுதான் பீடார் என்னப்பட்டது. கி. பி. 1609-ல் அது பீஜப்பூர் ராஜ்யத்திற் சேர்ந்து போயிற்று. கோலகோண்டா என்னும் நாடு, மஹ்மூது காவான் இறந்துபோன பிறகு, கூலி குத்ப்ஷா என்னும் கவர்னரால் கி.பி. 1518-ல் ஒரு தனிராஜ்யமாகச் செய்யப்பட்டது. குத்பி ஸுல்தான்கள் ஓரங்கல்லைவிட்டுக் கோலகொண்டாவைத் தமது ராஜ்யத்தின் தலைநகரமாக்கிக் கொண்டார்கள். ஆனால், அந்நகரம் அசௌக்கியமான இடமாக இருந்ததனால், அவர்கள் இப்பொழுது ஹைதராபாத் என வழங்கிவரும் பாகநகரத்தைத் தமது தலைநகரமாகச் செய்து கொண்டார்கள். கி. பி. 1611 முதல் கோலகொண்டா தனது சுவாதீனத்தை யிழந்து கி. பி. 1687-ல் ஔரங்கஜீப் வசமாய் விட்டது.

பீடார்

கோல கோண்டா

ஆமது நகரம் கி. பி. 1490-ல், காவானைக் கொல்வித்த நைஜாமல்மல்க் பாரி என்பவன் மகனான ஆமது நைஜாம்ஷா என்னும் பட்டப்பெயர் பூண்ட மாலிக் ஆமது என்பவனால்

ஒரு தனி ராஜ்யமாகச் செய்யப்பட்டது.

ஆமது நகரம் ஆமது நகரம் என்னும் நகரத்தை உண்டு பண்ணினவன் ஆமதுதான். ஆமது நகரத்தை யாண்டுவந்த ஆமது நைஜாம்ஷாவின் சந்ததியார்களுக்கு நைஜாம் ஷாஹி வம்சத்தினர் எனப் பெயர் வந்தது. அந்த வம்சத்தின் மூன்றுவது அரசனுன ஹுஸெய்ன் நைஜாம்ஷா தனது மகளான சாண்ட்பிபி என்பவளை பீஜப்பூர் ஸுல்தானுன ஆலி அடில்ஷாவுக்கு மணஞ் செய்வித்தான். கி. பி. 1574-ல் பீரார் ஆமதுநகரத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டது என்று

சாண்ட்பிபி முன்னமேயே சொல்லப் பட்டிருக்கின்றது. பின்னர்க் கி. பி. 1596-ல் அக்பரின் மகன் ஆமதுநகரத்தின்மீது படையெடுத்து வந்தபொழுது, தனது புருஷனை இழந்துவிட்ட காரணத்தினுல் தாய்வீட்டிற்கு வந்திருந்த சாண்ட்பிபி தைரியமாகச் சண்டைசெய்து அவனை எதிர்த்தாள். ஆனுல், ஆமது நகரத்து ஸுல்தான் பீராரை அக்பருக்குக் கொடுத்து விட்டுச் சமாதானஞ்செய்து கொண்டான். பின்னர் கி. பி. 1600-ல் முகலாய மன்னன் மறுபடியும் ஆமது நகரத்தை எதிர்த்துவந்த பொழுது சாண்ட்பிபி சண்டையில் கொலையுண்டாள். அது முதல் ஆமதுநகரம் பெயருக்கு மட்டில் அக்பருக்குட்பட்டிருந்து கி. பி. 1637-ல் ஷாஜஹானுல் முகலாய ராஜ்யத்திற் சேர்த்துக்கொண்டு விடப்பட்டது.

கி. பி. 1489-ல் பீஜப்பூரும், மற்றைய நாடுகளைப் போன்று, யூஸுப் அடில்ஷா என்னும் கவர்னரால் ஒரு தனி ராஜ்யமாகச் செய்து கொள்ளப்

பீஜப்பூர் பட்டது. அவன் கோவாவைத் தனது ராஜ்யத்தின் தலைநகரமாகச் செய்து கொள்ள எண்ணி அங்கே அடிக்கடி சென்றிருப்பான். மெக்காவுக்

குச் செல்லும் மகம்மதிய யாத்திரிகர்கள் கோவாவுக்குவந்து தான் கப்பலேறிச் செல்வார்கள். கி. பி. 1510-ம் வருஷத்தின் முதலில் போர்ச்சுகீசியர் கோவாவைப் பிடித்துக் கொண்டு விட்டார்கள். ஆனால் மூன்று மாதங்களுக்கெல்லாம் ஸுல்தான் அதைத் திரும்பவும் கைப்பற்றிக் கொண்டான். பின்னர் ஆறுமாத காலத்திற்குள் போர்ச்சுகீசிய சேனைத் தலைவரான அல்புகர்க் அதை மறுபடியும் தமதாக்கிக் கொண்டுவிட்டார்.

கி. பி. 1558-ல் பீஜப்பூரில் ஆட்சி பெற்றிருந்த ஆலி அடில்ஷா வென்னும் அரசன் விஜயநகர வரசரான ராமா ராயருடன் சேர்ந்து கொண்டு ஆமதுநகரத்தின் மீது படையெடுத்து வந்தான். அப்பொழுது ஹிந்துக்கள் மகம்மதியர்களுக்குச் செய்த தீங்கிற்கும், அவமானத்திற்கும் ஓர் எல்லை யில்லை. அவர்கள் தாங்கள் மகம்மதியர்களால் துன்புற்றதை நினைந்து தாங்கள் பட்டதினும் பன்மடங்கு அதிகமான துன்பங்களைச் செய்யவும், அவற்றை ஆலி அடில்ஷா சகிக்க முடியாமற் போயிற்று. அப்பொழுது

ஒற்றுமை

அவன் தான் செய்த குற்றத்தைக் கண்டறிந்து பீடார், ஆமதுநகரம், கோலகொண்டா ஆகிய நாடுகளின் ஸுல்தான்களைச் சேர்த்துக்கொண்டு ஹிந்து ராஜ்யத்தைத் தொலைத்து விடவேண்டுமென்று முன் வந்தான். அப்பொழுது தான் அவன் சாண்ட்பிபியை மணந்து கொண்டான். கி.பி. 1565-ல் அந்த ஸுல்தான்கள் நால்வரும் சேர்ந்து தலைக் கோட்டை என்னுமிடத்தில் விஜயநகர வரசரை முற்றிலும் வென்று அவருடைய ராஜ்யத்தையும் தொலைத்து விட்டார்கள்.

கி. பி. 1595-ல் பீஜப்பூருக்கும் ஆமது நகரத்துக்கும் மறுபடியும் சண்டை ஏற்பட்டது. அதில் ஆமது நகரத்து

ஸுல்தான் கொலையுண்டு போனான். பீஜப்பூர் சுல்தானும் கி. பி. 1626-ல் இறந்து போனான். கி. பி. 1686-ல் பீஜப்பூர் ஔரங்கஜீப்பினுடைய ராஜ்யத்தில் சேர்த்துக் கொண்டு விடப்பட்டது. இவ்வாறாக அந்த ஐந்து மகம்மதிய ராஜ்யங்களும் அழிந்து பட்டன.

அழிவு

VIII. முகலாய ராஜ்யம்

i. துருக்கிய ராஜ்யம் அழிவுற்றது

பஞ்சாப் கவர்னரான தௌலத்கானும், இப்ராஹீமின் சிற்றப்பனான அல்லா உத்தீனும் வேண்டிக் கொண்டபடி பாபர் இந்தியாவின் மீது படையெடுத்து வந்து லோடி யாசனைச் சண்டையில் வென்று கொன்று விட்டு, டில்லி ராஜ்யத்தைக் கைப்பற்றிக் கொண்டார் என்று முன்னமே சொல்லப் பட்டிருக்கிறதல்லவா ?

கி. பி. 1526-ல் பாபருக்கும் இப்ராஹீமுக்கும் பானிப்பட்டு என்னுமிடத்தில் பெரிய சண்டை நடந்தது. அதில் முதன் முதல் இந்நாட்டில் பீரங்கிகள் உபயோகிக்கப் பட்டன. பாபர் வெகு விமரிசையாகச் சண்டை செய்து ஜயம் பெற்றார். இப்ராஹீம் போர் முனையில் கொலையுண்டு போனான். அவனோடு துருக்கியர் டில்லியில் ஸ்தாபித்த ராஜ்யமும் அழிந்து போயிற்று. அதற்குப் பதில் முகலாய ராஜ்யம் ஏற்பட்டது.

பானிப்பட்டு

துருக்கியர்கள் சட்டங்களுக்காவது வேறெந்தக் கட்டுப்பாடுகளுக்காவது அடங்காமல் மனம்போல் ஆண்டு வந்தார்கள். அவர்களிற் சிலர் இயற்றிய தீமைக்குப்

பெரும்பாலும் பிரபுக்கள் தாம் ஆளானார்களே யன்றிச் சாதாரணக் குடிகள் ஸ்தல சுய ஆட்சிக்கும், ஜமீன்தாரர்களுக்கும் அடங்கி வியவசாயம், வாணிபம், கைத்தொழில் முதலியவற்றைச் செவ்வனே நடத்தி வந்திருக்கிறார்கள். அன்றியும், மகம்மதியர்கள் இழைத்த பல தீங்குகளினாலும் நாட்டிலுண்டான சண்டைகளினாலும், கலகங்களினாலும் சிற்சில சமயங்களில் தான் குடிகள் துன்பமெய்தினரே யன்றி, பொதுவில் அத்துன்பங்கள் அவர்களை அதிகமாகப் பாதிக்கவில்லை. நாளாவட்டத்தில் மகம்மதியர்கள் இந்நாட்டிலேயே தங்கிவிட்டதனால், அவர்கள் கொள்ளைகொண்ட பணம் வெளிச் செல்லாமல் இங்கேயே உபயோகப்பட்டு வந்தது.

துருக்கிய ஆட்சி

மதவிஷயத்திலும், சில அரசர்கள்தான் பிடிவாதங் கொண்டு அந்நியர்களைத் தமது மதத்திற் சேரும்படி கட்டாயப் படுத்தினார்கள். மற்றவர்களோ ஹிந்துக்களுக்கு யாதொரு தீமையையுஞ் செய்யவில்லை. இவர்கள் ஹிந்துக்களுக்குப் பெரிய உத்தியோகங்களையும் கொடுத்து வந்திருக்கிறார்கள். துருக்கிய மகம்மதிய வரசர்கள் காலத்தில் நாடு சுபிக்ஷமாக இருந்ததற்கு அவர்கள் ஏற்படுத்திய கட்டிடங்கள், வாய்க்கால்கள், ஏரிகுளங்கள், பாலங்கள், வைத்தியசாலைகள், அப்பொழுது உண்டான சமய நூல்களும் முதலியனவும் போதுமான சாக்ஷிகளாகும்.

நாட்டின் நிலைமை

அல்லாமலும், அவர்கள் காலத்தில் ஸ்ரீ ராமாநுஜர், ராமானந்தர், கபீர், நானக், சைதன்யர் முதலான மகான்கள் தோன்றி ஹிந்து மதத்தைப் போதித்துப்பரப்பியும், அந்நியர்களைத் தமதுமதத்திற் சேர்த்துக்கொண்டும் அதை முன்னுக்குக்கொண்டு வந்தார்கள். அப்பொழுது

ஹிந்துமதாசாரியர்கள்

ஸம்ஸ்கிருத பாஷையிலன்றி உருது, ஹிந்தி, தமிழ் முதலிய பாஷைகளிலும் சிறந்த நூல்கள் எழுதப்பட்டன.

ii. முந்திய முகலாய மன்னர்கள்

பானிப்பட்டுச் சண்டையில் டில்லி ராஜ்யத்தை வென்ற பாபர் தகப்பன் வழியில் தைமூர் வம்சத்திலிருந்தும், தாய்வழியில் செங்கிஸ்கான் வம்சத்திலிருந்தும் தோன்றியவர். தைமூருக்குப் பிறகு அவருடைய ராஜ்யம் சிதை வுண்டு போயிற்று. அப்பொழுது

பாபர்

பாபரின் தந்தை ஸாமர்க்கண்ட் மாகாணத்துக்கு அரசரானார். அவர் இறந்தபொழுது பாபருக்கு வயது பதினொன்று. பாபர் இருமுறை ஸாமர்க்கண்டிலிருந்து துரத்திவிடப் பட்டதனால் அவர் கீழ் முகமாக வந்து கி. பி. 1504-ல் காபூலைக் கைப்பற்றிக் கொண்டார். அவர் தாம் ஒரு பெரிய ராஜ்யத்தை யாள வேண்டுமானால், இந்தியாவை நோக்கிச் செல்வது தான் சிறந்தவழி என்று கண்டறிந்தார். அதனால், அவர் இந்நாட்டின்மீது படையெடுத்துவருவதற்குத் தக்க சமயம் வாய்ப்பதை எதிர்பார்த்திருந்தார். லோடி அரசனின் விரோதிகள் அவரை அழைக்கவும், அது அவருக்குக் கும்பிடப் போன தெய்வம் குறுக்கிட்டது போலாயிற்று. பாபர்

பானிப்பட்டு

பானிப்பட்டுச் சண்டையில் இப்ராஹீம் லோடியை வென்று கொன்ற பின்னர் டில்லியையும் ஆக்ராவையும் கைப்பற்றிக் கொண்டார். அப்பொழுது அவருக்குக் கிடைத்த அளவற்ற செல்வத்தைத் தமது போர்வீரர்களுக்கும், காபூல் நாட்டுக் குடிகளுக்கும் பங்கிட்டுக்கொடுத்தார். பாபர் ஆப்கானிய பிரபுக்களை வெகு சாமர்த்தியமாகச் சிநேகஞ் செய்து கொண்டு விட்டதனால், அவர் ஹிந்துக்களைத் தான் எதிர்த்துச் சண்டையிட்டு ஜயிக்க வேண்டியிருந்தது.

அப்பொழுது, ராஜபுத்திர வரசர்கள் சித்தூர் அரசரான ராஞுஸாங்கா என்பவரைத் தங்களுக்குத் தலைவராக செய்து கொண்டு பாபருடன் சண்டை செய்யத் தயாரானார்கள். பாபர் தமது வெற்றிக்கு ஒருகால் இடையூராக ஏற்படக்கூடிய மதுவை நீத்தும் இனித் தாம் குடிப்ப தில்லை எனச் சபதம் செய்து கொண்டும் வீரா வேசத்துடன் சண்டைசெய்து ராஜபுத்திரரை முற்றிலும் வென்றார். அந்தச் சண்டை கி. பி. 1527-ல் கான்வாஹா என்னுமிடத்தில் நடந்தது. பிறகு, பாபர் சாண்டேரி என்னுங் கோட்டையை முற்றுகை செய்து மாளவத்தைப் பிடித்துக் கொண்டார். அதன் பின்னர் ராஜபுத்திரர்கள் அவரை எதிர்த்து வரவில்லை.

ராஜபுத்திரருடன் சண்டை

கி. பி. 1528-ல், பீஹாரிலும், வங்காளத்திலும் கலகஞ்செய்து பாபருக்கு விரோதமாய்க் கிளம்பின ஆப்கானியரை அவர் கோக்ராவில் அடியோடு தோற்கச்செய்து அந்த இரண்டு நாடுகளையும் தமக்குச் சொந்தமாக்கிக் கொண்டு விட்டார். இவ்வாருக அவருடைய ராஜ்யம் ஹிமாலயம் முதல் க்வாலியர் வரையிலும், ஆக்ஸஸ் நதி முதல் வங்காளம் வரையிலும் பரவி விட்டது. ஆயினும், அந்த ராஜ்யத்திற்குச் சத்துருக்களால் உண்டாகக்கூடிய பயம் யாதொன்றுமின்றி வேரூன்றி விடவில்லை. பாபர் ஜயித்த மன்னர்கள் அவருடைய வீரத்திற்கும், பராக்கிரமத்திற்கும் அஞ்சி ஒருவாறுதான் அவருக்குக் கீழ்ப்பட்டிருந்தார்கள். அவருடைய பிரபுக்களும், ஜாகீர்தார்களும் குடிகளினிடமிருந்து நிலவரி, வியாபாரவரி, ஹிந்துக்கள் செலுத்தவேண்டிய தலைவரி முதலியவற்றை வசூல் செய்து கொண்டு, அவ

பரப்பு

சிற்றரசர்கள்

ருக்கு நிலைவரமான தொகைகளை வரியாகச் செலுத்தியும் வேண்டும்பொழுது போர்வீரர்களை யனுப்பி உதவியும் வந்தார்கள். அவருக்கு இரண்டரைக் கோடி ரூபாய்க்கு மேல் வருமானங் கிடைத்தது.

பாபர் தமது சரித்திரத்தில் "ஹிந்துஸ்தானத்தின் நகரங்கள் அழகற்றவைகள். அவையாவும் ஒரே விதமானவை. அங்கே தோட்டங்களுக்குச் சுவர்களில்லை. அந்நாட்டின் பெரும்பாகமும் ஒரு சமவெளி. அங்குள்ள ஜனங்கள் குரூபிகள். அவர்கள் இன்பங்கள் ஒன்றையும் அறியார்கள். அவர்களுக்கு நுண்ணறிவு, மரியாதை, அன்பு, கைத்தொழிற் பயிற்சி, சிற்பத்தில் தேர்ச்சி முதலியன இல்லை. அவர்களுக்குக் குதிரைகளில்லை. அந் நாட்டில் திராக்ஷையாவது, கொம்மட்டிக்காயாவது இல்லை. அங்கே பனிக்கட்டி, ஸ்நான கட்டம், கல்லூரி, மெழுகுவத்தி முதலியவைகளும் இல்லை," என்று நமது நாட்டை இகழ்ந்து எழுதியிருக்கிறார்.

பாபர் இந்தியாவைப் பழித்தல்

கி. பி. 1530-ல் பாபர் தமது 49-ம் வயதில் ஆக்ராவில் இறந்துபோனார். அவருடைய தேகம் காபூலில் அடக்கஞ் செய்யப்பட்டது.

பாபர் என்றால் சிங்கம் என்று பொருள். அவரிடம் பராக்கிரமம், வீரம், தைரியம், பலம் முதலிய குணங்கள் இருந்ததனால், அப்பெயர் அவருக்குப் பொருந்தியதே ஆகும். அவர் குதிரையேறிச் சவாரி செய்வதிலும், நீந்துவதிலும் வெகு கெட்டிக்காரர். அவரிடம் தயை, அன்பு, விடாமுயற்சி முதலிய குணங்கள் சிறந்து விளங்கின. அவர் ஒரு பாரஸிகக் கவி. அவருக்கு உருது பாஷையிலும் தேர்ச்சியுண்டு. அவர் தம்முடைய சரித்திரத்தில் எதை

குணம்

யும் ஒளிக்காமல் தமது குணங்களையும், குற்றங்களையும் உண்மையாக எழுதியிருக்கிறார்.

ஹுமாயூன்

பாபரின் மைந்தரான ஹுமாயூன் பட்டத்துக்கு வந்தபொழுது அவருக்கு வயது இருபத்துமூன்று. அவர் நன்றாகக் கற்றவர். வான சாஸ்திரத்திலும், பூவர்ணனை சாஸ்திரத்திலும் அவர் தேர்ச்சி பெற்றவர்; சிறந்த புத்திமான்; மிகுந்த தயாள குணமுடையவர். அவருக்கு யுத்தத்திலும், ராஜ்ய பரிபாலனத்திலும் அனுபவம் உண்டு. ஆனால், அவரிடம் ஊக்கம், விடாமுயற்சி முதலிய இன்றியமையாத நற்குணங்கள் இல்லை. அதனாற்றான் அவர் பெருந்துன்பங்களுக்காளானார்.

மூன்று சத்துருக்கள்

ஹுமாயூனுக்கு அவருடைய சகோதரர்கள், பீஹார் நாட்டரசரான ஷர்ஷா, கூர்ஜர மாளவ நாடுகளையாண்டு வந்த பஹதுர்ஷா ஆகிய மூன்று பெருஞ் சத்துருக்கள் இருந்தார்கள். காபூல், காண்டஹார், பஞ்சாப் ஆகிய நாடுகளுக்குக் கவர்னராக விருந்த காம்ரான் என்னும் அவருடைய மூத்த சகோதரன் அவருக்குத் துருக்கிஸ்தானத்திலிருந்தும், ஆப்கானிஸ்தானத்தி லிருந்தும் படைத்துணை வரவொட்டாமல் தடுத்து வந்தான்.

பஹதுர்ஷா

கி.பி. 1535-ல், ஹுமாயூன் கூர்ஜரவரசரான பஹதுர்ஷாவை எதிர்த்துச் சென்று அவரை முற்றிலும் வென்று மாளவத்தையும், கூர்ஜரத்தையும் தமது வசப்படுத்திக் கொண்டார். ஆனால், அவற்றை பஹதுர்ஷா மறுபடியும் பிடித்துக் கொள்ளாதபடி சிறந்த ஏற்பாடுகளைச் செய்வதற்குள் பீஹாரரசரான ஷர்ஷா வங்காளத்தின் மீது படையெடுத்துச் சென்று அதைப் பிடித்துக் கொண்டு விட்டதனால், ஹுமாயூன் பஹதுர்ஷாவை அம்மட்டிலேயே

விட்டு விட்டு ஆக்ராவுக்குச் சென்றார். அதுதான் தக்க சமயம் என்று பஹதுர்ஷா போர்ச்சுகீசியருடைய உதவியைக் கொண்டு தமது நாடுகளைக் கைப்பற்றிக் கொண்டு விட்டார்.

வங்காளத்தை நோக்கிச் சென்ற ஹூமாயூன் ஓராண்டளவும் ஆக்ராவில் தங்கிக் கஞ்சாகுடித்தும் ஆடிப்பாடியும் காலத்தை வீணிற் கழித்து விட்டு தாம் பஹதுர்ஷாவி னிடமிருந்து மாளவத்தையும், கூர்ஜரத்தையும் ஜயித்துக்கொண்டு பின்பு ஷர்ஷாவைத் தண்டிக்கப் போகலாம் என எண்ணினார். கடைசியில் அவர் கி. பி. 1537-ம் வருஷம் ஜூலை மாதத்தில் புறப்பட்டுச் சென்று சூனர் கோட்டையைப் பிடித்துக் கொண்டார். பின்னர் அவர் வங்காளத்திற்குவந்து கார்என்னுமிடத்தில்வழக்கம் போல் ஆறு மாதகாலம் இன்பத்தில் மூழ்கியிருந்தார். கி. பி. 1539-ம் வருஷம் மே மாதத்தில் ஷர்ஷா ஹூமாயூனை பக்ஸார் என்னுமிடத்திற்கருகில் திடீரென்று எதிர்த்துத் தோற்கடித்துவிட்டார். ஹூமாயூன் கங்கா நதியை நீந்திக் கடந்து உயிர்தப்பியோடி ஆக்ராவுக்கு வந்து சேர்ந்தார். அதன் பின்பு, இருதிறத்தாரும் சண்டைக்கு வேண்டிய ஏற்பாடுகளை யமைத்துக்கொண்டு கி. பி. 1540-ல் கன்னோசிக்கப்பால் ஒருவரை யொருவர் எதிர்த்துப் போர் செய்தார்கள். ஹூமாயூன் தோல்வியடைந்து, நாட்டைவிட்டு உயிர் பிழைக்க வோடினார்.

வங்காளத்தில் சண்டைகள்

அவர் மூன்று வருஷகாலம் ராஜபுதனம், ஸிந்து நாடுகளின் பாலைவனங்களிற் சுற்றித்திரிந்து, சொல்லரிய துன்பங்களை அனுபவித்துக் காலங்கழித்தார்.

நாட்டை விட்டகன்றது

பின்பு, அவர் பாரஸிகத்தை நாடிச் செல்லும் வழியில் கி. பி. 1542-ம் வருஷம், அக்டோபர் மாதம் 15-ம் தேதி

யன்று அமரக்கோட்டையில் அவருக்கு அக்பர் பிறந்தார். அப்பொழுது அவர் தம்மிடத்திருந்த கஸ்தூரியை அங்கிருந்தவர்களுக்குக் கொடுத்துத் தமது மைந்தரின் கீர்த்தி அதன் மணத்தைப் போன்று பரவவேண்டும் என விரும்பினார். அது அவ்வாறே ஆயிற்று.

அக்பர் பிறப்பு

பின்னர் ஹுமாயூன் பாரஸிகவரசனுடைய உதவியைக் கொண்டு தமது சகோதரர்களிடமிருந்து காண்டஹாரையும், காபூலையும் ஜயித்துக் கொண்டு அங்கே ஆட்சி செய்து வந்தார். அப்பொழுது அவருடைய சகோதரர்கள் இறந்து விட்டதனால், ஹுமாயூனுக்குக் கொஞ்சம் அமைதி உண்டாயிற்று.

காபூலில் ஆட்சி

ஹுமாயூன் நாட்டை விட்டோடிப் போகவும், ஷர்ஷா ஹிந்துஸ்தானத்தின் பெரும் பாகத்தையும் வென்று மிக்க விமரிசையாக ராஜ்யபாரம் நடத்திவந்தார். அவர் சிறந்த புத்திமான். அவர் சண்டையிலன்றித் துரைத்தனத்தை நடத்துவதிலும் கைதேர்ந்தவர். அவர் ஹிந்துக்களை பக்ஷமாய் நடத்தி நாட்டில் அமைதியை உண்டுபண்ணினார். அவர் குடிகளின் நன்மையை நாடிச் சட்ட திட்டங்களை ஏற்படுத்தினார். அவர் குற்றஞ் செய்தவர்களைக் கடுமையாய்த் தண்டித்ததனால், ஜனங்கள் அவருக்குப் பயந்து நடுங்கி உயிர் வாழ்ந்து வந்தார்கள். அவருடைய ஆட்சியில் திருடர்களாவது, கொள்ளைக்காரர்களாவது இல்லை. அவருடைய காலத்திற்றான் முதன் முதல் தபால் வண்டிகள் ஏற்பட்டன. அவர் பிரயாணிகளின் சௌகரியத்திற்காகப் பாதையோரங்களில் நிழல் தரும் மரங்களை வைத்தும், கிணறுகள் வெட்டியும், சாவடிகள் கட்டியும் உதவினார்.

ஷர்ஷா

கி. பி. 1545-ல் கலிஞ்சார் கோட்டையை முற்றுகை செய்து வருகையில் மருந்துக் கிடங்குத் தீப் பற்றி வெடித்துக் காயப்பட்டதனால் அவர் இறந்து போனார். அவருக்குப் பின் அவர் மகன் இஸ்லாம்ஷா என்பவன் ஒன்பது வருஷகாலம் ஆட்சி செய்திருந்து இறந்து போனான். அப்பொழுது அவனுடைய மைத்துனனான அடில்ஷா அரசனானான். அவன் ராஜ்ய பரிபாலனத்தை முற்றிலும் தனது மந்திரியான ஹேமு என்பவனிடம் ஒப்புவித்திருந்தான். அப்பொழுது ஷர்ஷாவின் வம்சத்தைச் சேர்ந்த இப்ராஹீமும், ஸிகண்டரும் டில்லி ஸிம்மாஸனத்தைப் பற்றித் தமக்குள் சண்டையிட்டு வந்தார்கள். கடைசியில் பஞ்சாப், டில்லி, ஆக்ரா நாடுகள் ஸிகண்டர் வசமாயின. அந்தச் சமயத்தில் அதாவது கி. பி. 1555-ல், ஹுமாயூன் இந்தியாவின் மீது படையெடுத்து வந்து ஸிகண்டரை ஸர்ஹிண்ட் என்னுமிடத்தில் வென்று தாம் பதினைந்து வருஷங்களுக்கு முன் இழந்துவிட்ட ஸிம்மாசனத்தை மீண்டும் அடையப் பெற்றார். ஆனாலும் அப்பொழுது அவருக்கு ஒரு மிகச் சிறியதான ராஜ்யம் தான் சொந்தமாக இருந்தது. அதையும் அவர் ஆறுமாத காலந்தான் ஆண்டார். ஒரு நாள் அவர் படியினின்றுந் தடுக்கி விழுந்து உயிர் நீத்தார்.

ஷர்ஷாவின் சந்ததியார்

ஹுமாயூன் மறுபடி அரசரானது

ஆயுள் முழுவதும் இடர்ப்பட்டு உயிர் வாழ்ந்த அவர் இடறி விழுந்து இறந்ததும் விந்தையேயாம்! விந்தையினும் விந்தை அதிர்ஷ்டஹீனரான அவரை 'அதிர்ஷ்டசாலி' எனும் பொருள்படும் ஹுமாயூன் என்றழைத்தது!

மரணம்

iii. அக்பர் மஹா சக்ரவர்த்தி

கி. பி. 1556-ம் வருஷம் பிப்ரவரி மாதத்தில் ஹுமாயூனின் மூத்த குமாரரான அக்பர் தமது பதினான்காம் வயதில் முடி சூட்டப் பெற்றார். அப்பொழுது அவருக்கு மிகச்சிறிய நாடுதான் சொந்தமாக விருந்தது. காபூல், காண்டஹார், காஷ்மீரம், ராஜபுதனம், ஸிந்து, கூர்ஜரம், வங்காளம், காமரூபம் முதலான பல நாடுகளும் தனித்தனி ராஜ்யங்களாக விருந்தன. அக்பர் சுமார் 30 வருஷகாலம் வரையில் பல சண்டைகள் செய்து தமது ராஜ்யத்தைப் பெருக்கிக் கொண்டார்.

ராஜ்யம் பரவினது

ஹுமாயூன் இறந்ததும் ஹெமு ஒரு பெருஞ்சேனையைத் திரட்டிக்கொண்டு டில்லியின் மீது படையெடுத்து வந்து அதைப் பிடித்துக்கொண்டு தானே அரசனென விளங்கினான். ஆனால் அக்பரும், அவருடைய அத்தையின் புருஷரான பைராம்கானும் அவனை எதிர்த்துச் சென்று கி. பி. 1556-ம் வருஷம் நவம்பர் மாதத்தில் பாணிப்பட்டில் அவனுடன் போர் செய்து அவனைத்தோற்க அடித்துக் கொன்று விட்டார்கள். உடனே டில்லியும், ஆக்ராவும் அக்பர் வசமாயின. அப்பொழுது ஸிகண்டர் பஞ்சாபை விட்டு வங்காளத்துக்கு ஓடிப்போய் விட்டதனால், அக்பருக்குப் பஞ்சாபும் கிடைத்துவிட்டது.

பாணிப்பட்டு

கி. பி. 1560-ல் அக்பர் பைராம்கானை மெக்காவுக்கனுப்பிவிட்டுத்தாமே நேரில் ராஜ்ய பரிபாலனஞ் செய்யத் தொடங்கினார். அவருடைய செவிலித்தாயின் மகனான ஆதம்கான் அரசரின் மந்திரியான ஷாம்ஸுடீன் என்பவரைக் கொன்று விட்டதனால், அவர் கோபங்கொண்டு அவனைக்கொன்று அவனுடலைக்

சில துரோகிகள் தொலைந்தது

கோட்டைக்கு வெளியில்வீசி யெறிந்து விட்டார். சீக்கிரத்திலேயே அவன் தாயும் புத்திர சோகத்தினுல் இறந்து போனுள். அவர்கள் தொலேந்ததும் நன்மையே யாயிற்று.

அக்பர் முதலில் மாளவத்தையும், பீஹாரையும் ஜயித்துக்கொண்டு மத்திய இந்தியாவிலுள்ள **காண்டவன** என்னும் நாட்டின் மீது படை யெடுத்துச் சென்ருர். அந்நாட்டரசியான **துர்க்காவதி** என்பவள் மிக்க வீரத்துடன் சண்டை செய்தாளாயினும், அந்நாடு அக்பர் வசமாய்விட்டது.

துர்க்காவதி

கி. பி. 1561-ல் அக்பர் ஜயபுரத்தரசரது மகளேத் தாம் மணந்து கொண்டும் ஜோதிபுரத்தரசரது பெண்ணேத் தமது மகன் ஸலிமுக்கு மணஞ்செய்வித்தும், ராஜபுத்திரர்களேச் சிறந்த நண்பர்களாக்கிக் கொண்டார். மீவார் நாட்டரசர்மட்டில் அக்பரை மதிக்கவில்லே. அதனுல், அக்பர் கி. பி. 1567-ல் சித்தூரை முற்றுகை செய்து பிடித்துக் கொண்டார். அந்நாட்டரசரான **ராணுபிரதாபஸிங்க்** மறுபடியும் மறுபடியுஞ் சண்டையிட்டுக் கடைசியில் **உதயபுரம்** என்னுமிடத்தில் தமது அதிகாரத்தை ஸ்தாபித்து ஆட்சி செய்துவந்தார். அடுத்த வருஷத்தில் அக்பர் கூர்ஜரத்தையும், வங்காளத்தையும் வென்றுகொண்டார்.

சித்தூர் முற்றுகை

பிரதாபஸிங்க் மறுபடியும் கலகஞ் செய்யவும், அக்பர் அவரை வென்று வரும்படி **ராஜாமான்ஸிங்கை** யனுப்பினுர். கி. பி. 1576-ம் வருஷம் ஜூன் மாதத்தில் **ஹல்டிகாட்** என்னுமிடத்தில் மான்ஸிங்க் மீவாரரசரை யடியோடு தோற்க அடித்துவிட்டார். பின்னர்க் கி. பி. 1579-ல் அக்பரின் சகோதரரான **ஹகிம்மிர்ஜா** வென்பவர் காபூலில் கலகஞ்செய்து பஞ்சாபின் மீது படையெடுத்து வந்து லாகூரை எதிர்த்தார். மான்ஸிங்க் அவருடன் சண்டையிட்டுத் தோற்றுப் போனதனுல்,



அக்பர்தாமே நேரிற் சென்று அவரைவென்று அவரையே தமது பிரதிநிதியாக ஏற்படுத்தினர். அக்பர் அவ்வாறே மும்முறை கலகஞ்செய்து கிளம்பின மாளவ அரசனை

வென்று அவனையே அந்நாட்டிற்குக் கவர்னராக நியமித்தார். கி. பி. 1586-ல் ஹாகிம் இறக்கவும், காபூல் அக்பருக்குச் சொந்தமாய் விட்டது. அவர் அதற்கு மான்ஸிங்கை கவர்னராக்கித் தாமும் லாகூரைத் தமது ராஜ்யத்தின் தலைநகராக்கிக் கொண்டார். கி. பி. 1587-ல் காஷ்மீரமும் அக்பர் வசமாய் விட்டது. அதான மூன்று வருஷங்களுக்குள் காண்டஹாரும், கத்தியவாரும், ஸிந்துநாடும் அக்பருக்குச் சொந்தமாய் விட்டன. இவ்வாறாக ஹிந்துஸ்தானம் முழுவதும் அக்பருடைய ராஜ்யத்திற் சேர்ந்துவிட்டது.

ஹிந்துஸ்தானம் முழுமையையும் வென்றது

கி. பி. 1595-ல் அக்பர் தமதுமகன் மூராட்டை ஆமதுநகரத்தை ஜயித்து வரும்படி யனுப்பினார். அவர் சாண்ட்பிபியுடன் சமாதானஞ் செய்துகொண்டு பீராரைச் சம்பாதித்தார். ஆனால், ஆமதுநகரத்தில் சீக்கிரத்திலேயே கலகங்கள் உண்டானதனால், அக்பர் தாமே நேரிற்சென்று ஆமதுநகரத்தை வென்றுவிட்டார். சாண்ட்பிபி கொலையுண்டு போனதனால், அக்பருடைய வேலை எளிதாய் முடிந்தது.

சாண்ட்பிபி

அக்பர் தக்ஷிணத்திலிருந்த பொழுது ஸலிம் அலஹாபாத்திலிருந்த பொக்கிஷத்தைக் கைப்பற்றிக் கொண்டு தாமே அரசரெனத் தெரிவித்தார். அன்றியும், அவர் தமது தந்தையின் சிறந்த நண்பரும், மந்திரியுமான அபுல்பஜல் என்பவரைக் கொல்லும்படி ஏற்பாடு செய்தார். என்றாலும், தந்தை தனயன் செய்த குற்றங்களை மன்னித்து விட்டார்.

ஸலிமின் கலகம்

கி. பி. 1605-ம் வருஷம் ஜனவரி மாதம் 17-ம் தேதி வியாழக்கிழமையன்று காலையில் அக்பர் தேக வியோக

மானர். அவர் தமது பிரபுக்களின் மன்னிப்பையும், கடவு ளின் அருளையும் வேண்டிய வண்ணமாக உயிர் நீத்தார்.

கி. பி. 1873-ல் இந்தியாவுக்கு ராஜப் பிரதிநிதியாக வந்த நார்த்ப்ரூக் என்பவர் அக்பருடைய சமாதியின் மேல் ஆங்கிலேயருக்கு அவ ரிடமிருந்த மரியாதையை உணர்த்தும் பொருட்டு நேர்த்தியான ஒரு மண்டபத் தைக் கட்டுவித்தார்.

ஞாபகச் சின்னம்

அசோகருடைய காலத்திற்குப் பின்பு இந்தியாவை உலகம் புகழும் கீர்த்தியுடன் ஆட்சிசெய்தவர் அக்பர் மஹா சக்ரவர்த்தியே யாவர். இன்றைக்கு நானூறு வருஷங்களுக்குமுன்னமேயே அக்பர், இப்பொழுது கல்வி கேள்விகளிலும், நாகரிகத்திலும், ராஜதந்திரங்களிலும் நிபுணர்களென வழங்கிவரும் ஆங்கிலேயர்கள் கூடச் சிறந்தவைகளென்று கொண்டும், அவற்றுள் சிலவற்றைத் தாங்கள் முழுவதும் அநுஷ்டித்தும் வருவனவான உயர்ந்த துரைத்தன அமைப்புக்களை யுண்டு பண்ணி மிக்க விமரி சையாக ராஜ்யத்தை ஆண்டுவந்தார் என்றால் அவருடைய சிறப்பை விவரித்துக் கூறவும் வேண் டுமோ? அவர் தம்மைக் கடவுளினுடைய பிரதிநிதியெனக் கருதி நடந்தொழுகினார். அவர் சிறு பிராயம் முதற்கொண்டே ஜாதி மதங்களின் வேற்றுமைகளைப் பாராட்டாது தமது குடிகள் எல்லோரையும் ஒன்று சேர்த்தும், ஒரு மனப்படுத்தியும், சுய நலங்களைப் பாராட்டாமற் பொது நன்மைக்கான காரியங்களையே கவனிக்குமாறு அவர்களைப் பயிற்றியும், அவர்கள் அமைதியும் சந்தோஷமும் செல்வமும் உண்டாகப் பெற்று வாழும்படி தாம் ராஜ்யபரிபாலனஞ்செய்யவேண்டு மென்றும் ஆசை கொண்டிருந்தார். அவர் தாம் ஹிந்துக் களுடைய கூட்டுறவைக்கொண்டு தான் தமது ராஜ்யத்தை

ஆட்சியின் சிறப்பு

நிலை நிறுத்த முடியுமென்பதை உணர்ந்து, அவர்கள் செலுத்திவந்த ஜஸியாவென்னும் தலைவரியையும், யாத்திரிகர்கள் செலுத்திவந்த வரியையும் தள்ளிவிட்டார்.

மணம்

அக்பர் ராஜபுத்திரப் பெண்களைத் தாம் மணந்தும், தமது பிள்ளைகளுக்கு மணஞ்செய்வித்தும், அவர்களுடைய நட்பைச் சம்பாதித்துக் கொண்டார். அன்றியும் அவர் அவர்களைப் பெரிய பெரிய உத்தியோகங்களி லமர்த்தினர்.

உத்தியோகஸ்தர்கள்

ராஜாதோடர்மால் என்னும் அவருடைய சம்பிரதி நிலங்களை அளவிட்டும், வகுப்புக்களாகப் பிரித்தும், வரிகளை விதித்தும் நிலவரி சம்பந்தமான ஏற்பாடுகளை மிகத் திருத்தமாகச் செய்து வைத்தார். குடிகள் அரசருக்குத் தமது வருமானத்தில் மூன்றிலொருபங்கை வரியாகச் செலுத்தி வந்தார்கள். விளைவு குறைவுபடவும், வரிகளும் மட்டுப்பட்டன. வரியைப் பணமாகவும் தானியமாகவும் செலுத்தக்கூடும். குடிகள் தமக்கு வேண்டிய பண உதவியைப் பெற்று அந்தப் பணத்தைக் கொஞ்சங் கொஞ்சமாகச் சர்க்காருக்குத் திருப்பிக் கொடுத்து வந்தார்கள். வரி வசூல் சம்பந்தமான சட்டங்களும், பாக்கி ஜாப்தாக்களும் மதபேதமில்லாமல் செய்யப்பட்டிருந்தன.

ராஜ்யப் பிரிவுகள்

அக்பர் தமது ராஜ்யத்தைப் பதினைந்து மாகாணங்களாகப் பிரித்து, ஒவ்வொன்றுக்கும் ஒரு கவர்னரை நியமித்தார். அவர்களுக் கடங்கி **மன்ஸப்தார்கள்** என்னும் அநேக உத்தியோகஸ்தர்கள் வேலை பார்த்து வந்தார்கள். அவர்களுடைய கடமைகளும், உரிமைகளும் தெளிவாக விவரிக்கப்பட்டிருந்தன. அவர்கள் யுத்த காலத்தில் அரசருக்குத் துணை வரவேண்டும்.

அக்பர் எழுதவும் படிக்கவும் அறிந்திலரெனினும் சிறந்த கல்விமானேயாவர். அவருக்கு ஒப்பற்ற ஞாபக சக்தியிருந்தது. அவருடைய புத்தகசாலையில் சுமார் 24,000 புத்தகங்கள் இருந்தன. அவற்றை யவர் பெரிய வித்வான்களைக் கொண்டு எழுதியும், சித்திரிப்பவர்களைக் கொண்டு சித்திரித்தும் வைத்தார். அதன் பொருட்டு அவர் 65 லக்ஷம் ரூபாய் வரையில் செலவிட்டார். அவர் பிறர் படிக்கத் தாம் கேட்டுவருவார். அவர் ஹிந்துக்களின் இரண்டு பெரிய இதிஹாஸங்களையும் பாரஸிகபாஷையில் எழுதி வைத்திருக்கிறார். அக்பருக்குச் சங்கீதத்திலும், சித்திரம் எழுதுவதிலும் பிரியம் அதிகம்.

கல்விக்கான ஏற்பாடுகள்

அக்பருக்குப் பிற மதங்களில் விரோதம் கிடையாது. அவர் ஸிக்ரியில் அதற்கென்று கட்டுவித்த ஒரு அழகிய மண்டபத்தில் சகல மதத்தினர்களையும் வரவழைத்து அவர்களைத் தம் முன் மதவாதம் செய்யும்படி விட்டுத் தாம் அவர்கள் சொல்வதைக் கேட்டுக் களிப்படைவார். ஆயினி அக்பரீ என்னும் அவருடைய ஜீவிய சரித்திரத்தை எழுதிய அபுல் பஜல் என்பவருடைய சேர்க்கையினால் தான் அக்பருக்கு ஒப்பற்ற மத விரோதமில்லாமையும், சாத்விக புத்தியும் உண்டாயின. அவர் தமது குடிகளை அவரவர்களுடைய இஷ்டம்போல் தெய்வ வணக்கம் செய்யும்படி விட்டு விட்டார். அக்பர் யாவருக்கும் பொதுவான தேய்வமதம் என்பதை உண்டாக்கி அதை அனைவரும் அநுஷ்டிக்க வேண்டுமென்று விரும்பினார். ஆனால் அந்த எண்ணம் நிறைவேறவில்லை. அக்பரின் மதத்தரிப்பைக் கேள்வியுற்று மிக்க வியப்பை யடைந்த

மதவாராய்ச்சி

தேய்வமதம்

பலமேனாட்டினர் அவரைக் காணவேண்டுமென்று இந்தியாவுக்கு வந்தார்கள்.

சீர்திருத்தங்கள்

அக்பர் மிகவும் இளம்பிராயத்தில் கன்னிகைகளுக்கு மணஞ் செய்விக்கக் கூடாதென்றும், சதிகள் தமது பதிகளுடன் சககமனம் செய்யக்கூடாதென்றும் கட்டளையிட்டார். ஆயினும் அந்த வழக்கங்கள் முற்றிலும் நின்று விடவில்லை. கொஞ்சம் குறைவுபட மாத்திரம் ஆரம்பித்தன.

தோற்றமும் ; குணமும்

அக்பர் பரந்த மார்பும், பருத்த தோள்களும், நீண்ட கைகளும், உயர்ந்த வடிவமும் உடையவர். அவருடைய கண்கள் விசாலமாயும், நெற்றி அகலமாயும் இருக்கும். அவருடைய குரல் கணீரென்றிருக்கும். அவர் சிங்கத்தின் பலம் பொருந்தியவர். நீந்துவதிலும், குதிரையேறிச் சவாரி செய்வதிலும், குதிரையின் மீதிருந்து பந்தாடுவதிலும் அவருக்குப் பிரியம் அதிகம். அவர் இரவில் நெருப்புப் பந்தை வைத்துக் கொண்டு ஆடுவார். அவர் மிதமாக உண்டும் உடுத்தும் வந்தார். அவர் வாரத்தில் இருமுறைதான் மாமிசம் புசிப்பார். அவர் மரியாதையும், தயையும் உள்ளவர். அவர் மிதமாகத்தான் பேசுவார். முகலாய ராஜ்யத்தை உண்மையிற் ஸ்தாபித்தவர் அக்பரே யாவர். அவர் தக்க உத்தியோகஸ்தர்களை நியமித்து ராஜரீகம் நடத்திவந்தார். அவருடைய மதத்தரிப்பு அப்பொழுது ட்யூடர் வம்சத்தரசர்கள் அளவின்றி கொண்டொழுகின மதத்வேஷத்தைக் கண்ட ஆங்கிலேயருக்கு அளவில்லாத ஆச்சரியத்தை உண்டாக்கிற்று. அக்பருக்கு அசோகரை யல்லாது வேறு எவரும் நிகராக மாட்டார்கள்.

iv. ஜஹாங்கீரும், ஷாஜஹானும்

அக்பருக்குப் பின்பு அவர் மைந்தர் ஸலிம் என்பவர் ஜஹாங்கீர் என்னும் பெயருடன் கி. பி. 1605-ல், பட்டத்துக்கு வந்தார். அவர் தமக்கு விரோதமாய்க் கலகஞ் செய்த தமது மகனை குஸ்ருவைக் கண்ணைக் குத்திச் சிறையிலிட்டு விட்டார். அவர் அவனுக்குத் துணைவந்தவர்களைக் கழுவேற்றினர். கி. பி. 1622-ல் குஸ்ரு இறந்து போனார்.

குஸ்ரு

ஜஹாங்கீர் தமது தந்தையை வழிபட்டு நடந்தொழுகினதனுல்தான் அவருடைய ராஜ்யம் நிலைத்திருந்தது. அவருடைய ராஜ்யத்தினின்றும் பாரஸிகர்கள் காண்டஹாரையும், மாலிக் ஆம்பர் ஆமதுநகரத்தையும் கைப்பற்றிக் கொண்டு விட்டார்கள். அவருடைய மைந்தர், குர்ரம் என்பவர் மீவாரரசரான அமரஸிங்கை வென்று அவரைத் தமது தந்தையின் அதிகாரத்திற் குட்படுத்தினர்.

ராஜ்யம்

கி. பி. 1616-ல் பஞ்சாபில் ஒரு கொடிய கொள்ளை நோய் உண்டாகி, அது ஹிந்துஸ்தானத்தின் பெரும்பாகத்திற்கும் பரவி வந்து விட்டது. அதில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் மாண்டு போனார்கள்.

கொள்ளை நோய்

ஜஹாங்கீர் ஒப்பில்லாத அழகு வாய்ந்த நூர்ஜஹான் என்னும் பாரஸிக ஸ்திரீயை அவளுடைய புருஷன் இறந்து போன பிறகு விவாகஞ் செய்து கொண்டு, ராஜகாரியங்களனைத்தையும் அவளிடம் ஒப்புவித்துவிட்டுத் தாம் உண்டு குடித்துச் சுகமாகக் காலங் கழித்து வந்தார்.

நூர்ஜஹான்

நூர்ஜஹான் சாமர்த்தியமும், நற்குணமும் வாய்ந்தவள். அவள் ராஜ்யத்தைச் செவ்வனே நடத்தி வந்தாள்.



நூர்ஜஹானின் ஆட்சி

பன்னிரண்டு ராசிகளின் உருவங்களும் செதுக்கப்பட்டுள்ள பொன் நாணயங்களை நூர்ஜஹான்தான் செய்வித்தாள் எனச் சிலர் எண்ணுகிருர்கள். நூர்ஜஹான் தன்னிடம் பிரியாது சொல்ல வருபவர்களின் சௌகரியத்திற்காகத் தனது அரண்மனைவாயிலில், பண்

டைத் தமிழரசர்களைப் போன்று, மணியொன்று கட்டுவித்தாள். அதன் ஓசை காதிற்பட்டதும் அவள் வெளியே வந்து வழக்குக்களை விசாரித்துத் தீர்ப்புச் சொல்லுவாள். நூர்ஜஹான் தயாளகுண முடையவள். அவள் தன் கைப்பணத்தைச் செலவிட்டுத் திக்கற்ற பெண்களுக்கு விவாகம் செய்து வைத்தாள்.

நூர்ஜஹான் தனக்கு ஷர்கானிடம் உண்டான பெண்ணை ஜஹாங்கீர் மகனான ஷார்யாருக்கும், தனது அண்ணன் மகளை ஜஹாங்கீரின் மற்றொரு மைந்தரான ஷாஜஹானுக்கும் மணஞ் செய்வித்துத் தனது அதிகாரத்தைப் பலப்படுத்திக் கொண்டாள். ஆனால், அவள் தனது மருமகனான ஷார்யாரிடம் அதிக அன்பு பாராட்டி வந்ததை யறிந்த ஷாஜஹான் கலகஞ் செய்யவும், அவள்

ஷாஜஹான் கலகஞ் செய்தது

மகபத்கான் என்னும் தனது சேனைத் தலைவனை யனுப்பி ஷாஜஹானைத் தோற்க அடித்தாள். பின்னர் மகபத்கான் ஷாஜஹானுடன் சேர்ந்துகொண்டு கி. பி. 1626-ல் ஜஹாங்கீரைச் சிறைப்படுத்தி விட்டான். ஆனால், நூர்ஜஹான் அவரைத் தந்திரமாகச் சிறை மீட்டு விட்டாள். கி. பி. 1627-ல் ஜஹாங்கீர் மரணமடைந்தார். நூர்ஜஹான் அதன் பின்னர் 18 வருஷகாலம் உயிரோடிருந்து கி. பி. 1645-ல் காலஞ் சென்றாள். அவள் இருந்த வரையில் ஷாஜஹான் அவளைச் செம்மையாக உபசரித்து நடத்தி வந்தார்.

ஜஹாங்கீர் மதுபானப் பிரியர்; சிற்றின்பங்களிலேயே மனம் நாடப் பெற்றவர். அவருக்குச் சித்திரம்

அரசரின் விருப்பம்

எழுதுவதிலும், சிருஷ்டியின் வினோதங்களைக் கண்டு களிப்பதிலும் ஆசை யதிகம். அவருக்குச் சங்கீதத்திலும், சிற்ப சாஸ்திரத்திலும், சித்திரம் எழுதுவதிலும்

தேர்ச்சி இருந்தது. அவருடைய அரண்மனையின் சுவர்கள் நானாவிதமான படங்களினாலும் அலங்கரிக்கப் பட்டிருந்தன. அவற்றில் இயேசுகிறிஸ்து, மரியாள், யோவான்ஸ்நானகர் முதலியவர்களின் படங்களும் காணப்பட்டன. அவர் கற்றோரை ஒருவாறு ஆதரித்து வந்தாரெனினும் தமது பொருளைப் பெரும்பாலும் வீணிற் செலவிட்டார்.

ஹாகின்ஸ்

ஜஹாங்கீரிடம் ஹாகின்ஸ் என்னும் ஆங்கிலேயக் கப்பற்றலைவர் வந்து வியாபாரத்திற்கான சுதந்திரங்களை வேண்டினார். ஜஹாங்கீர் ஜேம்ஸ் மன்னர் அனுப்பிய அந்த ராயபாரியைச் செம்மையாக வரவேற்ற போதிலும், போர்ச்சுகீசியருடைய கலகத்தினால் அவருக்கு யாதொன்றையும் செய்ய உடன்படவில்லை.

ஸர் தாமஸ் ரோ

பின்னர்க் கி. பி. 1615-ல் வந்த ஸர் தாமஸ் ரோ என்னும் தூதர் மட்டில் இந்நாட்டில் மூன்று வருஷகாலம் தங்கியிருந்து சில சுதந்திரங்களைப் பெற்றார். அவ்விருவரும், அப்பொழுது இந்நாட்டிற்கு வந்த மற்றும் பலரும் எழுதிவைத்த விவரங்களிலிருந்து நமக்கு முகலாய மன்னர்களைப் பற்றின பல விஷயங்கள் தெரிய வந்துள்ளன. அவர்களனைவரும் இந்நாட்டையும் இதன் குடிகளையும், அரசையும் புகழ்ந்து எழுதி யிருக்கிறார்கள். ஜஹாங்கீர் இறந்து போன பொழுது, ஷாஜஹான் தக்ஷிணத்திலும், ஷார்யார் லாகூரிலு மிருந்தார்கள்.

ஷாஜஹான் பட்டத்துக்கு வந்தவாறு

தந்தை இறந்த செய்தியை அறிந்த ஷாஜஹான் விரைந்து வந்து, ஷார்யாரையும், பட்டத்துக்குத் தமக்குப் போட்டியாக வரக்கூடிய மற்றைய தாயாதிகளையும் கொன்றுவிட்டுக் கி. பி. 1628-ம் வருஷம் பிப்ரவரி மாசம் ஸிம்மாஸனம் ஏறினார்.

ஷாஜஹான் தாம்பட்டத்துக்குவந்ததும் தக்ஷிணத்தை ஜயிக்க வேண்டும் என்று எண்ணினார். அப்பொழுது

கலகம்

கான் ஜஹான் லோடி என்னும் ஆப்கானியன் ஆமதுநகரத் தரசனோடு சேர்ந்து கொண்டு கலகஞ் செய்தான். ஆனால், கி. பி. 1631-ல் அவன் கொலையுண்டு போனான்.

ஆமதுநகரம் பேருக்கு மட்டில் தான் அக்பருக் கடங்கி யிருந்தது. அதன் பெரும்பாகமும் மாலிக் ஆம்பர் என்பவனுடைய அதிகாரத்திற்குட் பட்டிருந்தது. அப் பொழுதிருந்த ஸுல்தான் பலஹீனனானதினால், மந்திரி யான மாலிக் ஆம்பரே ராஜ்யபாரம் நடத்தி வந்தான்.

ஆமதுநகரம் வசமானது

மாலிக் ஆம்பருக்குப் பிறகு அவன் மகன் அதிகாரத்தைத் தான் கைப்பற்றிக் கொண்டு ஸுல்தானைச் சிறையிலிட்டு விட்டான். பின்னர் அவன் ஷாஜஹான் வேண்டிக் கொண்டபடி அந்த ஸுல்தானைக் கொன்று அரச வம்சத்தைச் சேர்ந்த ஒரு சிறுவனை ஸுல்தானாக் கினான். தனது அரசருக்குத் துரோகஞ் செய்த பாத் கான், ஷாஜஹானையும் ஏமாற்ற வெண்ணினான். அதனால் முகலாய வரசர் ஆமதுநகரத்தின் மீது படையெடுத்துச் சென்று அந்தச் சிறுவனைச் சிறையிலடைப்பித்து அந் நாட்டை வென்று தமது ராஜ்யத்திற் சேர்த்துக் கொண்டு விட்டார். அப்பொழுது பாத்கான் முகல் சேவகத்தில் அமர்ந்து கொண்டான்.

பீஜப்பூர் படை யெழுச்சி

பின்னர்க் கி. பி. 1635-ல் ஷாஜஹான் பீஜப்பூரின் மீதுபடை யெடுத்துச் சென்று ஊர்களைச் சுட்டெரித்தும், குடிகளைக் கொன்றும், நாட்டைக்கொள்ளையடித்தும் வந்தார். அப் பொழுது பீஜப்பூர் ஸுல்தான் ஷாஜஹா னோடு சமாதானஞ் செய்து கொண்டு அவ

ருக்கு ஏராளமான பணத்தைக் கொடுத்தும், கப்பங்கட்டி வருவதாக ஒப்புக் கொண்டும் அமைதியை உண்டு பண்ணினார்.

ஷாஜஹான் கி.பி. 1636-ல் தமது மைந்தரான ஔரங்கஜீப் என்பவரைத் தக்ஷிணத்துக்கு வைஸிராயாக நியமித்தனுப்பினார். ஆனால், கி. பி. 1645-ல் முகலாய வரசர் தமது தனயன் மீது சந்தேகங் கொண்டு அவரைக் கூர்ஜரத்துக்கு மாற்றிவிட்டார். கூர்ஜரத்தில் இரண்டு வருஷங்கள் இருந்த பின்னர்க் கி. பி. 1647-ல் ஷாஜஹான் அவரைத் துருக்கிஸ்தானத்திலுள்ள படக்ஷான், பாக் என்னும் மாகாணங்களுக்கு வைஸிராயாக நியமித்தனுப்பிவிட்டார்.

ஔரங்கஜீபின் பிரதிநிதித்வம்

ஷாஜஹான் காண்டஹாரைப் பிடித்துக் கொள்ளுமாறு சுமார் ஐந்து வருஷகாலம் வரையில் செய்த சண்டைகளில் ஔரங்கஜீப் மும்முறை தோல்வியடைந்து போனதனால், அவருடைய தந்தை அவரைத் திரும்பவும் தக்ஷிணத்திற்கு வைஸிராயாகச் செய்தார். அப்பொழுது அவருடைய திவானான முர்ஷிட் குலீகான் என்னும் பாரஸிகன் தக்ஷிணத்தில் நிலவரி சம்பந்தமான ஏற்பாடுகளைச் செய்தான்.

நிலவரி ஏற்பாடு

ஔரங்கஜீபுக்கு மீர்ஜம்லா என்னும் ஒரு அந்தரங்க சிநேகிதன் இருந்தான். அவன் கோலகொண்டா ராஜ்யத்தில் மந்திரியாகவிருந்து கொஞ்சங்கொஞ்சமாகத் தனது அதிகாரத்தை விருத்தி செய்து கொண்டும், விஜயநகர ராஜ்யத்திற்கடங்கியிருந்த சந்திரகிரி அரசரிடமிருந்து கர்னாடகத்தைப் பிடுங்கிக் கொண்டும், சுவேச்சாதிகாரம் பெற்றுவிட்டான். கோலகொண்டா அரசர் அவனைத் தண்டிக்க

மீர்ஜம்லா

முயன்ற பொழுது அவன் ஒளரங்கஜீபைத் தனக்குத் துணை வரும்படி தூண்டவும், அவர் அவ்வாறே வந்து கி. பி. 1656-ல் அமதுநகரத்தை முற்றுகை செய்தார். ஆனால் தனயன் செய்த காரியம் தந்தைக்கு இஷ்டமில்லாததனால், ஒளரங்கஜீப் திரும்பி வந்து விட்டார். அப்பொழுது மீர்ஜம்லா முகலாய வரசருக்கு மந்திரியாய்விட்டான்.

கி. பி. 1636-ல் முகலாயவரசரோடு சமாதானஞ் செய்து கொண்ட மஹம்மது ஆதில்ஷா வென்பவர் கி. பி. 1656 வரையில் பீஜப்பூரைச் செம்மையாய்ப் பரிபாலித்து வந்தார். அவருக்குப் பின் அவருடைய மைந்தன் பட்டத்துக்கு வந்தான். அவனுக்கு அப்பொழுது வயது பதினெட்டுத்தான் ஆயிற்று. அதனால் அவனுடைய நாட்டில் கலகங்கள் ஏற்படவும், ஒளரங்கஜீப் மீர்ஜம்லாவையும் துணைக்கொண்டு அதுதான் தக்க சமயமெனக் கருதிப் பீஜப்பூரின் மீது படையெடுத்து வந்தார். அந்நாடு அவருடைய கைக்குக்கிட்டும் தருணத்தில் ஷாஜஹான் பீஜப்பூரரசருடன் சமாதானஞ் செய்து கொண்டு பீடார், கல்யாணி, பரேண்டா என்னும் இடங்களையும், ஏராளமான பொருளையும் பெற்றுக் கொண்டார்.

பீஜப்பூர்ப் படையெழுச்சி

அதன் பின்னர் ஒளரங்கஜீப் சிவாஜி என்னும் மஹாராஷ்டிரத் தலைவரோடு சண்டையிட்டு வருகையில் ஷாஜஹான் தேக அசௌக்கியத்தினால் வருந்திக்கிடப்பதையறிந்து, டில்லிக்குச் சென்றுவிட்டார். ஷாஜஹான் காலத்தில் கூர்ஜரத்தில் ஒரு கொடிய பஞ்சம் உண்டாயிற்று. அரசர் கஞ்சித் தொட்டிகளை வைத்தும், வரிகளைத் தள்ளியும் உதவியும் அவை போதாமல் ஜனங்கள் ஆயிரக்கணக்கில் மாண்டுபோனார்கள்.

பஞ்சம்

ஷாஜஹான் மதப்பற்றுள்ளவரானதனால், ஹிந்துக்களுடைய கோயில்களை யிடித்து அவைகளிருந்த விடங்களில் மசூதிகளைக் கட்டுவித்தார். அன்றியும், அவர் ஹிந்துக்கள் புதிதாகக் கோயில்களைக் கட்டக்கூடாது என்று உத்திரவு செய்தார் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

மத வைராக்கியம்

மனூக்கி, பெர்னியர் முதலான விதேச பிரயாணிகள் எழுதி வைத்ததினின்றும் ஷாஜஹான் காலத்தில் நாட்டில் அமைதி குறைந்தும், கொள்ளை, களவு, பஞ்சம் முதலியன மேலிட்டும் இருந்தனவென்றும், அரசர் குற்றவாளிகளைக் கொஞ்சமும் தயையின்றித் தண்டித்து வந்தார் என்றும் அவர் காலத்திலேயே முகலாய ராஜ்யம் க்ஷீணிப்பதற்கான அடிப்படைகள் ஏற்பட்டுவிட்டன வென்றும் தெரியவருகிறது.

போர்ச்சுகீசியர்

அவருடைய காலத்தில் ஹூக்ளியில் வர்த்தகசாலையையும், கோட்டையும் அமைத்துக் கொண்டு வியாபாரஞ் செய்துவந்த போர்ச்சுகீசியர்கள் அத்துமீறிக் கப்பற் கொள்ளையடித்தும், அடிமை வியாபாரஞ் செய்தும் குடிகளைக் கிறிஸ்தவர்களாகும்படிக் கட்டாயப் படுத்தியும் நாட்டின் அமைதியைக் கெடுக்கத் தலைப்பட்டதனால், ஷாஜஹான் ஒரு சேனையை யனுப்பி அவர்களை த்வம்சம் செய்துவிட்டார்.

கட்டிடங்கள்

ஷாஜஹான் கட்டிடப்பிரியர். அவர் ஆக்ராவில் யமுனா நதி தீரத்தில் உயர்ந்த சலவைக் கற்களினால் கட்டிவைத்துள்ள அவருடைய மனைவி மும்தாஜ் மஹாலின் சமாதியான தாஜ்மஹால் நிகரில்லாதது. அவர் அமைத்து வைத்த முத்துமசூதியும், டில்லியிலுள்ள ஜும்மா மசூதியும் மிகச் சிறந்தவைகளேயாம். அவருடைய நவரத்தினங்களிழைக்கப் பெற்ற

மயிலாஸனம் மட்டில் கோடி ரூபாய் விலையுள்ளது. அவர் உண்டுபண்ணின கட்டிடங்களினால், ஆயிரக் கணக்கான தச்சர்களும், சிற்பிகளும், சித்திரிப்பவர்களும் ஆதரிக்கப் பட்டுத் தங்கள் தங்கள் கைத்தொழில்களில் தேர்ச்சி யுண்டாகப் பெற்றார்கள்.

ஷாஜஹான் பாத்

ஷாஜஹான் டில்லியில் மூன்றாம் பிறைச் சந்திரனைப் போன்று வளைந்த வடிவமாய்க் கட்டிவைத்த கண்ணைக் கவரும் ஷாஜஹான்பாத் என்னும் புதிய நகரம் ஒப்புயர் வற்று விளங்கியிருந்தது. அதில் ஏககாலத்தில் 899 பெயர்கள் உட்கார்ந்து ஜபம் செய்யக் கூடிய ஒரு மசூதி மூன்று சிகரங்களுடனும், இரண்டு கோபுரங்களுடனும் பொலிந்து நின்றது.

சகோதரர் சண்டை

ஷாஜஹான் வியாதியினால் வருந்திக் கிடக்கையில், அவருடைய மைந்தர்கள் ராஜ்யத்தைக்குறித்துச் சண்டையிடத் தொடங்கிவிட்டார்கள். அச்சண்டையில் ஷாஜஹானின் மூத்த குமாரரான டாரா இறந்து போனார். இரண்டாவது பிள்ளையும் வைஸிராயாக விருந்து வங்காளத்தைச் செவ்வனே பரிபாலித்து வந்தவருமான ஷுஜா உயிர்தப்பி ஓடிப்போய்விட்டார். ஔரங்கஜீப் ஜயம் பெற்றுத்தந்தையையும், மூராட் என்னும் தம்பியையும் சிறையிலிட்டுவிட்டு ராஜரீகம் நடத்திவந்தார். சீக்கிரத்திலேயே மூராட் கொலையுண்டு போனார். எழுவருஷகாலம் சிறையிலிருந்து கி. பி. 1666-ல் ஷாஜஹானும் இறந்து போனார்.

ஷாஜஹான் காலத்திற்றான் ஆங்கிலேய வியாபாரிகள் அவருடைய அநுமதியைப் பெற்று ஹூக்ளியில் ஒரு வர்த்தக சாலையை அமைத்துக்கொண்டார்கள்.

V. ஔரங்கஜீப்

தந்தையைச் சிறையிலிட்டும், சகோதரர்களைக் கொன்றும் ஸிம்மாஸனம் ஏறிய ஔரங்கஜீப் கி. பி. 1658 முதல் கி. பி. 1707 வரையில் ராஜ்யபாரம் நடத்தினார். அவர் மிகுந்த பராக்கிரம முடையவர்; ராஜ்ய பரிபாலனத்தில் கைதேர்ந்தவர்; நியாயம் நடத்துவதில் பக்ஷபாதமில்லாதவர்; தமது கடமைகளை ஊக்கத்துடன் செய்யும் இயல்பினர்; சிற்றின்பங்களை முற்றிலும் வெறுத்தவர்; மது மாமிசங்களைக் கனவிலும் விரும்பாதவர்; குடிகளின் நலத்தையே நாடி உழைத்தவர்; தம் பொருட்

நற்குணங்கள் டுப் பொக்கிஷத்திலிருந்து கொஞ்சமும் பணத்தைச் செலவு செய்யாமல் தொழில் முன்னிலையில் பணஞ் சம்பாதித்துச் செலவு செய்தவர்; கொலுவீற்றிருக்கையிலன்றி மற்றச் சமயங்களில் விலையுயர்ந்த ஆடையாபரணங்களை அணிய மனமில்லாதவர்; கல்வி கேள்விகளிற் சிறந்தவர்; அஞ்சாத நெஞ்சம் படைத்தவர்; ராஜ தந்திரங்களில் வல்லவர்; மிகுந்த இதர மதப் பகையுள்ளவர். அவருக்குக் கோரான் மனப்பாடம். அவர் அதனை இரு முறை எழுதி அந்தப் பிரதிகளை மொக்காவுக்கும், மெடீனாவுக்கும் அனுப்பிவைத்தார்.

பல நற்குணங்களையுடைய அவர் “தான் திருடி பிறரை நம்பாள்” என்றவாறு ஒருவரையும் நம்புவதில்லை. அவர் மகம்மதிய மதம் தவிர மற்றவைகள் யாவும் பொய்யென்று தீர்மானித்து ஹிந்துக்களையும், பாரஸிகர்களையும் துன்பப்படுத்தினார். அவர் ஷாஜஹான் காலம் முதல் ராஜாங்க உத்தியோகங்களில் இருந்துவந்த மந்திரிகள் முதலான பல ஹிந்து உத்தியோகஸ்தர்களை வேலைகளிலிருந்து நீக்கிவிட்டார்; ஹிந்துக்களின் கோயில்களை

கொடுமைகள் யிடித்து மசூதிகளைக் கட்டினார். அவர் காசியில் இருந்த விஷ்ணு வாலயத்தை

யிடித்து அந்தவிடத்தில் ஒரு மசூதியை அமைத்தார். அவர் பள்ளிக்கூடங்களில் ஹிந்து மதபோதனை செய்யக் கூடாதென்று நிபந்தனைகளை ஏற்படுத்தினர்; சுமார் நூறு வருஷகாலமாக எடுபட்டிருந்த ஜஸியா என்னும் வரியை மீண்டும் விதித்து ஹிந்துக்களைத் தமக்கு விரோதிகளாக்கிக் கொண்டார். அவர் தாம் இங்ஙனம் செய்தனவற்றை யெல்லாம் தமது சிறந்த கடமைகள் என எண்ணினர். ஆதலால், அவர் அவைகளினால் உண்டாகக் கூடிய தீங்குகளைக் கருதவாவது, பாராட்டவாவது இல்லை. அவர் மத வைராக்கியத்தினால் இழைத்த தீமைகளைக் குறித்து நாம் அவர் பொருட்டு மன வருத்தப்பட வேண்டுமேயன்றி அவரைப் பகைப்பது சரியன்று.

கி. பி. 1662-ல், மீர்ஜம்லா என்னும் வங்காள கவர்னர் அஸ்ஸாம் நாட்டின் மீது படையெடுத்துச் சென்று தோல்வியடைந்தார். அவருக்குப் பின் வங்காள கவர்னரான ஷயிஸ்டகான் அரக்கான் அரசர்மீது படை யெடுத்துச் சென்று சிட்டகாங்க் மாகாணத்தைச் சம்பாதித்தார். ஷயிஸ்டகான் ஔரங்கஜீபின் மாமனர் ஆவர். இவ்விரண்டு படையெழுச்சிகளையன்றி ஔரங்கஜீப் பட்டத்துக்கு வந்தது முதல் சுமார் இருபது வருஷம் வரையில் ஹிந்துஸ்தானத்தில் வேறெந்தச் சண்டை சச்சரவுகளாவது, கலகங்களாவது கிடையா.

படை யெழுச்சிகள்

ஜோதி புரத்தரசரான ராஜா ஜஸ்வந்த ஸிங்க் இறந்துவிட்டபொழுது, ஔரங்கஜீப் அவருடைய பிள்ளைகளைப் பிடித்து மகம்மதியராக்க முயன்றதனல், அவருக்கும் ராஜபுத்திரர்களுக்கும் அழியாப்பகை உண்டாயிற்று.

ராஜபுத்திரருடன் பகை முண்டது

அல்லாமலும், சாத்புராமலைக்குத் தெற்கில் அரபிக் கடல் முதல் வரதா நதிவரையில் பரவியிருந்த கரடுமுரடான மஹாராஷ்டிரம் என்னும் மலைப் பிரதேசத்தில் ஒரு வகை ஹிந்துக்கள் தோன்றி ஔரங்கஜீபை எதிர்த்துச் சண்டையிட்டு அவருடைய சிறப்பை முழுவதும் ஒழித்துவிட்டார்கள். அவர்களுடைய தலைவரான சிவாஜியின் சரித்திரம் பின்னாற் சொல்லப்படும். முகலாய ராஜ்யத்திற் கேற்பட்ட சத்துருக்களில் அவர் முதன்மையானவர் என்பது ஞாபகத்தில் வைக்கத்தகுந்தது.

மஹாராஷ்டிரர்

ஔரங்கஜீப் தாம் தக்ஷிணத்தில் வைஸிராயாகவிருந்தபொழுதே பீஜப்பூரையும், கோலகோண்டாவையும் ஜயித்து டில்லி சாம்ராஜ்யத்திற் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று எண்ணியிருந்தாரல்லவா? அந்த எண்ணம் அப்பொழுது நிறைவேறவில்லை யென்பதையும் நாம் அறியலாம். கி. பி. 1686-ல் அவர் பீஜப்பூரின் மீது படையெடுத்துச் சென்று அதைத் தமது வசமாக்கிக் கொண்டார். அரண்மனைகளும், மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும் நிறைந்திருந்த அந்த அழகிய பட்டணத்தை அவர் முழுவதும் பாழாக்கி, அதை நாய் நரிகளுக்கும் ஆந்தை கோட்டான்களுக்குமே தக்க வாசஸ்தானமாகச் செய்து விட்டார்.

பீஜப்பூரை வென்றது

பிறகு, ஔரங்கஜீப் கோலகோண்டாவை முற்றுகை செய்தார். பல நாட்கள் முயன்றும் அவர் ஒன்றும் செய்ய இயலாமற் போயிற்று. அவர் பின்னர்க் கோலகோண்டாவைத் தாம் தந்திரத்தினாற்றான் ஜயிக்கவேண்டுமென் றெண்ணினார். அவர் கோலகொண்டா வீரர்களிற் பலரை லஞ்சங்கொடுத்தும் ஆசைகாட்டி

கோலகோண்டா; அப்துர் ரஸாக்



இளவரசர் ஒளரங்கஜீப்

யும் தமது வசமாக்கிக்கொண்டார். அப்துர் ரஸாக் என்னும் அமீர்மட்டில் கடைசிவரையில் சண்டை யிட்டார். அவர் காயப்பட்டு வீழ்ந்து போனதும், கோலகொண்டா வரசர் சிறைப்படுத்தப்பட்டார். அந்த நாடும் ஔரங்க ஜீபுக்குச் சொந்தமாயிற்று. அதனுடன் அவருக்குச் சுமார் ஏழுகோடி ரூபாயும் கிடைத்தது. பீஜப்பூர், கோல கொண்டா நாடுகள் சுவேச்சாதிகாரத்தை யிழந்து, முக லாய ராஜ்யத்திற் சேர்ந்து போனதும், மஹாராஷ்டிரர் கள் டில்லி ராஜ்யத்தை எளிதில் எதிர்த்துச் சண்டை செய்வதற்கான சௌகரியம் ஏற்பட்டுவிட்டது. ஔரங்க ஜீப் அவர்களுடன் சண்டைகள் செய்து சில சமயங்களில் ஜயம் பெற்றுலும், அவர் அவர்களை முழுவதும் வெல்ல முடியாமல் திகைத்து நின்ருர்.

ஔரங்கஜீப் தமது ஆட்சியின் பிற்பாதி முழு வதும் தம்முடைய தலைநகரைவிட்டு, மஹாராஷ்டிரர் களுடனும், தக்ஷிண மகம்மதியர்களுடனும் சண்டை யிட்டு வருகையில், வடக்கில் ராஜபுத்திரர்களும், ஸீக்கர் களும், ஜாட்ஸ் என்னும் ஜாதியரும் பிரபலமாகக் கிளம்பிக் கலகஞ் செய்யத் தலைப்பட்டார்கள். அவ ருடைய கடைசிக் காலத்தில் அவர் மேற் கொண்ட காரியங்கள் யாவும் பயனற்றன வாய் முடிந்தன. அவர் எவரையும் நம்பாத

பலவித கஷ்டங்கள்

வராய்த் தம்மை நேசிப்பார் எவருமின்றித் தமது பிள்ளை களைத் தாமே சிறையிலடைப்பித்தும், பலதோல்விகளினுல் மனம் நொந்தும், தமது கொடுமைகளால் தாமே வருந்தி யும் இறந்து போனுர்.

ஔரங்கஜீப் பக்தி, வைராக்கியம், நடுவு நிலைமை, தைரியம், பொறுமை, விடாமுயற்சி முதலிய பல நற் குணங்களுக்கும் உறைவிடமாக விருந்தும், அவர் எண்ணிய

எண்ணங்களும், செய்த முயற்சிகளும் பெரும்பாலும்பயனற்றனவாய் முடிந்தன. அவர் அடைந்தன தோல்வியே யாயினும், அவைகள் கம்பீரமான தோல்விகளாம்.

மனச் சஞ்சலம்

இறக்கும்பொழுது அவருடைய மனம் எவ்வாறு மிகுந்த சஞ்சலத்தை யடைந்திருந்த தென்பதை நாம் அவர் தமது பிள்ளைகளுக்கு எழுதின கடிதங்களினின்றும் அறிந்து கொள்ளலாம். அவை வருமாறு:—

'உனக்கும், உன் பெண் பிள்ளைகளுக்கும் சந்தோஷ முண்டாவதாக! நான் வயது முதிர்ந்த கிழவனாய் விட்டேன். எனது தேகம் மெலிந்தும், என் அங்கங்கள் சோர்ந்தும் போயின. நான் பிறந்த பொழுது, என்னைச் சுற்றி அநேகர் இருந்தார்கள். இப்பொழுதோ நான் தனித்துப்போகிறேன். நான் ஏன் இவ்வுலகில் ஜந்மமெடுத்தேனோ அறிகிலேன். நான் கடவுளை மறந்து வாணாளை வீணாளாக்கினதை யெண்ணி மனவருத்த மடைகிறேன். நான் நாட்டிற்கும், அதன் குடிகளுக்கும் யாதொரு நன்மையும் செய்யவில்லை. கடவுள் என்னுள்ளிருந்தும் நான் அவரைக் கண்டிலேன். எனக்கு இனி நற்கதி கிடையாது. நான் பிறந்த பொழுது ஒன்றையுங் கொண்டு வரவில்லை. ஆனால், இப்பொழுதோ நான் எனது பாபங்களைச் சுமந்து செல்லுகிறேன். எனக்குக் கடவுள் என்ன தண்டனை விதிக்கப் போகின்றாரோ யான் அறிகிலேன். நான் கடவுளின் கருணையையே நம்பி யிருக்கிறேன். நான் என்னையே நம்பாதபொழுது, கடவுளை நம்புவது எங்ஙனம்? வருவது வரட்டும். நான் போகிறேன். நீங்கள் சுகமாக இருங்கள்.'

அவரது நிரூபம்

'என்னுயிர்க்கும் உயிரானவனே! நான் இப்பொழுது தனிமையாய்ப் போகிறேன். நீ திக்கற்றவனாய் விட்டாயே

யென்று என்மனம் வருந்துகின்றது. நான் இழைத்த ஒவ்வொரு தீங்கினாலும், செய்த ஒவ்வொரு பாபத்தினாலும், பிறருக்கு உண்டாக்கின ஒவ்வொரு வேதனையினாலும் அடைந்த பலனை என்னுடன் கொண்டு செல்லுகின்றேன். என்ன ஆச்சரியம்! நான் வரும்பொழுது ஒன்றையும் கொண்டு வாராதிருந்தும், போகும்பொழுது தூக்கமுடியாத பளுவான பாவச்சுமையைச் சுமந்து கொண்டு போகிறேனே! நான் எப்பக்கந் திரும்பினாலும், அங்கே கடவுளை மட்டில் தான் பார்க்கிறேன். நான் மகாபாபி. ஐயோ! எனக்கு என்னவதை யுண்டாகுமோ நான் அறியேன்.... உன்னையும், உன் மக்களையும் கடவுள் காப்பாற்றுவாராக! என்மனம் மிக வருந்துகின்றது. மனம் நொந்து பட்ட உன் தாய், உதயபுரியும் என்னுடன் இறந்து விடுவாள். உனக்குச் சாந்தியுண்டாகுக!'

மற்றொரு நிருபம்

vi. முகலாய ராஜ்யத்தின் அழிவு

ஔரங்கஜீபுக்குப் பின் அவர் மைந்தர் பஹதுர்ஷாவென்பவர் ஷாஹலம் எனும் பெயருடன் பட்டத்துக்கு வந்து, ஐந்து வருஷகாலம் ராஜ்யபாரம் நடத்தினார். அவருடைய காலத்தில் நாடெங்கும் கலகங்கள் ஏற்பட்டுவிட்டன. அவருக்குப் பின் ஏழு வருஷங்களுக்குள் நான்கு பெயர்கள் பட்டத்துக்கு வந்து ஒருவர் பின்னொருவராகக் கொலையுண்டு போனார்கள். கி. பி. 1719-ல் ஸிம்மாஸனமேறிய மகம்மதுஷா கி. பி. 1748 வரையில் ஆட்சி பெற்றிருந்தார். அவருடைய ஆட்சியில் தக்ஷிணத்தில் வைஸிராயாக விருந்த அசப்ஜா என்பவர் சுவேச்சாதிகாரம் பெற்று ஹைதராபாத் நிஜாம் ஆனார். அவருடைய சந்ததியார்கள் இன்னும் ஹைதராபாத்தில் ஆட்சி செய்து வருகிறார்கள்.

ஷாஹலம்

மகம்மதுஷா

நாட்டில் உண்டாயிருந்த சண்டைகளும், கலகங்களும் போதா வெனவோ கி. பி. 1738-ல் நாதர்ஷா வென்னும் பாரஸிகவரசன் இந்தியாவின் மீது படை யெடுத்து வந்து கி. பி. 1739-ல் மகம்மதுஷாவைக் கார்னல் என்னுமிடத்திற் சண்டையில் தோற்க அடித்து டில்லிக்கு வந்து ஜனங்களைக் கொன்றும், வீடுகளைக் கொள்ளையடித்தும் அளவிட வொண்ணாத திரவியத்துடன் திரும்பிச் சென்றான். அவன் கவர்ந்து சென்ற பொருள் முப்பது கோடி ரூபாய்க்கும் அதிகம் இருக்கும். அவன் ஷாஜஹான் செய்வித்த மயிலாஸனத்தையும் எடுத்துச் சென்று விட்டான். இந்தக் கொள்ளைக்குப் பின்பு முகலாய ராஜ்யம் முன்னிலும் க்ஷீணிக்கலாயிற்று.

நாதர்ஷா

நாதர்ஷாவுக்குப் பின்னர் ஆப்கானிய வரசனான ஆமதுஷா துரானி என்பவனும் இந்நாட்டின் மீது பன்முறை படையெடுத்து வரலானான். கி. பி. 1747-ல் மகம்மது ஷாவின் மைந்தரான ஆமதுஷா என்பவர் அவனை ஸர்ஹிண்ட் என்னுமிடத்தில் தோற்க அடித்துத் துரத்தினார். மறுவருஷம் மகம்மதுஷா இறந்து விடவும், ஆமதுஷா அரசரானார். அவருக்குப் பின் பட்டத்துக்கு வந்த ஆலம்கீர் II ஆட்சியில் கி. பி. 1756-ல் துரானி டில்லிக்கு வந்து நாதர்ஷாவைப் போலவே குடிகளைக் கொன்றும், ஊர்களைக் கொள்ளையிட்டும், ஏராளமான திரவியத்துடன் தன்னூருக்குத் திரும்பினான்.

துரானியின் படையெழுச்சி

தான் எதிர் பார்த்து வந்ததற்கு அதிகமாகவே பொருள் கிடைத்து விட்ட பேராசையினால், துரானி மேலும் மேலும் இந்தியாவின்மீது படையெடுத்து வந்தான். அவன் ஆறுவதுமுறை வந்த பொழுது, மஹாராஷ்டிரருடைய அதிகாரம் மிகுந்த உந்நதமான நிலைமை

யில் இருந்தது. அதனைக் கண்டு அழுக்கா
சிலமுகலாய மன்னர்கள் றுற்ற மகம்மதியர்கள் துரானியுடன்சேர்ந்து கொண்டார்கள். அப்பொழுது துரானி மஹாராஷ்டிரர்களை எதிர்த்துச் சண்டையிட்டு அவர்களை லாகூரினின்றுந் துரத்தி விட்டான். கி. பி. 1759-ல் துரானி மறுபடியும் டில்லியின் மீது படையெடுத்து வந்தான். அப்பொழுது காஸி உத்தீன் என்னும் ஆலம்கிரின் மந்திரி தனது எஜமானனைக் கொன்றுவிட்டுத் தானே அதிகாரம் செலுத்தி வந்தான். தகப்பன்

ஷாஹலம் II கொலையுண்டதைக் கேள்விப்பட்ட இரண்டாவது ஷாஹலம் பயந்து வங்காளத்துக்கு ஓடிப்போய் விட்டார். துரானி டில்லிக் கருகாமையில் வந்து விட்டதை யறிந்த காஸி உத்தீன் உயிர் தப்பிப் பிழைக்க ஓடிப்போய் விட்டான். அதனால் துரானி வந்த பொழுது டில்லி ஸிம்மாஸனம் காலியாயிருந்தது.

பானிப்பட்டு கி. பி. 1761-ல் துரானி பானிப்பட்டில் மஹாராஷ்டிரர்களை எதிர்த்துச் சண்டையிட்டு அவர்களை முற்றிலும் வென்று விட்டுத் தான் கொள்ளை கொண்ட ஏராளமான திரவியத்துடன் தான் ஜயித்த ராஜ்யத்தை ஆளுவதற்கான ஏற்பாடுகள் ஒன்றையும் செய்யாமல், தன்னூருக்குத் திரும்பிச் சென்று விட்டான்.

அதனால், ஆங்கிலேயருடைய அதிகாரம் மேம்படலாயிற்று. முகலாய ராஜ்யத்தை முழுவதும் அழித்துத் தங்களுடைய அதிகாரத்தை நிலைநாட்டி உந்த ஸ்திதியை

ஆங்கிலேயரது அதிர்ஷ்டம் அடைந்திருந்த மஹாராஷ்டிரர்களை ஆப்கானிய வரசன் வென்று ஜயம் பெற்றதன் பெரும் பயனை ஆங்கிலேயர்கள் அடைந்து அநுபவிக்க லானார்கள். இதுவும் ஒரு பெரிய அதிர்ஷ்டமே யல்லவா?

பானிப்பட்டுச் சண்டைக்குப் பின்பு முகலாய ராஜ்யம் இல்லையாயினும், முகலாய மன்னர்கள் மட்டில் இருந்து வந்தார்கள். தந்தை கொலையுண்டதும், வங்காளத்துக்கு ஓடிப்போய் விட்ட ஷாஹலம் II கி. பி. 1806 வரையில் முகலாய சக்ரவர்த்தி யென்னும் பெயரை மட்டில் வகித்து வந்தார். கி. பி. 1764-ல் ஒரு முறை அவர் தாம் இழந்து விட்ட அதிகாரத்தைப் பெறவேண்டு மென்னும் ஆசையினால் ஆங்கிலேயருடன் பக்ஸாரில் சண்டையிட்டுத் தோல்வியடைந்து அவர்களுடன் சமாதானஞ் செய்து கொண்டு உபகாரச் சம்பளம் பெற்று அலஹாபாத்தில் இருந்து வந்தார்.

பக்ஸார் சண்டை

அவர் இன்னு மொருமுறை மாகாதஜி ஸிந்தியா என்னும் மஹாராஷ்டிரத் தலைவருடன் சேர்ந்து கொண்டு தாம் அதிகாரம் பெறவேண்டு மென்று செய்த முயற்சியும் வீணாயிற்று. அதில் அவர் கண்களை யிழந்ததைத் தான் பலனாகப் பெற்றார். அவர் பல கஷ்டங்களை அநுபவித்துக் கடைசியில் கி. பி. 1806-ல் இறந்து போனார். அவருக்குப் பின் அவருடைய மைந்தர் இரண்டாவது அக்பர் டில்லிச் சக்ரவர்த்தியெனும் பெயரையும், ஆங்கிலேயர் கொடுத்து வந்த உபகாரச் சம்பளத்தையும் உரிமைகளாகப் பெற்றிருந்து கி. பி. 1837-ல் காலஞ் சென்றார்.

ஷாஹலத்தின் துன்பம்

அதன் பின்னர் அவருடைய குமாரரான பஹதுர்ஷா அவ்விரண்டு உரிமைகளையும் தாம் பெற்று அநுபவித்து வந்தார். ஆனால், கி. பி. 1857-ம் வருஷத்தில் நடந்த சிப்பாய்க் கலகம் என்னும் பெயர் பூண்ட சுதந்திரப் போரில் அவர் தாம் தமது முன்னோர்கள் இழந்து விட்ட அதிகாரத்தை மீண்டும் பெறவேண்டுமென்னும் ஆசையினால் ஆங்கிலே

பஹதுர்ஷா

முகல்மன்னரின் முடிவு

யர்களுக்கு விரோதமாகக் கிளம்பிச் சிப்பாய்களின் முன்னின்று சண்டை செய்த தனால், ரங்கூனுக் கனுப்பப்பட்டு, அங்கே சில வருஷங்கள் இருந்து கி. பி. 1862-ல் இறந்து போனார். அவருடன் முகலாய சக்ரவர்த்திகளின் பெயரும் அழிந்து போய் விட்டது.

முகலாய அரசாட்சியில் மொத்தத்தில் நாட்டில் வியவசாயம், வாணிபம், கைத் தொழில், கல்வி, சிற்பம் முதலிய கலைகள், ஆகிய பலவும் அபிவிருத்தியை யடைந்திருந்தன. அக்காலத்தில் மற்ற நாடுகளில் ராஜரீகம் இருந்த நிலைமைக்கு இந் நாட்டின் நிலை எவ்விதத்திலும் குறைவுபட் டிருக்கவில்லை. அக்பர் காலத்தில் இருந்ததைப் போன்ற மதத்தரிப்பு அப்பொழுது வேறெந்த நாட்டிலும் காணக்கிடைக்காது. அன்றியும் முகலாய மன்னர்கள் இந்நாட்டின் பழக்க வழக்கங்களையாவது,

முகலாய ஆட்சி

சட்ட திட்டங்களையாவது மாற்றி விடவில்லை யாதலால் நாட்டுக் குடிகள் விசேஷ மாறுபாடுகளை அடைந்து விடாமல், பெரும்பாலும் தமது முன்னோர்களின் வழிகளிலேயே நடந்து வந்திருக்கிறார்கள். பிற்காலங்களில் நாட்டின் செல்வமும் வெளியிற் கொண்டுபோகப் படவில்லை யாதலால், முகலாய வரசர்களது ஆட்சியில் தீமைதான் விளைந்தது என்றெண்ணுவது பேதமை யாகும்.

vii. சிவாஜி

ஔரங்கஜீபின் சிறப்பை யழிக்க வேண்டு மென வெண்ணி அவதரித்தாற் போன்ற சிவாஜி என்னும் மஹாராஷ்டிரத் தலைவரது சரித்திரத்தையும், அவர் ஸ்தாபித்த மஹாராஷ்டிர ராஜ்யத்தின் பிறப்பு, வளர்ச்சி, சிதைவு

ஆகிய இவற்றைப் பற்றின விவரங்களையும் நாம் கற்பது அவசியமாகும்.

மஹாராஷ்டிரம்

மஹாராஷ்டிரர்கள் விந்திய சாத்புரா மலைகளுக்குத் தெற்கில், அரபிக்கடல் முதல் கோதாவரி யாற்றின் உப நதியான பேன்கங்கா நதிவரையிலுள்ள நாட்டில் வசித்து வந்தார்கள். அதற்கு **மஹாராஷ்டிரம்** என்று பெயர். அதன் விஸ்தீரணம் சுமார் லக்ஷம் சதுரமைல் இருக்கும். அது மிகவும் காடு முரடான மலைப்பிரதேசம்; எண்ணிறந்த குன்றுகளையும், அவற்றின் மத்தியில் பல பள்ளத்தாக்குக்களையும் உடையது. அந்நாட்டின் இயற்கையமைப்பும், சீதோஷ்ண நிலைமையும், புஜபல பராக்கிரமம் பொருந்திய வீரர்களின் உற்பத்திக்கு அநுகூலமாக இருந்தன.

ஒற்றுமைச் சாதனங்கள்

அல்லாமலும், அந்நாட்டுக் குடிகள், மகம்மதியப் படையெழுச்சியினால் நமது நாட்டின் மற்றைய விடங்களுக்கு உண்டான தீமைகள் ஒன்றுமின்றித் தங்களுடைய மதம், பாஷை, கொள்கை, கட்டுப்பாடு முதலியனவற்றைக் கொஞ்சமும் இழந்துவிடாமலும், மகம்மதியக் கலப்பில்லாமலும், ஒற்றுமையுடனும் வாழ்ந்து வந்தார்கள். அவர்களில் பலர் மகம்மதியர்களால் சமமாக மதிக்கப்பட்டும் அவர்களால் பற்பல மேலான உத்தியோகங்களில் நியமிக்கப்பட்டும் வந்ததனால் அந்தஸ்திலும், செல்வாக்கிலும் உயர்ந்து முதன்மைபெற்று விளங்கி வந்தார்கள்.

சிவாஜி

அவ்வாறாக முன்வந்தவர்களில் ஷாஜீ என்பவர் ஒருவர். அவர் பான்ஸ்ல வம்சத்தைச் சேர்ந்தவர். அவர் பீஜப்பூரரசரின் சேனைத் தலைவராக இருந்தார். அவருடைய மனைவிக்கு ஜீஜீபாய் என்று பெயர். கி. பி. 1627-ல், அவர்க

னுக்கு மகப்பேறு உண்டாயிற்று. அந்தக் குழந்தை தான் உலகமெங்கும் கீர்த்திக் கொடி நாட்டின சிவாஜி என்பவர்.

கல்வியும்; பயிற்சியும்

ஷாஜி சிவாஜியைத் தமது ஜாகீரைப் பார்த்து வந்த தாதாஜி கண்ட தேவர் என்பவருடைய பார்வையில் விட்டு வைத்திருந்தார். அவரும், ஜிஜிபாயும் பயிற்று வித்ததின் பயனாகச் சிவாஜி ஊக்கம், அறிவு, மதாபிமானம், நல்லொழுக்கம் முதலான நற்குணங்களைப் பொருந்தி விளங்கினார். அவருக்கு இராமாயண மஹா பாரதக் கதைகளைக் கேட்பதில் பிரியம் அதிகம். அவருக்குத் துக்காராம், ராமதாஸர் முதலான பெரியவர்களின் நட்பு உண்டாகவும், அவர் ஈசுவர பக்தி, தேசாபிமானம், மதப்பற்று, நடுவு நிலைமை முதலிய நற்குணங்கள் பொருந்தப் பெற்றுத் தம்மை யொப்பார் எவருமில்லை யாம்படி நடந்தொழுகினார். அவர் சிறுவயது முதற்கொண்டே வில், வேல், வாள் முதலிய பல ஆயுதங்களிலும் பயின்று பெரிய யுத்த வீரரானார். அவர் பெரியவரான பொழுது ராமதாஸரைத் தமக்குக் குருவாகக் கொண்டு, அவரை வழிபட்டு, அவர் ஆணையின்படி ராஜ்யத்தை வெகு விமரிசையாக ஆட்சி செய்து வந்தார்.

இணக்கம்

சிவாஜி கொஞ்சமும் சுயநலம் பாராட்டாமல், மஹாராஷ்டிரரது முன்னேற்றத்தில் ஈடுபட்டுத் தம்முடன் ஒத்துழைக்கக் கூடியவர்கள் யாவராயினுஞ் சரி அவர்களை எவ்வித பேதத்தையுங் கருதாமல் தம்முடன் சேர்த்துக் கொண்டும், தமது எண்ணத்திற்கு மாறாக நடப்பவர்கள் தம்மினத்தினராயினும் அவர்களை ஓங்க வொட்டாமல் தடுத்தும் வந்தார். அன்றியும், அவர் தமது சாமர்த்தியத்தினாலும், பராக்கிரமத்தினாலும், ஒப்பற்ற வசீகர சக்தியினாலும் தம்மைச் சேர்ந்தவர்கள் அனைவரும் பொது

நலத்தை நாடி உழைக்கவும், சண்டையிலும், ராஜ்ய பரிபாலனத்திலும் ஒரு தலைவனுக்கடங்கி நடக்கவும் செய்துகொண்டார். அவரை வந்தடைந்தவர்கள் ஒரு பொழுதும் அவரை விட்டகன்றனரில்லை. சாமன்யர்கள்கூட அவருடைய சேர்க்கையினால் உத்தமராய் விட்டார்கள்.

சிவாஜியின் பலம்

மஹாதேவ கோவிந்த ராணடே யவர்கள், "தம்மை முற்றிலும் மறந்த நிரந்தரமான மதவைராக்கியத்தினாலும், தாம் மேற்கொண்ட காரியத்தைப் பகவான் முன்னின்று நிறைவேற்றுவிப்பார் என்னும் நம்பிக்கையினாலுண்டான தைரியத்தினாலும், மனிதர்களை ஒன்றுபடுத்தி, அவர்களை வெற்றியை நாடி நடத்தக் கூடிய ஒப்பற்ற தமது வசீகர சக்தியினாலும், தமது காலத்திற்குத் தகுந்தனவான இன்றியமையாத சாதனங்கள் எவையென அறிந்திருந்ததனாலும், எவ்வித இடையூறுகளினாலும் தளராததான திடசித்தத்தினாலும், நிகரற்ற சமயோசித புத்தியினாலும், அக்காலத்திற் காணக்கிடைக்காத தேசாபிமானத்தினாலும், தயையோடு கூடின நடுவு நிலைமை பொருந்திய நியாயத்தினாலும், சிவாஜி மஹாராஷ்டிரர்களுடைய முன்னேற்றத்திற்கு வேண்டிய தான அடிப்படையைப் போடுவிக்கக் கூடிய பலம் அடையப் பெற்றார்" என்று கூறியுள்ளார்.

வெற்றிகள்

சிவாஜி தம்மைப் போன்று யுத்தப் பயிற்சி பெற்றிருந்த சிறுவர்களைத் துணைசேர்த்துக் கொண்டு அயல் நாடுகளுடன் சண்டையிட்டுத் தமக்கென ஒரு ராஜ்யத்தைச் சம்பாதிக்க ஆரம்பித்தார். கி. பி. 1646-ல், அவர் டோர்ணா என்னும் கோட்டைக் கைப்பற்றிக் கொண்டும், ரைகார் கோட்டையைப் பலப்படுத்தி அதைத் தமக்குப் பிரதான இருப்பிடமாகச் செய்து கொண்டும் நாளடைவில் அநேக

கோட்டைகளை ஜயித்துத் தமக்குச் சுவாதீன மாக்கிக் கொண்டார். அவற்றுள் பீஜப்பூரரசருக்குச் சொந்த மானவைகள் சில. சாகன், சின்ஹகாட், புரந்தர் முதலான கோட்டைகளைச் சிவாஜி பிடித்துக் கொண்ட பொழுது, பீஜப்பூ ரரசர் சும்மா இருந்து விட்டார். ஆனால், கி. பி. 1652-ல் கல்யாண் கோட்டை சிவாஜியின் வசமான பொழுது, அவர் ஷாஜியைச் சிறைப்படுத்தியதனால், சிவாஜி சும்மா விருக்க நேர்ந்தது. கி. பி. 1657-ல் ஷாஜி விடுதலை யடையவும், சிவாஜி முன்போல் தமது காரியத்தில் முயன்று வரலானார்.

ஷாஜி சிறை யுண்டது

அப்ஸல்கான்

கி. பி. 1659-ல் பீஜப்பூ ரரசர் சிவாஜியைத் தண்டித்து வரும்படி அனுப்பிய அப்ஸல்கான் வஞ்சனையினால் தம்மைக் கொல்ல எண்ணியிருந்ததை யறிந்த சிவாஜி அவன் மீது பாய்ந்து அவனைக் கொன்று விட்டார். அப்பொழுது சிவாஜியின் சேனை பீஜப்பூர் சேனையை யெதிர்த்து அதனை யடியோடு நாசஞ் செய்து விட்டது.

சமாதானம்

பீஜப்பூரரசர் அதன் பின்னரும் சிவாஜியுடன் மும்முறை சண்டை செய்து மும்முறையும் தோற்றுப் போனதனாலும், சிவாஜியின் கப்பற் படைகள் கொங்கிணி நாட்டின் துறைமுகப் பட்டணங்களைப் பிடித்துக் கொண்டு விட்டதனாலும், அவர் கடைசியில் கி.பி. 1662-ல் சிவாஜியுடன் சமாதானஞ் செய்து கொண்டு அவருக்குக் கொங்கிணி நாட்டைக் கொடுத்து விட்டார்.

பரப்பு

அப்பொழுது சிவாஜியின் நாடு தெற்கு-வடக்கில் 160 மைல் தூரமும், கிழக்கு-மேற்கில் 100 மைல் தூரமும் பரவி விட்டது.

சிவாஜியின் அதிகார வளர்ச்சியைக் கண்ட ஔரங்கஜீப் சிவாஜியைத் தண்டிக்கக் கி. பி. 1663-ல் ஷயிஸ்டகான்



சிவாஜி

என்னும் தமது மாமனை யனுப்பவும், சிவாஜி அவனைத் திடீரென்று தாக்கி யெதிர்த்துத் துரத்தி விட்டார். கி. பி. 1664, 1665-ம் வருஷங்களில் சிவாஜி தமது கப்பற்படைகளைக் கொண்டு சூரத் பட்டணத்தை யெதிர்த்தும், மெக்கா யாத்திரிகர்களைச் சிறைப்பிடித்தும், செல்வம் நிறைந்திருந்த மற்றொரு துறைமுகப் பட்டணத்தைப் பிடித்துக் கொண்டும் விட்டார். அன்றியும் அவர் தம்முடைய அதிகாரத்தை வட கன்னடத்தில் ஸ்தாபித்துக் கொண்டார். அப்பொழுது ஔரங்கஜீப் சிவாஜியை ஜயித்து வரும்படி ஜயஸிங்கை அனுப்பினார். யாது காரணம் பற்றியோ சிவாஜி அவருடன் சமாதானஞ் செய்து கொண்டு விட்டார்.

ஷயிஸ்டகான்

சிவாஜியின் அதிகார வளர்ச்சி

பின்னர், சிவாஜி தமது குமாரருடன் டில்லிக்குச் சென்றபொழுது முகலாயவரசர் அவர்களை அவமானப் படுத்திச் சிறையிலிட்டு விட்டார். சிவாஜியும், அவர் மகனும் உபாயத்தினால் தப்பியோடிப் போனார்கள். அது முதல் சிவாஜிக்கு ஔரங்கஜீபின் மீது அடங்காத கோபம் உண்டாயிற்று. சிவாஜி வரும் வரையில் அவருடைய பிரதானிகளும், மந்திரிகளும், மற்றுமுள்ள உத்தியோகஸ்தர்களும் தத்தம் ஒழுக்கங்களிற் கொஞ்சமும் மாறுபடாமல் உண்மையாக நடந்து ராஜ்யத்தைச் செவ்வனே பரிபாலித்து வந்தார்கள். அவர் வந்ததும், மஹாராஷ்டிரர்கள் தாங்கள் முகலாய மன்னருடன் செய்து கொண்ட உடன்படிக்கையினால் இழந்துவிட்ட கோட்டைகளை ஒவ்வொன்றாகக் கைப்பற்றிக் கொண்டு விட்டார்கள். அப்பொழுது ஔரங்கஜீப் சிவாஜியுடன்

சிவாஜி சிறைப்பட்டது

சிவாஜி அரசரானது

சமாதானஞ்செய்து கொண்டு அவரை அரசரெனவும் அங்கீகரித்தார். ஆனால், கி. பி. 1669-ல், இருதிறத்தாருக்கும் சண்டை மூண்டது. அதனிறுதியில் அவர் கி. பி. 1674-ல் ரைகார்க் கோட்டையில், மஹாராஷ்டிர மன்னரென மகுடாபிஷேகம் செய்து கொண்டு, அதன் பொருட்டு ஏராளமான பொருளைச் செலவிட்டார்.

அப்பொழுது அவருடைய ராஜ்யம் வடக்கில் ஸூரத் வரையிலும், தெற்கில் ஹூப்ளி வரையிலும், கிழக்கில் பீஜப்பூர், கோலகொண்டா வரையிலும் பரவியிருந்தது.

பரப்பு

தபதி நதியின் தெற்கிலுள்ள முகலாயக் கீழதிகாரிகள் மஹாராஷ்டிரர்களுக்குச் சவுத், ஸர்தேஷ்முகி என்னும் வரிகள் செலுத்தி வந்தார்கள்.

கி. பி. 1676-ல், சிவாஜி தக்ஷிணத்தின் மீது படையெடுத்துச் சென்று, தமது தந்தைக்குச் சொந்தமாக விருந்து, அப்பொழுது தமது தம்பியான வெங்காஜியின் வசத்திலிருந்த நாட்டைக் கைப்பற்றிக் கொள்ள வெண்ணினார். போகும் வழியில் அவர் கோலகொண்டாவின் ஸுல்தானைச் சிநேகஞ் செய்து கொண்டார். பின்னர், அவர் வேலூரையும், ஜிஞ்ஜியையும் பிடித்துக் கொண்டு, வெங்காஜி தம்மைச் சரணமடையும்படியும், தஞ்சாவூர் ராஜ்யத்தில் தமக்குப் பாதியைக் கொடுத்து விடும்படிக்கும் செய்து கொண்டார்.

சிவாஜியின் தக்ஷிணப் படையெழுச்சி

பிறகு சிவாஜி பீஜப்பூரரசருடனும் சமாதானம் செய்து கொண்டார். அப்புறம் அவர் வெகு விமரிசையாக ராஜரீகம் நடத்தி வந்து கி. பி. 1680-ல் தேக வியோகமானார்.

சிவாஜி தமது ராஜ்யத்தை எட்டுப் பிரதானிகளடங்கிய ஒரு சபையைக்கொண்டு ஆட்சிசெய்து வந்தார். அவர் தமது உத்தியோகஸ்தர்கள் கொஞ்சம் கொஞ்சமாக அதி

காரத்தைக் கவர்ந்துகொண்டு தம்மை மீறி நடவாதிருப்பதன்பொருட்டு உயர்ந்த உத்தியோகங்களை வம்ச பரம்பரையாகக் கொடாமலும், அவர்களுக்குச் சம்பளத்தையன்றி ஜாகீர்கள் அளிக்காமலும், ஜமீன்தாரர்களைக் கொண்டல்லாமல் நேராக வரி வசூல் செய்தும், தமது உத்தியோகஸ்தர்கள் அநுஷ்டிக்கவேண்டிய சட்டதிட்டங்களை வரையறுத்தும், நானாஜாதியினரையும் உத்தியோகங்களில் அமர்த்தியும் ஏற்பாடுகள் செய்தார்.

ராஜ்ய பரிபாலனம்

சிவாஜி கல்வியின் பொருட்டும், கோயில்களின் பொருட்டும் ஏராளமான பணத்தைச் செலவிட்டு வந்தார். அவர் காலத்தில் கல்வியும், மதத்தரிப்பும் விருத்தியடைந்து உண்மையான ஹிந்து மதம் பரவினதற்குப் பற்பல ஜாதிகளிலிருந்தும் உண்டான சங்கதேவர், முக்தாபாய், வேணுபாய், நாமதேவர், சொக்க மேளர் முதலான பெரியோர்களே சிறந்த சாக்ஷிகளாவர்.

பெரியோர்கள்

சிவாஜி மகம்மதியர்களைக் கௌரவமாக நடத்தி வந்தாரென்றும், அவர் அவர்களுடைய கொரானைப் பழித்தாவது, மசூதிகளை யிடித்தாவது தீங்கிழைக்கவில்லையென்றும், அவர் சண்டையிற் சிறைப்படுத்திய ஸ்திரீகளையும், குழந்தைகளையும் மரியாதையுடனும், அன்புடனும் நடத்திவந்தார் என்றும் மகம்மதிய சரித்திராசிரியர்களே சொல்லியிருக்கிறார்கள். இத்தகைய பெருமைவாய்ந்த சிவாஜி மன்னரைச் சில சரித்திரக்காரர்கள் பலவிதங்களிலும் நிந்தித்து எழுதியுள்ளார்களெனின், அவர்களை நாம் என்னென்று சொல்லுவது? அவர்கள் காய்தல் என்னும் குற்றத்தின் பாற்பட்டு அவ்வண்ணம் எழுதியிருக்கின்றார்கள் போலும்.

சிவாஜியின் உத்தம குணங்கள்

viii. சிவாஜிக்குப் பின் மஹாராஷ்டிர அதிகாரம்

சாம்பாஜியும்; ஸாஹுவும்

சிவாஜிக்குப்பின் பட்டத்துக்கு வந்த அவர் மைந்தரான சாம்பாஜி என்பவர் ஔரங்கஜீபினால் சிறை பிடிக்கப்பட்டுக் கி. பி. 1689-ல் கொலையுண்டு போனார். ஔரங்கஜீப் சாகுமளவும் சாம்பாஜியின் குமாரரான ஸாஹு என்பவர் சிறைப்பட்டிருந்ததனால், சாம்பாஜியின் சகோதரரான ராஜாராம் என்பவர் கி. பி. 1700 வரையில் ஜிஞ்ஜியிலிருந்து ராஜ்யபாரம் நடத்தி வந்தார். அவர் இறக்கவும், அவருடைய மனைவியான தாராபாய் சதாராவைத் தனது ராஜ்யத்தின் தலைநகராகச் செய்துகொண்டு ஆட்சி புரிந்து வந்தாள். கி. பி. 1707-ல் ஔரங்கஜீப் இறக்கவும், பஹதுர்ஷா ஸாஹுவை விடுதலை செய்து விட்டு விட்டார். உடனே ஸாஹு மஹாராஷ்டிர அரசரானார். சாம்பாஜியைப்போல் ஸாஹுவும் சிற்றின்பப் பிரியராக இருந்து வந்ததனால், ராஜ்ய காரியங்களைப் பீஷ்வா என்னும் முதன் மந்திரியே கவனித்துவந்தார். நாளடைவில் பீஷ்வாக்களே வம்ச பரம்பரையாக அதிகாரம் பெற்று ஆட்சி செய்ய ஏற்பட்டது. ஸாஹு பெயருக்குமட்டில் அரசராக இருந்து வந்தார்.

முதல் பீஷ்வா

பாலாஜி விசுவநாத் என்பவர் கி. பி. 1714 முதல் கி. பி. 1720 வரையில் பீஷ்வாவாக இருந்தார். அவர் வெகு சமர்த்தர். அவர் நன்றாக ராஜ்யபாரம் செய்து வந்தார். அவருக்குப் பின்பு அவர் மைந்தர் பாஜிராவ் I பீஷ்வாவாய்க் கி. பி. 1720 முதல் கி. பி. 1740 வரையில் அரசு செலுத்தி வந்தார். அவர் தமது சேனையைப் பலப்படுத்தி மகம்மது ஷாவை யெதிர்த்தும், ஹைதராபாத் நவாப்பான அசப்ஜாவை வளர வொட்டாமற்றடுத்தும் வந்தார்.

மஹாராஷ்டிரப் பிரபுக்கள்


பீஷ்வாவின் வெற்றி

அவர் காலத்தில் கைக்வார், ஸிந்தியா, ஹோல்கார், பான்ஸ்ல என்னும் நான்கு மஹாராஷ்டிரப் பிரபுக்கள் முன்னேற்றத்தைப் பெற்று நாளடைவில் முறையே பரோடா, க்வாலியர், இந்தூர், பீரார் என்னும் நாடுகளுக்கு அரசர்களானார்கள். பாஜிராவ் கூர்ஜரம், மாளவம், பண்டில்கண்ட் நாடுகளைக் கைப்பற்றிக் கொண்டு ஹைதராபாத் நவாப் முகலாய வரசர்க்குத் துணை வந்ததற்காகத் தமக்கு ஐம்பது லக்ஷம் ரூபாய் கொடுக்கும்படிக்கும் ஏற்பாடு செய்து கொண்டார்.

புதிய பரிபாலன முறை

அவர். கி. பி. 1740-ல் இறந்துவிடவும், அவர் மைந்தரான பாலாஜி பாஜிராவ் பீஷ்வாவானார். இவர் வெகு கெட்டிக்காரர்; பேச்சில் வல்லவர். இவர் காலத்தில் பூனா மஹாராஷ்டிர ராஜ்யத்தின் தலைநகரமாயிற்று. இவர் கைக்வார் முதலான மஹாராஷ்டிரத் தலைவர்களை ஒன்று சேர்த்துத் தங்களுக்குள் ஒரு கட்டுப்பாட்டை உண்டு பண்ணி, எல்லோரும் சமமாகவும், ஏகோபித்தும் நடத்துவதான ஒரு ராஜ்ய பரிபாலன முறையை ஏற்படுத்தி, அவர்களுக்குள் தாமே முதல்வராய் நின்று விளங்கினார். இவருடைய காலத்திற்றான் மஹாராஷ்டிர அதிகாரம் உன்னத நிலைமையில் இருந்ததும், ஆமதுஷா துராணி படையெடுத்து வந்து அதை முழுவதும் அழித்ததும் ஆம்.

காஸி உத்தீனின் வேண்டுகோளுக் கிணங்கி இவருடைய தம்பியான ரகுநாதராவ் பஞ்சாபை ஜயித்து வரச் சென்றபொழுது, துராணி மஹாராஷ்டிரர்களை லாகூரினின்றும் துரத்திவிட்டானென்று முன்னமே சொல்லப்பட்டிருக்கிறது. அப்பொழுது துராணி ஸிந்தியாவையும்,



ஹோல்காரையும் தோற்க அடித்துவிட்டான். கடைசியில் கி. பி. 1761-ல் மஹாராஷ்டிரருக்கும், ஆமதுஷா துரானிக்

கும் **பானிப்பட்டில்** அகோரயுத்தம் நடந்ததென்றும், அதில் மஹாராஷ்டிரர்கள் முற்றிலும் தோல்வியடைந்தார்களென்றும் நாம் அறிவோம். அந்தச் சண்டையில் மஹாராஷ்டிர சேனை அடியோடு மடிந்து ஒழியவும், பாலாஜி பாஜிராவ் மனம்நொந்து, தேகம் மெலிந்து, மனோவியாதி மேலிட்டு ஆறு மாதத்திற்குள் இறந்து போனார். அவருடன் மஹாராஷ்டிரருடைய மேன்மையும் தொலைந்து போயிற்று. அவர்கள் ஹிந்துஸ்தானத்தில் சம்பாதித்த நாடுகள் எல்லாவற்றையும் அடியோடு இழந்து விட்டார்கள். அன்றியும், மஹாராஷ்டிரத் தலைவர்கள் தங்களுக்குள்ளேயே சண்டைகள் செய்யவுந் தலைப்பட்டு விட்டார்கள்.

பானிப்பட்டுச் சண்டை

துரானி தான் கஷ்டப்பட்டுச் சண்டையில் வென்ற நாட்டை ஆட்சி செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யாது தன்னாட்டிற்குத் திரும்பிவிடவும், மஹாராஷ்டிரர்கள் பலம் மிகவும் குன்றிவிடவும், அதற்கு முன்னமேயே முகலாய ராஜ்யம் அழிந்து போகவும், அப்பொழுது இந்தியாவுக்கு வந்து கொஞ்சங் கொஞ்சமாக ராஜ்யத்தைச் சம்பாதித்துக் கொண்டு அதிகார அபிவிருத்தியை யடைந்து வந்த ஆங்கிலேயர்கள் ஒரு பெரிய சாம்ராஜ்யத்தைச் சம்பாதிக்கலானார்கள்.

மஹாராஷ்டிரரின் அழிவு

ix. ஸீக்கர்கள்

ஔரங்கஜீபின் சிறப்பைச் சிதைக்க வந்தவர்களில் ஸீக்கர்களும் ஒரு வகையார். ஹிந்து மதத்தைச் சீர் திருத்தி முன்னுக்குக் கொண்டுவந்த ஆசாரியர்களில் ஒருவரான **ராமாநந்தர்** எல்லா மதத்தினரையும் தமது சமூகத்திற் சேர்த்துக்கொண்டு, பக்தி மார்க்கத்தின் சிறப்பை யாவருமறிய உபதேசித்து வந்தார். அவருடைய சிஷ்யர்களில் நெச

ஸீக்கர்கள்

வுத் தொழில் செய்து வந்த மகம்மதியர் ஒருவர் இருந்தார். அவருக்குக் கபீர் என்று பெயர். கபீருக்கு ஹிந்துக்களையும், மகம்மதியர்களையும் ஒன்று சேர்த்து அவர்களை ஒரே மதத்தினராக்க வேண்டுமென்னும் அவா உண்டாயிற்று. அவர் அதற்கிணங்க மதபோதனை செய்துவரவும், பலர் அவரைப் பின்பற்றி அவருக்குச் சிஷ்யர்களானார்கள்.

அவர்களில் கத்ரி வகுப்பைச் சேர்ந்த **நாநக்** என்பவர் ஒருவர். அவர் கி. பி. 1469-ல் லாகூருக்கருகிலுள்ள ஒரு கிராமத்திற் பிறந்தார். அவர் தம்முடைய குருவின் உபதேசத்தை யொட்டித் தாம் ஒரு புதிய மதத்தை ஸ்தாபிக்கக் கருதி மகம்மதியர்களையும், ஹிந்துக்களையும் ஒரே கடவுளை ஒரே விதமாகத் தொழுது வரும்படி செய்தார். அவர் கடவுள் ஒருவரே யென்றும், அவரை எவரும் வழிபடலாமென்றும், ஜாதி, மத பேதங்கள் பொய்யென்றும் உபதேசித்து வந்தார். அவருடைய போதனையைக் கேட்டு வந்த பலர் அவருக்குச் சிஷ்யர்களானார்கள். அவர்களுக்குத் தான் **ஸீக்கர்கள்** என்று பெயர். ஸீக்கர் என்றால் சிஷ்யர் என்று பொருள். ஸீக்கர்களுடைய மதம் ஸீக்க மதம் எனப்படும்.

குரு நாநக்

ஸீக்க மதத்தை உண்டு பண்ணின நானக்குக்குப் பிறகு அநேக ஸீக்க குருக்கள் தோன்றினார்கள். முதல் நான்கு ஸீக்ககுருக்களும் ஸீக்கர்களைப் போர் செய்யவாவது, ராஜரீகம் நடத்தவாவது பயிற்றுவிக்கவில்லை. கி. பி. 1577-ல் அக்பர் அவர்களுக்கு அமிருதஸரஸில் இடங் கொடுக்கவும், அதுவே ஸீக்கர்களுக்கு ஒரு முக்கிய பட்டணமாயிற்று. நாளடைவில் மதப்பற்று அதிகம் கொண்ட மகம்மதியர்கள் அவர்களை எதிர்த்துப் பல முறை சண்டை செய்யத்தலைப்பட்டார்கள். ஸீக்கர்களின் ஐந்தா

ஸீக்க குருக்கள்

வது குருவான அர்ஜுனர் ஜஹாங்கீரின் குமாரரான குஸ்ரு என்பவர் தந்தைக்கு விரோதமாகக் கலகஞ்செய்த பொழுது குஸ்ருவுக்குத்துணை நின்றதனால், கி. பி. 1606-ல் கொலையுண்டு போனார். அவருக்குப்பின் வந்த ஹரி கோவிந்தர் ஸீக்கர்களுக்கு யுத்தப் பயிற்சி செய்வித்தார்.

ஔரங்கஜீப் ஒன்பதாவது குருவான டேக்பஹதூர் என்பவரைச் சிறைப்படுத்தியும், மகம்மதியராகும்படி வற்புறுத்தியும், இன்னும் பல தீங்குகளை யிழைத்தும், கடைசியிற் கொன்றுவிட்டார். அவர் இறக்கவும், ஸீக்கர்களுக்கு மகம்மதியர்களிடம் விரோதம் பெருகிவிட்டது. அவர்கள் ஔரங்கஜீப் தங்களுடைய குருவைக் கொன்றதற்காகப் பழிவாங்குவதற்குத்தக்க சமயத்தைப் பார்த்திருந்தார்கள்.

டேக்பஹதூர்

அவ்வாறான சமயத்தில், அவர்களுடைய பத்தாவது குருவான குரு கோவிந்தர் தோன்றி மகம்மதியர்கள் செய்யும் கொடுமைக்கீடாக ஸீக்கர்கள் பழிவாங்குவது நியாயமாகும் என்று உபதேசித்து வரலானார். குருகோவிந்தர் அவர்களுக்கு இரண்டு சம்ஸ்காரங்களை உண்டுபண்ணி அனைவரையும் ஒன்றுபடுத்தினார். புதிதாக ஸீக்கமதத்தைச் சேரும் ஒவ்வொருவனும் அந்த சம்ஸ்காரங்களைப் பெறவேண்டும். இவ்வாறு ஏற்பட்ட அவர்களுடைய சமாஜத்துக்குக் கால்ஸா என்னும் பெயர் வந்தது. கால்ஸா என்றால் நிர்மலம் என்று பொருள்.

குரு கோவிந்தர்

குரு கோவிந்தர் ஸீக்கர்களை யுத்தத்திற்குப் பயிற்றி அவர்களுக்குச் சிங்கம் என்று பொருள்படும் ஸிங்க் என்னும் பட்டத்தையும் கொடுத்தார். மகம்மதியர்கள் குரு கோவிந்தருடைய பிள்ளைகளைக் கொன்றுவிடவும், அவர் தக்ஷிணத்துக்கு ஓடிப்போய்விட்டார். என்றாலும், கி. பி.

1708-ல் அவரும் மகம்மதியருடைய கையினுற் கொலை யுண்டு போனுர். அவர் தாம் ஸீக்கர்களுடைய கடைசிகுரு.

அவருக்குப் பின் பந்தா என்பவர் ஸீக்கர் சேனையின் தளகர்த்தராக இருந்து மகம்மதியர்களைக் கொன்றும், அவர்களுடைய மசூதிகளை யிடித்தும், கிராமங்களை அழித்தும் தீங்கிழைக்கலானுர். அதனுல், மகம்மதியர்கள் அவரைக் கொன்றுவிட்டதையன்றி, ஸீக்கர்களை யடியோடு தொலைத்து விடவேண்டுமென்றும் முன் வந்தார்கள். ஆனுல், ஸீக்கர்களோ பலாட்டியர்களாகிப் பெருகி வந்தார்கள். அவர்கள் பல பிரிவுகளாகப் பிரிந்து நின்று எதிர்த்து அநேகம் கோட்டைகளைக் கட்டிக்கொண்டார்கள். ஒவ்வொரு பிரிவிலும் பத்து முதல் பன்னீராயிரம் போர்வீரர்கள் அடங்கி ஒரு ஸர்தாரின் அதிகாரத்திற்கு உட்பட்டிருந்தார்கள். ஸீக்கர்களுக்குள் பந்துக் கட்டுப்பாடு அதிகம்.

பந்தா

IX. ஆங்கிலேய அதிகாரத்தின் முன்னேற்றம்

i. ஐரோப்பிய வர்த்தகர்கள்

வெகு நீண்டகாலமாக இந்தியாவுக்கும், ஐரோப்பிய நாடுகளுக்கும் வடமேற்குக் கணவாய்கள், ஆப்கானிஸ்தானம், பாரஸிகம் ஆகிய நாடுகளின் வழியாகவும், பாரஸிக வளைகுடா, செங்கடல், எகிப்து ஆகிய இவற்றின் மார்க்கமாகவும் வியாபாரம் நடந்துவந்தது என்பது நமக்குத் தெரியுமல்லவா? எகிப்து, பாரஸிகம் முதலிய நாடுகள் மகம்மதியர் வசமான பொழுது, கிறிஸ்தவ வியாபாரிகள் அவற்றின் வழியாக வரக்கூடாமற் போயிற்று.

ஐரோப்பிய வர்த்தகர்கள்

அதனால், இந்திய வியாபாரத்தில் ஏராளமான பொருளைச் சம்பாதித்து வந்த ஐரோப்பிய வர்த்தகர்கள் மகம்மதியருடைய உபத்திரவம் சிறிதும் இல்லாத ஒரு புது வழியைக் கண்டுபிடிப்பதில் முயன்று வந்தார்கள். அல்லாமலும், அக்காலத்தில் பல ஐரோப்பிய ஜாதியர்கள் அயல் நாடுகளைக் கண்டுபிடித்து அவைகளில் தாங்கள் குடியேறவும், வியாபாரம் செய்யவும் வேண்டுமென்னும் மனக்கிளர்ச்சி யுள்ளவர்களாக இருந்தார்கள். அதற்கிணங்க அவர்களிற் பலர் புதிய புதிய நாடுகளைத் தேடிச் சென்றார்கள்.

கி. பி. 1492-ல், இந்தியாவை நாடிவந்த **கோலம்பஸ்** என்பவர் அமெரிக்காவைக் கண்டு பிடித்தார் என்பது யாவரு மறிந்ததேயாம். அப்பொழுது முதன் முதல் இந்தியாவுக்கு வந்தவர் **வாஸ்கோடிகாமா** என்னும் போர்ச்சுகீசியர்தாம். அவர் கி. பி. 1497-ம் வருஷம் ஜூலை மாதம் 8-ம் தேதி தமது நாட்டைவிட்டுப் புறப்பட்டு 1498-ம் வருஷம் மே மாதம் 20-ம் தேதி கள்ளிக்கோட்டைக்கு வந்து சேர்ந்தார். அவர் கள்ளிக்கோட்டை அரசரைச் சிநேகஞ் செய்து கொண்டு, அங்கே தங்கியிருந்து சில மாதங்கள் கழித்துத் தம்மூருக்குச் சென்று விட்டார்.

முயற்சிகள் ஜயமானது

துருக்கியர்களுக்கும் இந்திய வியாபாரத்தில் அவர்களுக்குப் போட்டியாய் வந்து சேர்ந்த போர்ச்சுகீசியருக்கும் பல சண்டைகள் நடந்தன. அன்றியும், போர்ச்சுகீசியர்கள் விஜயநகரத்தரசர்களோடு சேர்ந்து கொண்டும் மகம்மதியர்களுடன் போர் செய்தார்கள். கி. பி. 1510-ல், அவர்கள் **கோவா** பட்டணத்தைப் பிடித்துக் கொண்டார்கள். அதுவே கி. பி. 1530-ல் அவர்களுடைய பிரதானமான பட்டணம் ஆயிற்று. அதன் பின்னர், அவர்கள்

மலாக்காவைப் பிடித்துக்கொண்டு ஸையாம் நாட்டுடனும், ஸுமத்ரா, ஜாவா, போர்னியோ முதலான தீவுகளுடனும் வியாபாரம் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டார்கள். அவர்கள் அப்பொழுது ஆர்மஸ் என்னுமிடத்தில் கோட்டையொன்று கட்டிக்கொண்டார்கள். கி.பி. 1538-ல், டையூ என்னும் பட்டணமும், கி. பி. 1558-ல், டாமன் என்னும் பட்டணமும் அவர்களுக்குச் சொந்தமாயின. கி. பி. 1560-ம் வருஷத்தில், போர்ச்சுகீசியர் டையூ முதல் சிட்டகாங் வரையிலுமுள்ள கடற்கரைக்கு அதிகாரிகளாய்விட்டார்கள். பல வர்த்தக சாலைகளையும், அவற்றின் பாதுகாப்பிற்காகப் பல கோட்டைகளையும் அமைத்துக்கொண்டு மிக்க விமரிசையாக வியாபாரஞ் செய்து வந்த போர்ச்சுகீசியருடைய அதிகாரம் கடைசியில் அடியோடு ஒழிந்து பட்டது.

போர்ச்சு கீசியர்

போர்ச்சுகீசியர்கள் தங்களுடைய சக்தியை மீறி இந்நாட்டை ஜயித்து ஆட்சி பெறவேண்டும் என்று முயன்றதனாலும், அவர்கள் இந் நாட்டுக்குடிகளைக் கிறிஸ்தவர்களாகும்படி கட்டாயப்படுத்தி அவர்களுடைய விரோதத்தைச் சம்பாதித்துக் கொண்டதனாலும், அவர்களுடைய உத்தியோகஸ்தர்களிற் பலர் சுய நலம் பாராட்டியும், லஞ்சம் வாங்கியும் தமது கௌரவத்தையும், அதிகாரத்தையும் போக்கிக்கொண்டு விட்டதனாலும், அவர்களுக்குப் போட்டியாகக் கிளம்பி வந்த டச்சுக்காரர்கள் தனித்தும், ஆங்கிலேயருடைய உதவியைப்பெற்றும் அவர்களைப் பல சண்டைகளிலும் தோற்க அடித்துத் துரத்தினதனாலும், கி. பி. 1580-ல் போர்ச்சுகல் ஸ்பெயின் தேசத்தின் அதிகாரத்திற்குட்பட்டு விட்டதனாலும், போர்ச்சுகீசியருடைய இந்திய

போர்ச்சு கீசிய வியாபாரம் அழிவுற்றது

வர்த்தகம் அழிந்து விட்டது. இப்பொழுது போர்ச்சுகீசியருக்கு இந்தியாவில் கோவா, டையூ, டாமன் என்னுமிடங்கள் தாம் சொந்தமாயுள்ளன.

போர்ச்சுகீசியருக்கு இந்திய வியாபாரத்தில் உண்டான லாபத்தைப்பற்றிக் கேள்வியுற்ற மற்றைய ஐரோப்பியர்களிற் சிலர் இந்தியாவோடு வர்த்தகஞ்செய்ய முன் வந்தார்கள். இவர்களில், டச்சுக்காரர்கள் 16-வது நூற்றாண்டின் முதலில் இந்தியாவுக்கு வந்தார்கள். இவர்கள் கி. பி. 1609-ல், பழவேற்காட்டிலும், கி. பி. 1616-ல், ஸூரத்திலும் வியாபாரக் கிடங்குகளைக் கட்டிக் கொண்டார்கள். ஆனால் கி. பி. 1660 முதல் நாகப்பட்டணம் தான் அவர்களுக்கு முக்கிய வியாபாரஸ்தானமாயிற்று. நாளடைவில் இவர்கள் போர்ச்சுகீசியருக்குச் சொந்தமாயிருந்த பல வியாபாரஸ்தலங்களையும் கைப்பற்றிக்கொண்டு விட்டார்கள். டச்சுக்காரர்கள், இந்தியாவுக்கு வந்த சுமார் எழுபது வருஷங்களுக்குள் இந்தியாவில் மசூலிப்பட்டணம், ஹூக்ளி, பாட்னு, டாக்கா, ஆமதாபாத், ஆக்ரா முதலான பல விடங்களிலும், இந்தியாவுக்குக் கிழக்கில் மலாக்காவிலும், ஜாவாவிலும் கிடங்குகள் கட்டிக்கொண்டார்கள். ஆனால் ஆங்கிலேயர்கள் டச்சுக்காரரை இந்தியாவினின்றுந் துரத்திவிட்டார்கள்.

டச்சுக் காரர்கள்

கி. பி. 1623-ல், டச்சுக்காரர்கள் சில ஆங்கிலேயரையும், ஜப்பானியர்களையும் யாதொரு காரணமுமின்றி அம்பாய்னு வென்னுமிடத்தில் கொன்று விட்டார்கள். அவர்கள் ஆங்கிலேயருக்கு விரோதமாக வங்காள நவாப்புடன்சேர்ந்து கொள்ளவும், கி. பி. 1759-ல், போர்ட் என்பவர் அவர்களைச் சின்ஸூரா வென்னுமிடத்தில் அடியோடு தோற்க அடித்து விட்டார். அதற்

டச்சு வியாபாரம் அழிந்தது

குப் பின் டச்சுக்காரர்கள் இந்தியாவில் தங்களுக்குச் சொந்தமாயிருந்த ஸ்தலங்களை யெல்லாம் இழந்துவிட்டு, ஸுமத்ரா, ஜாவா முதலான கீழ் இந்தியத் தீவுகளில் வாசனைத்ரவ்ய வியாபாரத்தினின்றும் தமக்குக் கிடைத்து வந்தலாபத்தைக் கருதி இந்நாட்டை விட்டுச் சென்று விட்டார்கள்.

ஆங்கிலேயர்கள் கி. பி. 1588-ம் வருஷம் ஸ்பெயின் தேசத்துப் போர்க் கப்பற் கூட்டத்தை வென்றது முதல் இந்தியாவோடு வியாபாரம் செய்யவேண்டு மென்னும் மனக்கிளர்ச்சியுள்ளவர்களாக இருந்து வந்தார்கள். கி. பி. 1600-ம் வருஷம், சில லண்டன் வியாபாரிகள் ஒன்று சேர்ந்து, எலிஸபெத் மஹாராணியாரிடம் உத்தரவு பெற்று 'ஆங்கிலேய கீழிந்திய வர்த்தகக் கம்பெனி' என்னும் ஒரு சங்கத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள். அந்தக் கம்பெனியார் முகலாய சக்ரவர்த்தியின் அநுமதியைப் பெற்றுக் கி. பி. 1611-ல், மசூலிப்பட்டணத்திலும், மறு வருஷம் ஸூரத்திலும் பண்டக சாலைகளைக் கட்டிக் கொண்டார்கள். ஸர் தாமஸ் ரோ வென்னும் ஆங்கிலேய ராயபாரிக்கு ஜஹாங்கீர் சக்ரவர்த்தி முகலாய ராஜ்யத்தில் எந்த விடத்திலானாலும் ஆங்கிலேயர்கள் வியாபாரஞ் செய்யலாமென்று உத்தரவு கொடுக்கவும், அவர்களுடைய வர்த்தகம் கொஞ்சங் கொஞ்சமாகப் பெருகிவரத் தலைப்பட்டது.

ஆங்கிலேயர் சாஸனம் பெற்றது

அதைக் கண்ட வேறு ஆங்கிலேய வியாபாரிகளும் வெவ்வேறு கம்பெனிகளை உண்டுபண்ணிக் கொண்டு தாங்களும் இந்தியாவுக்கு வந்து வர்த்தகம் செய்ய ஆரம்பித்தார்கள். இவர்களுள் போட்டி யுண்டாகவும், அனைவருக்கும் லாபம் குறைவுபட்டதையன்றி

ஆங்கிலேய வர்த்தகர்கள் ஒற்றுமைப் பட்டது

இவர்களுள் சச்சரவுகளும் ஏற்பட்டு விட்டன. கி. பி. 1702-ல் ஆன் ராணியார் காலத்தில் அவர்கள் தங்களுடைய சச்சரவுகளை நிருத்தி யாவரும் ஒன்று சேர்ந்து 'ஐக்கிய கிழிந்திய வர்த்தகக் கம்பெனி' என்னும் சங்கத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள்.

அதற்கு முன்னமேயே அவர்கள் கி. பி. 1639-ல் சந்திரகிரி அரசரிட மிருந்து சென்னப்பட்டணத்தை விலைக்கு வாங்கி, அதில் ஒரு வியாபாரக் கிடங்கையும், அதன் பாதுகாப்பிற்காக ஒரு கோட்டையையுங் கட்டிக் கொண்டார்கள். அதுதான் 'ஸேன்ட் ஜார்ஜ் கோட்டை' என்று வழங்கப்பட்டு வருவது. கி. பி. 1661-ல் இரண்டாவது சார்ல்ஸ் என்னும் ஆங்கிலேய வரசர் போர்ச்சுகீசிய வரசரின் புத்திரியை மணந்து கொண்ட பொழுது போர்ச்சுகீசிய மன்னவர் தமக்குச் சொந்தமாயிருந்த பம்பாயைத் தமது குமாரிக்கு ஸ்திரீதனமாகக் கொடுத்தார். கி. பி. 1668-ல் அதைச் சார்ல்ஸ் ஆங்கிலேய வர்த்தகக் கம்பெனியாருக்கு மிகவும் குறைவான வாடகைக்குக் கொடுத்துவிட்டார். நாளடைவில் பம்பாய் ஒரு பெரிய நகரமாய்விட்டதை யல்லாமல், இந்தியா முழுமைக்கும் சிறந்ததான துறைமுகப்பட்டணமும் ஆகிவிட்டது.

வியாபார ஸ்தலங்கள்

ஆங்கிலேய வியாபாரிகளுக்கு முதலில் வட இந்தியாவில் பாட்னு, டாக்கா, காஸிம்பஜார் என்னுமிடங்களில் பண்டக சாலைகளிருந்தன. கி. பி. 1653-ல் அவர்களுக்கு வங்காளத்தில் பாலசூர் என்னுமிடங் கிடைத்தது. பின்னர் அவர்கள் ஷாஜஹானின் உத்தரவைப் பெற்று ஹூக்ளியில் ஒரு வர்த்தகசாலையைக் கட்டிக்கொண்டார்கள். ஆனல், ஔரங்கஜீப் பட்டத்துக்கு வந்தபொழுது, ஆங்கிலேயர்கள்

கல்கத்தா

அவ்விடத்தை விட்டு ஓடிப்போக நேர்ந்தது. பிறகு, அவர்கள் முகலாய சக்ரவர்த்தியோடு சமாதானஞ் செய்து கொண்டு, கி. பி. 1690-ல் மறுபடியும் அதேயிடத்தில் மூன்று கிராமங்களை விலைக்கு வாங்கிச் சில வருஷங்களுக் கெல்லாம் **போர்ட் வில்லியம்** என்னும் கோட்டையைக் கட்டிக் கொண்டார்கள். அவர்கள் வாங்கின கிராமங்களில் ஒன்றிற்குக் காளிகாட் என்று பெயரானதனால், அங்கு உண்டான பட்டணத்துக்குக் **கல்கத்தா** வென்னும் பெயர் வந்தது. அதுவும் கொஞ்சங் கொஞ்சமாகப் பெருகி, நாளடைவில் ஒரு பெரிய நகரமாய் விட்டது.

பிரஞ்சுக் காரர்

ஆங்கிலேயரைப் போன்று பிரஞ்சுக்காரர்களும் கி. பி. 1664-ல் ஒரு வர்த்தகக் கம்பெனியை ஸ்தாபித்துக் கொண்டு இந்தியாவுடன் வியாபாரம் செய்யத் தலைப்பட்டார்கள். இவர்கள் கிழக்குக் கடற்கரையில் **சந்திரநாகூர், புதுச்சேரி, காரைக்கால்** என்னுமிடங்களிலும், மேற்குக் கடலோரத்தில் **மாஹி** என்னுமிடத்திலும் வர்த்தக சாலைகளை ஏற்படுத்திக்கொண்டு டச்சுக்காரர்களுக்கும், ஆங்கிலேயர்களுக்கும் போட்டியாக வியாபாரஞ் செய்து வந்தார்கள். எனினும், இவர்கள் சுதேச சிற்றரசர்களது வியவகாரங்களில் தலையிட்டுக் கொண்டு தாங்கள் இந்தியாவில் ஒரு ராஜ்யத்தை ஸ்தாபித்துக் கொள்ள வேண்டுமென்று முயன்று வந்ததனால் தங்களுடைய சிறப்பையும் வியாபாரத்தையும் இழந்து விட்டார்கள். அல்லாமலும், இவர்கள் ஆங்கிலேயருடன் பல சண்டைகள் செய்து தோல்வி யடைந்ததும் இவர்களுடைய க்ஷீணத்திற்குக் காரணமாயிற்று.

ii. கர்னாடக யுத்தங்கள்

கி. பி. 1744-ல், ஐரோப்பாவில் ஆங்கிலேயருக்கும் பிரஞ்சுக்காரருக்கும் சண்டை உண்டாயிற்று. அப்

பொழுது லபோர்டோனே என்னும் பிரஞ்சுக்காரக் கப்பற்றலைவர் கி. பி. 1746-ல் இந்தியாவுக்கு வந்து சென்னப்பட்டணத்தை முற்றுகை செய்து கைப்பற்றிக் கொண்டார். அதைக் கண்ட கர்ணாடக நவாப்பு மதராஸைத் திரும்பவும் ஆங்கிலேயருக்குக் கொடுத்து விடும்படி டூப்ளே என்னும் பிரஞ்சு கவர்னருக்குச் சொல்லி யனுப்பினார். அதற்கவர் இணங்கி வராததனால், நவாப்புக்கும் பிரஞ்சுக்காரருக்கும் **ஸந்தோமில்** சண்டை நடந்தது. அதில் டூப்ளே வெற்றி பெற்றார். பின்னர்ப் பிரஞ்சுக்காரர்கள் தேவனாம்பட்டணத்தையும் பிடித்துக் கொள்ளும்படி முயன்றபொழுது ஆங்கிலேயர்கள் அவர்களை வென்று அடித்துத் துரத்தி விட்டார்கள். அதற்குள் இரு திறத்தாருக்கும் ஐரோப்பாவில் சமாதானம் ஏற்பட்டு விட்டதனால், பிரஞ்சுக்காரர்கள் மதராஸை ஆங்கிலேயருக்குத் திருப்பிக் கொடுத்து விட்டார்கள். இவ்வாறாக **முதல் கர்ணாடக யுத்தம்** முடிவு பெற்றது.

முதல் கர்ணாடக யுத்தம்

கி. பி. 1748-ம் வருஷத்தில் ஹைதராபாத் நிஜாமான **சின் கிலிச் கான்** என்பவர் இறந்து விடவும், அவருடைய மைந்தர் **நாஸர்ஜங்க்** என்பவரும், பேரர் **முஸபர்ஜங்க்** என்பவரும் பட்டத்தைக் குறித்துச் சண்டையிடலானார்கள். அதே சமயத்தில் **சந்தாஸாஹிப்** என்பவர் **ஆன்வருடின்** என்பவரைத் துரத்திவிட்டுத் தாமே கர்ணாடக நவாப்பாக வேண்டும் என்று முன் வந்தார். முஸபர்ஜங்கும் சந்தாஸாஹிபும் சேர்ந்துகொண்டு டூப்ளேயைத் தமக்குத் துணைவரும்படி வேண்டினார்கள். அவர் அதற்கிணங்கி **புஸ்ஸி** என்பவரை அனுப்ப, புஸ்ஸி **ஆம்பூரில்** ஆன்வருடினுடன் சண்டையிட்டு அவரைக் கொன்று

ஹைதராபாத்திலும் ஆறுகாட்டிலும் ஸிம்மாஸனத்தைக் குறித்த சண்டைகள்

விட்டார். உடனே சந்தாஸாஹிப் ஆறுகாட்டுக்கு நவாப் பானார். அப்பொழுது நாஸர்ஜங்க் என்பவரும் கொலையுண்டு போக, முஸபர் ஜங்க் ஹைதராபாத்துக்கு நிஜாம் ஆனார். அதனால் பிரஞ்சுக்காரருடைய அதிகாரம் மேன்மையடைய லாயிற்று. உடனே டூப்ளே கர்னாடக கவர்னராக நியமிக்கப்பட்டதையன்றிப் பிரஞ்சுக்காரருக்கு வட சர்க்காரும் சொந்தமாயிற்று.

ஆன்வருடினுடைய மைந்தரான மகம்மது அலி என்பவர் திரிசிராப்பள்ளிக்குச் சென்று ஆங்கிலேயரைத் தமக்கு உதவி செய்யும்படி வேண்டினார்.

ஆறுகாடு முற்றுகை

அதை யறிந்த சந்தாஸாஹிப் ஒரு பெருஞ் சேனையுடன் புறப்பட்டுச்சென்று திரிசிராப்பள்ளியை முற்றுகை செய்தார். அந்தச் சமயம் பார்த்து ஆங்கிலேயர்கள் நவாப்பின் தலைநகரான ஆறுகாட்டைப் பிடித்துக் கொண்டார்கள்.

ஆறுகாட்டிற்கனுப்பப்பட்ட சேனைக்கு க்ளைவ் என்பவர் தலைவராக இருந்தார். அவர் கி. பி. 1744-ல் ஆங்கில

க்ளைவ்

வர்த்தகக் கம்பெனியில் ஒரு குமாஸ்தாவாக வேலையில் அமர்ந்தார். அவருடைய தந்தை அவர் எதற்கும் உதவாத துர்மார்க்கரென்றெண்ணி அவரை வைத்துக்கொண்டு தாங்க முடியாமல் இந்தியாவுக்கனுப்பிவிட்டார். அவர் சீக்கிரத்திலேயே குமாஸ்தா வேலையை வெறுத்து ராணுவ உத்தியோகத்தில் அமர்ந்துகொண்டார்.

க்ளைவ் ஆறுகாட்டுக் கோட்டையை எளிதிற் பிடித்துக்கொண்டு விட்டபோதிலும், ஒரு சமயம் சந்தாஸாஹிப் தம்மை வந்து எதிர்க்கக்கூடுமென்றெண்ணி அரண்களைப் பலப்படுத்திப் பந்தோபஸ்துகள் செய்துவந்தார். அவர் எதிர்பார்த்தவண்ணமே சந்தாஸாஹிப் திரிசிராப்பள்ளியிலிருந்து ஒரு பெரும்படையை அனுப்பினார். அவருக்

குப் பிரஞ்சுக்காரரும் துணை வந்தார்கள். ஆனால், அவர்களால் ஆறுகாட்டைப் பிடித்துக்கொள்ள முடியவில்லை. அன்றியும், க்ளைவ் சந்தா ஸாஹிபின் மைந்தரான ராஜாஸாஹிபை ஆரணியிலும், காவேரிப்பாக்கத்திலும் தோற்க அடித்துவிட்டு, திரிசிராப்பள்ளியை நோக்கிச் சென்று அங்கிருந்து சந்தாஸாஹிபையும் பிரஞ்சுக்காரரையும் துரத்திவிட்டார். சந்தாஸாஹிப் தஞ்சாவூரில் கொலையுண்டு போனார். கி. பி. 1754-ல் பிரஞ்சுக்காரர்கள் ஆங்கிலேயரோடு சமாதானஞ் செய்து கொண்டு இனித் தாங்கள் சுதேச அரசர்களின் விவகாரங்களில் தலையிட்டுக் கொள்வதில்லை என்று தீர்மானித்துக் கொண்டார்கள். அப்போது மகம்மது அலி கர்னாடக நவாப் ஆனார். அதனுடன் தென்னிந்தியாவில் பிரஞ்சுக்காரருடைய அதிகாரம் குறைந்துபோய், இரண்டாவது கர்னாடக யுத்தமும் முடிவு பெற்றது. கி. பி. 1754-ல், டூப்ளே தமது வேலையை யிழந்து தம்மூருக்குத் திரும்பிச் சென்று கி. பி. 1764-ல் பாரிஸ் நகரத்தில் சோகத்தினால் மரண மடைந்தார்.

2-வது கர்னாடக யுத்தம்

மறுபடியும், கி. பி. 1756-ல் ஐரோப்பாவில் ஆங்கிலேயருக்கும் பிரஞ்சுக்காரருக்கும் ஏழு வருஷ யுத்தம் என்னும் பெரிய யுத்தம் ஆரம்பித்து விட்டது. கி. பி. 1758-ல் லாலி என்னும் பிரஞ்சு தளகர்த்தர் தேவனாம்பட்டணத்தைப் பிடித்துக் கொண்டு, புஸ்ஸி என்பவரைத் தமக்குத் துணை சேர்த்துக் கொண்டு மதராஸை முற்றுகை செய்தார். ஆனால், வங்காளத்திலிருந்து க்ளைவ் அனுப்பிய சேனை வடசர்க்காரைக் கைப்பற்றிக் கொண்டு அவர்களையும் தோற்க அடித்து விட்டது. க்ளைவ் சந்திரநாகூரையும் பிடித்துக் கொண்டு, அங்

மூன்றாவது கர்னாடக யுத்தம்

கிருந்த பிரஞ்சுக் கோட்டை, கிடங்கு முதலியனவற்றை யும் நாசஞ் செய்துவிட்டார். கி. பி. 1760-ல், கூட் என் பவர் வந்தவாசியில் பிரஞ்சுக்காரரை அடியோடு தோற்க அடித்து விட்டார். மறுவருஷத்தில் புதுச்சேரியும் ஆங்கி லேயர் வசமாயிற்று. புஸ்ஸி, லாலி ஆகிய இருவரும் ஆங்கி லேயர்களால் சிறை பிடிக்கப் பட்டார்கள். அதனுடன் பிரஞ்சுக்காரருடைய அதிகாரம் இந்தியாவில் முழுவதும் க்ஷீணித்து விட்டது.

பிரஞ்சு கம்பெனியின் அழிவு

கி. பி. 1763-ல் ஆங்கிலேயருக்கும், பிரஞ்சுக்கார ருக்கும் பாரிஸ் நகரில் சமாதானம் ஏற்பட் டதன் பயனுகப் பிரஞ்சுக்காரர்களுக்குப் புதுச்சேரியும், சந்திரநாகூரும் கிடைத் தன. பின்னர்க் கி. பி. 1769-ல் பிரஞ்சு வர்த்தகக் கம்பெனியே அடியோடு ஒழிந்து போய் விட் டது. இவ்வாருக, மூன்ருவது கர்ஞடக யுத்தம் முடிவுக்கு வந்தது.

iii. ஆங்கிலேயர் வங்காளத்தில் அதிகாரம் பெற்றது

கி. பி. 1756-ல் வங்காள நவாப்பான ஸிராஜ் உத் தௌலா என்பவர் ஆங்கிலேய கவர்னர் தம்மிடம் தஞ்சம் புகுந்த ஒரு பணக்காரனைத் தமது வேண்டு கோளுக் கிணங்கித் திருப்பி யனுப்பவில்லை யென்றும், தமது உத்

ஸிராஜ் உத் தௌலா

தரவை மீறி ஆங்கிலேயர்கள் தங்களு டைய கோட்டையை மராமத்து செய்தார் களென்றும் கோபங்கொண்டு, திடீ ரென்று கல்கத்தாவை முற்றுகை செய்து அவர்களுடைய கோட்டையைப் பிடித்துக் கொண்டார். அப்பொழுது அவரை எதிர்த்துப் போர் செய்யப்போது மான படைகள் தங்களிடம் இல்லாததனல், ஆங்கிலேயர்

களிற் பலர் தங்களுடைய மனைவிமக்களுடன் படகுகளிலேறித் தப்பி யோடிப் போய்விட்டார்கள். எஞ்சிய சிலர் மாத்திரம் நவாப்புடன் சண்டை செய்து தோல்வியடைந்தார்கள்.

மடிந்தவர் ஒழிந்த மற்றவர்களை நவாப்பின் உத்தியோகஸ்தர்கள் ஒரு சிறிய அறையில் அடைத்துவிடவும், அவர்களிற் பலர் சுத்தக் காற்றில்லாமையினால் மாண்டு விட்டார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது உண்மைதானா வென்பதைப்பற்றி இன்னமும் அபிப்பிராய பேதம் இருந்து வருகிறது. இது உண்மையெனக் கொண்டால்கூட அதன் பொருட்டு நவாப்பை நிந்திப்பது

இருட்டறை

நியாயமாகாது. சில வருஷங்களுக்கு முன் மலையாளத்தில் கலகம் உண்டானபொழுது அங்கிருந்து கொண்டு வரப்பட்ட மாப்பிள்ளைகளை மிருகங்களை யேற்றும் வண்டிகளில் நெருக்கமாய் அடைக்கவும், அவர்களிற் சிலர் சுவாசிக்கக்காற்றும், குடிக்கத் தண்ணீரும் இன்றி மடிந்துபட்டது கருணையங்கடலான ஜார்ஜ் மன்னரது அல்லது அவருடைய பிரதிநிதியினது குற்றம் என்று சொல்வது எவ்வளவும் உண்மையாகாதல்லவா?

அவ்வாறிருந்தும், அந்தச் செய்தி மதராஸுக்கு எட்டினவுடன் க்ளைவும், வாட்ஸனும் பெரும் படைகளுடன் கல்கத்தாவுக்குச் சென்று ஸிராஜ் உத்தௌலாவைத்

சண்டையும் க்ளைவின் சதியாலோசனையும்

துரத்திவிட்டுக் கல்கத்தாவைப் பிடித்துக் கொண்டார்கள். உடனே நவாப்பு ஆங்கிலேயரோடு சமாதானம் செய்துகொண்டாரெனினும், பிரஞ்சுக்காரரோடு சேர்ந்து கொண்டு சண்டை செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்துவந்தார். அதை யறிந்த க்ளைவ் நவாப்பின் ராணுவத் தலைவரான மீர்ஜாபருடன்

சதியாலோசனை செய்து ஸிராஜ் உத்தௌலாவைத் தொலைத்துவிடுவதில் முயன்று வந்தார். அந்தத் துரோகமான ஏற்பாட்டை முன்னின்று செய்வித்த ஓமிச் சந்த் என்பவருக்கு க்ளைவ் ஏராளமான பணம் கொடுப்பதாகச் சொல்லிப் பொய்ப்பத்திரம் ஒன்றை யெழுதி, அதில் வாட்ஸன் கையொப்பத்தையும் தாமே போட்டுக் கொடுத்து விட்டார். பின்னர் க்ளைவ் ஓமிச்சந்தை ஏமாற்றிவிட்டார். இப்பெருங்குற்றம் க்ளைவுக்கு என்றும் அழியாததான அபகீர்த்தியை உண்டு பண்ணிற்று.

பின்னர்க் கி. பி. 1757-ல் ப்ளாஸ்ஸி என்னுமிடத்தில் நவாப்புக்கும், ஆங்கிலேயருக்கும் ஒரு பெரிய சண்டை நடந்தது. அதில் க்ளைவ் முற்றிலும் வெற்றி பெற்றார். யுத்த முனையிலிருந்து தப்பியோடிப் போன நவாப் மீர்ஜாபரின் மகனுடைய கையினால் கொலையுண்டு போனார். உடனே, மீர்ஜாபர் நவாப் ஆனார்.

ப்ளாஸ்ஸி

மீர்ஜாபர் அதற்கீடாக ஆங்கிலேயருக்குச் சுமார் 1200 சதுரமைல் விஸ்தீரணமுள்ள 24 மாகாணங்கள் என்னும் நாட்டை இனாமாகக் கொடுத்ததையன்றி, அதன் பொருட்டுக் கம்பெனியார் செலுத்த வேண்டிய வரியையும், 3,15,000 ரூபாயையும் க்ளைவுக்குக் கொடுத்துதவினார். அதனால் அந்த மாகாணங்களுக்கு க்ளைவ் ஜாகீர் என்னும் பெயர் வந்தது. அப்பொழுது அவர் மற்றைய ஆங்கில உத்தியோகஸ்தர்களுக்கும் 120 லக்ஷம் ரூபாய்க்கும் அதிகமான பணத்தைத் தந்தார். நீர்வள நிலவளங்கள் பொருந்தியதும், கப்பல் மார்க்கமாக எளிதிற் செல்லக் கூடியதுமான இடத்தில் ஆங்கிலேயர்களுக்கு முதன் முதல் ராஜ்யங் கிடைத்ததும் அதிர்ஷ்டமேயாகும்.

ஆங்கிலேயர் நாடு பெற்றது

மீர்ஜாபர் பொக்கிஷப் பணத்தை யெல்லாம் செலவு செய்து விட்டதனால், அநியாயமான வரிகளை விதித்துக் குடிகளைத் துன்புறுத்தினார். அதனால் நாட்டில் கலகங்கள் உண்டாயின. அவற்றைத் தாமே அடக்க அவருக்குச் சக்தியில்லாததனால் க்ளைவ் முர்ஷிடாபாத்துக்குச் சென்று அமைதியை உண்டு பண்ணினார். க்ளைவ் அவ்விடத்தை விட்டுத் திரும்பவும், மறுபடியும் கலகங்கள் உண்டாயின.

கலகம்

கி. பி. 1758-ல், வங்காள வைஸிராயும், அயோத்தி நவாப்பும் பாட்னவை முற்றுகை செய்தபொழுது க்ளைவ் சென்று மீர்ஜாபரின் துன்பத்தைப் போக்கினார். அவ்வாறிருந்தும், மீர்ஜாபர் டச்சுக்காரருடன் கலந்து சதியாலோசனை செய்ததனாற்றான், ஏற்கெனவே சொல்லப்பட்டபடி, போர்ட் சின்ஸூராவில் டச்சுக்காரர்களை அடியோடு தோற்க அடித்து விட்டார். ஆனால், சீக்கிரத்திலேயே இரண்டாவது ஷாஹலம் சக்ரவர்த்தியும், அயோத்தி நவாப்பான ஷுஜா உத்தௌலாவும் வங்காளத்தின் மீது படையெடுத்துவந்து பாட்னவில் சண்டையிட்டுத்தோற்றோடிப் போனார்கள். அப்பொழுது மீர்ஜாபருக்குப் பயித்தியம் பிடித்து விட்டதனால், ஆங்கிலேயர்கள் அவருடைய மருமகனை மீர்காஸிம் என்பவரை வங்காள நவாப்பாக நியமித்தார்கள்.

ஆங்கிலேயரின் வெற்றிகள்

மீர்காஸிம் வெகு சமர்த்தர். சிறந்த பராக்கிரமமுடையவர். அவர் மீர்ஜாபரின் கடன்களை யெல்லாம் தீர்த்துவிட்டு மிக்க விமரிசையாய் ராஜரீகம் நடத்தி வந்தார்.

மீர்காஸிம்

'வங்காள வியவகார சரித்திரம்' என்னும் புத்தகத்தின் மூன்றாவது சம்புடம் 381-வது பக்கத்தில் காணப்படும் வான்ஸிடார்ட் என்னும் வங்காள கவர்னரின் அபிப்

பிராயத்தினின்றும், 'வங்காளத்தின் தோற்றம்' எனும் புத்தகத்தின் 48-வது பக்கத்திலுள்ள வெரல்ஸ்ட் என்னும் கவர்னருடைய கடிதத்தினின்றும், 1762-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 25-ம் தேதி, மே மாதம் 13-ம் தேதி, மேற்படி மாதம் 26-ம் தேதி ஆகிய தினங்களில் ஹேஸ்டிங்ஸ் எழுதியுள்ள கடிதங்களினின்றும், மார்ச்சு மாதம் 26-ம் தேதியிலும், மே மாதத்திலும் மீர்காஸிம் எழுதியிருக்கும் கடிதங்களினின்றும், ஸார்ஜன்ட் ப்ரெகோவின் மே மாதம் 26-ம் தேதிய கடிதத்தினின்றும், டாக்கா கலெக்டரின் அக்டோபர் மாசத்தியக் கடிதத்திலிருந்தும், ஹவுஸ் அவ் காமன்ஸ் நான்காவது ரிபோர்ட்டின் அநுபந்தத்தின் 486-வது பக்கத்தில் காணப்படும் ஹேஸ்டிங்ஸின் தனி அபிப்பிராயத்தினின்றும், ஜேம்ஸ் மில், வில்ஸன் முதலிய பெரிய சரித்திராசிரியர்கள் சொல்லியவைகளினின்றும் மீர்காஸிமின் ஆட்சியின் சிறப்பு நன்ருய் விளங்குகின்றது. மீர்காஸிமைப்பற்றின உண்மையான அபிப்பிராயத்திற்கு அவற்றைப் படிப்பதும் அவசியமாகும். அவற்றை இங்கு எடுத்தெழுதுவதென்ருல் சரித்திரம் பெருகிப்போமல்லவா?

மீர் காஸிமைப் பற்றின சில நற்சாக்ஷிப் பத்திரங்கள்

மீர்காஸிம் அவ்வாறு நடந்துகொண்டும் அவருக்கு ஆங்கிலேயர்களோடு சண்டை ஏற்பட்டது. ஆங்கிலேய வர்த்தகர்கள் தங்களுடைய சரக்குக்களையும், தங்களுக்கு வேண்டியவர்களான இந்திய வியாபாரிகளினிடமிருந்து லஞ்சம் பெற்றுக்கொண்டு அவர்களுடைய சரக்குக்களையும் உள்நாட்டுத் தீர்வைகளைச் செலுத்தாமல் தமது கொடிகளைப் பரப்பிக் கொண்டுபோய் வந்ததனல், நவாப்புக்கு நஷ்டமுண்டானதன்றி, யோக்கியர்களான இந்திய

சண்டையின் காரணம்

வியாபாரிகள் மட்டும் வரி செலுத்தவும் நேர்ந்தது. அதைக்கண்ட மீர்ஜாபர் சுதேச வியாபாரிகள் செலுத்தி வந்த வரிகளையுந் தள்ளிவிட்டதனால், ஆங்கிலேய வியாபாரிகளுக்குக் கிடைத்து வந்த அநியாய வருமானம் அற்றுப்போய்விட்டது. அதனால், அவர்கள் நவாப்புடன் சண்டை செய்யத் தயாரானார்கள். அப்பொழுது மீர்காஸிம் தமது ஏற்பாடுகளை ஆங்கிலேயர் அறியாதபடி தமது தலைநகரத்தை மாங்கீர் பட்டணத்துக்கு மாற்றிக் கொண்டு விட்டார்.

சண்டை

கி. பி. 1763-ல் மேஜர் ஆடம்ஸ் என்பவர் மீர்காஸிமை கேரியா, உத்வனுல்லா என்னுமிடங்களில் இருமுறை சண்டை செய்து வென்று துரத்திச் செல்லவும், மீர்காஸிம் கோபம் மூண்டு தமது வசத்திலிருந்த கைதிகளைக்கொன்று விட்டுத் தாம் சென்று ஷுஜா உத்தெளலாவைச் சேர்ந்து கொண்டார்.

முதற் சிப்பாய்க் கலகம்

இதனிடையில் ஆங்கிலேய சிப்பாய்கள் கலகஞ்செய்யவும், மேஜர் மன்ரோ அதையடக்கி விட்டார். இது தான் முதற் சிப்பாய்க் கலகம் என்று வழங்கப்பட்டு வருகின்றது.

பக்ஸார் சண்டை

கி. பி. 1764-ல் மீர்காஸிம், முகலாய சக்ரவர்த்தியையும், அயோத்தி நவாப்பையும் சேர்த்துக் கொண்டு பாட்னாவை எதிர்க்கவும், ஆங்கிலேயர்கள் அவர்களை எளிதில் வென்று துரத்திவிட்டார்கள். பின்னர்ப் பக்ஸார் என்னுமிடத்தில் இருதிறத்தாருக்கும் சண்டை நடக்கவும், அதிலும் ஆங்கிலேயரே வெற்றி பெற்றுத் தங்களுடைய அதிகாரத்தை வங்காளத்தில் ஸ்தாபித்துக் கொண்டு விட்டார்கள். அப்பொழுது முகலாயரது அதிகாரம் முற்றிலும் சிதைந்து போயிற்று.

கி. பி. 1765-ல், அம்மூவர்களும் மறுபடியும் கோரா வில் சண்டை யிட்டுத் தோற்றுப் போனார்கள். ஷுஜா உத்தௌலாவும், ஷாஹலமும் ஆங்கிலேயரைச் சரண மடைந்தார்கள். ஆங்கிலேயர்கள் அப் பொழுது அலஹாபாத் என்னுமிடத்தில் அவ் விருவரோடும் சமாதான உடன் படிக்கை செய்து கொண்டார்கள். மீர் காஸிம் தமது நாடுநகரங்களைவிட்டு உயிர் தப்பி யோடினார். அப்புறம் அவர் என்ன கதியானா ரென்பது தெரியவில்லை.

அலஹாபாத் உடன் படிக்கை

அவ் வுடன்படிக்கையினால், ஷுஜா உத்தௌலா கோராவையும், அலஹாபாத்தையும் ஷாஹலத்துக்கும், சண்டையின் செலவிற்காக 50 லக்ஷம் ரூபாயை ஆங்கிலே யருக்கும் கொடுத்துத் தாம் அயோத்தியைத் திரும்பப் பெற்றுக் கொண்டார். ஆங்கிலேயர்கள் முகலாய மன்னரிட மிருந்து வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா என்னும் மாகாணங் களிலிருந்து வரிவசூல் செய்யும் அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டு, அதற்கிடாக ஷாஹலத்துக்கு வருஷம் ஒன்றுக்கு 26 லக்ஷம் ரூபாய் வீதம் உபகாரச் சம்பளம் கொடுத்துவர ஒப்புக்கொண்டார்கள். ஆங்கிலேயருக்கு ஏற்கெனவே சொந்தமாக விருந்த வடசர்க்கார் அப்பொழுது சாஸனஞ் செய்து கொடுக்கப்பட்டது.

நிபந்தனைகள்

iv. க்ளைவின் இருதலைப்பட்ட துரைத்தனம்

மீர்காஸிம் தோற்று ஓடிப்போய் விட்டதனால், ஆங்கி லேய கம்பெனியார் மீர்ஜாபரை மறுபடியும் நவாப்பாக்கி னார்கள். அவர் சில மாதங்களுக்கெல்லாம் இறந்து போய் விட்டதனால், அவர்கள் நாஜிம் உத்தௌலாவைப் பெய ருக்கு மட்டில் நவாப்பாக நியமித்து இருதலைப்பட்ட

துரைத்தன வமைப்பை உண்டு பண்ணினார்கள். நியாய விசாரணையும், வரிவசூலும் நவாப்பைச் சேர்ந்தன. பணத்தைச் செலவிடுவதும், சேனைகளை வைத்து நாட்டைப் பாதுகாப்பதும் கம்பெனியைச் சேர்ந்தன. இந்த ஏற்பாட்டை முன்னின்று செய்து வைத்தவர் க்ளைவே யாவர்.

இருதலைப் பட்ட துரைத்தனம்

க்ளைவ் உண்டு பண்ணின இருதலைப்பட்ட துரைத்தனம் சொல்லரிய துன்பங்களுக் கெல்லாம் இடந்தந்தது. கம்பெனியார்கள் அதிகமான லாபத்தை எண்ணி வரி வசூல் செய்யும் சுதந்தரத்தை ஏலம் போட்டு வந்ததனால், ஏல மெடுத்தவர்கள் *குடிகளை வருத்தித் தாங்கள் சர்க்காருக்குச் செலுத்த வேண்டிய தொகையினும் பன் மடங்கு அதிகமான பணத்தை வசூலித்து வரத்தலைப்பட்டார்கள். அன்றியும், குடிகளுக்கு ஜமீன்தாரர்களுடைய ஆதரவில் கிடைத்தன போன்ற சௌகரியங்கள் கொஞ்சமேனும் கிடைத்தில. இந்தப் புதிய ஏற்பாட்டில் ஆங்கிலேய அதிகாரிகளிற் பலரும் சிறந்தவைகளென்று கொண்டாடின ஸ்தல சுய ஆட்சியின் அமைப்புக்கள் கெட்டுப் போய் விட்டதனால், நியாய நடவடிக்கைகள் சரிவர நடைபெறவில்லை. கம்பெனியார்களுக்கும், வரிவசூல் செய்பவர்கள் தாங்கள் வசூல் செய்த தொகையின் பெரும்பாகத்தையும் தாங்களே வைத்துக் கொண்டு ஒரு சிறிய பாகத்தையே கொடுத்து வந்ததனால் இவ்வேற்பாட்டில் துன்பம் விளைந்தது.

அதனாலான தீமைகள்

---

* ராஜ்ஷாஹையின் ஜமீன்தாரிணியான ராணிபவானி என்பவர் எழுதியுள்ள கடிதம் அதன் உண்மையை விளக்கும். 1783-ம் வருஷத்திய ஸெலெக்ட் கமிட்டியின் 11-வது ரிபோர்ட்டின் ஒ என்னும் அநுபந்தத்தில் அதைக் காணலாம்.

16

பஞ்சம்

இவற்றை யன்றி, கி. பி. 1769, 1770-ம் வருஷங்களில் வங்காளத்தில் மிகக் கொடிய பஞ்சம் உண்டாய், அதில் சுமார் ஒரு கோடி ஜனங்கள் மாண்டு போனார்கள். கடுமையான வரியினால் வியவசாயமும், ஆங்கிலேய வர்த்தகக் கம்பெனியாரும், கம்பெனி உத்தியோகஸ்தர்களும் தங்களுடைய கைத் தொழில்களின் அபிவிருத்தியை நாடிச் சுதேச கைத்தொழில்களைத் தொலைத்து விடுவதற்கான பல கொடிய ஏற்பாடுகளைச் செய்து வந்ததனால் வியாபாரமும் அழியலாயின. ஜனங்கள் தங்கள் ஆடுமாடுகளையும், கார்கலப்பைகளையும் பெண்டு பிள்ளைகளையும் விற்றும், சருகுகளையும் புற்களையும் தின்றுங் கூட உயிர் பிழைப்பது அரிதாயிற்று. அவ்வாறான நிலைமையிலுங்கூட வரிகள் கண்டிப்பாய் வசூல் செய்யப்பட்டன.

க்ளைவின் சீர் திருத்தங்கள்

அதன் பின்னர் க்ளைவ் கம்பெனியாரின் துரைத்தனத்தில் சில சீர்திருத்தங்களைச் செய்தார். அவர் கம்பெனி உத்தியோகஸ்தர்கள் லஞ்சம் வாங்கக் கூடாதென்றும், சொந்தத்தில் அவர்கள் வியாபாரஞ் செய்யக்கூடாதென்றும் திட்டஞ் செய்து, அவர்களுடைய சம்பளங்களை அதிகப்படுத்தினார். அவர் போர்வீரர்கள் பெற்றுவந்த இரட்டைப் படியை நிறுத்திச் சேனையின் செலவை மட்டுப்படுத்தினார். கி. பி. 1767-ல், அவர் இங்கிலாந்துக்குச் சென்று ஏழு வருஷங்கள் கழித்துக் கி. பி. 1774-ல் தற்கொலை புரிந்துகொண்டு உயிர்துறந்தார். அவரால்தான் ஆங்கிலேய ராஜ்யம் முதன்முதல் இந்தியாவில் ஸ்தாபிக்கப்பட்டது.

X. முந்திய கவர்னர்-ஜனரல்கள்

i. வாரன் ஹேஸ்டிங்ஸ்

(கி. பி. 1772—கி. பி. 1774; கி. பி. 1774—கி. பி. 1785)

வாரன் ஹேஸ்டிங்ஸ்

கம்பெனியார், வறண்டுபோன தங்கள் பொக்கிஷத்தை நிரப்புவதற்கும், நியாய விசாரணைக்கான சட்ட திட்டங்களை ஒழுங்குபடுத்தி அவற்றை எழுதிவைப்பதற்கும், குடிகளைத் துன்புறுத்துவதான வரிகளைக் குறைத்தும் தள்ளியும் அமைதியை உண்டு பண்ணுவதற்கும், அப்பொழுது உண்டான யுத்தங்களுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதற்கும் கி. பி. 1750-ல் கம்பெனியின் உத்தியோகத்தில் ஒரு சிறு குமஸ்தாவாக வந்து தமது சாமர்த்தியத்தினலும், விடாமுயற்சியினலும் உயர்ந்தபதவியை அடைந்து அப்பொழுது கௌன்ஸில் மெம்பராகவிருந்த **வாரன் ஹேஸ்டிங்ஸ்** என்பவரைக் கி. பி. 1772-ல், வங்காள கவர்னராக நியமித்தார்கள்.

திருத்தங்கள்

இருதலைப்பட்ட ஆட்சியில் வரிவசூல் செய்துவந்த இந்தியர்கள் கம்பெனியை ஏமாற்றியும், குடிகளை வருத்தியும் பணஞ் சம்பாதித்து வந்ததனல், ஹேஸ்டிங்ஸ் அவர்களைத் தொலைத்துவிட்டு, அவர்களுக்குப் பதிலாக ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களை நியமித்தார். இவர்கள் வரிவசூல் செய்வதையன்றி நியாயமும் நடத்திவரலானர்கள். வரிவசூல் சம்பந்தமான விஷயங்களைக் கவனித்து வருவதற்கென்று போர்ட் அவ் ரேவின்யூ என்னும் சபை ஏற்படுத்தப்பட்டது. கல்கத்தாவில் ஒரு ஸிவில் அப்பீல் கோர்ட்டும், ஒரு க்ரிமினல் அப்பீல் கோர்ட்டும் ஸ்தாபிக்கப்பட்டன. இவைகளையல்லாமல், ஹேஸ்டிங்ஸ் ஹிந்து மகம்மதிய சட்டங்

களை ஒழுங்குபடுத்தி அவற்றை யாவருமறியுமாறு எழுதி வைத்தார்.

ஹேஸ்டிங்ஸ், ஷாஹலம் என்னும் முகலாய சக்ரவர்த்தி தாம் ஆங்கிலேயருடன் அலஹாபாத்தில் செய்துகொண்ட உடன்படிக்கையை மீறி, மஹாராஷ்டிரர்களுடன் சேர்ந்துகொண்டதனால், அவரது உபகாரச் சம்பளமான 26 லக்ஷம் ரூபாயை அடியோடு நிறுத்திவிட்டார். அன்றியும், ஷாஹலம் தமக்குச் சொந்தமான கோராவையும், அலஹாபாத்தையும் மஹாராஷ்டிரர்களுக்கு கொடுத்துவிட்டதனால், ஹேஸ்டிங்ஸ் அவ்விரண்டு மாகாணங்களையும் அயோத்தி நவாப்புக்கு 50 லக்ஷம் ரூபாய்க்கு விற்று விட்டார். அயோத்திக் கடுத்த பண்டில்கண்டிலிருந்த ரோஹில்லர்கள் அயோத்தி நவாப்புக்கு விரோதமாய்க் கிளம்பினபொழுது, ஷுஜா உத்தௌலா அவர்களை யடக்குவதற்குத் தாம் 40 லக்ஷம் ரூபாய் கொடுப்பதாகச் சொல்லி ஆங்கிலேயரைத் துணை வரும்படி கேட்டுக்கொண்டார். ஹேஸ்டிங்ஸ் அங்ஙனமே ரோஹில்லருடன் சண்டையிட்டு வென்றும் அவர்களுடைய நாட்டின் பெரும்பாகத்தையும் அயோத்தியுடன் சேர்த்துவிட்டும், 40 லக்ஷம் ரூபாய் பெற்றுக்கொண்டார். பண்டில்கண்டின் ஒரு சிறிய பாகத்தை மட்டில் ரோஹில்லத் தலைவரொருவர் ஆட்சி செய்து வந்தார். ராம்பூர் நவாப்புக்கள் அவருடைய வம்சத்தினர்களே யாவர்.

பண வருமானம்

வியாபாரத்தை நாடிவந்த ஆங்கிலேயர்கள், இந்தியாவில் நாடுகளைச் சம்பாதித்துக் கொண்டு அரசு செலுத்தி வந்ததில், வருமானத்தை மிஞ்சிச் செலவுசெய்து வந்ததை யல்லாமல், கம்பெனி உத்தியோகஸ்தர்களிற் பலர் துன்மார்க்கர்களாக விருந்து கெட்ட வழிகளிலேயே நடந்துவந்தார்கள்.

ரெகுலேடிங் ஆக்ட்

இவற்றை அறிந்த ஆங்கிலேயர்கள் கம்பெனியாரை ஆங்கிலேய துரைத்தனத்திற் கடங்கி நடக்கும்படி சட்டம் செய்யத் தீர்மானிக்கக் கி. பி. 1773-ல், பார்லிமெண்ட் சபையார் 'ரேகுலேடிங் ஆக்ட்' என்னும் ஒழுங்கு படுத்துச் சட்டத்தைச் செய்தார்கள். அதன்படி, வர்த்தகக் கம்பெனியார் பார்லிமெண்டின் அநுமதியின்றி இந்தியாவில் சண்டையாவது, சமாதானமாவது செய்யக் கூடாதென்றும், பார்லிமெண்ட் கம்பெனியின் சட்டங்களையும், உத்தரவுகளையும் ரத்து செய்யலாமென்றும், கம்பெனியின் அதிகாரத்தி லடங்காத நியாயஸ்தலம் ஒன்றைக் கல்கத்தாவில் ஏற்படுத்தி அதற்கு நியாயாதிபதிகளை ஆங்கிலேய அரசரே நியமிக்க வேண்டுமென்றும், ஆங்கிலேய ராஜ்யத்திற்கு வங்காள கவர்னரைக் கவர்னர்-ஜனரலாக நியமிக்க வேண்டுமென்றும், அவருக்கு உதவியாக நான்கு பெயர்களடங்கிய மந்திராலோசனைச் சபையொன்றை ஸ்தாபிக்க வேண்டுமென்றும், கவர்னர்-ஜனரலுடைய அதிகாரத்திற் கடங்கி மதராஸ், பம்பாய் கவர்னர்கள் நடந்து கொள்ள வேண்டுமென்றும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

அதன் குறைகள்

கவர்னர்-ஜனரலும், அவருடைய மந்திராலோசனைச் சபையும் செலுத்தக் கூடிய அதிகாரத்தின் அளவையும், புதிய நியாயாதிபதிகள் செலுத்தக் கூடிய அதிகாரத்தின் அளவையும் வரையறுத்து வைக்காததனாலும், மந்திராலோசனைச் சபையில் மூன்று மெம்பர்கள் ஒன்று சேர்ந்து செய்யும் தீர்மானங்கள், கவர்னர்-ஜனரலுடைய அபிப்பிராயத்திற்கு விரோதமாக விருப்பினும், அமுலுக்குக் கொண்டுவரப் படவேண்டுமென ஏற்பட்டதனாலும், ஒழுங்குபடுத்துச் சட்டம் ஒழுங்கற்றதாய் முடிந்தது.

மந்திராலோசனைச் சபையில் ஐக்கிய மின்மையை யறிந்த ராஜா நந்தகுமாரர் ஹேஸ்டிங்ஸ் லஞ்சம் வாங்கினதாக அவர் மீது குற்றஞ் சாட்டவும், அது விசாரணைக்கு வரு முன்னமே, நந்தகுமாரர் தப்புக் கையொப்பம் செய்ததாகக் குற்றஞ் சாட்டப் பட்டு மரண தண்டனையை யடைந்தார். அந்த ஸம்பவத்தில் ஹேஸ்டிங்ஸ் சம்பந்தப்பட்டிருக்கக் கூடுமெனச் சிலர் எண்ணுகிறார்கள். அது எப்படியாயினும், ஹேஸ்டிங்ஸ் மீது அப்புறம் எவரும் குற்றம்சாட்ட முன் வரவில்லை. கி. பி. 1775-ல் மான்ஸன் என்னும் மெம்பர் இறந்து விட்டதனால், ஹேஸ்டிங்ஸ் மந்திராலோசனைச் சபையில் முதன்மை பெற்று விளங்கினார்.

ஹேஸ்டிங்ஸின் பகைவர்கள்

(1) முதல் மஹாராஷ்டிர யுத்தம்

மூன்றாவது பானிப்பட்டு யுத்தத்திற்குப் பின்பு பாலாஜி பாஜிராவ் இறந்து விடவும், அவருடைய மைந்தரான முதல் மத்துராவ் பீஷ்வாவானார். அவருடைய ஆட்சியில் இந்தூரில் அஹல்யாபாய் என்னும் ஓர் ஒப்புயர்வற்ற அரசியார் மிக்க விமரிசையாக ஆட்சிசெய்து வந்திருக்கிறார். அவருடைய ஆட்சியின் சிறப்பையும், குணத்தின் பெருமையையும் எடுத்துச் சொல்லுவதும் எளிதல்ல.

அஹல்யாபாய்

மத்துராவ் இறந்ததும், கி. பி. 1772-ல், மத்துராவின் தம்பியான நாராயணராவ் பீஷ்வாவானார். அவர் சிறுவரானதனால், அவருடைய சிறிய தகப்பனாரான ரகுநாதராவ் ராஜ்ய பரிபாலனம் செய்து வந்தார். அப்பொழுது நாட்டில் கலகம் உண்டாக, நாராயணராவ் கொலையுண்டும், ரகுநாதராவ் சிறைப்பட்டும் போனார்கள். ஆனால் ரகுநாதராவ் சீக்கிரத்திலேயே விடுதலையடைந்து பீஷ்வாவானார். நாரா

யணராவ் இறந்ததும், அவருடைய மனைவி ஓர் ஆண் மகவைப் பெற்றாள். அதற்கு இரண்டாவது மத்துராவ் என்று பெயர்.

சண்டை உண்டானது

அக் குழந்தை தான் நியாயமான பீஷ்வா வென்று சிலர் சண்டை செய்யத் தலைப் பட்டார்கள். அதனை யறிந்த ரகுநாதராவ் கி. பி. 1775-ல் ஸூரத்தில் பம்பாய்க் கவர்னருக்குத் தாம் ஸால்ஸெட், பாஸீன் என்னும் பட்டணங்களைக் கொடுப்பதாய்ச் சொல்லி அவர் தமக்குத் துணை வரும்படி உடன் படிக்கை செய்து கொண்டார்.

உடன் படிக்கைகள்

மத்துராவ் II கக்ஷியில் முதல் வராயிருந்த நானாபர்னவிஸ் என்பவர் கி. பி. 1776-ல் புரந்தர் என்னுமிடத்தில் 'ஆங்கிலேயர்கள் மஹாராஷ்டிராருடைய சண்டையில் தலையிட்டுக் கொள்ளாதிருந்தால் தாம் அவர்களுக்கு ஸால்ஸெட்டைக் கொடுப்பதாகக் கவர்னர்-ஜனரலோடு உடன்படிக்கை செய்து கொண்டார்.

இங்கிலாந்திலுள்ள மேலதிகாரிகள் ஸூரத் உடன் படிக்கையை ஆமோதித்ததனால், பம்பாய் கவர்னர் பூனாவை எதிர்க்கும்படி உடனே ஒரு சேனையை அனுப்பினார். அது தோல்வியை யடைந்து திரும்பி வந்தது. ஆனால், கி. பி. 1780-ல் வங்காளத்திலிருந்து அனுப்பப் பட்ட பெரியசேனை மஹாராஷ்டிரர்களைத் தோற்க அடித்து ஆமதாபாத், கல்யாண், பாஸீன், க்வாலியர் முதலான இடங்களைக் கைப்பற்றிக்கொண்டது.

மறுவருஷம் ஆங்கிலேயர்கள் பெருந் தோல்வியை யடைந்ததினால், அவர்கள் மஹாராஷ்டிரர்களோடு கி. பி. 1782-ல் ஸால்பையில் 'ஆங்கிலேயர்கள் மஹாராஷ்டிரரிடமிருந்து கைப்பற்றிக்கொண்ட விடங்களில் ஸால்ஸெட் தவிர மற்றையவற்றை அவர்களுக்கே திருப்பிக்கொடுத்து

ஸால்பை உடன் படிக்கை

விடவேண்டு மென்றும், மஹாராஷ்டிரர்கள் ஆங்கிலேயரல்லாத மற்றைய ஐரோப்பியரோடு உறவாடக்கூடா தென்றும், மஹாராஷ்டிராருடைய நாடுகளில் போர்ச்சுகீசிரும், ஆங்கிலேயரும் தவிர வேறு எவரும் வியாபாரம் செய்யக்கூடா தென்றும், பாடீலிங்க் என்பவரைப் பரோடாவரசனுக ஒப்புக்கொள்வதோடு அவர் கொடுக்கவேண்டிய கப்பத்தொகைபாக்கியை வசூலிக்கக் கூடாதென்றும், ரகுநாதராவுக்கு வருஷம் ஒன்றுக்கு மூன்று லக்ஷம் ரூபாய் உபகாரச் சம்பளம் கொடுக்கவேண்டுமென்றும், இந்தச் சமாதானத்தை ஸிந்தியா முன்னின்று செய்து வைத்ததன்றி, சண்டையிற் கைது செய்யப்பட்ட ஆங்கிலேயர்களைப் பக்ஷமாய் நடத்தி வந்ததற்கு மீடாக அவருக்கு ப்ரோச்சைக் கொடுத்துவிட வேண்டு மென்றும்,' உடன்படிக்கை செய்து கொண்டார்கள். அப்பொழுது மத்துராவ் II பீஷ்வாவானுர்.

(2) மைசூர் யுத்தங்கள்

விஜயநகர ராஜ்யம் அழிந்துபோன காலந்தொடங்கி மைசூர் ராஜ்யம் ஹிந்து உடையார் வம்சத்தரசர்களுடைய ஆளுகைக்குட்பட்டிருந்தது. 18-வது நூற்றுண்டின் மத்தியில் அவர்கள் பலங்குன்றி யிருந்தபொழுது, மைசூர் அரசருடைய சேனைக்கு ஹைதர் அலி என்னும் ஒரு மகம்மதியர் அதிபதியாக இருந்தார். அவர் துரோகத்தினுல் அரசுரிமையைப்பெற்று, கி. பி. 1761-ல் மைசூர் ஸூல்

ஹைதர் அலி

தான் ஆனுர். அவருடைய அதிகார வளர்ச்சியைக் கண்ட ஆங்கிலேயர்கள், ஹைதராபாத்து நிஜாமுடனும், மஹாராஷ்டிரர்களுடனும் சேர்ந்துகொண்டு அவரை எதிர்த்துச் சண்டை செய்ய ஏற்பாடுகள் செய்துவந்தபொழுது, ஹைதர் உபாயத்தினுல் மஹாராஷ்டிரரையும், நிஜாமையும் பிரித்து

விட்டு ஆங்கிலேயரோடு சண்டைக்கு வந்தார். என்றாலும், ஆங்கிலேயர்கள் அவரைச் செங்கம்மாவிலும் திருவண்ணாமலையிலும் தோற்க அடித்து விட்டார்கள். பின்னர்க் கி. பி. 1769-ல் ஹைதர் திடீரென்று சென்னையை எதிர்த்துவந்ததனால், ஆங்கிலேயர்கள் அவருடன் சண்டை செய்யமுடியாமல் சமாதானம் செய்து கொண்டு விட்டார்கள். அதன்படி அவர்கள் இனிவரும் சண்டைகளில் ஒருவருக்ொருவர் உதவி புரியவேண்டும். இவ்வாறாக **முதல் மைசூர் யுத்தம்** முடிந்தது.

முதல் மைசூர் யுத்தம்

சில வருஷங்களானதும் ஹைதர் ஆங்கிலேயரை மஹாராஷ்டிரர்களுக்கு விரோதமாய்த் தமக்கு உதவிபுரியும்படி கேட்டார். ஆங்கிலேயர்கள் அதற்கு உடன்படாததனால், அவர்கள் பிரஞ்சுக்காரருடன் விரோதப்பட்டு மாஹியை எதிர்க்க முயன்றபொழுது, ஹைதர் பிரஞ்சுக்காரருடன் சேர்ந்துகொண்டு ஆங்கிலேயர்கள் மாஹிக்குத் தமது நாட்டின் வழியாகச் செல்லக்கூடாதென்று தடுத்துவிட்டார். அதனால், அவர்களுக்குள், மறுபடியும் சண்டை ஏற்பட்டது. அதுவே **இரண்டாவது மைசூர் யுத்தம்**. அதில் முதலில் ஹைதர் **பெய்லி ப்ரேத்வெய்ட்** என்னும் ஆங்கிலேய தளகர்த்தர்களின் சேனைகளை அடியோடு நாசஞ் செய்து, வெற்றி பெற்றாரெனினும், **கூட்** என்னும் ஆங்கிலேய தளகர்த்தர் கி. பி. 1781-ல் அவரைப் **பரங்கிப்பேட்டை, போளூர், சோளசிங்கபுரம்** என்னு மிடங்களில் முற்றிலும் தோற்க அடித்து விட்டார். பின்னர்ப் பிரஞ்சுக்காரருக்கும் ஆங்கிலேயருக்கும் சமாதானம் உண்டானதனாலும், ஹைதர் இறந்து போனதனாலும், கி. பி. 1784-ல் **மங்களூரில் திப்பு** ஆங்கிலேயரோடு 'இருதிறத்தாரும் தங்களிடத்துள்ள கைதிகளையும் தாங்கள் கைப்பற்றிக்கொண்ட நாடுகளையும்

2-வது மைசூர் யுத்தம்

அவரவர்களுக்குக் கொடுத்துவிட வேண்டும்' என்று, உடன்படிக்கை செய்து கொண்டார். அதனோடு இரண்டாவது மைசூர் யுத்தம் முடிந்தது.

மஹாராஷ்டிர, மைசூர் யுத்தங்களினால், பணவறட்சி உண்டாகவும், ஹேஸ்டிங்ஸ் நீதி தவறிப் பணம் சம்பாதிக்கலானார். அவர் கம்பெனியின் அதிகாரத்திற் கடங்கியிருந்த செயிட்ஸிங்க் என்னும் காசியரசரைப் பணம் கேட்கவும் அவர் இருமுறை ஐந்து லக்ஷம் ரூபாய் வீதம் கொடுத்தும், மூன்றாவதுமுறை அவர் பணங் கொடுக்கத் தவக்கமுண்டாகவும், ஹேஸ்டிங்ஸ் கோபம் மூண்டு காசிக்குச் சென்று அவருக்கு 50 லக்ஷம் ரூபாய் அபராதம் விதித்தார். காசியரசர் அதைக்கட்டாததனால், ஹேஸ்டிங்ஸ்

செயிட்ஸிங்க் துன்பப்பட்டது.

அவரைச் சிறையிலிட்டும், வேறொருவரை காசிக் கரசராக்கியும், ஏராளமான பணத்தைக் கவர்ந்து சென்றார். இதை நியாயம் என்று கருதும் சரித்திர நிபுணர்களும் இருந்துளார்கள்.

பின்னர் ஹேஸ்டிங்ஸ் அயோத்தி நவாப் கொடுக்க வேண்டிய பாக்கித் தொகையைக் கொடுக்கும்படி கேட்டபொழுது, அவன் தன்னிடம் பணமில்லை யென்றுசொல்லி, ஹேஸ்டிங்ஸைத் தனது தாயினிடத்திலும், பாட்டியி

அயோத்தி பீகங்கள் சோத்துக்களைப் பரிகோடுத்தது

னிடத்திலும் இருந்த பொருளைக் கவர்ந்து கொள்ளும்படி தூண்டினான். கவர்னர்-ஜனரலின் மந்திராலோசனைச் சபையார் அவர்களுடைய சொந்தப் பணத்தைத் தீண்டுவதில்லை யென்று வாக்களித்திருந்தும், ஹேஸ்டிங்ஸ் அந்த விதவைகள் செயிட்ஸிங்குடன் சேர்ந்து கலகஞ் செய்தார்களென்று அவர்கள்மீது பொய்க்குற்றஞ் சாட்டி அவர்

களுடைய அரண்மனையைக் கொள்ளையிட்டு 76 லக்ஷம் ரூபாயைக் கவர்ந்து சென்றார். இதுவும் காலத்தை யொட்டி இந் நாட்டில் நியாயமாகும் என்று எழுதவும் ஒரு சரித்திராசிரியர் மனந்துணிந்துள்ளார். அந்தோ!

இவற்றையெல்லாம் அறிந்த பார்லிமெண்ட் சபையார் கம்பெனியின் அதிகாரத்தை யின்னமும் குறைக்க வெண்ணிக், கி. பி. 1784-ல் 'பிட்டின் இந்தியச் சட்டம்' என்னும் சட்டத்தை ஏற்படுத்தி ஆறுபெயர்களடங்கிய 'போர்ட் அவ் கன்ட்ரோல்' என்னும் சபைக்கு எல்லா அதிகாரத்தையும் கொடுத்து விட்டார்கள். அச்சபையின் அநுமதியின்றி வர்த்தகக் கம்பெனியார் யாதொரு முக்கியமான காரியத்தையும் செய்ய இயலாது.

பிட்டின் சட்டம்

கி. பி. 1785-ல் ஹேஸ்டிங்ஸ் தமது வேலையை ராஜீநாமா கொடுத்துவிட்டுத் தம்மூருக்குச் சென்றார். அங்கே அவர்மீது குற்றங்கள் சாட்டப்பட்டு ஏழாண்டளவும் விசாரணை நடந்தது. கடைசியில் அவர் குற்றவாளியல்லர் என்று தீர்மானித்து விடவும், கம்பெனியார் அவருக்கு வருஷம் ஒன்றுக்கு 40,000 ரூபாய் உபகாரச் சம்பளம் கொடுத்து வந்தார்கள். அவர் அதைப்பெற்று அநேக வருஷகாலம் சுகமாக வாழ்ந்திருந்து கி. பி. 1818-ம் வருஷம், தமது 86-வது வயதில் இறந்து போனார். மொத்தத்தில், ஹேஸ்டிங்ஸின் துரைத்தனத்தில் குடிகள் இன்புற்று வாழ்ந்தார்கள் என்று எண்ணுவதற்குக் கொஞ்சமும் இடமில்லை.

விசாரணை

கடைசிகாலம்

ii. லார்ட் காரன்வாலிஸ்

(கி. பி. 1786—கி. பி. 1794)

(1) காரன்வாலிஸின் சீர்திருத்தங்கள்

கி. பி. 1786-ல், காரன்வாலிஸ் என்னும் பிரபு பார்லிமெண்ட் சபையினால் நியமிக்கப்பெற்று இந்தியாவுக்குக்

கவர்னர்-ஜனரல் ஆனார். அவர் வரும் வரையில் சுமார் 20 மாசகாலம் மெக்பெர்ஸன் என்பவர் கவர்னர்-ஜனரலாக விருந்தார். இவருடைய காலத்திற்றான் மாகாதஜீ ஸிந்தியா என்பவர் ஷாஹலத்தின் பெயரைச் சொல்லிக்கொண்டு அதிகாரம் செலுத்திவந்து, ஆங்கிலேய கம்பெனியாரைக் கூடத் தமக்குச் சௌத் என்னும் வரி கட்டும்படி கேட்டார். மெக்பெர்ஸன் உத்தியோகஸ்தர்களுடைய சம்பளங்களைக் குறைத்துச் செலவை மட்டுப் படுத்தினார்.

மாகாதஜீ ஸிந்தியா

காரன்வாலிஸ் சேனையை முன்னின்று நடத்துவதிலும், தமது அதிகாரத்திற் குட்பட்டவர்களை அடக்கியாளுவதிலும் கெட்டிக்காரர். அவர் சுயநலத்தை நாடாமல், பொது நன்மையின் பொருட்டு உண்மையாக உழைத்து வந்தார். அவர் இந்தியரை நம்பாமல், ஆங்கிலேயர்களையே உயர்ந்த உத்தியோகங்களில் நியமித்து வந்தார். அவர், வாரன் ஹேஸ்டிங்ஸைப் போலன்றித் தமது மந்திராலோசனைச் சபையின் தீர்மானத்தை மீறி நடக்கும் அதிகாரத்தைப் பெற்றும், மேலதிகாரிகளின் நம்பிக்கையைப் பூரணமாகக் கைக் கொண்டும் அதிகாரம் செலுத்தி வரலாயினார்.

காரன்வாலிஸ்

காரன்வாலிஸ் சில சிறந்த ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார். அவைகள் இன்றும் இருந்து வருகின்றன. அவற்றுள் நிலவரி சம்பந்தமான ஏற்பாடு முக்கியமானதாகும். கம்பெனியார் தங்களுடைய லாபத்தைக்கருதி, ஒவ்வொரு வருஷமும் நிலவரி வசூல் செய்யும் அதிகாரத்தை ஏலம் போட்டும் பாரம்பரியமா யிருந்துவந்த ஜமீன்தாரர்களை யொழித்துக் குடிகள் வருந்தித் துன்புறும்படி செய்தும் வந்தார்களல்லவா? காரன்வாலிஸ் அவ்வேற்பாட்டினாலுண்டான தீமைகளை நன்குணர்ந்து வங்காளத்திலும்,

பீஹாரிலும், ஒரிஸ்ஸாவிலும் என்றும் மாறுததான சாசுவத நிலவரி ஏற்பாட்டைச் செய்துவைத்தார். அதற்குத்தான் நிலவரமான நிலவரி ஏற்பாடு (பர்மனேண்ட் ரேவின்யூ ஸெடில்மேண்ட்) என்று பெயர்.

நிலவரமான நிலவரித் தீர்மானம்

அதனால் ஜமீன்தாரர்கள் தத்தம் நாடுகளுக்குச் சாசுவத சொந்தக்காரர்களாகிச் சர்க்காருக்குச் செலுத்த வேண்டிய வரியைக் குடிகளிடமிருந்து வசூல் செய்து தாங்களே செலுத்திவந்தார்கள். இந்த ஏற்பாட்டில் குடிகள் தங்களுடைய முயற்சியினால் நிலங்களிலிருந்து உண்டு பண்ணும் அதிகமான பலன்களை அந்த அதிக உற்பத்தியின் பொருட்டு யாதொன்றும் செய்யாத சர்க்காரோடு பங்கிட்டுக் கொள்ளாமல், தங்களுடைய மெய் வருத்தக் கூலியைத் தாங்களே அநுபவிக்கக் கூடுமாதலால், அவர்கள் ஊக்கமும், விடாமுயற்சியுங் கொண்டு நிலங்களைப் பண்படுத்தி அதிகமான உற்பத்தியை உண்டாக்கி வந்தார்கள். அன்றியும், ஜமீன்தாரர்கள் அவர்களுடைய சுகதுக்கங்களிலும், லாப நஷ்டங்களிலும் ஈடுபட்டும், நியாயமான குறித்த வரியை வசூல் செய்தும், அவர்களுக்குத் தேவையான கால்நடைகளையும், விதை, எரு முதலியவற்றையுங் கொடுத்துதவியும் வந்தார்கள். அதனால் குடிகள் வறுமை நீங்கிச் சுகமாக வாழ்ந்து வந்தார்கள். அவர்களுக்கு நிலத்திலுள்ள குடிவார பாத்யதையை ஜமீன்தார்கள் பிடுங்கிக் கொண்டுவிட முடியாது.

அதன் மேன்மை

தாமஸ் மன்ரோ என்னும் பாராமஹால் கலெக்டரும், வில்லியம் பெண்டிங்க் என்னும் சென்னைக் கவர்னரும் அந்த நிலவரமான ஏற்பாட்டைச் சென்னை மாகாணத்திலும் செய்து விடவேண்டு

மன்ரோ

மென்று முயன்றும், அது அவர்களால் இயலாமற் போய் விட்டது.

அதிகாரம் முழுவதும் தங்கள் கையிலேயே இருக்க வேண்டு மென்னும் அவாவினாலும், மேன்மேலும் வரிகளை வசூலித்து லாபமடைய வேண்டு மென்னும் பேராசையி னாலும், நியாயமான இந்த ஏற்பாடு செய்யப்படாமற் போகவும், தென்னிந்தியாவின் குடிகள் நித்திய தரித்தி ரர்களாகிக் கடன் மேலிட்டுப் பஞ்சத்தினாலும், வறுமை யினாலும் நாளுக்கு நாள் அதிகமான கஷ் டத்தை அநுபவித்து வருகிறார்கள். நில வரமின்றி மாறி மாறி இருபது அல்லது முப்பது வருஷங்களுக்கொரு முறை ஏற் படுத்தப் பட்டு ஒரு பொழுதும் குறைவுபடாமல் அதி கரித்துக் கொண்டே வரும் ஸ்திரமற்ற ஏற்பாடுதான் சிறந்தது என்று கூறுவாரு முளர். இவ்விரண்டு முறை களுக்கு முள்ள ஏற்றத் தாழ்வுகளை நன்றாக ஆராய்ந்து அறிந்துகொள்ளுவது இன்றியமையாத தாகும். இச்சிறு புத்தகத்தில் அவற்றை விவரித்து எழுத முடியாது.

தாரதம்யங்கள்

காரன்வாலிஸ் வரி வசூலையும், நியாய விசாரணை யையும் வேறுபடுத்தி முந்திய வேலையைச் செய்துவரக் கலெக்டர்களையும், பிந்தியதைச் செய்ய ஜில்லா ஜட்ஜ்கள் என்னும் அதிகாரிகளையும் ஏற்படுத்தினார். ஜட்ஜ்கள் ஸிவில், க்ரிமினல் ஆகிய இரண்டு வித வழக்குக்களையும் விசாரித்துத் தீர்ப் புச் செய்து வந்தார்கள். இந்த ஏற்பாடுகளே இப்பொழு துள்ள அமைப்புக்களுக்கு அடிப்படைகளாயின. துரைத் தன உத்தியோகஸ்தர்கள் லஞ்சம் வாங்கா திருக்கும் பொருட்டுக் காரன்வாலிஸ் அவர்களுடைய சம்பளங்களை உயர்த்தினார். அவர் சுதேச அரசர்களுடைய வியவகா ரங்களில் தலையிட்டுக் கொள்ளக் கூடாதென்று எண்ணி

திருத்தங்கள்

வந்தாலும், அந்த எண்ணம் நிறைவேறவில்லை. அவருடைய காலத்தில் மாகாதஜி ஸிந்தியா இறந்துபோனதும், வர்த்தகக் கம்பெனியாரின் சாஸனம் புதுப்பிக்கப்பட்டதுமான இரண்டு ஸம்பவங்கள் நடைபெற்றன.

(2) மூன்ருவது மைசூர் யுத்தம்

திப்பு

உடன் படிக்கை

மைசூர் ஸுல்தானை திப்பு தமது ராஜ்யத்தைப் பெருக்க எண்ணிக் குடகு, மலையாளம் முதலிய ஜில்லாக்களைக் கைப்பற்றிக் கொண்டு திருவாங்கூரை எதிர்த்துச் சென்ருர். அந்நாட்டரசர் ஆங்கிலேயருக்கு நண்பராக விருந்ததனுல், காரன்வாலிஸ் நிஜாமுடனும், மஹாராஷ்டிரர்களோடும் உடன்படிக்கை செய்து கொண்டு திப்புவினுடைய கோட்டைகளிற் சிலவற்றை வென்று, பிறகு அவருடைய ராஜ்யத்தின் தலைநகரமான ஸ்ரீரங்கப்பட்டணத்தையும் முற்றுகை செய்தார். மிகுந்த வீராவேசத்துடன் சண்டை செய்தும், திப்பு தோற்றுப் போனதனுல் கி. பி. 1792ல், ஸ்ரீரங்கப்பட்டணத்தில் அவர் தமது ராஜ்யத்தில் பாதியை ஆங்கிலேயருக்கும், அவர்களுடைய நண்பர்களான நிஜாம், மஹாராஷ்டிரர் ஆகிய இவர்களுக்கும் கொடுத்து விடுவதாயும், சண்டையின் செலவிற்காக ஆங்கிலேயருக்கு மூன்று கோடி ரூபாய் தருவதாயும், இவற்றைச் செய்யும் வரையில் தமது இரண்டு பிள்ளைகளையும் ஜாமீன் வைப்பதாகவும் உடன்படிக்கை செய்து கொண்டார். அதனேடு மூன்ருவது மைசூர் யுத்தமும் முடிவுற்றது. திப்புவின் பாதி ராஜ்யத்தைப் பாகித்துக் கொண்டதில் ஆங்கிலேயருக்குச் சேலம், மதுரை, மலையாளம் ஆகிய மூன்று ஜில்லாக்களும் கிடைத்தன.

கி. பி. 1773-ல் ரெகுலேடிங் ஆக்ட் உண்டான பொழுது வர்த்தகக் கம்பெனியின் சாஸனம் 20 வருஷ

காலஞ் செல்லுமாறு உறுதிபடுத்தப்பட்டது. இப்பொழுது 20 வருஷங்கள் ஆய்விட்டதனால், கி. பி. 1793-ல் அந்தச் சாஸனம் மறுபடி 20 வருஷங்கள் செல்லும்படி உறுதி செய்யப்பட்டது. ஆனால், கம்பெனியிற் சேராத வியாபாரிகளுக்கு வருஷத்தில் 3000 டன் எடைக்குப் போதுமான இடம் தான் தரப்பட்டது.

சாஸனம்

iii. ஸர் ஜான் ஷோர்

(கி. பி. 1793—கி. பி. 1798)

காரன்வாலிஸுக்குப் பிறகு கவர்னர்-ஜனரலாக வந்த ஸர் ஜான் ஷோர் சுதேச வியவகாரங்களில் தலையிட்டுக் கொள்ளாமலும், புதிய நாடுகளைச் சம்பாதிக்க வேண்டுமென்கிற ஆசையில்லாமலும், துரைத்தன முறையில் வேறுபாடுகளைச் செய்யாமலும் ராஜரீகம் நடத்தி வந்தார். மஹாராஷ்டிரர்கள் நிஜாம் ராஜ்யத்தின் மீது படையெடுத்து வரவும், நிஜாம் கவர்னர்-ஜனரலைத் தமக்குத் துணை செய்யும்படி வேண்டினார். ஸர் ஜான் ஷோர் அதற்கு உடன்படாததனால் மஹாராஷ்டிரத் தலைவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து நிஜாமைக் கி. பி. 1795-ல் கர்ட்ல என்னுமிடத்தில் அடியோடு தோற்க அடித்து விட்டார்கள்.

ஸர் ஜான் ஷோர்

அவருடைய ஆட்சியில் கி. பி. 1797-ல் அயோத்தி நவாப்பான அஸபுத்தௌலா இறக்கவும், ஸர் ஜான் ஷோர் அவர் தம்பியான சாதத் அலிகான் என்பவரை அயோத்திக்கு நவாப்பாக நியமித்து அதற்கீடாக அவரிடமிருந்து அலஹாபாத்தை இனாமாகப் பெற்றார்.

அலஹாபாத் கிடைத்தது

iv. லார்ட் வெல்லெஸ்லி
(கி. பி. 1798—கி. பி. 1805)

லார்ட் வெல்லெஸ்லி என்பவர் கவர்னர்-ஜனரலாக நியமனம் பெற்றுக் கி. பி. 1798-ம் வருஷம் மே மாதத்தில் இந்தியாவுக்கு வந்து சேர்ந்தார். அவருக்கு ஏற்கெனவே இந்திய வியவகாரங்களைப்பற்றின அநுபவம் இருந்ததனால், அவர் தாம் செய்வதே சரி என்றும், தம்முடைய ஆலோசனையே சிறந்தது என்றும் எண்ணித் தமதிஷ்டப்படி நடந்து வந்தார். அவர் ஆங்கிலேயருடைய ராஜ்ய பரிபாலனம் இந்திய அரசர்களுடைய ஆட்சியைவிட எவ்விதத்திலும் மேலானது என்றும் எண்ணி யிருந்தார்.

வெல்லெஸ்லி

அவர் இந்தியாவுக்கு வந்தபொழுது, பிரான்ஸ் தேசத்தில் ராஜாங்க முறைகளையே முற்றும் மாற்றுவதற்கான ஒரு பெருங் குழப்பம் உண்டானதை யல்லாமல், நெபோலியன் என்னும் ஒப்புயர்வற்ற ஒரு வீரர்தோன்றி ஐரோப்பிய நாடுகளையெல்லாம் நடுநடுங்கும்படி செய்து, ஆங்கிலேய அதிகாரத்தை ஆப்ரிகாவிலிருந்தும், இந்தியாவிலிருந்தும் அடியோடு தொலைக்கவும், இங்கிலாந்தையே ஜயித்துத் தமது அதிகாரத்தை ஸ்தாபிக்கவும் வேண்டுமென்று முன்வந்தார்.

நெபோலியன்

இந்தியாவிலும், அப்பொழுது திப்பு, நிஜாம், மஹாராஷ்டிரர், அயோத்தி நவாப் முதலான சுதேச மன்னர்கள் பிரஞ்சுக்காரரைக்கொண்டு தங்களுடைய சேனைகளுக்கு யுத்தப் பயிற்சி செய்வித்து வந்தார்கள். அல்லாமலும் அவர்கள் பிரஞ்சுக்காரருடைய உதவியைக்கொண்டு ஆங்கிலேயரை வென்று தத்தம் அதிகாரங்களைப் பெருக்கிக் கொள்ளவும் எண்ணி யிருந்தார்கள். அதற்கிணங்கக் கி. பி. 1798-ல், எகிப்தின்மீது படையெடுத்துவந்த நெபோலியன் இந்தியாவை ஜயித்துக்கொள்ள வேண்டு

மென்றும் எண்ணங் கொண்டார். ஆத
புதிய ஏற்பாடு
லால், வெல்லெஸ்லி இந்தியாவில் ஆங்கிலேய அதிகாரமே ஓங்கிவளரவும் பிரஞ்சுக்காரர் தங்களோடு போட்டி செய்யாதபடி அவர்களை அடியோடு தொலைத்து விடவும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதில் முயன்றுவரலானார்.

அவர் சுதேச அரசர்கள் தங்களுடைய அதிகாரத்திற்கும், ரக்ஷணைக்கும் உட்பட்டு ஆங்கிலேயரைத் தங்களுக்கு மேலதிகாரிகளென ஒப்புக்கொண்டும், ஆங்கிலேயர்கள் தங்களுடைய நாடுகளைப் பிறர் அபகரித்துக்கொள்ளாதபடி காத்துவருவதற்கீடாகத் தங்களுடைய நாடுகளின் ஒரு பாகத்தை அவர்களுக்குக் கொடுத்தும், ஆங்கிலேயர்களுடைய உத்தரவில்லாமல், அந்நியர்களோடாவது, தங்களுக்குள்ளாவது சண்டையாவது சமாதானமாவது செய்துகொள்ளாமலிருக்குமாறு சம்மதித்தும், அந்நியர்களைத் தங்களுடைய உத்தியோகங்களில் வைத்துக் கொள்வதில்லையென்று வாக்களித்தும், தங்கள் நாடுகளில் தங்களுடைய செலவில் ஓர் ஆங்கிலேயப் போர்ப்படையை வைத்து ரக்ஷிப்பதாய் ஏற்றுக்கொண்டும் ஒவ்வொரு நாட்டிலும் ஓர் ஆங்கிலேயப் பிரதிநிதி யிருந்துவர உடன்பட்டும் நடந்தொழுக வேண்டும் என்றும் கட்டாயப்படுத்தி வந்தார். அந்த ஏற்பாட்டைத் தான் 'ஏகாதிபத்திய உடன்படிக்கை' என்று சொல்லுவது. அதற்கு ஆங்கிலத்தில் ஸப்ஸிடியரி ஸிஸ்டம் என்று பெயர். அவ் வேற்பாட்டில் சுதேசமன்னர்கள் தங்களுடைய சுவாதீனத்தை உண்மையில் இழந்தவர்களே ஆயினர்.

ஏகாதிபத்திய உடன்படிக்கை

இந்த உடன்படிக்கையை முதன் முதல் ஒப்புக்கொண்டவர் ஹைதராபாத் நிஜாம் ஆவர். அவர் மஹா

ராஷ்டிரர்கள் தம்மை எதிர்த்து வந்தபொழுது, ஸர் ஜான் ஷோரைத் தமக்குத் துணைவரும்படி வேண்டினரென்றும், அதற்குக் கவர்னர்-ஜனரல் உடன்பட வில்லை யென்றும் முன்னமே சொன்னோம். அதனால், நிஜாமுக்கு ஆங்கிலேயர்மீது கோபம் உண்டாயிற்று. வெல்லெஸ்லி வந்ததும், அவர் நிஜாமோடு சமாதானஞ் செய்து கொண்டு, ஏகாதிபத்திய உடன்படிக்கையை அவர் ஒப்புக் கொள்ளுமாறு செய்துகொண்டார். நிஜாம் தமது நாட்டின் பாதுகாப்பிற் கென்று ஏற்பட்ட சேனையின் ரக்ஷணைக்காக நான்காவது மைசூர் யுத்தத்தின் முடிவில் தமக்குக் கிடைத்த கடப்பை, கர்னூல், பல்லாரி, அநந்தப்பூர் என்னும் ஜில்லாக்களைக் கி. பி. 1801-ல் ஆங்கிலேயருக்குக் கொடுத்து விட்டார். அதனால்தான் அந்த ஜில்லாக்களுக்கு ஸீடெட் டிஸ்ட்ரிக்ட்ஸ் எனப் பெயர் வந்தது.

நிஜாம் உடன்பட்டது

அதன் பின்னர், ஸ்ரீரங்கப்பட்டணத்து உடன்படிக்கையை நிராகரித்து விட்டுப் பிரஞ்சுக்காரரைத் துணைக் கொண்டு ஆங்கிலேயரை இந்தியாவினின்றும் துரத்திவிட வேண்டு மென்று முயன்று வந்த திப்புவையும் ஏகாதிபத்திய உடன்படிக்கையை ஒப்புக்கொள்ளும்படி வெல்லெஸ்லி கேட்கவும், அவர் அதற்கு இணங்கி வராததனால், ஆங்கிலேயர்கள் சண்டைக்குத் தயாரானார்கள். அதுதான் **கடைசி மைசூர் யுத்தம்.** அந்த யுத்தத்தில் நிஜாம் ஆங்கிலேயருக்குத் துணை வந்தார். சண்டையில் திப்பு தோற்றுக் கொலை யுண்டு போனார். அப்பொழுது, வெல்லெஸ்லி தமக்குக் கிடைத்த மைசூர் ராஜ்யத்தின் பெரும் பாகத்தையும் நிஜாமோடு பங்கிட்டுக் கொண்டு, மீதியை ஆள்வதற்கு முன்னர் மைசூரை ஆண்டுவந்த ஹிந்து அரச வம்சத்தைச் சேர்ந்த கிருஷ்ணராஜ உடை

மைசூர் ராஜ்யம் பாகிக்கப்பட்டது

யாரை அரசராக நியமித்தார். அப்பொழுது ஆங்கிலேயர்கள் பாகத்துக்குக் கோயமுத்தூர், கன்னடம், வைஞடு என்னும் ஜில்லாக்கள் கிடைத்தன. வெல்லெஸ்லி திப்புவின் பிள்ளைகளை வேலூரில் வைத்து அவர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுக்கும்படி ஏற்பாடு செய்தார்.

சிவாஜியின் சந்ததியாரால் சுமார் நூற்றைம்பது வருஷங்களாக ஆட்சி செய்யப்பட்டு வந்த தஞ்சாவூரைக் குறித்து, வெல்லெஸ்லியின் காலத்தில் தாங்களே பட்டத்துக் குரியவர்களென்று இருவர் முன்வந்து சண்டை செய்யவும் கவர்னர்-ஜனரல் அதுதான் தக்க சமயமெனக் கருதி அவர்களுக்கு உபகாரச் சம்பளங் கொடுத்துத் தஞ்சாவூரை ஆங்கிலேய ராஜ்யத்திற் சேர்த்துக் கொண்டு விட்டார். கி. பி. 1855-ல் அந்த வம்சம் சந்ததியற்றுப் போகவும், ஆங்கிலேயருக்குத் தாங்கள் கொடுத்து வந்த உபகாரச் சம்பளமும் மிகுதியாய் விட்டது.

தஞ்சாவூர்

கர்ஞடக நவாப்பான மகம்மது அலியும், அவர் மைந்தர் உம்ததுல் உம்ராவும் திப்புவுடன் சதியாலோசனை செய்ததாகக் கவர்னர்-ஜனரலுக்குத் தெரியவந்ததஞல், அவர் கி. பி. 1801-ல் உம்ததுல் உம்ரா இறந்ததும், அவர் மகனைப் பெயருக்கு நவாபாகச் செய்தும் உபகாரச் சம்பளம் கொடுத்தும், கர்ஞடகத்தையும் ஆங்கிலேய ராஜ்யத்திற் சேர்த்துக் கொண்டுவிட்டார். ஆஞல், சொத்தைப் பெற்றுக் கொண்ட வெல்லெஸ்லி, அதன்மீது நவாப்புக்கள் வாங்கியிருந்த கடனைத் தாம் கொடாமல் தேசியக் கடஞகச் செய்து விட்டார். அதனேடு சென்னை மாகாணம் முழுவதும் ஆங்கிலேயருக்குச் சொந்தமாய் விட்டது.

கர்ஞடகம்

வெல்லெஸ்லி அயோத்திநவாப்பின் சேனைபயனற்றது என்று சொல்லி, அவரை ஓர் ஆங்கிலேய சேனையை வைத்

அயோத்தி நவாப் — துக் கொண்டு அதன் ரக்ஷணைக்காகக் கோரா, அலஹாபாத், ரோஹில்கண்ட் என்னும் மாகாணங்களைக் கொடுத்து விடும் படி கட்டாயப்படுத்தினர். அவற்றினின் றும் ஆங்கிலேயருக்கு நவாப்புக்குக் கிடைத்ததைக் காட்டிலும் முப்பது லக்ஷம் ரூபாய் அதிகம் கிடைத்தது.

மத்துராவ் I காலம் முதல் பீஷ்வாவின் ராஜ்யத்தில் முதன்மைபெற்று விளங்கிவந்த நாநுபர்னவிஸ் கி. பி. 1800-ல் இறந்து விடவும், பீஷ்வாவின் அதிகாரம் குறைவு படலாயிற்று. அதனுல் மஹாராஷ்டிரத்தலைவர்கள் தங்களுக் குள்ளேயே சண்டையிடத் தலைப்பட்டார்கள். இரண்டா வது மத்துராவ் இறக்கவும், ரகுநாதராவின் குமாரரான இரண்டாவது பாஜிராவ் பீஷ்வாவானுர். இவர் ஹோல் காரோடு சண்டை செய்யத்தொடங்கினுர். ஹோல்கார் அவரையும் மாகாதஜி ஸிந்தியாவின் மைந்தரான தௌலத் ராவ் ஸிந்தியாவையும் கி. பி. 1802-ல் பூனுவில் அடியோடு தொலைத்துவிட்டு அமிருதராவைப்பீஷ்வாவாக நியமித்தார். பாஜிராவ் பாஸீனுக்கு ஓடிப்போய்விட்டார். அது வரையில் வெல்லெஸ்லியின் ஏகாதிபத்திய உடன்படிக்கையை ஒப் புக் கொள்ளமாட்டேனென்று வந்த அவர் அப்பொழுது பாஸீனில் ஆங்கிலேயரோடு சமாதானஞ் செய்து

பாஸீன் உடன் படிக்கை — கொண்டுவிட்டார். அதன்படி, அவர் தமது நாட்டின் பாதுகாப்பிற்காக அமைக்கப் பட்ட ஆங்கிலேய சேனையின் ரக்ஷணை யின் பொருட்டு 26 லக்ஷம் கொடுக்கவும், ஆங்கிலேயருடைய விரோதிகளைத் தமது உத்தியோகத்தில் வைத்துக்கொள்ளா திருக்கவும், ஆங்கி லேயருடைய அநுமதியில்லாமல் எவருடனும் சண்டை யாவது சமாதானமாவது செய்வதை யொழிக்கவும், அவருக்கு நிஜாமோடாவது, கெய்க்வாரோடாவது சச்

சரவு ஏற்படுமாயின் ஆங்கிலேயருடைய மத்தியஸ்தத்தை ஒப்புக்கொள்ளவும் சம்மதித்தார்.

கேய்க்வார்

சீக்கிரத்திலேயே கெய்க்வாரும் ஏகாதிபத்திய உடன் படிக்கையை ஒப்புக்கொண்டு அமைதியாய் இருந்துவிட்டார்.

வெல்லெஸ்லி சுதேச அரசர்களின் சுதந்திரங்களைக் குறைத்து அவர்களைத் தமது அதிகாரத்திற்கு உட்படுத்தி வருவதைக்கண்டு வெறுப்புற்ற ஸிந்தியாவும், பான்ஸ்லவும் ஆங்கிலேயருடன் சண்டை செய்யத் தயாரானார்கள். ஹோல்கார் தாம் அவர்களுடன் சேர்ந்துகொள்ள உடன் படவில்லை. வெல்லெஸ்லியின் சகோதர

ஸிந்தியா; பான்ஸ்ல

ரான வேல்லிங்க்டன் பிரபு என்னும் ஜனரல் வெல்லெஸ்லியும், ஜனரல் லேக் என்பவரும் கி. பி. 1803-ல் அஸ்ஸே என்னுமிடத்தில் அவ்விருவரையும், ஆர்காம் என்னுமிடத்தில் பான்ஸ்லவை யும், லாஸ்வாரி என்னுமிடத்தில் ஸிந்தியாவையும் அடியோடு தோற்கச் செய்து விட்டதையன்றி, டில்லியையும் ஆக்ராவையுங் கூடக் கைப்பற்றிக் கொண்டு விட்டார்கள்.

அதனால், பான்ஸ்லவும், ஸிந்தியாவும் ஏகாதிபத்திய ஏற்பாட்டை ஒப்புக்கொண்டு முறையே தேவகாம் என்னு

உடன் படிக்கை

மிடத்திலும், சுர்ஜீ அர்ஜுன்காம் என்னுமிடத்திலும் உடன்படிக்கை செய்து கொண்டார்கள். ஆங்கிலேய சேனையின் ரக்ஷணைக்காக, பான்ஸ்ல ஒரிஸ்ஸாவையும், ஆக்ராவையும், ஸிந்தியா கங்கைக்கும் யமுனைக்கும் மத்தியிலுள்ள நாடுகளையும் கொடுத்துவிட்டார்கள்.

இவ்வாருக ஐந்து மாதத்திற்குள் நான்கு மஹாராஷ்

மஹாராஷ் டிரர் அழிவு

டிரத் தலைவர்கள் தங்களுடைய ஸ்வதந்திரங்களை யிழந்து ஆங்கிலேயருக்குக் கீழ்ப் பட்டு விட்டார்கள். பிரஞ்சுக்காரரால்

பயிற்சி செய்விக்கப்பட்டும், யுத்தமுனையில் நடத்தப் பட்டும் வந்த ஸிந்தியாவின் சேனை அழிந்து பட்டதைக் கண்ட வெல்லெஸ்லி பேரானந்த மடைந்தார். இவ்வாறாக இரண்டாவது மஹாராஷ்டிர யுத்தம் முடிவு பெற்றது.

மஹாராஷ்டிரத் தலைவர்களில் எஞ்சி நின்ற யஸ்வந்த ராவ் ஹோல்காரை எதிர்க்கும்படி அனுப்பப்பட்ட சேனையை அவர் கி. பி. 1804-ல் முகுந்தராபாஸ் என்னுமிடத்தில் அடியோடு தோற்க அடித்து விடவும், அந்தச் சேனை ஆக்ராவை நோக்கி ஓடி விட்டது. பிறகு, லேக் பருகபாத், டிக் என்னுமிடங்களில் ஹோல்காரைத் தோற்க அடித்து விட்டதனால், அவர் பஞ்சாபுக்கு ஓடிப்போய் விட்டார்.

ஹோல்காருடன் சண்டை

இந்தச் சண்டையில்பரதபுத்தரசர் ஹோல்காருக்குத் துணை வந்ததனால், ஆங்கிலேயர்கள் பரதபுரக் கோட்டையை முற்றுகை செய்தார்கள். களிமண்ணினாற் கட்டப்பட்டு மிகவும் வலிமை பொருந்தியிருந்த அந்தக் கோட்டையை லேக் கைப்பற்ற முடியாமல் திகைத்திருக்கும் சமயத்தில் பரதபுத்தரசர் ஆங்கிலேயருக்கு 20 லக்ஷம் ரூபாயையுங் கொடுத்துச் சமாதானஞ் செய்து கொண்டு விட்டார். இதுவே மூன்றாவது மஹாராஷ்டிர யுத்தத்தின் முடிவாகும்.

வெல்லெஸ்லி செய்த பல சண்டைகளினாலும் வட இந்தியா நாசமடைந்து போகவும், நாட்டில் ஒரு பெரும் பஞ்சம் உண்டாயிற்று. அதனையும், வெல்லெஸ்லியினால் உண்டான அளவற்ற செலவையுங் கண்ட ஆங்கிலேய மேலதிகாரிகள் அவரை இங்கிலாந்துக்குத் திரும்பி வந்து விடும்படி நியமித்தார்கள்.

பஞ்சம்

அவருக்குப் பின் இரண்டாவது முறை கவர்னர்-ஜனரலாக நியமனம் பெற்று இந்தியாவுக்கு வந்த லார்ட்

காரன்வாலிஸ் இரண்டு மாதங்களுக்குள் இறந்து போய் விட்டதனுல், மந்திராலோசனைச் சபையின் முதல் மெம்பரான ஸர் ஜார்ஜ் பார்லோ என்பவர் லார்ட் மின்டோ வரும் வரையில் கவர்னர்-ஜனரலாக இருந்து வந்தார்.

இவர் சுதேச வியவகாரங்களில் தாம் தலையிட்டுக் கொள்வதில்லை என்று தீர்மானித்துக் கொண்டு யமுனு நதிக்கப்பாலுள்ள நாடுகளை ஸிந்தியாவுக்குத் திருப்பிக் கொடுத்துவிடவும், ஹோல்காருக்கும் அவருடைய நாடுகளையும் பழைய அதிகாரத்தையும் முன்னிருந்த வண்ணமே விட்டு விடவும் ஏற்பாடுகள் செய்துவிட்டார். அதனுல், லேக் அவருடன் மனஸ்தாபப்பட்டுக் கொண்டு தமது வேலையை ராஜீநாமா கொடுத்து விட்டுத் தம்மூருக்குச் சென்றுவிட்டார். ஆனுல், பார்லோ ஏகாதிபத்திய உடன்படிக்கையை மீறி நடக்க முயன்ற நிஜாமைக் கண்டித்து அடக்கியும், ஆங்கிலேய மேலதிகாரிகள் சொல்லியபடி பாஸீன் உடன்படிக்கையை ரத்து செய்ய உடன்படாமலும் நடந்து கொண்டார். அவருடைய ஆட்சியில் செலவுகள் மட்டுப்பட்டுப் பொக்கிஷத்தில் பணம் நிறைந்ததைக்கண்ட வர்த்தகக் கம்பெனியின் முதலாளிகள் சந்தோஷித்தார்கள்.

பார்லோவின் ஆட்சிமுறை

பார்லோ காலத்தில் வேலூரில் சிப்பாய்களுக்குள் ஒரு கலகம் உண்டாயிற்று. சிப்பாய்கள் தங்களுடைய மதச்சின்னங்களை நெற்றியிலிட்டுக் கொள்ளக் கூடாதென்றும், அவர்கள் தங்கள் பாகைகளை குறித்த ஒரேவிதமாகக் கட்டிக்கொள்ள வேண்டுமென்றும், மீசைகளைக் கத்தரித்துக் கொள்ளவேண்டுமென்றும் நிபந்தனைகள் செய்யப்பட்டதனுல், அக் கலகம் மூண்டது. அப்பொழுது வேலூரிலிருந்த திப்புவின் குமாரர்கள் அதற்குக் காரண

சிப்பாய்க் கலகம்

மென்றெண்ணி துரைத்தனத்தார் அவர்களைக் கல்கத்தாவிற்கு அனுப்பிவிட்டும், மதராஸ் கவர்னராகவிருந்த வில்லியம் பென்டிங்கைத் திருப்பி அழைத்துக் கொண்டும் ஏற்பாடுகள் செய்தார்கள்.

V. லார்ட் மின்டோ
(கி. பி. 1807—கி. பி. 1813)

மிகுந்த அசம்மதத்தோடு கவர்னர்-ஜனரல் வேலையை ஒப்புக் கொண்ட லார்ட் மின்டோ கி. பி. 1807-ல் இந்தியாவுக்கு வந்து சேர்ந்தார். இவரும் சுதேச வியவகாரங்களில் தலையிட்டுக் கொள்வதில்லை யென்னும் தீர்மானத்துடன் பிண்டாரிகளைக் கொள்ளை யடிக்கும்படியும், ராஜபுதனத்துச் சிற்றரசர்கள் தம்முள் சண்டையிட்டு வரவும் விட்டுவிட்டார். அப்பொழுது தான் மிவாரரசரின் புதல்வியான கிருஷ்ணகுமாரி ஜயபுர, ஜோதிபுர அரசர்களுடைய சண்டைக்கிடையில் நஞ்சையுண்டு இறந்துபோனாள்.

மின்டோ

ஸீக்கர்களைப் பற்றி நாம் ஏற்கெனவே படித்திருக்கிறோம். முகலாய சக்ரவர்த்திகளின் அதிகாரம் குறைவுபடவும், ஸீக்கர்கள் கொஞ்சம் கொஞ்சமாக வலிமை மிக்கவர்களானார்கள். மூன்றாவது பானிப்பட்டுச் சண்டைக்குப் பின்பு ஸீக்கர்கள் பஞ்சாபில் ஆட்சி பெற்றிருந்தார்கள். ஸீக் ஸர்தார்களில் ரஞ்சிட் ஸிங்க் என்றொருவர் இருந்தார். கி. பி. 1801-ல் இவர் சுவேச்சாதிகாரம் பெற்றுப் பஞ்சாப் முழுவதற்கும் அரசரானார். கி. பி. 1809-ல் ஆங்கிலேயர்கள் **அமிருதஸரஸ்** என்னுமிடத்தில் அவரோடு சமாதானஞ் செய்து கொண்டார்கள். அப்பொழுது அவர் தாம் ஸட்லிஜ நதியைத் தாண்டி வருவதில்லை யென்றும், தமக்குத் தேவையான படையையே வைத்துக் கொள்வதாயும் ஒப்புக் கொண்டார். அவர் பஞ்சாபில் பலத்திருந்ததினால்

ரஞ்சிட் ஸிங்க்



வடமேற்குக் கணவாய்களின் வழியாக அந்நியர்கள் இந்தியாவின்மீது படையெடுத்து வர இயலாமற் போயிற்று.

கி. பி. 1813-ல் வர்த்தகக் கம்பெனியாரின் வியாபார சாஸனம் மறுபடியும் புதுப்பிக்கப் பட்டது. அதனால், கம்பெனியாருக்கு இந்தியாவில் ஸர்வ ஸ்வதந்திரமாய் வியாபாரம் செய்யும் பாத்தியதை போய்விட்டது. ஆனால், சீனதேசத்தோடு தேயிலை வியாபாரம் செய்யும் சுதந்திரம் மாத்திரம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது.

சாஸனம் புதிப்பிக்கப் பட்டது

லார்ட் மின்டோ காலத்தில் ஆங்கிலேயருக்குப் பிரஞ்சுக்காரர்களிடமிருந்து ராட்ரீக்ஸ், போர்போன், மொரிஷஸ் என்னும் தீவுகளும் டச்சுக்காரருக்குச் சொந்தமாயிருந்த கீழ் இந்து மஹாசமுத்திரத் தீவுகளும் கிடைத்தன.

vi. லார்ட் ஹேஸ்டிங்ஸ்
(கி. பி. 1813 — கி. பி. 1822)

மின்டோவுக்குப் பின் கவர்னர்-ஜனரலாக வந்த லார்ட் ஹேஸ்டிங்ஸ் மறுபடியும் சுதேச வியவகாரங்களிற் புகுந்துகொண்டு ஆங்கிலேய ராஜ்யத்தையும், அதிகாரத்தையும் விருத்திபண்ணினார்.

(1) நேபாள யுத்தம் கி. பி. 1814—கி. பி. 1816

நேபாளத்திய கூர்க்கர்கள் தங்களுடைய ராஜ்யத்தைப்பெருக்க எண்ணிக் கங்காநதிதீரம் வரையில் வந்து ஆங்கிலேயருக்குச் சொந்தமான சில இடங்களைப் பிடித்துக் கொண்டதனால், ஹேஸ்டிங்ஸ் அவர்களை எதிர்த்துச் சண்டை செய்வதற்காக நான்கு படைகளை நான்கு தலைவர்களின் கீழ் வெவ்வேறு வழியாக அனுப்பிவைத்தார். அவற்றுள் ஜனரல் ஆக்டர்லோனியின் சேனை மாலூன் கோட்டையைப் பிடித்துக் கொண்டு, அமரஸிங் என்னும் நேபாள தளகர்த்தனையும் வென்றது. பிறகு,

நேபாள யுத்தம்

மெக்வான்புரியில் நடந்த சண்டையில் கூர்க்கர்கள் தோற்றோடிப் போய்விட்டதனால், ஆக்டர்லோனி நேபாள ராஜ்யத்தின் தலைநகரான காட்மாண்டுவைக் கைப்பற்றிக் கொண்டு விட்டார். உடனே, நேபாள மன்னவர் கி. பி. 1816-ல், சிகௌலி என்னுமிடத்தில் தாம் ஆங்கிலேயரிட மிருந்து கைப்பற்றிக் கொண்ட நாடுகளை யல்லாமல், காளி என்னும் நதிக்கு மேற்கிலுள்ள தமது நாட்டின் ஒரு பாகத்தைக் கொடுத்தும், தமது தலைநகரில் ஒரு ஆங்கி லேயப் பிரதிநிதியை ஏற்றுக்கொள்வதாக ஒப்புக் கொண்டும் சமாதானஞ் செய்து கொண்டார். அதனால், ஆங்கிலேயருக்கு ஸிம்லா, நைனிடால், முஸௌரி என்னும் பிரதேசங்கள் கிடைத்தன. நேபாள ராஜ்யமும் இன்னமும் ஆங்கிலேயருக்கு உடன்பட்டே இருந்து வருகின்றது. என்றாலும், மற்றைய சுதேச அரசர்களைப் போலன்றி, நேபாளவரசர் தமது உள் நாட்டு வியவகாரங்களிற் பூரண மான சுவேச்சாதிகாரத்தைப் பெற்றுத் தமது சுவாதீனத் தைக் கொஞ்சமும் இழந்து விடாமல் நடந்து வருகிறார். காட்மாண்டுவிலிருந்து வரும் ஆங்கிலேயப் பிரதிநிதியைக்கூட அவர் தமதிஷ்டம்போல் நடக்க விடாமல் நிபந்தனைகளுக்கு உட்படுத்தியிருக்கிறார். வெகுகாலமாக நேபாளம் பெய ருக்கு மட்டில் சீனாவுக் கடங்கியிருந்து வருகின்றது. இப்பொழுதும் ஐந்து வருஷத்திற் கொருமுறை நேபாள மன்னவர் சீன அரசருக்குக் காணிக்கைகள் செலுத்தி வருகிறார்.

நேபாளம்

(2) பிண்டாரி யுத்தம் கி. பி. 1817

ராணுவ உத்தியோகங்களிலிருந்து தள்ளுண்டவர் களும், துன்மார்க்கர்களும், கொலை, களவு முதலிய குற்றங்களைச் செய்துவிட்டு ஓடிப்போய் விட்டவர்களும், நியாய நடவடிக்கைகளையும் சட்ட திட்டங்களையும் மீறி

நடந்து நாட்டைவிட்டோடிப் போனவர்களும், மத்திய இந்தியாவில் ஒன்றாகச் சேர்ந்து கொண்டும், தமக்கெனச் சில தலைவர்களை நியமித்துக் கொண்டும், ஊர் ஊராகச் சென்று ஜனங்களைக் கொன்றும் அவர்களது பொருள்களைக் கொள்ளையடித்தும், அவர்களுக்கு இன்னும் பலவிதத் தீங்குகளை இழைத்தும் வந்த பிண்டாரிகளை ஹேஸ்டிங்ஸ் அடியோடு தொலைத்து விட்டார். பிண்டாரிகளின் தலைவனை கரீம் ஆங்கிலேயரைச் சரணமடைந்தான். சித்து என்னும் மற்றொரு தலைவன் தப்பியோடிச் சென்று கடைசியில் ஒரு புலிக்குத் தக்க இரையானான்.

பிண்டாரிகள்

(3) நான்காவது மஹாராஷ்டிர யுத்தம்
(கி. பி. 1817—கி. பி. 1818)

பாஸீன் உடன்படிக்கையைச் செய்து கொண்டது முதல் அருவருப்படைந்திருந்த பீஷ்வா பாஜிராவ் II தாம் ஆங்கிலேயரை விட்டுப் பிரிந்து சுவாதீனம் பெறுவதற்கு எப்பொழுது தக்க சமயம் வாய்க்கும் என்று எதிர்ப் பார்த்திருந்தார். ஆங்கிலேயர்கள் நேபாள, பிண்டாரி யுத்தங்களைச் செய்து வந்த பொழுது, அவர் திடீரென்று ஆங்கிலேயப் பிரதிநிதியையும் அவருடைய சேனையையும் கர்க்கி என்னுமிடத்தி லெதிர்த்துத் தோல்வியடைந்து பூனாவினின்றும் ஜோதிபுரத்திற்கோடிப் போய்விட்டார். நாகப்புரி அரசரான அப்பா ஸாஹிபும் சிடபால்டி என்னுமிடத்தில் தோல்வியை யடைந்து தமது நாட்டை விட்டோடிப் போய் விட்டார்.

பாஜி ராவ் II

ஹோல்காருடைய சைந்யங்களும் தங்கள் ராணியான துளசிபாய் ஆங்கிலேயருடன் சமாதானம் செய்து கொள்ள விரும்பியதாகவெண்ணி அவளைக்கொன்று விட்டு ஆங்கிலேயரை எதிர்த்துச் சென்றன. ஆனால்,

ஆங்கிலேயர்கள் அவற்றை யடியோடு தோற்க அடித்துத் துரத்திவிட்டார்கள். இவ்வாறாக ஸிந்தியா வொழிந்த மற்றைய மூன்று மஹாராஷ்டிரத் தலைவர்களும் தோல்வியையடைந்து ஆங்கிலேயருடன் மறுபடியும் சமாதானஞ் செய்து கொண்டு விட்டார்கள். பீஷ்வா தமது நாடு முழுவதையும் இழந்து வருஷத்திற்கு எட்டு லக்ஷம் ரூபாய் வீதம் உபகாரச்சம்பளம் பெற்றுப் பித்தூருக்குச் சென்று விட்டார். பீஷ்வாவின்நாடு பம்பாய் மாகாணத்தின் பெரும் பாகம் ஆயிற்று. ஆனால், சதாராவைச் சார்ந்த ஒரு சிறிய நாட்டைமட்டில் சிவாஜியின் வம்சத்தைச் சேர்ந்த ஒருவர் ஆட்சி செய்து வருவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டது. ஹேஸ்டிங்ஸ் மஹாராஷ்டிரர்களுடைய விருப்பத்திற்கிணங்கி அவ்வாறு செய்ய உடன் பட்டார். ஹேஸ்டிங்ஸ் நாகப்புரியிலும், இந்தூரிலும் இரண்டு சிறுவர்களைப் பெயருக்கு மட்டில் அரசர்களாகச் செய்துவிட்டு அவர்களுடைய நாடுகளின் சில பாகங்களைப் பம்பாய் மாகாணத்திற் சேர்த்துக் கொண்டு விட்டார். இப்படியாக மஹாராஷ்டிரர்களுடைய அதிகாரம் அடியோடு சிதைவுண்டு, தொலைந்து போயிற்று. ஹேஸ்டிங்ஸ் ராஜபுதனத்தி லிருந்துவந்த சில சிற்றரசர்களுடனும் ஏகாதிபத்திய ஏற்பாட்டை யொட்டிச் சமாதானம் செய்து கொண்டார்.

ஹோல்கார் சைந்யம்

மஹாராஷ்டிரர் முழுவதும் தொலைந்தது

(4) சீர்திருத்தங்கள்

ஹேஸ்டிங்ஸ் செய்த ஏற்பாடுகள், அவர் இறந்து போன வெகு காலத்திற்குப் பிந்தியதான இப்பொழுதும் சாசுவதமாயிருந்து வருகின்றன. அழிந்தவை யொழிந்த மற்றைய மஹாராஷ்டிர நாடுகள் இன்னமும் ஆங்கிலேய துரைத்தனத்தாரோடு நட்புப்பாராட்டி நடந்து வருகின்

றன. சண்டைகள் நீங்கி நாட்டில் சமாதானம் உண்டாகவும், பட்டணங்களிலும், கிராமங்களிலும் ஜனப்பெருக்குண்டாய்க் குடிகள் சுகமாக வாழ்ந்து வரலானார்கள். சண்டைகள் நடந்துவந்த பொழுதுங்கூட ஹேஸ்டிங்ஸ் கப்பற் கொள்ளைக்காரர்களால் வியாபாரிகளுக்குத் தீங்குகள் உண்டாகாதபடி ஏற்பாடுகள் செய்தார். கி. பி. 1819-ல் அவர் சிங்கப்பூரைக் கைப்பற்றிக்கொண்டு அதைச் சீனா முதலிய கீழ்த் தேசங்களுக்குச் செல்லும் கப்பல்களுக்கு அநுகூலமான துறைமாகும்படி செய்தார். அது கொஞ்சங் கொஞ்சமாகப்பெருகி இப்பொழுது ஒரு சிறந்த துறைமுகம் ஆய்விட்டது.

சிங்கப்பூர்

ஹேஸ்டிங்ஸ் காலத்தில் பாதைகளும், வாய்க்கால்களும், பாலங்களும் ஏராளமாக உண்டுபண்ணப்பட்டன. அவருடைய ஆதரவின் கீழ்க் கல்கத்தாவில் ஒரு கல்லூரியும், இன்னும் சில பாடசாலைகளும் ஏற்பட்டன. அவற்றுள் சில கிறிஸ்தவப் பாதிரிகளினால் ஏற்படுத்தப் பட்டனவாகும். அவர் சொத்து சம்பந்தமான வழக்குக்களை விசாரித்து நியாயம் நடத்துவதற்கான நியாயஸ்தலங்களை அதிகப்படுத்தி இந்தியர்களை நியாயாதிபதிகளாக நியமித்தார். மதராஸில் அவர் பஞ்சாயத்தாரைக் கொண்டு நியாய விசாரணை செய்யும் ஏற்பாட்டை உயிர்ப்பித்தார். அவருடைய காலம் முதல்தான் வரி வசூல் செய்யும் ஜில்லா கலெக்டர்கள் ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டுகளுமானார்கள்.

பரிபாலனத் திருத்தங்கள்

ஹேஸ்டிங்ஸ் காலத்தில்தான் தேச பாஷையில் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானப்பத்திரிகை முதன்முதல் வெளி வந்தது. அவர் வர்த்தமானப் பத்திரிகைகள் துரைத்தனத்தாரின் நியாய நடவடிக்கைகளைப்

வர்த்தமானப் பத்திரிகைகள்

பற்றின குணதோஷ விசாரணைகளைச் செய்யலாம் என்றும், ஆனால் சிலவிஷயங்களைப்பற்றிமட்டில் அவைகள் எவ்விதமான விமரிசனமும் செய்யக்கூடாதென்றும் உத்தரவு பண்ணினார். அப்பொழுது கி. பி. 1818-ல் உண்டான 'கல்கத்தா வர்த்தமானம்' என்னும் பத்திரிகையின் ஆசிரியரான பக்கிங்ஹாம் என்பவர் பெரிய துரைத்தன உத்தியோகஸ்தர்களைக் கூடப் பரிஹஸித்து எழுதலானார். கி. பி. 1823-ம் வருஷம், ஜனவரி மாதம் முதல் தேதியன்று ஹேஸ்டிங்ஸ் தமது வேலையை ஜான் ஆடம் என்னும் மந்திராலோசனைச் சபையின் முதல் மெம்பரிடம் ஒப்புவித்து விட்டுத் தம்மூருக்குத் திரும்பிவிட்டார்.

XI. பிந்திய கவர்னர்-ஜனரல்கள்

i. லார்ட் ஆமெர்ஸ்ட்

(கி. பி. 1823—கி. பி. 1828)

கி.பி. 1822-ல், பர்மாதேசத்தரசர் அஸ்ஸாம் நாட்டை வென்று தமது ராஜ்யத்துடன் சேர்த்துக் கொண்டு ஆங்கிலேயருக்குச் சொந்தமான சிட்டகாங்க் என்னும் மாகாணத்திற் கருகிலிருந்த ஒரு தீவைக்கப்பற்றிக்கொண்டு சில சிப்பாய்களையும் கொன்றுவிட்டார். அல்லாமலும், பர்மா சேனைகளின் தளகர்த்தனான மஹாபந்தூலா என்பவன் வங்காளத்தை ஜயித்து, ஆங்கிலேய கவர்னர்-ஜனரலைக் கைதியாக்கிவிட வேண்டுமென்று பொன்விலங்குகளைக்கொண்டு ஆங்கிலேய நாட்டின்மீது படையெடுத்து வந்தான்.

பர்மா சண்டை

ஆர்ச்சிபால்ட் காம்பெல் என்னும் ஆங்கிலேய தளகர்த்தர் பந்துலாவைத் தோற்க அடித்து, ரங்கூனை எதிர்த்துச் செல்லவும் பர்மாச் சேனைகள் மணிப்பூர், காச்


Sketch Map of
INDIA
Under
LORD HASTINGS
RANJIT SINGH
SIKHS
PUNJAB
Lahore
Simla
BAHAWALPUR
Patiala
Kumaon
1816
Almora
Delhi
NEPAL
SIKKIM
BHUTAN
OUDH
Lucknow
Jaipur
Bharatpur
Ajmeer
Agra
SINDH
Jodhpur
RAJAPUTANA
(Protected States)
Gwalior
SINDIA
BEHAR
BENGAL
PRESY
ASSAM
TIPPERA
Chittagong
Rewa
HOLKAR
Indore
Saugar
1818
Narbada
Territory
GAIKWAR
Diu
Daman
Bombay
Ahmadnagar
Nagpur
BERAR
BHONSLE
Calcutta
Cuttack
Khirki
Poona
NIZAM
Satara
Goa
BOMBAY PRESY
MADRAS PRESIDENCY
MYSORE
Travancore



டல்ஹௌஸி காலத்தில் பிரிட்டிஷ் இந்தியா

சார், அஸ்ஸாம் என்னும் மூன்று இடங்களையும்விட்டு ஓடிப் போக நேர்ந்தது. அதனால் பர்மா அரசர் கி. பி. 1826-ல் யாண்டபூ என்னுமிடத்தில் ஆங்கிலேயருக்கு அஸ்ஸாம், அரக்கான், டெனஸரீம் என்னும் நாடுகளையும், ஒரு கோடி ரூபாயையும் கொடுப்பதாக ஒப்புக்கொண்டு சமாதானஞ் செய்து கொண்டுவிட்டார். பர்மா யுத்தத்தில்தான் முதன் முதல் இந்நாட்டில் நீராவிக்கப்பல்கள் உபயோகிக்கப் பட்டன.

பரதபுர முற்றுகை

அப்பொழுது பரதபுரத்தரசன் மிகச்சிறியவனாயிருந்ததனால், அவன் தாயாதியொருவன் தானே அரசன் என்று கலகஞ் செய்யவும், ஆமெர்ஸ்ட் ஒரு பெருஞ்சேனையை அனுப்பிப் பரதபுரத்தை முற்றுகை செய்து கைப்பற்றிக் கொண்டு அச்சிறுவனையே அரசனாக்கித் தமக்கடங்கி யிருக்கும்படி ஏற்பாடு செய்தார்.

ii. லார்ட் வில்லியம் பெண்டிங்க் (கி. பி. 1828 — கி. பி. 1835)

வேலூரில் சிப்பாய்கள் கலகஞ் செய்தபொழுது மதராஸ் கவர்னராக விருந்த வில்லியம் பெண்டிங்க் ஆமெர்ஸ்டுக்குப் பிறகு கவர்னர்-ஜனரலாக வந்தார். இவர் சிறந்த புத்திமான்; நடுவு நிலைமையும், அன்பும் வாய்ந்தவர்.

பெண்டிங்க்

இவர் காலத்தில் சண்டைகளின்றி நாடு அமைதியாக விருந்தது. ஆனாலும், குடகு நாட்டரசர் தமது குடிகளைக் கொன்றும் பற்பல தீங்குகளை யிழைத்தும் வந்ததனால், பெண்டிங்க் அந்த அரசரைப் பிடித்துக் காசிக்கு அனுப்பி விட்டுக் குடகுநாட்டை ஆங்கிலேய ராஜ்யத்திற்சேர்த்துக் கொண்டுவிட்டார்.

பெண்டிங்க் தமது பெயர் என்றும் அழியாதபடி உடன்கட்டை யேறுதல் என்னும் கொடிய வழக்கத்தை

அடியோடு நிறுத்திவிட்டார். அவர் போர்வீரர்களுக்குக் கொடுக்கப்பட்டுவந்த படியை நிறுத்தியும், ஸிவில் உத்தியோகஸ்தர்கள் பெற்றுவந்த செலவுப் பணத்தையும் குறைத்தும் ஏற்பாடுகள் செய்தார். அவர் அநேக வருஷங்கள் ராணுவத்தில் சேவகஞ் செய்து வந்த இந்தியச் சிப்பாய்களின் சம்பளங்களை உயர்த்தியும், கசையடிச் சிக்ஷையை அடியோடு நிறுத்தியும் விட்டார். ஆனால், ஐரோப்பியப் போர்வீரர்களுக்கு மட்டில் கசையடித் தண்டனை விதிக்கப்பட்டு வந்தது. அதனாற்றான் ஸ்லீமென் என்பவர், "அரசகுலத்தைச் சேர்ந்தவர்களும், ராஜாங்கத்திற்கு ஒரு பெரிய ஆதரவானவர்களுமான வெள்ளைக்காரர்கள் மிகுந்த அவமானத்தையடையவும், கறுப்பர்கள் அவ்வித அவமானத்திற்கு ஆளாகாமல் இருக்கவும் காரணமான இந்த தாரதம்மியான ஏற்பாடு பென்டிங்க் செய்த குற்றங்களில் ஒன்றாகும் என்றும், ஆதலால்தான் ஐரோப்பிய உத்தியோகஸ்தர்கள் அவரை வெறுத்தார்கள்" என்றும் சொல்லியிருக்கிறார். லார்ட் ஹார்டிஞ்ச் காலத்தில் அந்த வித்தியாசம் நீங்கிப்போய், இந்தியச் சிப்பாய்களுக்கும் 50 அடிகளுக் கதிகப்படாமல் கசையடி தண்டனை விதிக்கலாம் என்று ஏற்பாடு செய்யப்பட்டது.

சீர்திருத்தங்கள்

கவர்னர்-ஜனரலது மந்திராலோசனைச் சபையில் அப்பொழுது சட்டமெம்பராக நியமிக்கப்பட்டிருந்த மேகாலே என்பவருடைய கருத்தின்படி ஆங்கிலமே ராஜாங்க பாஷையாக்கப்பட்டது. அதனைக் கற்பிக்கவும் பல கல்லூரிகளும், பாடசாலைகளும் ஏற்பட்டன. அப்பொழுது கல்கத்தாவில் ஒரு வைத்திய கலாசாலையும் ஸ்தாபிக்கப்பட்டது.

மேகாலேயும்; கல்வியும்

அதனால், இந்தியர்கள் ஆங்கிலம் பயின்று மேனாட்டுக் கல்வி கேள்விகளில் தலைத்தோங்கி உயர்ந்த உத்தியோகங்களுக்கு நியமிக்கப்பட்டு வந்தார்கள். பெண்டிங்க் இந்தியர்களை அவர்களுடைய ஜாதி, மதபேதங்கள் காரணமாகவாவது, பிறப்பு, வளர்ப்புக் காரணமாகவாவது, கம்பெனியின் எவ்விதமான உத்தியோகத்திற்கும் தகுதியற்றவர்களெனக் கருதக்கூடாதென்று சட்டம் ஏற்படுத்தினார்.

இந்தியர்கள் பெரிய உத்தியோகங்கள் பெற்றது

அதற்கிணங்க அப்பொழுது பம்பாய் கவர்னராகவிருந்த மவுண்ட் ஸ்டூவர்ட் எலிபின்ஸ்டன் என்பவரும் குடிகளினிடத்து மிக்க அன்பு பாராட்டி வந்ததனால், அவர்களால் 'பிரஜா மித்ரன்' என்று அழைக்கப்பட்டுவந்த, மதராஸ் கவர்னரான, ஸர் தாமஸ் மன்ரோ என்பவரும் இந்தியர்களை முனிசீபுக்களாகவும், ஸப்-ஜட்ஜ்களாகவும், டிப்டி-கலெக்டர்களாகவும் நியமித்ததல்லாமல், அவர்களுடைய சம்பளங்களையும், அந்தஸ்துக்களையும் உயர்த்தினார்கள்.

தக்கர்

இவற்றையன்றி, பெண்டிங்க் அப்பொழுது தேசத்தின் நாலா பக்கங்களிலும் பரவியிருந்து கொலை, களவுகளைச் செய்துவந்த கொள்ளைக்காரர்களையும், **தக்கர்** என்னும் கொலைப்பாதகர்களையும் வென்று நாட்டில் அமைதியை உண்டு பண்ணினார். அவர் 1500 பெயர்களுக்கு மதிகமான தக்கர்களைப் பிடித்து மரணதண்டனையோ த்வீபாந்தர சிக்ஷையோ விதித்து அவர்கள் கூட்டத்தை முற்றிலும் தொலைத்துவிட்டார்.

கிருஷ்ணராஜ உடையார் என்னும் மைசூரரசர் தமக்கு யுக்த வயது வந்ததும் கி. பி. 1811-ல், ராஜ்ய பரிபாலனத்தைத் தாமே ஏற்றுக்கொண்டுவிட்டார். பூர்ணையாவென்னும் மந்திரியின் ஆட்சியில் ராஜ்ய பரிபாலனம்

செவ்வனே நடந்து வந்தது. ஆனால், **மைசூர்** கிருஷ்ணராஜர் அதிகாரத்தை வகிக்கத் தொடங்கினதும், தமது குடிகளை வருத்தி வந்ததனால், நாட்டில் கலகங்கள் உண்டாயின. அதனால் பெண்டிங்க் அவரை நீக்கிவிட்டு, ராஜ்யபரிபாலனத்திற்காகச் சில ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களடங்கின ஒரு கமிஷனை ஏற்படுத்தினார். அவர்கள் கி.பி. 1881-ல் மைசூர் ராஜ்யத்தைக் கிருஷ்ணராஜரின் தத்துப் புத்திரரான **சாமராஜ உடையாரிடம்** ஒப்புவித்தார்கள்.

கி. பி. 1833-ல், கம்பெனியாரின் சாஸனம் இன்னமொரு முறை புதுப்பிக்கப்பட்டது. அப்பொழுது கம்பெனியாருக்கிருந்த வியாபார சுதந்திரம்போய், எவர் வேண்டுமானாலும் இந்தியாவோடு வியாபாரம் செய்யலாம் என்று ஏற்பாடு செய்யப்பட்டது. கம்பெனியார் எவருடைய போட்டியுமின்றிச் சீனாவில் தேயிலை வியாபாரம் செய்யும் சுதந்திரத்தையும் இழந்து **சாஸனம்** விட்டார்கள். இந்தியா சம்பந்தமான சட்ட திட்டங்களைக் கவர்னர்-ஜனரல் தமது சபையிலேயே செய்துகொள்ளலாம். மேலே சொல்லப்பட்டபடி இந்தியர்களுக்கு உத்தியோகங்கள் கொடுக்கப்படவேண்டுமென்றும் அந்த சாஸனத்தில் காணப்பட்டது.

பெண்டிங்க் இந்நாட்டின் மேன்மையைக் கருதிச் செய்த திருத்தங்களில் **ராஜா ராம் மோஹன் ராய்** என்னும் வங்காளப் பிரபு அவருக்கோர் ஒப்பற்ற துணைவராக இருந்தார். ஸஹகமனத்தை ஒழிப்பதிலும், ஆங்கிலப் பள்ளிக்கூடங்களை அமைப்பதிலும் ஹிந்து ஸ்திரீகளின் நிலைமையை உயர்த்துவதிலும், இவர் மிகுந்த ஊக்கத்துடன் உழைத்துவந்தார். இவர் ஜனங்கள் கொண்

ராம் மோஹன் ராய்

தொழுகும் சடங்குகளிற் பல வேதங்களிற் சொல்லப்படாதனவும், அவற்றிற்கு முரணானவைகளும் எனவறிந்து, வேதங்களையும் உபநிஷத்துக்களையும் மொழி பெயர்த்து அவற்றை யாவரும் வாசிக்குமாறு செய்ததை யன்றித் தமது நோக்கத்தின்படி ஹிந்து மதாநுஸ்டானத்தைச் செய்பவர்களுக்கென்று பிரம்ம சமாஜம் என்னும் சமூகத்தை உண்டுபண்ணினார். ஸஹகமனத்தை யொழிப்பதற்காகவும், இந்தியர்களுக்கு உயர்ந்த உத்தியோகங்களைக்கொடுக்க வேண்டுமென வாதிப்பதற்காகவும், முகலாய மன்னருக்கும் கம்பெனியாருக்கும் இருந்த சில வேற்றுமைகளை ஒழுங்குபடுத்துவதற்காகவும், இவர் இங்கிலாந்துக்குச் சென்றார். இவர் அந்நாட்டிலேயே காலஞ் சென்று விட்டார். ஹிந்துக்கள் இவரை இன்னமும் கொண்டாடி வருவதினின்றும் இவர் செய்த திருத்தங்களின் சிறப்பு வெளியாகின்றதல்லவா ?

லார்ட் ஆக்லண்ட் ; லார்ட் எல்லென்பரோ

(கி. பி. 1836—கி. பி. 1842); (கி. பி. 1842—கி.பி. 1844)

ஆக்லண்ட்

பெண்டிங்குக்குப் பிறகு ஆக்லண்ட் வரும் வரையில் சுமார் ஒரு வருஷகாலம் கவர்னர்-ஜனரலாக விருந்த மெட்கால்ப் என்பவர் சுதேச வர்த்தமானப் பத்திரிகைகளுக்கு ஏற்பட்டிருந்த நிபந்தனைகளை அடியோடு ரத்து செய்துவிட்டார். அதற்காக அவருடைய மேலதிகாரிகள் அவரைக்கடிந்து கொண்டார்கள். அவர் கவர்னர்-ஜனரல் உத்தியோகம் தமக்குக் காயமாகக் கிடைப்பதை யிழந்து தமது வேலையை ராஜீநாமா கொடுத்து விட்டுத் தம்மூருக்குச் சென்றுவிட்டார். அவருக்குப் பின் லார்ட் ஆக்லண்ட் இந்திய கவர்னர்-ஜனரலானார்.

இவர் ருஷியா தேசத்தவர்கள் அப்பொழுது பலாட்டியர்களாகி மத்திய ஆசியாவிலுள்ள சில நாடுகளைவென்று கொண்டு விட்டதனாலும், அது வரையில் பகைவர்களாக இருந்துவந்த ஆப்கானிய பாரஸிக அரசர்கள் தமக்குள் சமாதானஞ் செய்து கொண்டுவிட்டார்களெனக் கேள்விப்பட்டதனாலும், இந்தியாவுக்குத் தீமை ஏற்பட்டுவிடுமென்று பயந்து, ஆப்கானிய வியவகாரங்களில் தலையிட்டுக் கொள்ள எண்ணினார். அதனால், சொல்லரிய கஷ்டங்களும் எண்ணிறந்த தீமைகளும் உண்டாயின. கி. பி. 1809-ல், ஆமதுஷா துராணியின் பெயரரான ஷாஷுஜா வென்னும் ஆப்கானிய அரசர் ராஜ்யத்தினின்றும் துரத்தப்பட்டு ஆங்கிலேயரிடம் வந்து சேர்ந்தார். அவருக்குப்பின் காபூலில் நிலவரமான அரசாட்சி யாதொன்றுமில்லாதிருந்தது. ஆனால், கி.பி. 1826-ல், **தோஸ்த் மகம்மது** என்பவர் அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொண்டு அமீரானார். ஆக்லண்ட் இவருடன் சிநேகஞ் செய்துகொள்ள எண்ணிக் காப்டன் பர்ன்ஸ் என்பவரைத் தூதனுப்பினார். தோஸ்த் மகம்மது ஆங்கிலேயர்கள் ரஞ்சிட் ஸிங்க் தம்மிடமிருந்து பிடுங்கிக் கொண்டுவிட்ட பெஷாவரைத் தமக்கு மீட்டுக்கொடுத்தால், தாம் அவர்களுடன் நட்பாயிருப்பதாகச் சொன்னார். ஆங்கிலேயர்கள் அதற்கு உடன்படாததனால், அவர் ஆங்கிலேய தூதரை அனுப்பிவிட்டு, அப்பொழுது தம்மிடம் வந்திருந்த ருஷிய தூதருக்கு மரியாதைகள் செய்தனுப்பினார். அதனால், ஆக்லண்ட் தோஸ்த் மகம்மதுவை ஸிம்மாஸனத்தினின்றும் நீக்கிவிட்டுத் தமக் கடங்கி நடப்பதாகச் சொன்ன ஷாஷு-

ஆப்கானிய வியவகாரங்களில் தலையிடல்

ஆப்கானிய யுத்தம் ஏற்பட்டது

ஜாவை அமீராக்க வேண்டுமென்று தீர்மானித்து விட்டார். அதுவே முதல் ஆப்கானிய யுத்தத்திற்குக் காரணமாயிற்று.

கி. பி. 1839-ல் ஆங்கிலேய சேனை போலன் கணவாயைக் கடந்து சென்று காண்டஹாரையும், கஜினியையும் கைப்பற்றிக் கொள்ளவும், தோஸ்த் மகம்மது பொகாராவுக்கு ஓடிப்போய் விட்டார். அப்பொழுது ஷாஷுஜா அமீரானார். ஆப்கானியர்கள் இவரை விரும்பாததனால், காபூலில் இவரைப் பாதுகாப்பதற்கென்று ஒரு ஆங்கிலேய சேனை வைக்கப்பட்டிருந்தது. ஓடிப்போய் விட்ட தோஸ்த் மகம்மது ஆங்கிலேயரைச் சரணமடைந்து கல்கத்தாவுக்கு வந்து சேர்ந்தார். கி. பி. 1841-ல் ஆப்கானியர்கள் தோஸ்த் மகம்மதுவின் மைந்தரான அக்பர்கான் என்பவரைத் தங்களுக்குத் தலைவராகக் கொண்டு திடீரென்று காபூலை எதிர்த்து மெக்னுடன் என்னும் ஆங்கிலேய சேனைத் தலைவரைக் கொன்றும், இன்னும் சிலரைச் சிறைப்படுத்தியும் விட்டார்கள். அப்பொழுது கலகங்கள் பெருக ஆரம்பித்தன. அல்லாமலும், ஆங்கிலேயப் போர்வீரர்களின் கெட்ட நடவடிக்கைகள் ஆப்கானியர்களுக்கு வெறுப்பை உண்டு பண்ணின. ஆங்கிலேயர்கள் ஆப்கானியர்களை எதிர்த்துச் சண்டை செய்வதற்கு வேண்டிய பலம் தம்மிடத்திலில்லையென்றெண்ணி ஜலலாபாத்துக்குப் போவதற்காகக் காபூலை விட்டுத் திரும்பி விட்டார்கள். இவர்கள் பசியினாலும், உறைபனியினாலும், குளிரினாலும், சத்துருக்களின் கையினாலும் மாண்டு போனார்கள். டாக்டர் ப்ரைடன் என்னும் ஒருவரே தப்பிப் பிழைத்து இவர்களுக்கு நேர்ந்த ஆபத்தை எடுத்துச் சொன்னார். ஸேல் என்பவர் ஜலலாபாத்தையும், நாட் என்பவர் காண்டஹாரையும் சத்துருக்களின் வசமாகாதபடி மிகுந்த கஷ்டப்பட்டுப்

ஷாஷுஜா

ஆங்கிலேயர் விபத்து

பாதுகாத்து வந்தார்கள். ஆனுல், கஜினி சத்துருக்களின் வசமாய் விட்டது.

வெலிங்க்டன், டகர் முதலான ஆங்கிலேயப் பிரபுக்கள் பலவாறு எடுத்துக் காட்டியும் கேளாமல் ஆக்லண்ட் மிகுந்த ஊக்கத்துடன் ஆரம்பித்த இந்த யுத்தத்தினுல், ஆங்கிலேயருக் குண்டான நஷ்டத்திற்கும், அவமானத்திற்கும் எல்லை யில்லை. ஆங்கிலேய மேலதிகாரிகள் உடனே ஆக்லண்டை இங்கிலாந்துக்குத் திரும்பி அழைத்துக் கொண்டு விட்டார்கள்.

அவருக்குப் பின் இந்திய துரைத்தனத்தை மேற்கொண்ட **லார்ட் எல்லேன்பரோ** என்பவர் போலக் என்பவரை ஆப்கானியரைத் தண்டித்து, ஆங்கிலேயருடைய கௌரவத்தை நிலை நிறுத்தும்படி அனுப்பினுர். அவர் ஆப்கானியரை வென்று காபூலையும், காண்டஹாரையும், கஜினியையும் கைப்பற்றிக் கொண்டார்.

எல்லேன்பரோ

அப்பொழுது ஷாஷூஜா கொலையுண்டு போனதனுல், ஆங்கிலேயர்கள் தோஸ்த் மகம்மதுவை அமீராக்கி அவருடன் சமாதான உடன்படிக்கையும் செய்து கொண்டார்கள். ஆங்கிலேயர்கள், அந்நாட்டை விட்டுத்திரும்பு முன், காபூல் கடைத்தெருவை வெடி மருந்திட்டுக் கொளுத்தி நாசப்படுத்தி ஆப்கானியர் இழைத்த பழிக்குப் பழிவாங்கினுர்கள்.

அதன் பிறகு, க்வாலியர் நாட்டில் ஒரு கலகம் மூண்டது. ஜங்கோஜி ஸிந்தியாவின் மனைவியான தாராபாய் ஒரு குழந்தையை ஸ்வீகாரம் செய்துகொண்டாள்.

க்வாலியர்

அக்குழந்தைபெரியவனுகும் வரையில்யார் அரசு செலுத்துவது என்பதைப்பற்றிக் கலகங்கள் உண்டானதனுல், க்வாலியர் சேனையின் பலத்திற்கும் அது ஒரு கால் ஸீக்கர்களுடன் சேர்ந்துக்கொண்டு தீங்கிழைக்கக்கூடும் என்பதற்கும்

பயந்த எல்லென்பரோ தாமே நேரிற் சென்று க்வாலியர் சேனைகளை மகாராஜபுரம், பண்ணியார் என்னுமிடங்களில் தோற்க அடித்து க்வாலியர் நாட்டை ஆள்வதற்கு ஒரு சபையை யுண்டுபண்ணியும், அதன் படையைக் குறைத்தும் ஏற்பாடுகள் செய்தார்.

ஸிந்து நாடு

கி. பி. 1809-ல் ஸிந்து நாட்டு அமீர்கள் லார்ட் மின்டோவுடன் செய்துகொண்ட உடன்படிக்கையை யொட்டி ஆங்கிலேயருடன் நட்புப்பாராட்டி வந்ததல்லாமல், ஆப்கானிய யுத்தத்தில் அவர்களுக்கு உதவியும் புரிந்தார்கள். அவ்வாறிருந்தும், நேபியர் என்னும் ஆங்கிலேய ஏஜெண்ட் அவர்களைத் துரோகிகள் என்றெண்ணிச் சண்டைக் கிழுத்து மியானியிலும், ஹயிதராபாத்திலும் தோற்க அடித்து ஸிந்து நாட்டைக் கைப்பற்றிக் கொள்ளவும், எல்லென்பரோ அதை ஆங்கிலேய ராஜ்யத்திற் சேர்த்துக் கொண்டுவிட்டார். ஸிந்துநதி கப்பல்கள் போய் வரக்கூடியதாக இருந்ததனால் அதைச் சுவாதீனஞ் செய்து கொள்ள வேண்டும் என்றும் ஆசை காரணமாக எல்லென்பரோ அநியாயமாக ஸிந்து நாட்டோடு சண்டை செய்தாரென்பதைக் கண்ட மேலதிகாரிகள் அவரைத்திரும்பி வந்துவிடும்படி உத்தரவு செய்தார்கள்.

அநியாய மாகக் கவர்ந்து கோள்ளப் பட்டது

iv. லார்ட் ஹார்டிஞ்ச்; லார்ட் டல்ஹௌஸி
(கி. பி. 1844-கி. பி. 1848) (கி. பி. 1848-கி. பி. 1856)

ரஞ்சிட் ஸிங்க் இருந்த வரையில் அவர் கி. பி. 1809-ல் ஆங்கிலேயரோடு அமிருதஸரஸில் செய்து கொண்ட உடன்படிக்கைப்படி நட்புப்பாராட்டியே நடந்து வந்தார். கி. பி. 1839-ல் அவர் இறந்துவிடவும், அவர் மைந்தரான திலீப் ஸிங்க் அரசரானார். அவருக்கு அப்பொழுது வயது

ஐந்து. அதனால் அவருடையதாயும், மந்திரிகளும் ராஜ்ய காரியங்களை நடத்திவந்தார்கள். இவர் களுக்குச் சேனையை யடக்கியாளுந் திறமை யில்லாததனால், அதன் பகுதி ஒவ்வொன்றும் தனித்தனிப்பஞ்சாயத்துக் களை உண்டு பண்ணிக்கொண்டு அவற்றின் அதிகாரத்திற் குட்பட்டும், மற்றைய அதிகாரங்களை நிராகரித்தும் வந்தன. சண்டை செய்து ஜயம் பெற்றுப் புகழடையக் கருதியிருந்த அச்சேனை அமிருதஸரஸில் ஏற்பட்ட உடன்படிக்கையை மீறி ஸட்லிஜ் நதியைக்கடந்து ஆங்கி லேய நாட்டின்மீது படையெடுத்துச் செல்லவும், ஸீக்கர் களுக்கும், ஆங்கிலேயர்களுக்கும் யுத்தம் ஏற்பட்டது. இதுவே முதலாவது ஸீக் யுத்தம்.

ஸீக்படைகள் அத்து மீறினது

கி. பி. 1845-ம் வருஷம் டிஸம்பர் மாதம் முதல் கி. பி. 1846-ம் வருஷம் பிப்ரவரி மாதத்திற்குள் இருதிறத்தாருக் கும் முட்கீ, பிரோஜ்ஷாஹ்ர், அலிவால், ஸோப்ராயன் என்னு மிடங்களில் ஆங்கிலேயர்கள் அதுவரை யில் கண்டிராதனவும், பயங்கரமானவையு மான சண்டைகள் செய்து ஜயம் பெற் றூர்கள். ஆயினும், ஆங்கிலேயருக்கு அந்த யுத்தத்தில் உண்டான நஷ்டத்துக்கு ஈடே இல்லை. கடைசியில் இரு திறத்தாரும் கி. பி. 1486-ல், லாகூரில் சமாதான உடன் படிக்கை செய்து கொண்டார்கள். அதனால் ஆங்கிலேய ருக்கு ஸட்லிஜ் நதிக்கும் பியாஸ் நதிக்கும் இடையிலுள்ள நாடு கிடைத்தது. ஸீக்கர்களுடைய படை குறைக்கப்பட்டது. ஸீக்கர்கள் ஆங்கிலே யருக்கு யுத்தச் செலவிற்காக ஒன்றரைக் கோடி ரூபாய் கொடுக்க ஒப்புக்கொண் டார்கள். திலீப்ஸிங்க் ராஜாவாகவும், அவருடைய தாய்

ஸீக் யுத்தம்

உடன் படிக்கை

பிரதிநிதியாகவும் இருக்கும்படி ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

ஹார்டிஞ்ச் அப்பொழுது காஷ்மீரத்தைப் பஞ்சாபினின்றும் பிரித்துக் குலாப்ஸிங்க் என்னும் ஜம்மூ அரசருக்கு விற்று அவரிடமிருந்து 75 லக்ஷம் ரூபாய் பெற்றுக்கொண்டு அவரைக் காஷ்மீரத்திற்கும் அரசராக்கினார். அவருடைய சந்ததியார்கள் இன்னமும் அந்த ராஜ்யத்தை ஆண்டு வருகிறார்கள். ஆங்கிலேய சேனை யொன்று பஞ்சாபில் வைக்கப்பட்டும், ஆங்கிலேயப் பிரதிநிதி யொருவர் லாகூரில் இருக்குமாறு நியமிக்கப்பட்டும் முதலாவது ஸீக் யுத்தம் முடிவு பெற்றது. ஹார்டிஞ்சும் 1848-ம் வருஷம் ஜனவரி மாதம் தமது வேலையை லார்ட் டல்ஹௌஸியினிடம் ஒப்புவித்து விட்டுத் தம்மூருக்குச் சென்றுவிட்டார்.

காஷ்மீரம்

லார்ட் ஹார்டிஞ்ச் இந்தியாவை விட்டுப்போன சில மாதங்களுக்கெல்லாம், மூல்டானில் ஒரு கலகம் உண்டாயிற்று. மூல்ராஜ் என்னும் மூல்டான் கவர்னர் தாம் பஞ்சாப் அரசருக்குச் செலுத்த வேண்டிய கப்பத்தைக் கொடாமலும், மூல்டான் துரைத்தனத்தின் வரவு செலவுக்கணக்குகளை ஆங்கிலேயப் பிரதிநிதிக்கனுப்பாமலும் இருந்து வந்ததையன்றித் தமக்கு அதிகாரம் வேண்டாம் என்றும், தாம் தமது வேலையை ராஜீநாமா கொடுத்து விடுவதாயும் சொல்லியனுப்பினார். ஆனால், டல்ஹௌஸி வேறொரு கவர்னரை நியமித்து அவரை அதிகாரத்தில் அமர்த்தும்படி இரண்டு ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களை அனுப்பிவைத்த பொழுது, மூல்ராஜ் திடீரென்று அந்த உத்தியோகஸ்தர்களை எதிர்த்துக் கொன்றுவிட்டார். உடனே நாட்டில் ஒரு பெருங்கலகம் உண்டாய்விட்டது.

மூல்டானில் கலகம்

அவ்வாறான சமயத்தில், ஆங்கிலேய துரைத்தனத்தார் திலீப்ஸிங்கின் தாயைப் பஞ்சாபிலிருந்து தூரத்தியும், திலீப்ஸிங்குக்குத் தமது பெண்ணை விவாகஞ் செய்து கொடுப்பதாகச் சொல்லி, அதற்கான ஏற்பாடுகளைச் செய்துவந்த ஸர்தார் சத்ராஸிங்கைக் கவர்னர் அதிகாரத்திலிருந்து நீக்கியும், திலீப்ஸிங்குக்கு விவாகமாகவொட்டாமல் தடுத்தும் குடிகளுக்குக் கோபத்தை உண்டுபண்ணினதனால் அந்தக் கலகம் அதிகரித்தது. அதுவே இரண்டாவது ஸீக் யுத்தத்திற்குக் காரணமாயிற்று. ராம்நகர், ஸாதுலாபூர், சிலியான்வாலா என்னுமிடங்களில் நடந்த மூன்று சண்டைகளிலும் ஆங்கிலேயர்கள் நஷ்டமடைந்து முதுகு காட்டியோட நேர்ந்தது. ஆனால், கி. பி. 1849-ல் கூர்ஜாரத்தில் நடந்த சண்டையில் ஸீக்கர்கள் அடியோடு தோற்றுப் போனதனால், அவர்கள் ராவல்பிண்டியில் ஆங்கிலேயரைத் தஞ்சம் புகுந்தார்கள். டல்ஹௌஸி பஞ்சாபை ஆங்கிலேய அரசாட்சியிற் சேர்த்துக்கொண்டு, திலீப் ஸிங்குக்கு உபகாரச் சம்பளம் கொடுத்து இங்கிலாந்துக்கனுப்பி விட்டார். ஸீக்கர்கள் மறுபடியும் சண்டை செய்யாதபடி அவர்களுடைய ஆயுதங்கள் அனைத்தும் கவர்ந்து கொள்ளப்பட்டன. மிகுந்த பராக்கிரமசாலிகளும், இணையற்ற போர்வீரர்களுமான ஸீக்கர்கள் தங்கள் ஆயுதங்களைப் பறிகொடுத்தபொழுது, கண்ணீர் விட்டழுதார்கள். அன்று முதல் ஸீக்கர்கள் ஆங்கிலேய ராணுவத்திற் சேர்ந்து இப்பொழுதும் முதன்மை பெற்று விளங்கிவருகிறார்கள்.

2-வது ஸீக் யுத்தம்

உடன் படிக்கை

டல்ஹௌஸி, லாகூர் உடன்படிக்கை ஏற்பட்ட காலம் முதல் பஞ்சாபில் பிரதிநிதியாக விருந்த ஹென்ரி லாரேன்ஸையும், அவர் சகோதரரான ஜான்லாரென்ஸை

யும் இன்னுமொருவரையும் சேர்த்து அவர்களைக் கொண்டு பஞ்சாபை ஆளுதற்கான ஏற்பாட்டைச் செய்தார். ஆனால், சீக்கிரத்திலேயே டல்ஹௌஸி, ஸீக்கர்களிடம் மிகுந்த அன்பு பாராட்டிவந்த ஹென்ரியை ராஜபுதனத்திற்கனுப்பிவிட்டுத் தமதிஷ்டப்படி நடந்தொழுகின அவர் தம்பியான ஜானைப் பஞ்சாப் கமிஷனராக நியமித்துவிட்டார். ஹென்ரி பஞ்சாபில் பாதைகள் போடுவித்து, வாய்க்கால்களையும் வெட்டுவித்தார். அவர் குடிகள் படிப்பதற்கான பாடசாலைகளையும் ஏற்படுத்தினார். அவர் சிப்பாய்க் கலகத்தில் கொலையுண்டு போனார்.

பஞ்சாப் பரிபாலனம்

ஜான் லாரென்ஸ் ஸர்தார்களையும், மற்றைய ஸீக் தலைவர்களையும் தலையெடுக்கவொட்டாமற் செய்தபோதிலும், நிலவரி சம்பந்தமான ஏற்பாடுகளைச் செய்து குடிகளுக்கு வியவசாயத்தில் ஊக்கத்தை உண்டு பண்ணினார். அவர் தமது சாமர்த்தியத்தினால் சிப்பாய்க் கலகம் பஞ்சாபுக்குப் பரவாமற் செய்ததையன்றித் தமது சைநியங்களைக் கொண்டு டில்லியில் உண்டான கலகத்தை அடக்குவதற்கும் உதவினார். அவர் வைஸிராயாக நியமிக்கப்பட்டு இன்னமொரு முறை இந்தியாவுக்கு வந்து ராஜ்யபாரம் பண்ணினார்.

ஜான் லாரேன்ஸ்

லாரென்ஸ் சகோதரர்களைப் போன்று நிகல்ஸனும் எல்லைமாகாணத்தைச் செவ்வனே பரிபாலித்தும், சிப்பாய்க் கலகம் அங்கே பரவாமற் செய்தும் வந்தார். ஆனால், அவர் டில்லிக்குச் சென்று சிப்பாய்களுடன் சண்டை செய்தபொழுது கொலையுண்டு போனார்.

ஸீக் யுத்தம் முடிந்த மூன்று வருஷங்களுக்கெல்லாம் பர்மாவுடன் ஒரு பெரிய யுத்தம் உண்டாயிற்று. பர்மா அரசர் யாண்டபூவில் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி

பர்மா யுத்தம்

நடந்துகொள்ளாமல், ஆங்கிலேய வியாபாரிகளை வருத்தினதனுலும், ஆங்கிலேயப் பிரதிநிதியைத் துரத்தினதனுலும் டல்ஹௌஸி ஒரு சேனையை அனுப்பி ரங்கூன், ப்ரோம், பெகு என்னுமிடங்களைக் கைப்பற்றிக்கொண்டு, கீழ்ப் பர்மாவை ஆங்கிலேய ராஜ்யத்திற் சேர்த்துக்கொண்டு விட்டார். இப்படியாக இரண்டாவது பர்மா யுத்தம் முடிந்தது.

அயோத்தி அரசிழந்தது

அயோத்தியின் பரிபாலனம் செம்மையாக நடைபெருததனுல் அந்நாட்டில் அடிக்கடி கலங்கள் உண்டாய் வருகின்றன என்னும் காரணத்தைக் கொண்டு டல்ஹௌஸி அப்பொழுதிருந்த நவாப்புக்கு வருஷத்திற்கு 12 லக்ஷம் ரூபாய் உபகாரச் சம்பளம் கொடுப்பதாய் ஏற்பாடு செய்துகொண்டு அயோத்தியை ஆங்கிலேய ராஜ்யத்திற் சேர்த்துக் கொண்டுவிட்டார்.

பீரார்

இரண்டாவது மஹாராஷ்டிர யுத்தத்தின் முடிவில் வெல்லெஸ்லி மஹாராஷ்டிரர்களிடமிருந்து தாம் பிடுங்கிக் கொண்ட பீரார் மாகாணத்தை நிஜாமுக்குக் கொடுத்து விட்டார். நிஜாம் ராஜ்யத்தில் வைக்கப்பட்டிருந்த ஆங்கிலேய சேனையின் செலவுக்குக் கடப்பை, கர்நூல், பல்லாரி, அநந்தபூர் என்னும் ஜில்லாக்களிலிருந்து கிடைத்துவந்த வருமானம் போதாததனுல், நிஜாம் பொக்கிஷத்திலிருந்து பணமும் கொடுக்க நேர்ந்தது. அந்தப் பணத்தை அவர் சரியாகக்கொடாமல் பாக்கி ஏற்பட்டதனுல், டல்ஹௌஸி அதற்கீடாகப் பீராரைப் பிடுங்கிக்கொண்டு விட்டார்.

இவற்றையன்றி, டல்ஹௌஸி ஆங்கிலேய ராஜ்யத்தைப் பெருக்குவதற் கென்று மற்றுமொரு நூதனமான சூழ்ச்சியையும் செய்தார். அவர் சந்ததியில்லாத

அரசர்களின் நாடுகளுக்கு ஆங்கிலேயர்

சந்ததியில்லாதவரின் கதி

தாம் தக்க வார்சுகள் என்னும் ஏற்பாட்டைக் கைக்கொண்டு பல நாடுகளைத் தமது வசமாக்கிக்கொண்டு விட்டார்.

புத்திர சந்தானமில்லாத ஹிந்துக்கள் தங்களுக்குப் பின்னர்த்தங்கள் ஆஸ்தியைப்பெற்று அநுபவிப்பதற்குத் தங்கள் குலத்தில் பிறந்த பிள்ளைகளை ஸ்வீகாரம் செய்து கொள்வது பாரம் பரியமான வழக்கமாக இருந்து வந்துள்ளது. அந்த வழக்கத்தை ஹிந்துக்களின் சட்டங்கள் பலவும் ஒப்புக்கொண்டிருக்கின்றன.

தத்துக்கான நிபந்தனைகள்

மகம்மதிய அரசர்கள் இந்நாட்டை ஆண்டு வந்த பொழுதும் அந்த ஏற்பாட்டிற்கு எவ்விதமான ஆக்ஷேபமும் செய்யவில்லை. ஆனால், இப்பொழுது புதிதாக ஆங்கிலேய வர்த்தகக் கம்பெனியார் இந்திய அரசர்கள் தங்கள் உத்தரவைப் பெற்றுத் தான் தத்து வாங்கிக் கொள்ளலாம் என்றும், அவ்வாறின்றி ஸ்வீகாரம் செய்து கொள்ளப்பட்டவர்கள் தங்கள் அநுமதியில்லாமல் அரசுரிமையை வகிக்கக்கூடாதென்றும் தீர்மானித்து விட்டார்கள்.

அந்தத் தீர்மானத்தின்படி நடந்தொழுகின டல்ஹௌஸி, சந்தானமில்லாத சதாரா, கராளி, ஸம்பல்புரி, ஜான்ஸி, நாகப்புரி என்னும் நாடுகளை ஆங்கிலேய ராஜ்யத்திற் சேர்த்துக்கொண்டு விட்டார். அதனால், ஆங்கிலேயருக்கு நண்பர்களாக அவர்களிடம் நன்றி

பகைவர்கள் உண்டானது

பாராட்டிவந்த பலர் அவர்களுக்குப் பகைவர்களாகிச் சிப்பாய்கள் கலகஞ் செய்த பொழுது அவர்களுடன் சேர்ந்துகொண்டு தங்கள் சுவாதீனத்தைப் பெற முயன்றார்கள்.

டல்ஹௌஸி காலத்தில் வங்காளத்திற்கு ஒரு தனி லெப்டினென்ட் கவர்னரெனும் கீழ்த்தர கவர்னர் நியமிக்

கப்பட்டார். அவர் காலத்தில் பாதைகளும், வாய்க்கால்களும், இருப்புப்பாதைகளும் ஏற்பட்டுக் கொஞ்சங் கொஞ்சமாக விருத்தியடைந்து வந்தன. தந்தியும், தபாலுங்கூட அவர்காலத்திற்றான் ஏற்பட்டன.

சீர்திருத்தங்கள்

அவர் தாம் முதன் முதல் அரையணா முத்திரைச் சீட்டை உண்டு பண்ணினார். பாதைகள் போடவும், பாலங்கள் கட்டவும், வாய்க்கால்கள் வெட்டவும், ஏரிகுளங்களை மராமத்துச் செய்யவும், ஆறுகளில் அணைகள் போட்டு அவற்றின் தண்ணீரைப் பாய்ச்சலுக்கு உபயோகப்படுத்தவும், பள்ளிக்கூடம், வைத்தியசாலை, சத்திரம், சாவடி முதலிய பொதுக் கட்டிடங்களை அமைக்கவும் **பொதுவேலை இலாகா** என்னும் துரைத்தன வமைப்பு அவரால்தான் உண்டு பண்ணப்பட்டது. அவர் ஆங்கிலத்திலன்றித் தேச பாஷைகளின் மூலமாயும் கல்விகற்பிக்கும் ஏற்பாடுகளையும் செய்துவைத்தார். கி. பி. 1853-ல் வர்த்தகக் கம்பெனியின் சாஸனம் மறுபடியும் புதுப்பிக்கப்பட்டு, இந்தியர்களும் லண்டனுக்குச் சென்று படித்துப் பரிக்ஷையில் தேறி இந்தியன் ஸிவில் ஸர்விஸ் என்னும் வகுப்பில் சேர்ந்து உயர்ந்த உத்தியோகங்களுக்கு நியமிக்கப்பட்டு வந்தார்கள்.

V. சிப்பாய்க் கலகம் என்னும் சுதந்திரப் போர்

கலகம்

லார்ட் டல்ஹௌஸிக்குப் பின்பு லார்ட் கானிங் என்பவர் கவர்னர் - ஜனரலானார். அவர் வந்ததும், இந்தியாவில் ஒரு பெருங்கலகம் உண்டாயிற்று.

டல்ஹௌஸியினது பரிபாலனத்தில் பல சுதேச அரசர்கள் பற்பல காரணங்களினால் ஆங்கிலேயருக்குப் பகைவர்களானார்கள். தாம் செய்துகொண்ட ஸ்வீகா

ரத்தை ஒப்புக்கொள்ளாமல் தமது நாட்டைக் கவர்ந்து
கொண்டதனால் ஜான்ஸி ராணியும், தமது
காரணம் ஸ்வீகாரத் தந்தையான இரண்டாவது
பாஜிராவுக்குக் கொடுத்து வந்த உபகாரச்
சம்பளத்தைத் தமக்குக் கொடுக்கவில்லை என்கிற காரணத்
தினால் நானாஸாஹிபுவும், பஹதுர்ஷா இறந்தவுடன்
தம்மை டில்லியை விட்டுப் போகும்படி சொன்னதனால்
பஹதுர்ஷாவின் சந்ததியாரும், தத்தம் நாடுகளையும்,
ஸ்வதந்திரங்களையும் இழந்துவிட்ட காரணத்தினால் இன்
னும் பல சிற்றரசர்களும் ஆங்கிலேயர்மீது கோபமூண்டு
அவர்களை எதிர்த்துச் சண்டை செய்து தத்தம் சுதந்திரங்
களைப் பெற்றுக் கொள்வதற்குத் தக்க சமயம் எப்
பொழுது வாய்க்கும் என்று மிகுந்த ஆவலுடன் எதிர்ப்
பார்த்திருந்தார்கள்.

பள்ளிக்கூடங்களிலும், ரயில் பிரயாணத்திலும்,
வைத்திய சாலைகளிலும் ஜாதி மதபேதங்களைக் கவனி
யாமல் யாவரும் ஒன்றாகக்கூட நேர்ந்ததனாலும், கிறிஸ்த
வப் பாதிரிமார்கள் தங்கள் மதத்தைப்
காரணம் போதித்து வந்ததனாலும், சிலர் துரைத்
தனத்தார் தங்களுடைய மதங்களைக்
கெடுக்க முயன்று வருகிறார்கள் என்று பயந்து ஒன்று
சேர்ந்து தாங்களும் கலகம் செய்யத் தலைப்பட்டார்கள்.

இவைகளையல்லாமல், இந்தியப் போர்வீரர்கள் தங்க
ளுக்குச் சம்பளம் போதாதென்றும், தாங்கள் கடலைக்
கடந்து அயல் நாடுகளுக்குச் சென்று சண்டை செய்ய
முடியாதென்றும் சொன்னார்கள். அப்படிப்பட்ட தரு
ணத்தில் வங்காளத்திலிருந்த ராணுவத்
காரணம் திற்கு மாடு, பன்றி இவைகளின் கொழுப்
புத் தடவிய தோட்டாக்களைக் கொண்டு
சுடும் துப்பாக்கிகள் கொடுக்கப்பட்டன. அதனை யறிந்த

ஹிந்து சிப்பாய்களும், மகம்மதிய சிப்பாய்களும் அவற்றைத் தாங்கள் தீண்டவும் மாட்டோம் என்று சொல்லிக்கொண்டு கலகம் செய்ய ஆரம்பித்தார்கள்.

இந்தக் கலகம் கொஞ்சங் கொஞ்சமாகப் பெருகி மீரட்டில் முதன் முதல் வெளியாயிற்று. அப்பொழுது அங்கிருந்த சிப்பாய்கள் சிறைகளை யுடைத்துக் கைதிகளை விடுவித்தும், ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களிற் சிலரைக்

கலகம் வெளியாதல்

கொன்றும் ஊரைக் கொள்ளை யடித்தார்கள். அவர்கள் அங்கிருந்து டில்லிக்குச் சென்று, டில்லியிலிருந்த ஐரோப்பிய உத்தியோகஸ்தர்கள் சிலரைக் கொன்று பஹதுர்ஷாவைச் சக்ரவர்த்தி யாக்கினார்கள். கலகம் ஏற்பட்ட ஒவ்வோர் இடத்திலும் சிப்பாய்கள் ஆங்கிலேயரைக் கொன்றும், கைதிகளைச் சிறைகளினின்றும் விடுவித்தும், பொக்கிஷங்களைக் கொள்ளை யடித்தும் வந்தார்கள்.

கொடுமைகள்

ஜான்ஸியில் தம்மைத் தஞ்சம் என்று வந்தடைந்த ஆங்கிலேயரைக்கூடச் சிப்பாய்கள் அநியாயமாகக் கொலை செய்தார்கள். கான்பூரிலும் அவ்வாறே நடந்தது. உடனே ஹாவ்லக் என்பவர் ஒரு சேனையுடன் சென்று தாமே பீஷ்வாவென்றும், தாம் திரும்பவும் மஹாராஷ்டிர ராஜ்யத்தை ஸ்தாபிக்கப் போவதாயும் சொல்லிக்கொண்டு முன் வந்த நானாஸாஹிபைத் தோற்க அடித்துக் கான்பூரையும் கைப்பற்றிக் கொண்டார்.

லக்னௌவில் கலகம் ஏற்பட்டபொழுது ஹென்ரி லாரென்ஸ் கொலையுண்டபின்னரும், அவருடைய சேனைகள் மனந்தளராமல் சண்டை செய்தன.

லக்னௌ

பிறகு ஹாவ்லக்கும், காம்பெலும் சைநியத்துடன் வந்து அவர்களைக் காப்பாற்றினார்கள். ஆனாலும், அப்புறம் இரண்டு வருஷங்கள் வரையில் கான்பூரில் அமைதி உண்டாகவில்லை.

மற்றைய இடங்களைவிட டில்லியில்தான் கலகம் அதிகமாக விருந்தது. ஜான் லாரென்ஸும், நிகல்ஸனும் ஆறு நாட்கள் வரையில் சண்டை செய்து டில்லியைக் கைப்பற்றிக்கொண்டார்கள். பஹதுர்ஷா

டில்லி

வின் இரண்டு பிள்ளைகளும் மரணதண்டனையையும், பஹதுர்ஷா தீபாந்தர சிக்ஷையையும் அடைந்தார்கள். ஜான்ஸி ராணி ஆண் வேஷம் தரித்துச் சண்டையிட்டு உயிர் துறந்தாள். நானு ஸாஹிபின் தளகர்த்தனை டாண்டிய டோபி என்பவனும் மரணதண்டனையை யடைந்தான். ஸ்வதந்திரத்தைப் பெற வெண்ணிச் செய்த கலகமும் இவ்வாறுக முடிந்தது.

ஸஹாரன்புரி, முஜபர் நகரம் முதலான விடங்களிற் சிப்பாய்களையன்றிச் சாதாரண ஜனங்களும் கலகஞ் செய்து நாட்டிற்குப் பல தீங்குகளை இழைத்தார்கள்.

இவ்வாறுக, மகம்மதியர்களும், ஹிந்துக்களும், அரசர்களும், ஜமீன்தார்களும், குடிகளும், சிப்பாய்களும் ஒருங்கே கலகஞ் செய்து ஆங்கிலேய ராஜ்யத்தைத் தொலைத்து விடவேண்டுமென முன் வந்தார்கள். ஆனுல் அவர்களுள் ஒற்றுமையும், கட்டுப்பாடும், ஆலோசனையு மில்லாமலும், பொறுமையினுல் அவர்கள் தங்களுக்குள்ளேயே மனம் வேறுபட்டும் இருந்ததனுல், அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. இந்தக் கலகத்தில் கூர்க்கரும், ஸீக்கரும் ஆங்கிலேயருக்குத் துணையாக விருந்தார்கள். நிஜாம் ராஜ்யத்திலும், பம்பாயிலும், மதராஸிலும் கலகம் பரவிவரவில்லை. சென்னையிலுள்ள மெமோரியல் ஹால் கலகம் சென்னைக்குப் பரவிவரவில்லை என்பதைத் தான் தெரிவிக்கிறது. கலகங்கள் நடந்த விடங்களில் இருதிறத்தாரும் கோபாவேசங்கொண்டு

பழிக்குப்பழி

இழைத்த கொடுமைகளுக்கு எல்லை யில்லை. அவற்றை எடுத்துறைக்கவும் நாவெழாது.

நாம் தாம்ஸனுடைய 'பதக்கத்தின் மறுபுறம்' என்னும் புத்தகத்தில் அவற்றைப் பற்றின விவரங்களைப் பரக்கக் காணலாம்.

அரசாட்சி மாறினது

கலகம் முடிந்ததும் கி. பி. 1858-ல், ஆங்கிலேய அரசியான விக்டோரியா மஹாராணியார் இந்திய ராஜ்ய பாரத்தைக் கம்பெனியாரிட மிருந்து பிடுங்கித் தாமே ஏற்றுக் கொண்டு விட்டார். அதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னமேயே ஆங்கிலேய பார்லிமெண்ட் சபையார் இந்தியாவின் அரசாட்சி சம்பந்தமாக ஒரு புதிய சட்டத்தைச் செய்தார்கள். அதனால், இந்திய வியவகாரங்கள் முழுவதையும் இந்திய காரியதரிசி 15 பெயர்கள் அடங்கிய ஒரு சபையின் உதவியைக் கொண்டு கவனித்து வர வேண்டுமென்றும், இனி அரசரே மாகாண கவர்னர்களை நியமிக்க வேண்டு மென்றும், கம்பெனியாரின் கடனை இந்திய வருமானத்திலிருந்தே தீர்க்க வேண்டு மென்றும், இந்தியாவின் பாதுகாப்பிற்கன்றி இந்நாட்டின் எல்லைக்கப்பால் நடைபெறும் எந்தச் சண்டையின் செலவையும் இந்தியாவின் பணத்திலிருந்து செய்யக் கூடா தென்றும், இந்திய கப்பற்படையை எடுத்துவிட வேண்டு மென்றும் தீர்மானிக்கப்பட்டன.

சாஸனம்

கி. பி. 1858-ம் வருஷம் நவம்பர் மாதம் முதல் தேதி, விக்டோரியா மஹாராணியவர்கள் இந்திய அரசாட்சியைக் கைக்கொண்ட பொழுது ஒரு மஹா சாஸனம் அளித்திருக்கிறார். அது வருமாறு:—

“இங்கிலாந்து, ஸ்காத்லாந்து, அயர்லாந்து, வேல்ஸ் ஆகிய நாடுகளுக்கும், ஆசியா, ஆபிரிக்கா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா முதலிய கண்டங்களிலுள்ள ஆங்கிலேய நாடுகளுக்கும் அரசியான விக்டோரியா மஹாராணியாகிய நாம், பல சிறந்த காரணங்களை முன்னிட்டு நமது பார்லி

மென்ட் சபையாரின் ஆமோதனைப்படி, இதுவரையில் நம்பொருட்டுக் கீழ் இந்தியக் கம்பெனியாரால் பரிபாலிக்கப்பட்டு வந்த நமது இந்திய ராஜ்யத்தை இனி நாமே நேரில் ஆட்சி செய்யத் தீர்மானித்திருப்பதனால், நாம் இந்திய அரசாட்சியைக் கைக்கொண்டு விட்டோம் என்னும் விஷயத்தை இதனால் பிரசுரஞ் செய்கிறோம்."

"இந்தியக் குடிகள் உண்மையான உள்ளன்பும், நன்றியறிவும் பொருந்தி நமக்கும், நமக்குப்பின் பட்டத்துக்கு வரும் நமது சந்ததியாருக்கும், அப்போதைக் கப்போது நமது இந்திய நாட்டின் பரிபாலனத்திற்காக நாம் நியமித்தனுப்பும் அதிகாரிகளுக்கும் கீழ்ப்படிந்து நடந்தொழுக வேண்டுமென்று நாம் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்."

"கீழிந்தியக் கம்பெனியாரால் நானுவிதமான ஸிவில் மிலிடரி உத்தியோகங்களில் நியமிக்கப்பட்டு, இப்பொழுது வேலைபார்த்து வருகின்ற பற்பல உத்தியோகஸ்தர்களையும், நமது அபீஷ்டத்திற்குட்பட்டும், இனி ஏற்படும் சட்ட திட்டங்களுக் குட்பட்டும் அந்தஅந்த வேலைகளிலேயே காயப்படுத்துகிறோம்."

"கம்பெனியார் சுதேச மன்னர்களுக்கு அளித்திருக்கும் வாக்குக்களையும், உடன்படிக்கைகளையும் நாம் ஒப்புக்கொண்டு, அவற்றின்படியே கொஞ்சமும் பிறழாமல் நாமும் நடந்து வருவோம். அந்த மன்னர்களும் அவ்வாறே பழைய ஏற்பாடுகளை யொட்டியும், உடன்படிக்கைகளைக் கவனித்தும் எம்மிடத்தும் நடந்து கொள்வார்களென்றும் நாம் நம்புகிறோம்."

"இப்பொழுது நமக்குள்ள ராஜ்யத்தின் விஸ்தீரணத்தை இன்னமும் பெருக்க வேண்டுமென்னும் விருப்பம் நமக்கில்லை. பிறர் நமது நாட்டில் துராகிருதமாய்ப் பிரவேசிக்கவாவது, நமது அதிகாரத்தை மீறிநடக்கவாவது

நாம் இடந்தராததுபோல், சுதேச மன்னர்களின் ராஜ்யங்களைக் கவர்ந்து கொள்ளவும் நாம் உடன்படோம்.”

“நமது சுதந்திரங்களையும், பெருமையையும், கௌரவத்தையும் நாம் பாராட்டி வருவதை யொத்துச் சுதேச மன்னவர்களின் சுதந்திரங்களையும், பெருமையையும், கௌரவத்தையும் நாம் அபிமானித்துக் கொண்டாடுவோம். அவர்களும், எமது பிரஜைகள் போலவே, சமாதானத்தினாலும், நேர்மையான செங்கோலினாலும் உண்டாகும் க்ஷேமத்தையும், அபிவிருத்தியையும் அடைந்து வர வேண்டுமென்பது எமது விருப்பம்.”

“நமது மற்றைக் குடிகளுக்கு நாம் எவ்வாறு நடக்கக் கடமைப்பட்டிருக்கிறோமோ, அவ்வாறே நாம் நமது இந்தியப் பிரஜைகளிடத்தும் நடந்து கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். கடவுளது கிருபையை முன்னிட்டு, நாம் அவர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளை உண்மையாகவும், ஒழுங்காகவும், மனப்பூர்வமாகவும் நிறைவேற்றி வருவோம்.”

“நாம் கிறிஸ்தவ மதத்தில் ஈடுபட்டு, அதனுடைய கொள்கைகளின் அநுஷ்டானத்தினால் கிடைப்பனவாகிய நன்மைகளைப் பெற்று வந்தாலும், நமது மதக் கொள்கைகளை நமது பிரஜைகளும் கொண்டொழுகும்படி செய்ய வேண்டு மென்னும் ஆவல் நமக்கில்லை. அன்றியும், மதாப்பியாஸம் காரணமாக நமது குடிகளுக்கு அநுகூலமாவது பிரதிகூலமாவது உண்டாகாதபடி எல்லோரும் சட்டமுன்னிலையில் சமமாகக் கருதப்பட்டு வருவதோடு, நமது அதிகாரத்திற்குட்பட்ட உத்தியோகஸ்தர்கள் எவ்விதத்தானும் நமது பிரஜைகளின் மதக் கொள்கைகளிலாவது, அநுஷ்டானங்களிலாவது தலையிட்டுக் கொள்ளக்கூடாது என்பது எமது ஆஜ்ஞை.”

"ஜாதிமத வேற்றுமைகளைக் கருதாமல், கல்வி, யோக்கியதை, நடுவுநிலைமை முதலியவற்றில் தேர்ச்சியுள்ளவர்கள் எவ்விதமான பக்ஷபாதமுமில்லாமல், அவரவர்களுடைய யோக்கியதை முதலிய குணங்களுக்குத் தக்கபடி நமது துரைத்தன உத்தியோகங்களில் நியமிக்கப்பட்டு வரவேண்டும் என்பது நமது விருப்பம்."

"தமது முன்னோர்களிடமிருந்து தமக்குக் கிடைத்துத் தாங்கள் பாரம்பரியமாய் அநுபவித்து வரும் பூஸ்திதியை நமது இந்தியப் பிரஜைகள் எவ்வளவு பரிவுடன் பார்த்து வருகிறார்களென்பது எமக்குத் தெரியுமாதலால், யாம் எமது துரைத்தனத்திற்கு நியாயமாய்க் கிடைக்கவேண்டிய வரியை வசூலித்துக்கொண்டு, அவர்களுடைய சுதந்திரத்தைக் காப்பாற்றிவர விரும்புகிறோம். தொன்றுதொட்டு இருப்பனவாகிய அவர்களுடைய உரிமைகளையும் பழக்க வழக்கங்களையும் ஒட்டியே சட்டங்கள் செய்யப்பட்டு வரவேண்டுமென்பதும் எமது அபீஷ்டம்."

....

"(கடவுளது கிருபையினால் நாட்டில் திரும்பவும் அமைதி உண்டானபிறகு) இந்துதேசத்திய கைத்தொழில்களையும், பொது நன்மைக்கான பல நற்காரியங்களையும் அபிவிருத்தி செய்வதோடு, குடிகளின் நன்மைகளை நாடியே ராஜ்யத்தைப் பரிபாலனஞ் செய்யவேண்டுமென்பது எமது ஆவல். அவர்களுடைய நன்மையே நமது பலம்; அவர்களுடைய திருப்தியே நமது ரக்ஷணை; அவர்களுடைய நன்றியறிதலே நமக்குச் சிறந்த வெகுமதி. எல்லாம் வல்ல கருணையங் கடலாகிய கடவுள் நமது பிரஜைகளுக்கு நன்மை உண்டாகுமாறு நாம் நடக்க உத்தேசித்தபடி நடந்து வரும் வண்ணம் மங்களா சாஸனம் செய்வாராக!"

மஹாராணியார் அளித்துள்ள இந்தச் சாஸன பத்திரத்தில் நமது சுதந்திரங்கள் காணப்பட்டுள்ளதனால், நாம் இதைக் கொண்டாடுவதுடன், இதில் செய்யப்பட்டுள்ள வாக்குத் தானத்தை யொட்டியும், பிந்திய சக்ரவர்த்திகள் இதைக் கருணையுடன் உறுதிப்படுத்தினதற் கிணங்கவும், நமது சக்ரவர்த்திகள் நடந்தொழுக வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம்.

XII. இராஜப் பிரதிநிதிகளின் பரிபாலனம்

சில முக்கிய விஷயங்கள்

வைஸிராய்களின் ஆட்சியில் நாம் கவனிக்க வேண்டிய விஷயங்களில் நாட்டின் அமைதி, போக்கு வரவுக்கான சாதனங்கள், மந்திராலோசனைச் சட்ட சபைகளின் நிர்வாஹங்கள், பரிபாலன சம்பந்தமாகவும் பொதுஜன நன்மைக்காகவும் செய்யப்பட்ட திருத்தங்கள், பஞ்சம் கொள்ளை முதலிய பிணிகளைப் போக்க வந்த ஏற்பாடுகள், கல்வியின் ஏற்றம், நிலவரித் தீர்மானங்கள், வியாபாரப் பெருக்கம், கைத்தொழில்களின் அபிவிருத்தி, எல்லைப் பாதுகாப்பைப் பற்றின உபாயங்கள், ராணுவத் திருத்தங்கள் ஆகிய இவை தான் முக்கியமானவைகளாகும்.

புதிய ஏற்பாட்டின்படி முதன்முதல் வைஸிராயாக நியமிக்கப்பட்ட லார்ட் கானிங், தயையுடன் நடந்து, கலகத்தினாலுண்டான மனக்கொதிப்பை யடக்கி அமைதியை யுண்டுபண்ணினார். அவர் இருப்புப் பாதைகளையும், கற்கள் போட்டு உறுதியாக்கிய பாதைகளையும் போடு

வித்தார்; வாய்க்கால்களை வெட்டுவித்தார். அவர் காலத்தில் கல்கத்தா, மதராஸ், பம்பாய் ஆகிய மூன்று நகரங்களி லும் மூன்று உயர்ந்த நியாயஸ்தலங்களும், மூன்று சர்வ கலாசாலைகளும் ஏற்படுத்தப் பட்டன. சட்டசபைகளில் உத்தியோகஸ்தர்களல்லாத மெம்பர்கள் சேர்த்துக்கொள் ளப்பட்டார்கள். மந்திராலோசனைச் சபையின் மெம்பர்கள் செய்ய வேண்டிய வேலைகள் வரையறுக்கப் பட்டன. இந்தியன் பீனல் கோட் என்னும் குற்றத் தண்டனை விதிச் சட்டம் அநுஷ்டிக்கப் பட்டது. பன்னிரண்டு வருஷங்களுக்குக் குறையாமல் தொடர்ந்து குடிகள் அநு பவித்து வந்த நிலங்களில் அவர்களுக்குக் குடிவார பாத்தி யதை யுண்டு என்னும் சட்டம் உண்டாக்கப் பட்டது. வைஸிராயின் மந்திராலோசனைச் சபைக்கு ஒரு பொக் கிஷ மெம்பர் நியமிக்கப் பட்டார். வருமான வரியும், இன்னும் சில புதுவரிகளும் இப்பொழுது விதிக்கப்பட் டன. முதன் முதல் இப்பொழுது காகித நாணயமும் உபயோகத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இவ்வாறாகக் கானிங்கின் ஆளுகையில் நாட்டிற்குப் பல நன்மைகள் விளைந்தன.

சீர்திருத்தங்கள்

கானிங்குக்குப் பின்பு வைஸிராயாக வந்த லார்ட் எல்ஜின் சில மாதங்களுக் கெல்லாம் இறந்து விடவும், ஸர் ஜான் லாரன்ஸ் வைஸிராயாக நியமிக்கப் பட்டு வந்தார். இவர் ஏற்கெனவே பஞ்சாபில் கமிஷனராக இருந்ததனால் சிறந்த இந்திய அநுபவ முடையவர் ஆவர். இவருடைய சபையில் ஸர் ஹென்ரி மெய்ன் சட்ட மந்திரியாகவும், ஸர் சார்ல்ஸ் ட்ரேவெலியன் பொக்கிஷ மந்திரியாகவும், ராபர்ட் நேபியர் ராணுவ மந்திரியாகவும் அமைந்திருந்ததே இவருக்குப் பெரிய அநுகூலமாயிற்று.

அமைப்பு

இவர் லாகூரில் ஒரு தர்பார் நடத்தினர். அதற்குச் சுமார் 500 சிற்றரசர்களும், பிரபுக்களும் வந்திருந்தார்கள். இவர் அப்பொழுது அந்தச் சபையில் அவர்களுடைய தாய் மொழியில் பேசினர்.

தர்பார்

கி. பி. 1866-ல் ஒரிஸ்ஸாவில் ஒரு கொடிய பஞ்சம் உண்டாயிற்று. இவர் குடிகளுக்கு மிகுந்த உதவி புரிந்தும் அதுவும் போதாமல் ஜனங்கள் மடிந்து பட்டார்கள். இவர் கானிங்கைப் போன்று, அயோத்தியிலும், பஞ்சாபிலும் குடிகளுக்கு நிலத்தில் பாத்தியதையை உண்டு பண்ணினர். இந்தியா முழுமைக்கும் நிலவரமான நிலவரியை ஏற்படுத்த வேண்டுமென்றும் வாதித்தார். இவர் சேனையின் செலவைமட்டுப் படுத்தினர். இவர் இந்தியக் குடிகள் செலுத்திவந்த வரிகளை இன்னமும் அதிகப்படுத்த முடியாதென்று கண்டு வியாபாரிகளுக்கு லைசென்ஸ் வரியை விதித்தார். அப்பொழுது ஆங்கிலேய வர்த்தகர்கள் கூக்குரலிடவும் இவர் ஸெகிரிடரி அவ் ஸ்டேட் என்னும் மேலதிகாரிக்கு "நான் உத்தியோகஸ்தர்களல்லாத மற்றைய ஐரோப்பியர்களுக்கு எவ்விதமான வரியையும் விதிப்பதென்பது முடியாத காரியமென எண்ணுகிறேன். அவர்கள் எவ்வித வரிக்கும் சம்மதிக்கவில்லை. அவர்கள் வரிச்சுமை முழுவதையும் இந்தியர்களே சுமக்க வேண்டும் என விரும்புகிறார்கள்," என்று எழுதியிருக்கிறார்.

பஞ்சம்

திருத்தங்கள்

அதை யன்றியும், இவர் இந்தியா கௌன்ஸில் மெம்பரான பெர்ரி என்பவருக்கு, "இந்திய கவர்ன்மென்டார் நியாயவழியில் நடப்பதென்றால் அதற்குப் பலகஷ்டங்கள் ஏற்படுகின்றன. இந்தியர்களுக்கு அநுகூலமான யாதொன்றையாவது செய்யும் பொழுதும், செய்ய எத்தனிக்கும்

பொழுதும், இங்குள்ள ஆங்கிலேயர் ஓலமிடும் சத்தம் இங்கிலாந்துக்கு எட்டி எதிரொலியிடுகின்றது.

கடிதம் — நான் சில சமயங்களில் என்ன செய்யலாம் என்பதை அறியாமல் திகைக்கின்றேன். நியாயம், சாந்தம் முதலிய நற்குணங்களைப் பற்றிப் பேசுகின்றவர்கள் அவற்றை அநுஷ்டிப்பதினால் தங்களுக்கு எவ்விதமான அசௌகரியங்களாவது உண்டாகுமானால், தங்கள் குணங்களில் முழுவதும் மாறி விடுகிறார்கள்," என்று எழுதியிருக்கிறார். இவற்றினின்றும் சாதாரண ஆங்கிலேயக் குடிகளும், வியாபாரிகளும் தமதுபயனையே பெரிதும் நாடி நடந்து வந்தார்கள் என வெளியாகின்றதல்லவா?

லாரென்ஸ் சமாதானத்தையே சிறந்த கொள்கையாகக் கொண்டொழுகினதனால் தோஸ்த் மகம்மதுவின் பிள்ளைகள் ஆப்கானிய ஸிம்மாஸனத்தைக் குறித்துச் சண்டையிட்டுக்கொண்டு, அவர்களில் இளையவனை ஷெர் ஆலி வைஸிராயைத் துணைவரும்படி கேட்டபொழுது, அவர் தாம் அதில் தலையிட்டுக் கொள்வதில்லையென்று தீர்மானமாய்ச் சொல்லி விட்டார்.

கொள்கை

இந்தியாவுக்கு இயற்கை யெல்லையாக அமைந்துள்ள கடத்தற்கரிய ஸிந்து நதியையும், வடமேற்கு மலைத்தொடர்களையும் தாண்டிச்சென்று, ஆப்கானிய வியவகாரங்களில் தலையிட்டுக் கொள்வது மதியற்ற காரியம் என்பதையும் அதனால் ஆப்கானியருடைய பகையும், எண்ணிறந்த துன்பங்களும் உண்டாகும் என்பதையும் இவர் மறுபடியும் மறுபடியும் எடுத்துக் காட்டியுள்ளார். எல்லையைக் கடந்து செல்வதனால் உண்டாகும் செலவை உள் நாட்டிலே செய்து குடிகளின்

எல்லையைப் பற்றின அபிப்பிராயம்.

அன்பையும், நன்றியையும் சம்பாதித்தால் இவற்றைக் கொண்டு அந்நியர்களை எளிதில் துரத்திவிடலாம் என்பது இவருடைய கொள்கை. இவர் இந்தியருடைய பணத்தை அவர்களுக்குச் சம்பந்தமில்லாத விஷயங்களில் செலவிடக் கூடாதென்று அபிஸீனியாப் படையெழுச்சியின் பொருட்டுச் செலவான பொருளை இந்தியப் பொக்கிஷத்திலிருந்து கொடுப்பது அநியாயம் என்று வாதித்தார். இவரைப் போன்று நியாயமாகவும், நடுவு நிலைமையாகவும் நடந்து வந்த பல ஆங்கிலேயர்களும் இருந்திருக்கிறார்கள்.

லாரென்ஸுக்குப் பிறகு வைஸிராயாக வந்த லார்ட் மேயோ அவருடைய கொள்கைகளையே கொண்டொழுகினார்.

எல்லையைக் குறித்து

இவர் இந்தியாவின் எல்லையைப் பாதுகாப்பதற்காகக் கிலட், ஆப்கானிஸ்தானம், யார்கண்ட், நேபாளம், பர்மா ஆகிய தேசங்களின் அரசர்களைப் பலாட்டியர்களாக்கியும், அவர்களுடன் சிநேகமாக விருந்தும், வேண்டும் பொழுது அவர்களுக்கு உதவிபுரிந்தும் வருவதுதான் சிறந்த ஏற்பாடு என்று எண்ணினார். இவர் துரைத்தனச் செலவிற்குப் பணம் போதாததனால் வருமான வரியை அதிகப்படுத்தியும், லாபகரமான பொதுவேலைகளைக் கடன் வாங்கிச் செய்யுமாறு ஏற்பாடு செய்தும் மாகாண கவர்ன்மென்டார் தமது வரிகளை உயர்த்தும்படித் தூண்டியும் நடந்தொழுகினார்.

திருத்தங்கள்

இவர் இருப்புப் பாதைகளையும், நீர்ப்பாசனத்திற்கான சாதனங்களையும் விருத்தி பண்ணினார். இவர் வியவசாயத்திற்கென ஒரு தனி இலாகாவையும், ராஜகுமாரர்களுக்கென்று அஜ்மீரில் ஒரு கல்லூரியையும் வங்காளத்தில் ஆரம்பக் கல்விக்கென அநேக பள்ளிக்கூடங்களையும் உண்டு பண்ணினார். இவர் அந்தமான் தீவில் ஒரு கைதியினால் கொலையுண்டு போனார்.

பஞ்சம்

கெய்க்வார் வியவகாரம்

மேயோவுக்குப் பின் வைஸிராயாக வந்த லார்ட் நார்த்ப்ரூக் என்பவரும் சமாதானத்தையே கொண்டொழுகினார். இவர் காலத்தில் வங்காளத்திலும் பீஹாரிலும் கொடிய பஞ்சம் உண்டானபொழுது இவர் குடிகளைக் காப்பதற்கு முயன்று உழைத்து அதன் கொடுமையைப் போக்கினார். அப்பொழுது பரோடா கெய்க்வார் தமது ராஜ்யத்தைச் செம்மையாகப் பரிபாலிக்கவில்லை என்று, இவர் அவரை நீக்கி ராஜவம்சத்தைச் சேர்ந்த ஒரு சிறுவனை கெய்க்வாராகச் செய்தார். அவனுக்கு வயசு வரும்வரையில் அந்நாட்டை ராஜா ஸர் டி. மாதவராவ் வெகு விமரிசையாக ஆட்சிசெய்து வந்தார். மஹாராணியின் மூத்த குமாரரான எட்வர்ட் இளவரசர் அப்பொழுது இந்நாட்டைச் சுற்றிப் பார்வையிட்டுச் சென்றார்.

அபிப்பிராய பேதம்

ஆப்கானிய வியவகாரங்களில் தலையிட்டுக் கொள்வதிலேயே கண்ணுங் கருத்துமாக விருந்த லார்ட் ஸாலிஸ்பரி என்னும் இந்தியக் காரியதரிசி ஹீரட்டிலும், காண்டஹாரிலும், காபூலிலும் ஆங்கிலேய ஏஜெண்டுகளை நியமிக்கும்படி சொன்ன விஷயத்திலும், மான்செஸ்டரிலிருந்து இறக்குமதியாகும் பருத்தியாடைகளுக்குத் தீர்வை போடும் விஷயத்திலும் இவர் மேலதிகாரிகளின் அபிப்பிராயப்படி நடப்பதில் மனமில்லாதவராய்த் தமது வேலையை நீத்து இங்கிலாந்துக்குச் சென்று விட்டார். இவருடன் 20 வருஷகாலமாகக் கொண்டொழுகப்பட்ட சமாதான ஏற்பாடும் தொலைந்து போயிற்று. லார்ட் லிட்டன் என்னும் புதிய வைஸிராய் ஆப்கானிய வியவகாரங்களில் தலையிட்டுக் கொள்வதற்கென்றே நியமிக்கப்பட்டு வந்தார்.

ராணியார் சக்ரவர்த்தினி யானது

1877-ம் வருஷம், ஜனவரி மாதம் 1உ யன்று லிட்டன் விக்டோரியா மஹாராணி யார் இந்தியச் சக்ரவர்த்தினி என்னும் பட்டத்தை வகித்துக்கொண்டார் என்று விளம்பரஞ் செய்தார். க்ளாட்ஸ்டன் என்னும் பெரியோர் பார்லிமெண்ட் சபையில் ராணியார் சக்ரவர்த்தினி என்னும் பட்டத்தை வகிப்பதனால் இந்திய சிற்றரசர்களின் நிலைமையிலேனும், அவர்களுக்கும் ஆங்கிலேய துரைத்தனத்தாருக்கும் ஏற்பட்டிருக்கும் உடன்படிக்கை களிலுள்ள நிபந்தனைகளிலேனும், ராணியார் அதிகாரத்திலேனும் எவையேனும் மாறுதல்கள் உண்டாகுமோ எனக் கேட்டபொழுது, முதன் மந்திரியான டிஸ்ராலி என்பவர், "பட்டமாறுதலினால், இந்திய அரசர்களுடைய உரிமைகளுக்காவது, பெருமைக்காவது, கௌரவத்திற்காவது ஒருவிதமான பாதகமும் உண்டாகாது," என்று பதிலுரைத்தார்.

பஞ்சம்

லிட்டன் காலத்தில் சற்றேறக்குறைய நாடுமுழுவதும் ஒரு கொடிய பஞ்சம் உண்டாய், அதில் லக்ஷக்கணக்கான ஜனங்கள் மாண்டு போனார்கள். அதைத் தான் தாது வருஷத்துக் கருப்பு என்று நாம் இப்பொழுதும் சொல்லி வருகிறோம். அவ்வாறிருந்தும் லிட்டன் தர்பாரின் பொருட்டு ஏராளமான பணத்தைச் செலவிட்டு, இவருக்கு முன்னிருந்த வைஸிராய்களின் சரியான ஒழுக்க முறையை விட்டுச் சமாதானத்தை நீத்துச் சண்டைக்குத் தயாரானார். அமீர் விஷயத்தில் இவர் நடந்து கொண்டது சரியல்லவென்பதை இவருடைய மந்திராலோசனைச் சபையார்களே எடுத்துச் சொல்லியும், இவர் அவர்களுடைய நற்போதனையைக் கேட்கவில்லை.

இவர் பெலுசிஸ்தானத்தில் க்வெட்டா என்னுமிடத்தில் ஆங்கிலேய ராணுவத்தை அமைக்கும்படிக்கும், காஷ்மீரத்தில் ஓர் ஆங்கிலேய ஏஜென்டை நியமிக்கும்படிக்கும் ஏற்பாடு செய்துவிட்டதனால் காபூலும் தமது அபிப்பிராயத்திற்கு இணங்கி வரவேண்டுமென்று எண்ணினார்.

ஆப்கானிய வியவகாரம்

ருஷியர்கள் மத்திய ஆசியாவிற் புகுந்து சில நாடுகளைக் கைப்பற்றிக் கொண்டதனாலும், ஆங்கிலேயர்கள் ஆசியாவில் தம்மையன்றி வேறு எவரும் முதன்மை பெற்றிருக்கக்கூடாதென்று எண்ணினதனாலும், வைஸிராய் ஆப்கானிய வியவகாரங்களில் அதிக ஊக்கம் கொண்டிருந்தார். ஆங்கிலேய ராயபாரியை ஏற்றுக்கொள்வதில் மனமில்லாதிருந்த அமீருடைய நாட்டில் ருஷிய தூதர்கள் தாமாகவே வந்துவிட்டார்கள். அமீர் அவர்களைத்தாம் ஏற்றுக்கொள்ள முடியாது என்று அவர்களுக்குத் தெரிவித்தும், அவர்கள் அதைக் கவனியாதவர்களாய்க் காபூலை வந்தடைந்தார்கள். அதனால், விதியின்றி அமீர் அவர்களை ஏற்றுக்கொள்ள நேர்ந்தது. அப்பொழுது அவர் அவர்களுடன் ஓர் உடன்படிக்கை மசோதாவும் எழுதிக்கொள்ள வேண்டியதாயிற்று. ஆயினும், இதன் மத்தியில், ஐரோப்பாவில் பர்லின் நகரில் உண்டான சமாதான உடன்படிக்கைக் கிணங்க ருஷியர்கள் காபூலை விட்டகன்றார்கள். அவர்கள் இந்தியாவின் மீது படையெடுத்து வருவார்களென்னும் பயமும் ஒழிந்தது.

யுத்த மூலம்

அப்படியிருந்தும், லிட்டன் அமீர் தமது நாட்டில் ஆங்கிலேயரை வரவேற்கவேண்டுமென்று கட்டாயப்படுத்தினார். அமீர் அதற்குடன்படாததனால் இருதிறத்தாருக்கும் சண்டையுண்டாயிற்று. அதுவே **இரண்டாவது ஆப்கானிய யுத்தம்.** யுத்தம் ஆரம்பமாவதற்கு முன்னே

லார்ட் லாரென்ஸ் ‘இது வீண்சண்டை; இதனால் தீமை விளையும்; இதை ஒழிக்க வேண்டும்’ என்று எவ்வளவோ நற்புத்தி சொல்லியும், அவருடைய போதனை பயன் படாமற் போயிற்று.

தன்னை எதிர்த்துப் பெரும்படை வருவதைக் கேட்டறிந்த ஷீர் ஆலி காபூலை விட்டோடவும், ஆங்கிலேயர்கள் அவர் மைந்தரான யாகுப்கானை அமீராக்கி அவருடன் உடன்படிக்கை செய்து கொண்டார்கள்.

முடிவு

அவர் ஆங்கிலேயர் விரும்பியபடியே காபூலில் ஓர் ஆங்கிலேயப் பிரதிநிதியை ஏற்றுக் கொள்ளவும் இரண்டாவது ஆப்கானிய யுத்தம் முடிந்தது. ஆனால், இரண்டு மாதங்களாவதற்கு முன்னமேயே, ஆப்கானியர்கள் சமாதானத்தை நீத்துக் காபூலிலிருந்த பிரதிநிதியைக் கொன்றுவிட்டார்கள். யாகுப்கான் தமக்கு ஸிம்மாஸனம் வேண்டாமென்று

மறுபடியும் யுத்தம்

சொல்லவும், ஆங்கிலேய துரைத்தனத்தார் அவரை இந்தியாவிற் கனுப்பிவிட்டு யுத்தத்திற்குத் தயாரானார்கள். இதற்குள் லிட்டன் வேலையை நீத்துத் தம்மூர்போக ஏற்பட்டது. அவர் தேசபாஷையில் பிரசுரிக்கப்பட்டு வந்த பத்திரிகைகளின் ஸ்வதந்திரத்தைப் போக்கும் ஒரு சட்டத்தையும், உத்தரவில்லாமல் இந்தியர்கள் துப்பாக்கி முதலிய ஆயுதங்களை வைத்துக் கொள்ளக் கூடாது என்னும் சட்டத்தையும் உண்டு பண்ணினார். நாட்டில் பஞ்சத்தைப் போக்கியும், குடிகளுக்கு வறுமையை நீக்கியும், நற்காரியங்களைச் செய்யாது, லிட்டன் 20 கோடி ரூபாயை வீணான சண்டையில் அழித்துவிட்டு இந்நாட்டை விட்டகன்றார்.

அவருக்குப் பின் வைஸிராயாக நியமிக்கப்பட்டு வந்த **லார்ட் ரிப்பன்** ராபர்ட் என்பவர் வசத்தில் ஒரு பெரிய சேனையை அனுப்பி ஆப்கானியரை வென்று காபூலையும்,

காண்டஹாரையும் பிடித்துக் கொண்டார்.

யுத்தம் முடிவானது

அந்தச் சேனை அப்துர் ரஹிமான் என்பவரை அமீராக ஸிம்மாஸனத்தில் அமர்த்திக் காபூலையும், காண்டஹாரையும் விட்டு விட்டு இந்தியாவுக்குத் திரும்பிற்று. அப்துர் ரஹிமான் ஆங்கிலேயருடன் நட்புப்பாராட்டி வருவதாய் வாக்களித்தார். ஆங்கிலேயர் வருஷவாரியில் அவருக்கு 12 லக்ஷம் ரூபாய் கொடுத்து வந்தார்கள். சண்டை யொழிந்து நாட்டில் அமைதி யுண்டானதும், ரிப்பன் சில சிறந்த சீர்திருத்தங்களைச் செய்தார். கி. பி. 1881-ல் இவர் இந்நாட்டின் ஜனத்தொகையைக் கண்டு பிடிக்கும்படி ஏற்பாடுகள் செய்தார். ஜனங்கள் பொது நன்மைக்கான பல காரியங்களைத் தாமே கவனித்துத் துரைத்தன முறைகளில் தேர்ச்சி பெறவேண்டுமென்று இவர் 'லோகல் ஸெல்ப் கவர்ன்மென்ட் ஆக்ட்' என்னும் ஸ்தல சுய ஆட்சிச்

சீர் திருத்தங்கள்

சட்டத்தை ஏற்படுத்தினார். அதனால், பெரிய நகரங்களிலும், பட்டணங்களிலும் முனிஸிபல் கௌன்ஸில் என்னும் சபைகளும், ஜில்லாக்களிலும், தாலூக்காக்களிலும், ஜில்லா போர்ட், தாலூக்கா போர்ட் என்னும் சபைகளும் ஏற்பட்டுப் பல நன்மைகளைச் செய்து வந்தன. இவர் படிப்பின் அபிவிருத்தியின் பொருட்டும் ஏற்பாடுகள் செய்தார். இவர் லிட்டன் ஸ்வபாஷா வர்த்தமானப் பத்திரிகைகளுக்கு ஏற்படுத்திய நிபந்தனைகளை ரத்து செய்து விட்டார். இவர் மைசூர் ராஜ்யத்தைச் சாமராஜ உடையாரிடம் ஒப்புவித்து விட்டார். இவருடைய மந்திராலோசனைச் சபையின் சட்ட மந்திரியான

இல்பர்ட் மசோதா

இல்பர்ட் இந்திய மாஜிஸ்ட்ரேட்கள் ஆங்கிலேய குற்றவாளிகளையும் விசாரணை செய்து தண்டிக்கலாம் என்று மசோதா

கொண்டு வந்தபொழுது இந்நாட்டிலிருந்த ஆங்கிலேயர்கள் அதற்கு விரோதமாய்க் கூக்குரலிட்டதனால் அது சட்டமாக வில்லை. ஆனால், இந்திய மாஜிஸ்ட்ரேட்கள் ஆங்கிலேய ஜூரியைக்கொண்டு அவர்களை விசாரணை செய்யலாம் என்று ஏற்பாடாயிற்று. இவர் செய்த பல நன்மைகளைக் கண்டு நன்றிபாராட்டிய இந்தியர்கள் 'லார்ட் ரிப்பன் எங்கள்அப்பன்' என்று சொல்லி இவரைக் கொண்டாடினார்கள்.

ஞாபகச் சின்னங்கள்

ரிப்பன் கட்டிடம் என்னும் சென்னைக் கார்ப்பரேஷன் ஆபீசும், மவுண்ட் ரோட்டிலுள்ள இவரது சிலையும் ஜனங்களுக்கு இவரிடமிருக்கும் அன்பின் மிகுதியை விளக்குகின்றன.

ரிப்பனுக்குப் பிறகு லார்ட் டப்ரின் வைஸிராயானார். அப்பொழுது ருஷியர்கள் ஆப்கானிய எல்லையிற் புகுந்து ஹீரட்டைக்கூடப் பிடித்துக் கொண்டு விடுவார்களென்று தோன்றவும் வைஸ்ராய் ஆங்கிலேயரும், ருஷியரும் கலந்த ஒரு மத்தியஸ்த கமிஷனை ஏற்படுத்தி எல்லைத் தகரார்களைப் போக்கியும் அவரவர்களது நாட்டின் எல்லைகளை வரையறுத்து விடும்படியும் செய்வித்தார். அவர் காலத்தில் பர்மாவுடன் மூன்றாவது முறை ஒரு யுத்தம் ஏற்பட்டது. பர்மா தேசத்திலிருந்த நங்கியன் தேக்கங் காட்டில் வேலை செய்து வந்த ஆங்கிலேய வர்த்தகக் கம்பெனியொன்று பர்மா வரசனுக்குச் செலுத்த வேண்டிய சுமார் ஏழு லக்ஷம் ரூபாய் வரிப் பணத்தைக் கொடாமல் ஏமாற்றி வந்ததனால், ஆவா ஹைகோர்ட்டில் மேற்படிக் கம்பெனி

பர்மா யுத்தம் மூண்டது

யார் அந்தப் பாக்கியை உடனே செலுத்தி விடவேண்டுமென்று தீர்மானஞ் செய்யப்பட்டது. அந்தத் தீர்மானத்தை அக் கம்பெனியார் ஒத்துக் கொள்ளவில்லை. டப்ரின் அந்த விஷயத்தைத் திரும்பவும்

தீர விசாரிக்க வேண்டுமென்று பர்மா அரசருக்குச் சொல்லியனுப்பத் தீபா இந்திய கவர்ன்மெண்டார் தமது வியவகாரங்களில் தலையிட்டுக் கொள்ள வேண்டியதில்லை எனப் பதிலுரைக்கவும் வைஸிராய்க்குக் கோபம் மூண்டது. அன்றியும், பர்மாவிலிருந்து வந்த ஆங்கிலேய வியாபாரிகள் பர்மா அரசரைப் பலவாறு நிந்தித்து அவருடைய ராஜ்யத்தை ஆங்கிலேயர்கள் கைப்பற்றிக் கொள்ள வேண்டுமென்று அடிக்கடி கேட்டுக் கொண்டுமிருந்தார்கள். ஆங்கிலேயர்கள் சண்டைசெய்யாமலே தீபாவைச் சிறைப்படுத்தி, உபகாரச் சம்பளம் கொடுத்து அவரை இந்தியாவுக் கனுப்பிவிட்டு வட பர்மாவைத் தங்களுடைய ராஜ்யத்திற் சேர்த்துக் கொண்டுவிட்டார்கள்.

காங்க்ரஸ்

டப்ரின் கி. பி. 1857 முதல் ஆங்கிலேயருடைய வசத்திலிருந்த குவாலியர் கோட்டையைத் திரும்பவும் ஸிந்தியாவுக்கே கொடுத்து விட்டார். கி. பி. 1887-ல் விக்டோரியா மஹாராணியார் பட்டத்துக்கு வந்து ஐம்பது வருஷ மானதைக் குறித்து இந்நாட்டில் எங்கும் சந்தோஷம் கொண்டாடப்பட்டது. டப்ரின் காலத்திற்றான் முதன் முதல் இந்தியன் நாஷனல் காங்க்ரஸ் என்னும் தேசிய மஹாசபை கூடிற்று.

பிரதிநிதித்வம்

லார்ட் லான்ஸ்டௌன் என்னும் வைஸிராய் காலத்தில் சட்ட சபையின் மெம்பர்கள் அதிகமாக்கப்பட்டுத் துரைத்தனத்தாரால் நியமிக்கப்பட்டவர்களை யன்றிக் குடிகளினால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும் அதிற் சேர்ந்து பொதுஜன அபிப்பிராயங்களை எடுத்துரைக்கும் சுதந்திரத்தையும், வரவு செலவு திட்ட ஜாபிதாவை ஆலோசனை செய்யும் உரிமையையும் பெற்றார்கள்.

இவர் மணிப்பூரில் பட்டத்தைக்குறித்து உண்டான சச்சரவையடக்கி ராஜவம்சத்தைச் சேர்ந்த ஒரு சிறுவனை மணிப்பூருக்கு அரசனாக்கினார். இப்பொழுது துரைத்தனத்தார் ஆமீருக்குக் கொடுத்து வந்த

மணிப்பூர்

சகாயப்பணம் 12 லக்ஷத்திலிருந்து 18 லக்ஷமாக்கப்பட்டது. இவர் காலத்தில் ராணுவ சம்பந்தமான சில திருத்தங்களும் செய்யப்பட்டன. அது முதல் சேனாதிபதியே ராணுவ வியவகாரங்களனைத்துக்கும் தலைவரானார். லார்ட் எல்ஜின் காலத்தில் நாட்டின் நாலாபக்கங்களிலும்

ப்ளேக்

உண்டான பஞ்சத்தினாலும், பம்பாயில் புதிதாய் ஏற்பட்ட ப்யூபானிக் ப்ளேக் என்னும் வியாதியினாலும், பயங்கரமான ஒரு பூகம்பத்தினாலும் ஜனங்கள் மடிந்து போனார்கள்.

இந்தியாவின் வடமேற்கு எல்லையிலுள்ள பிஷாவருக்கும் நூறு மைல் தூரத்திலிருக்கும் சித்ராலில் கலகம் உண்டாகவும், ஆங்கிலேயர் அதை வென்று தமதாக்கிக் கொண்டு விட்டார்கள். அதனால் அப்பொழுது எல்லையிற் குடியிருந்த அநேக முரட்டு

சித்ரால்

ஜாதியார்கள் கலகஞ் செய்யவும், ஆங்கிலேயர்கள் படையெடுத்துச் சென்று அவர்களையெல்லாம் வென்றும் நாடுகளைப் பாழாக்கியும் திரும்பினார்கள். இது பயனற்ற சண்டை, இதன் பொருட்டுச் செலவிடப்படும் பணம் வீண் செலவேயாகும் என்று இங்கிலாந்திலேயே கூக்குரல் உண்டாயிற்று.

1897-ம் வருஷம், இந்திய குடிகள் மஹாராணியார்

கோண்டாட்டம்

ஸிம்மாஸன மேறிய அறுபதாவது வருஷத்தைக் கொண்டாடினார்கள்.

எல்ஜின் வர்த்தமானப் பத்திரிகைகளின் ஸ்வாதீனத்தைக் குறைப்பதற்கான சில சட்டங்களை ஏற்படுத்தினார். மாஜிஸ்ட்ரேட்கள் பத்திரிகாசிரியர்களை நன்னடக்கைக்காகக் கட்டுப்படுத்தலாம் என்னும் அதிகாரத்தையும் அவர்கள் ரொக்க ஜாமீன் கொடாவிடின் விசாரணையின்றி அவர்களைத் தண்டிக்கலாம் என்னும் அதிகாரத்தையும் பெற்றார்கள்.

வர்த்தமானப்பத்திரிகைகள்

அப்பொழுது தான் நாடு சகோதரர்கள் விசாரணையின்றிச் சிறையிலடைக்கப்பட்டார்கள். தேசாபிமானிகளில் முதன்மை பெற்று விளங்கியும் பொது நன்மையின் பொருட்டுச் சோர்வின்றி உழைத்தும் வந்த பால கங்காதர திலகர் என்னும் இந்தியாவின் திலகம் போன்ற பெரியோர் ராஜத்ரோகி என்று குற்றஞ் சாட்டப்பட்டுத் தண்டனையை யடைந்ததும் அப்போதுதான்.

தேசாபிமானிகள் தண்டனையடைந்தது

லார்ட் எல்ஜினுக்குப் பிறகு லார்ட் கர்ஸன் வைஸிராயானார். இவர் திபெத் தேசத்தரசர் ருஷியரோடு சிநேகம் செய்துகொள்ள முயல்வதாக எண்ணி ஒரு பெருஞ் சேனையைக் கூட்டித் திபெத்தின் மீது போர் செய்ய அனுப்பினார். ஆனால், சண்டையில்லாமலே சமாதானம் ஏற்பட்டுவிட்டது.

திபெத்

இவர் வடமேற்கு எல்லையில் இருந்த ஜில்லாக்களையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து அவற்றை வடமேற்கு எல்லை மாகாணம் என்று ஒருமாகாணமாக்கி அதை இந்திய துரைத்தனத்தின் அதிகாரத்திற்குட்படுத்தினார். கி. பி. 1901-ல் அப்துர் ரஹிமானின் மைந்தரான ஹபீ

எல்லை மாகாணம்

ஹபீபுல்லா

புல்லா ஆப்கானிய அரசரானபொழுது, வைஸிராய் அவருடனும் சிநேகஞ் செய்து கொண்டு, அவருக்கு அமீர் என்னும் பட்டத்துக்குப் பதிலாக அரசர் என்னும் பட்டத்தை அளிப்பித்து, சஹாயப் பணத்தையும் கொடுத்து வரும்படி ஏற்பாடுகளைச் செய்தார்.

சீர் திருத்தங்கள்

இவர் போலீஸ் இலாகாவில் டிப்டி சூபரின்டென்டெண்ட்ஸ் என்னும் உத்தியோகஸ்தர்களை நியமித்தும், கீழ்த்தர உத்தியோகஸ்தர்களுக்கு அதிகச் சம்பளங்களைக் கொடுத்தும், அவர்கள் தங்கள் வேலைகளைச் செம்மையாய்ச் செய்யும் படிக்குத் திருத்தங்கள் செய்தார். இவர் படிப்பின் சம்பந்தமாகவும் சில திருத்தங்கள் செய்தார். ஆனால், அவைகள் கல்லூரிகள், சர்வ கலாசாலைகளின் சபைகள் ஆகிய இவற்றின் ஸ்வதந்திரங்களைக் குறைத்துத் துரைத்தனத்தாரின் அதிகாரத்தை அதிகப்படுத்துபவைகளாக இருந்ததனால், ஜனங்களுக்கு அவரிடம் வெறுப்புண்டாயிற்று. இவர் சரித்திர வாராய்ச்சிக்கு இன்றியமையாதனவான பழைய கோட்டைகள், ஸ்தூபிகள், கல் வெட்டுகள் முதலியவைகளையும் இன்னும் இவைபோன்ற அநேக ஞாபகச் சின்னங்களையும் மராமத்துகள் செய்து பத்திரமாய்ப் பாதுகாத்துவரும் சிறந்த ஏற்பாடுகளைச் செய்தார்.

இவர் வங்காளத்தை இரண்டு பாகங்களாகப் பிரித்ததனால், வங்காளத்துக் குடிகள் இவர்மீது கோபங்கொண்டு அதனை ரத்து செய்யும்படிக் கூக்குரலிட்டார்கள். இவர் பீரார் மாகாணத்தை நிஜாமிடமிருந்து அறுதியாய்ப் பெற்றுக் கொண்டு அதை மத்திய மாகாணத்திற் சேர்த்துக் கொண்டுவிட்டார். இவர் பஞ்சங்களுக்குக் காரணம் மழை

யின்மை தான், அதிக வரி அல்ல என்று

பீரார்

வாதித்தார். இவர் காலத்தில் லார்ட் ரிப்பன் ஏற்படுத்திய ஸ்தல சுய ஆட்சி க்ஷீணிக்கலாயிற்று. இவர் பொது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் தொகையைக் குறைத்து அவர்களுடைய அபிப்பிராயங்களைச் செல்லவொட்டாமற் செய்துவிட்டார். இவர் காலத்தில் மறுபடியும் ஒரு பஞ்சம் ஏற்பட்டுக் கூர்ஜர நாட்டில் மிகுந்த துன்பத்தை விளைத்தது.

இவர் காலத்தில் விக்டோரியா மஹாராணியார் இறக்கவும், ஏழாம் எட்வர்ட் அரசரானுர். கர்ஸன் அதனைக்

டில்லி தர்பார்

கொண்டாடுவதற்கு டில்லியில் பெரிய ஒரு தர்பாரைக் கூட்டினுர். இவருக்கும் சேனுதிபதியான லார்ட் கிச்சனருக்கும் சேனை பரிபாலன விஷயமாக அபிப்பிராய பேதம் உண்டான பொழுது, இந்திய ஸெகிரிடரி கிச்சனருடைய அபிப்பிராயத்தை ஆமோதித்ததனுல், இவர் தமது வேலையை ராஜீனுமா கொடுத்துவிட்டுத் தம்மூருக்குச் சென்றுவிட்டார்.

கர்ஸன் மிகுந்த சாமர்த்தியமும் புத்திக்கூர்மையும் உள்ளவராக இருந்தும், இந்தியரிடம் நம்பிக்கை யில்லாமல்,

குணம்

எல்லா அதிகாரத்தையும் தமது நாட்டினர்களே செலுத்த வேண்டுமென்று எண்ணி இந்தியர்களை நிராகரித்தும் அவமதித்தும் நடக்கத் தொடங்கினதனுல், ஜனங்கள் இவரை வெறுத்தார்கள். இவர் ஆட்சியில் நாட்டில் அமைதி குறைந்து கொஞ்சங் கொஞ்சமாக ஆத்திர முளை கிளம்பத் தொடங்கிற்று.

லார்ட் மின்டோ காலத்தில் கொண்டு வரப்பட்ட மின்டோ–மார்லி ரிபாரம் என்னும் சீர்திருத்தத்தினுல், இந்தியச் சட்ட சபைகளின் அங்கத்தினர்களுடைய

தொகை அதிகமாக்கப்பட்டதுமன்றி மாகாணச் சபைகளில் துரைத்தன உத்தியோகஸ்தர்களல்லாதாரின் தொகை அதிகமாகச் செய்யப்பட்டது. அவர்களில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும் இருந்தார்கள். அல்லாமலும், மந்திராலோசனைச் சபைகளில் இந்திய மெம்பர்களும் நியமிக்கப்படலானார்கள். அப்பொழுது இந்தியா கௌன்ஸிலிற்கூட இரண்டு இந்திய மெம்பர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

மின்டோ-மார்லி ரிபாரம்

இவர் பத்திரிகைகளினுடையவும், பொது ஜனக் கூட்டங்களினுடையவும், தேசாபிமானிகளினுடையவும் ஸ்வதந்திரங்களைக் குறைப்பதான சட்டங்களை உண்டு பண்ணினார். தமது சரீரத்தினாலும், பணத்தினாலும் கல்வியின் அபிவிருத்திக்காகவும், பொதுஜன முன்னேற்றத்திற்காகவும் உழைத்துவந்த லாலா லஜபத்ராய் என்னும் சிறந்த தேசாபிமானியை இவர் ராஜத்ரோகி என்று எண்ணி நாட்டை விட்டுப்போகும்படி உத்தரவு செய்தார். இவை காரணமாக நாட்டில் அமைதி குறைந்து சில துன்மார்க்கர்கள் வெடிகுண்டுகளைக் கொண்டு சில துரைத்தன உத்தியோகஸ்தர்களைப் படுகொலை செய்து நாட்டிற்கும் தங்களுக்கும் அபகீர்த்தியைச் சம்பாதித்துக் கொண்டார்கள்.

அமைதி குறைந்தது

மின்டோ காலத்தில் அப்பொழுது இளவரசராகவிருந்த நமது ஐந்தாவது ஜார்ஜ் மன்னவர் இந்நாட்டிற்கு விஜயம் செய்திருந்தார். 1910-ம் வருஷம் மே மீ எட்வர்ட் சக்ரவர்த்தி இறக்கவும், ஜார்ஜ் அரசரானார்.

இளவரசர் வரவு

லார்ட் மின்டோவுக்குப் பிறகு, லார்ட் ஹார்டிஞ்ச் வைஸிராயானார். 1911-ம் வருஷம் ஜூன் மாதம் ஜார்ஜ்

மஹிபர் முடிசூட்டிக் கொண்டார். அடுத்த டிஸம்பர் மாதம் 12உ யன்று அவர் மேரி மஹாராணியாருடன் டில்லிமாநகரில் மிகுந்த வைபவத்துடன் இந்தியக் குடிகள் ஆரவாரஞ்செய்து சந்தோஷிக்க மகுடாபிஷேகம் செய்து கொண்டு டில்லியை இந்திய ராஜ்யத்தின் தலை நகரமாகச் செய்ததையன்றி, நமக்கும் சில நன் கொடைகளை யளித்தார். அவர் வங்காளத்துக் குடிகளுக்கு வியாகூலத்தை விளைத்த வங்காளப் பிரிவினையை ரத்து செய்தார். அவர் கல்வியின் அபிவிருத்திக்காகத் துரைத்தனத்தார் முன்னிலும் அதிகமாக ஐம்பது லக்ஷம் ரூபாய் செலவிட வேண்டும் என்றும் ஆஜ்ஞாபித்தார்.

ஜார்ஜ் முடி சூட்டு

நன்கோடை

லார்ட் கர்ஸனைப் போலன்றி ஹார்டிஞ்ச் பிரபு இந்தியருடைய சகாயமின்றித் துரைத்தன காரியங்களைச் சரியாக நடத்த முடியாதென்று எண்ணினர். இவர் சில மதியற்றவர்கள் கலகஞ் செய்து ராஜத்ரோஹிகளாக நடந்து வந்தபோதிலும், பொதுவில் இந்தியர்கள் ராஜவிசுவாசம் உள்ளவர்கள் என்பதில் நம்பிக்கை கொண்டவர். இவர் தமது தயையினலும், நிதானத்தினலும் இந்தியர்களுடைய அன்பை எளிதில் சம்பாதித்துக்கொண்டார்.

ஹார்டிஞ்ச்

1914-ம் வருஷம் ஜர்மானியருடன் உண்டான பெரிய யுத்தத்தில் இந்தியர்கள் ஆங்கிலேயருக்குத் துணையாக நின்று ஐரோப்பாவுக்குச் சென்று யுத்த முனையிற் செய்த பேருதவியும், இந்தியக் குடிகளும், சிற்றரசர்களும் செய்த பொருளுதவியும் உலகத்தாருக்கெல்லாம் ஆச்சரியத்தை விளைத்தன.

ஜர்மானிய யுத்தம்

புதிய டில்லிநகர்ப் பிரவேச மகோற்சவ சமயத்தில் எவனே ஒருவன் இவர்மீது வெடிகுண்டைப் போட்ட பொழுது, தெய்வாதீனமாய் இவர் உயிர்தப்பிப் பிழைக்கவும், இந்நாட்டினர் பேராநந்தமடைந்தார்கள். இவர் தமது மனையாளை யிழந்து வருந்திய பொழுது, இந்தியா முழுவதும் இவர் பொருட்டு மனக்கலக்க முற்றது. கோபாலகிருஷ்ண கோகலே என்னும் தேசாபிமானி காலஞ்சென்றார் எனக் கேள்விப்பட்டு, இவரும் இந்தியக் குடிகளோடொத்து மிகுந்த வருத்தத்தை யடைந்தார். கி. பி. 1916-ல், இவர் தமது வேலையை நீத்து இங்கிலாந்துக்குச் சென்றார்.

கோகலே

லார்ட் செம்ஸ்பார்ட் என்னும் வைஸிராயும், இந்திய காரியதரிசியான மாண்டகூவும் மாண்ட்பார்ட் ரிபாரம் என்னும் சீர்த்திருத்தச் சட்டத்தை ஏற்படுத்திஞர்கள். அந்தச் சட்டத்திஞல், இந்தியர்களுக்கு முன்னிலும் மேம்பட்ட உத்தியோகங்களும், சில ஸ்வதந்திரங்களும் கிடைத்தன. அதற்கு முன்னமேயே 1917-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 20-ம் தேதி பார்லிமென்ட் சபையார் இந்திய ஆட்சியில் ஆங்கிலேயருடைய முற்போக்கான நோக்கத்தைக்குறித்து வாக்குறுதி செய்தார்கள்.

மாண்ட் பார்ட் ரிபாரம்

லார்ட் செம்ஸ்பார்ட் ஜனங்களுக்கும், பத்திரிகைகளுக்கும், ஜனசங்கங்களுக்கும் உரிமையான ஸ்வதந்தரங்களைக் குறைப்பதற்கான ரௌலெட் ஆக்ட் முதலிய கடுமையான சட்டங்களை உண்டுபண்ணியும், ஜனங்களுக்குத் தலைவர்களாக இருந்தவர்களைப் பல காரணங்களைக் கொண்டு சிறைப்படுத்தியும் நடந்தொழுகினதஞல், ஜனங்கள் ஆங்காங்குக் கலகப்பட்டுச் சிற்சில விடங்களில் சட்டத்தை மீறி நடந்து வரவும் தலைப்பட்டார்கள். ஆப்

ரௌலெட் ஆக்ட்

கானிய அமீரான ஹபீபுல்லா கொலையுண்டு போகவும், அவர் மைந்தரான அமநுல்லா ஆப்கானிய அரசரானார். அவர் முதலில் ஆங்கிலேயரிடம் விரோதம் பாராட்டினாரெனினும், பின்னர் அவர்களிடம் நட்புப் பாராட்டி வரலானார்.

மலையாளத்தில் கலகம் ஏற்படவும், துரைத்தனத்தார் அதிற் சம்பந்தப்பட்ட மாப்பிள்ளைகளை ஊரைவிட்டுப் போகும்படி செய்துஅமைதியை உண்டு பண்ணினார்கள்.

பஞ்சாபில் கலகம் உண்டாகவும், அங்கே அப்பொழுது கவர்னராக இருந்த மைகேல் ஓட்வயர் என்பவரும், ஜனரல் டயர் என்னும் ராணுவத்தலைவரும் ஒன்று சேர்ந்து நிரபராதிகளான ஸ்திரீகளையும், குழந்தைகளையுங்கூட ஜாலியன்வாலாபாக் என்னுமிடத்தில் குண்டிட்டுச் சுட்டுப் படுகொலை செய்ததையன்றி, இந்தியர்களைப் பலவிதமாக அவமானமும் செய்தார்கள். அவர்கள் குற்றஞ் சாட்டப்பட்டவர்களைத் தக்க விசாரணையின்றித் தண்டித்தார்கள். இவற்றையெல்லாம் சரியென்று ஆமோதித்து வந்த வைஸிராய் மீது குடிகளுக்கு வெறுப்பு உண்டாயிற்று. நாடெங்கும் அமைதி குறைந்து போகக் குடிகள் துரைத்தனத்தார் செயல்களைப் பழித்துப் பேசத் தொடங்கினார்கள். இந்தியர்களுக்கு ஆங்கிலேய அரசாட்சியிலிருந்த நம்பிக்கை குறைவுபடத் தலைப்பட்டது. இவரை வைஸிராய் உத்தியோகத்தினின்றும் நீக்கி விடவேண்டுமென்றும் விரும்பினார்கள். இவ்வாறாக இவருடைய ஆட்சியில் இந்தியா முழுவதும் அமைதி யற்றிருந்தது. இவர் ஸாட்லேர் கமிஷனை ஏற்படுத்திக் கல்கத்தா சர்வ கலாசாலையின் சீர்திருத்தத்திற்கான ஆலோசனை

அமைதி குறைந்தது

ஸின்ஹா

களைச் சொல்லும்படி செய்தார். இவருடைய ஆட்சியில் லார்ட் ஸின்ஹா பீஹார் மாகாண கவர்னராக நியமிக்கப் பட்டார். இப்பொழுது இந்திய கவர்ன்மெண்டார் ஜர்மானிய யுத்தத்தின் செலவிற்காக 150 கோடிரூபாய் கொடுத் துதவினார்கள்.

செம்ஸ்பர்ட் பிரபுவுக்குப் பின்பு லார்ட் ரீடிங்க் வைஸிராய் ஆனார். இவர் காலத்தில் கொஞ்சங் கொஞ்சமாக நாட்டில் அமைதி உண்டாய் வரலாயிற்று. இவர் சுதேசப்

திருத்தங்கள்

பருத்தி யாடைகளுக்கு விதிக்கப் பட்டிருந்த தீர்வையைத் தள்ளி விட்டார். இவர் ஓர் இந்தியக் கப்பற்படையை நிர்மாணிக்க ஏற்பாடுகள் செய்யவேண்டு மென்னும் ப்ரேரேபணையைச் செய்தார்.

கி. பி. 1926-ல் லார்ட் இர்வின் வைஸிராயானார். இவர் வியவசாய விஷயங்களைக் கவனிப்பதில் ஊக்க முள்ளவர். இந்தியர்களுக்கு ராஜ்ய பரிபாலனத்தில் இன்னும் அதிகமான சுதந்திரங்களைக் கொடுக்கலாமா என்பதைக் கண்டறிந்து பார்லிமெண்ட் சபையாருக்குச் சிபார்சு செய்வதற்காக நியமிக்கப்பட்ட ஸைமன் கமிஷன் இந் நாட்

ஸைமன் கமிஷன்

டிற்கு வந்து அதன் பொருட்டுத் தங்களுக்குத் தேவையான பல விவரங்களைக் கண்டறிந்து போயிருக்கின்றார்கள். அந்தக் கமிஷனில் இந்தியர்களையும் மெம்பர்களாகச் சேர்த்துக் கொள்ளவில்லை என்கிற காரணத்தால் அதை இந்நாட்டுக் குடிகள் பெரும்பாலும் பஹிஷ்கரித்து விட்டார்கள். இந்திய காரியதரிசியின் மூலமாய்ப் பார்லிமெண்ட் சபையாருக்கு அந்தக் கமிஷன் செய்யும் சிபார்சைக்குறித்துத் தமது அநுபவத்தை யொட்டி ஆலோசனைகள் சொல்லும் பொருட்டு இர்வின் பிரபு இங்கிலாந்துக்குச் சென்றிருந்த பொழுது, நமது மாகாண கவர்னராக

விருந்த லார்ட் கோஷன் அவர் திரும்பி வரும் வரையில் வைஸிராயாக வேலை பார்த்து வந்தார். சீக்கிரத்திலேயே ஸைமன் கமிஷன் செய்யும் சிபார்ஸை யொட்டி, மற்றைய கக்ஷியினரைக் காட்டிலும் தங்களிடத்து அதிக அன்பு பாராட்டியும், தமக்கு அதிகமான சுதந்திரங்களைத் தருவதில் விருப்புற்றும் வருவதாக இந்தியர்கள் எண்ணிவரும் ஆங்கிலேயத் தொழிலாளர் கக்ஷியிற் சேர்ந்த துரைத்தன அதிகாரிகள் இந் நாட்டிற்கு என்ன நன்மைகள் செய்யப் போகின்றார்களென்பது வெளியாகும்.

முடிவுரை

i. அமைதியும், பாதுகாப்பும்

ஆங்கிலேய அரசாட்சிக்கு முன்னர் நமது நாட்டிற்குப் பல்வேறு வகைகளிலும் உண்டான தீமைகள் எண்ணிறந்தனவாகும். தைமூர், நாதர்ஷா, ஆமதுஷா துரானி போன்ற அந்நியர்கள் இந்தியாவின்மீது படையெடுத்து வந்து கிராமங்களைப் பாழாக்கியும், பயிர்களை யழித்தும், குடிகளைக் கொன்றும், நாட்டின் செல்வத்தைக் கவர்ந்து கொண்டும் துன்பத்தை விளைத்தார்கள். மகம்மது துக்ளக்கும், அலாஉத்தீனும், ஔரங்கஜீபும் தங்களுடைய மூர்க்கத்தினாலும், மதப்பகையினாலும் குடிகளைத் துன்புறுத்தினார்கள். பஹ்மனி சுல்தான்களும், மஹாராஷ்டிரர்களும் தங்களுக்குள்ளேயே சண்டையிட்டும், கலகப்பட்டும் நாட்டின் அமைதியைக் கெடுத்தார்கள். பிண்டாரிகளும், தக்கர்களும் ஊர்களைக் கொள்ளையடித்தும் குடிகளைக் கொன்றும் தீமை செய்தார்கள். அதனால், நாட்டுக் குடிகள் பயந்து, நடுநடுங்கி உயிர் வாழ்ந்திருந்தார்கள்.

முற்கால நிலைமை

இப்பொழுது நமது துரைத்தனத்தார் தமது போர்ப் படைகளைக் கொண்டு அந்நியர்கள் நமக்கு யாதொரு

தீமையும் செய்யாதபடி காத்தும், போலீஸ் படைகளைக் கொண்டு கொலை, களவு, கலகங்கள் முதலியவற்றைத் தடுத்தும், மத விஷயங்களில் ஸ்வேச்சாதிகாரத்தை நமக்குத் தந்தும் நாட்டில் அமைதியை உண்டு பண்ணி யிருக்கிறார்கள். நாம் இப்பொழுது நமதிஷ்டம் போல் உண்டும், உடுத்தும், நமக்கும் நமது சொத்துக்களுக்கும் எவ்விதமான தீங்கும் உண்டாவதற்கிடமில்லை என்னும் நிச்சயத்துடனும் உயிர் வாழ்ந்து வருகிறோம். ஆதலால், நமக்கு ஆங்கிலேய ஆட்சியில் அமைதியும், பாதுகாப்பும உண்டாயிருப்பது மிகச் சிறந்த அநுகூலமாகும். இந்த இன்றியமையாதனவான நன்மைகள் ஏற்படவும், நாட்டில் வியவசாயம், வியாபாரம் கைத்தொழில், கல்வி முதலியனவும் கொஞ்சங் கொஞ்ச அபிவிருத்தியடைந்து வருமென்பது நிச்சயம்.

அமைதி

ii. போக்கு வரவுச் சாதனங்கள்.

பஞ்சத்தைப் போக்கவும், வியாபாரம், கைத்தொழில், கல்வி முதலியவற்றைப் பெருக்கவும், திவ்ய தேசங்களுக்கும், தீர்த்த விசேஷங்களுக்கும் செல்லவும் செப்பனிட்ட பாதைகளும், இருப்புப் பாதைகளும், வாய்க்கால்களும், தந்தியும், தபாலும் முக்கியமான சாதனங்களாம். இந்தச் சாதனங்களில்லாத முற் காலங்களில் நமதுமுன்னோர்கள் மிகுந்த கஷ்டங்களை அநுபவித்தார்கள். இவைகள் உண்டாகவும் தொலைவு தொலைந்து போயிற்று. இவை யனைத்தும் ஆங்கிலேய ஆட்சியில்தான் நமக்கு ஏராளமாய்க் கிடைத்துள்ளன. இவற்றுள் தந்தியும், இருப்புப் பாதைகளும் அவர்கள் ஆட்சிலேயே முதன் முதல் உண்டாயின. இப்பொழுது இந்நாட்டில் 2,17,000 மைல்களுக்கு மதிகமான ரஸ்தாக்களும், 40,000 மைல்களுக்கும் மேற்பட்ட இருப்புப் பாதைகளும் போடப் பட்டிருக்கின்றன. வட

சாதனங்கள்

இந்தியாவில் பல ஆயிரம் மைல்கள் நீளமுள்ள வாய்க்கால்கள் தோண்டப்பட்டுப் போக்கு வரவுக்கான அநுகூலங்களைத் தருகின்றன.

என்றாலும், இவற்றின் சம்பந்தமான சில திருத்தங்கள் இன்றியமையாதனவென்பது நமது தீர்மானமான அபிப்பிராயம். இருப்புப்பாதைகள் பஞ்சகாலத்தில் உணவுப் பொருள்களைக் கொண்டு சென்று அதன் கொடுமையைப்போக்கும். வியவசாயத்திற்கு அவசியமான வாய்க்கால்கள் பஞ்சம் வாராதபடி தடுக்கும். அதனால், நாம் நமது துரைத்தனத்தார் நீர்ப்பாய்ச்சலுக்கும், போக்கு வரவுக்கும் உதவக்கூடிய வாய்க்கால்களை வெட்டுவதில் அதிகமான பணத்தைச் செலவிடவேண்டுமென்கிறோம். ஸர் ஆர்தர் காடன், ஸர் சார்ல்ஸ் ட்ரேவிலியன் முதலான பல ஆங்கிலேய உத்தியோகஸ்தர்கள்கூட வாய்க்கால்களின் சிறப்பையெடுத்துக் கூறியுள்ளார்கள். இருப்புப் பாதைகளினால் உண்டாகும் லாபம் முழுவதையும் இப்பொழுது அந்நியர்களே அநுபவித்துவருவதாலும், கம்பெனியார்களால் நடத்தப்பட்டு வரும் இருப்புப் பாதைகளின் பொருட்டுப் பணம் அநியாயமாகச் செலவு செய்யப்பட்டு வருவதாலும், மூன்றாவது வகுப்பிற் செல்லும் பிரயாணிகளுக்குச் சௌகரியங்கள் மிகக் குறைவாயிருப்பதனாலும், நாம் அவற்றின் பரிபாலனமும், ஆதீனமும் துரைத்தனத்தாருக்கே உரியனவாக வேண்டுமென்றும், தேசீய வியாபாரங்களாக்கப்பட வேண்டுமென்றும் வாதித்து வருகின்றோம். அவ்வாறே, தபால் தந்திக்கட்டணங்கள் குறைக்கப்பட்டு ஏழைகளே நிரம்பியுள்ள இந்நாட்டுக் குடிகள் பலருக்கும் உபயோகமாவதாகச் செய்யப்படவேண்டும். இவற்றின் பரிபாலனத்தில் குடிகளுக் குண்டாகும் நன்மைகளை முதன்மையாகக்

முக்கிய திருத்தங்கள்

கருத வேண்டுமே யன்றி, இவைகளினின்றும் துரைத்தனத்தாருக்குக் கிடைக்கும் வரியைக் கவனிக்கலாகாது.

iii. பரிபாலனம்

சட்ட திட்டங்கள்

ஆங்கிலேயருடைய காலத்திற்கு முன்பு சில அரசர்கள் நியாயத்தைத்தழுவியும், குடிகளின் நலத்தை நாடியும், சட்டதிட்டங்களை யுண்டு பண்ணி அவற்றிற் கிணங்கியும் ராஜ்ய பரிபாலனம் செய்த போதிலும், பெரும்பாலும் பலவரசர்கள் சட்டதிட்டங்களின்றித் தமது இஷ்டம் போல் நடந்து குடிகளை வருத்தி வந்திருக்கிறார்கள். இப்பொழுது சட்டதிட்டங்கள் ஏற்பட, அவற்றைக் குடிகளும், துரைத்தனத்தாரும் மதித்து நடந்தொழுகுகிறார்கள். அன்றியும், சில விஷயங்கள் முழுவதும் குடிகளினாலேயே பரிபாலிக்கப்பட்டும், மற்றுஞ் சில குடிகளின் அபிப்பிராயத்தை யொட்டிச் செய்யப்பட்டும் நடைபெறுகின்றன.

நாம் வேண்டுவன

மான்பார்ட் சீர்திருத்தத்தினால் குடிகளுக்கு முன்னிலும் அதிகமான சில உயர்ந்த உத்தியோகங்களும், சுதந்திரங்களும் கிடைத்தனவேனும், குடிகளின் பிரதிநிதிகளின் அபிப்பிராயத்தை மீறி நடக்கும் அதிகாரம் கவர்னர்களுக்கும் வைஸிராய்க்கும் கொடுக்கப் பட்டிருப்பதனாலும், மந்திராலோசனைச் சபையை அடக்கியாளும் சுதந்திரம் சட்டசபைக்கு இல்லாமையினாலும், பணத்தைச் செலவிடும் விஷயத்தில் சட்டசபைகள் சில செலவுகளைக் குறித்து யாதொன்றும் சொல்லக்கூடாததனாலும், அந்தச் சீர்திருத்தத்தினால் யாதொரு சிறந்த நன்மையும் காணக் கிடைக்கவில்லை யென்று நாம் கருதுகிறோம். இப்பொழுதுள்ள இருதலைப்பட்ட ஆட்சி தொலைந்து, சட்டதிட்டங்களையும், வரவு செலவுத் திட்ட

ஜாபிதாக்களையும் நமது பிரதிநிதிகள் நாட்டின் பொது நலத்தை நாடி வரையறுத்துச் செய்யவும், மந்திராலோசனைச் சபையார் சட்டசபையாருக்கடங்கி நடக்கவும் திருத்தங்கள் ஏற்படவேண்டும். அல்லாமலும், கூட்டுறவுச் சங்கங்களைக் கொண்டும், பஞ்சாயத்துச் சபைகளைக் கொண்டும் ஸ்தல சுய ஆட்சி சம்பந்தமான ஜில்லா, தாலூகா நகர விசாரணைச் சபைகளைக் கொண்டும் நடைபெறுகின்ற பல பொது விஷயங்களிலும் துரைத்தனத்தார் அநாவசியமாகத் தலையிட்டுக்கொள்ளாமலும், அந்த ஸ்தாபனங்களைப் பரிபாலிக்கும் பிரதிநிதிகளுக்கு அதிகமான சுதந்திரங்களையும், அதிகாரத்தையும் கொடுத்தும், அவற்றைப் பொம்மைகள்போல் வைத்து ஆட்டாமல், அவைகளுக்கு உயிரைத்தந்து அவைகள் தாமே ஆடும்படியாகச் செய்தும் வருவதற்கான திருத்தங்கள் சீக்கிரத்திலேயே செய்யப்படவேண்டும்.

iv. ஜனசமூக வாழ்க்கைத் திருத்தங்கள்

ஆங்கிலேய ஆட்சியில் பொதுஜன சம்பந்தமான பல திருத்தங்கள் உண்டாயிருக்கின்றன. அவற்றுள் மிகச் சில தாம் சட்டங்களால் உண்டானவைகளாம். பல திருத்தங்கள் விதியின்றி ஏற்பட்டுவிட்டன. ரயில் பிரயாணத்திலும், வைத்திய சாலைகளிலும், சிற்றுண்டிக் கடைகளிலும், பள்ளிக்கூடங்களிலும் ஜாதி மத பேதங்களைக் கவனியாமல் அனைவரும் சமமாக நடந்து வருகிறார்கள். தீண்டாமையும், உயர்வு தாழ்வு என்னும் பேதங்களும் பெரும்பான்மையும் ஒழிந்து விட்டன. காலத்தையொட்டி அப்பொழுதைக் கப்பொழுது வேண்டிய மாறுபாடுகள் தாமாகவே அமைந்து வருமென்பதை நாம் நேரில்கண்டும் அநுபவித்தும் வருகிறோம். மத சம்பந்தமான விஷயங்களில் திடீரென்று மாறுதல்களை உண்டுபண்ணுவது

சமூக திருத்தங்கள்

தீமையை விளைக்கும். ஆப்கானிய அரசராயிருந்த அமநுல்லா செய்த சிறந்த திருத்தங்கள் முல்லாக்களுக்கு இஷ்டமாயிராததனுல், அவர் நாட்டை விட்டுப்போய் விடவும் நேர்ந்தது அல்லவா? ஆதலால், மத விஷயங்களில் சில திருத்தங்கள் மிகவும் அவசியமானவைகளேயானுலும், சிறுபான்மையோர் அவற்றை ஆமோதிக்காதிருப்பினும் அவசரப்பட்டு அவற்றைச் செய்து தீமையை உண்டு பண்ணுமல், நிதானமாகச் செய்வதே சிறந்தது. இன்றியமையாதனவான மாறுதல்கள் தாமே உண்டாய் வருகின்றன. அவைகள் நாம் வேண்டிய காலத்திற்குள்ளும், விரும்பிய அளவிலும் உண்டாகாவிடில் அவற்றின் பொருட்டுப் பொதுஜனங்களுக்குக் கல்வியை யூட்டி அவர்களையும் நமது அபிப்பிராயத்திற்கு மாற்றிக் கொள்ள முயன்று வரவேண்டும். முந்திய அரசர்களைப் போலன்றி நமது துரைத்தனத்தார் பொதுஜனசம்பந்தமான திருத்தங்களைச் செய்வதில்வெகு ஜாக்கிரதையாகவே இருந்து வருகிருர்கள். அதுதான் சிறந்த முறையாகும்.

V. பஞ்சம்

நாட்டில் பஞ்சம் உண்டான பின்பு அதைப்போக்க ஏற்பாடுகள் செய்வதினும் அது உண்டாகாதபடி செய்வதே துரைத்தனத்தாரின் சிறந்த கடமையாகும். இந்நாட்டில் பஞ்சம் அடிக்கடி உண்டாவதற்குத் தக்க காலங்களில் மழையின்மையும், நீர்ப்பாய்ச்சலுக்கான சாதனங்கள் இல்லாமையும், குடிகளின் வறுமையும் தான் காரணங்கள் ஆகின்றன.

பஞ்சத்தின் காரணம்

மழை உண்டாவதற்குக் கடவுளின் அருளையன்றி வேறு சாதனங்கிடையாது. ஆஸ்திகர்கள் நன்னடக்கையினுலும், சத்திய, சவுசங்களினுலும் தெய்வாநுக்ரஹத்தைப் பெறலாம் என்று எண்ணுவதற்கிணங்கக் குடிகள்

கியாய வழிகளில், தமது முன்னோர்களைப் பின்பற்றி நடந்தொழுகல் வேண்டும். சன்மார்க்கத்தை நீத்துத் தீய வழிகளில் நடந்ததன் காரணமாகவே பழைய ஆதென்ஸ் ராஜ்யமும், ஸ்பார்டா ராஜ்யமும், ரோம் ராஜ்யமும் அழிந்து பட்டன என்பதை நாம் அந்தத் தேசங்களின் சரித்திரங்களிற் பரக்கக் காணலாம். நீர்ப்பாய்ச்சலுக்கான சாதனங்களைத் துரைத்தனத்தார் தாம் அமைத்துக் கொடுக்கவேண்டும். இருப்புப் பாதைகளைச் செம்மையாய்ப் பரிபாலிப்பதினின்றும் மிச்சமாகும் பணத்தையும், மற்றைய வழிகளில் அளவு கடந்து செலவு செய்வதைக் குறைத்து அதனால் மிச்சப்படும் பணத்தையுங்கொண்டு, துரைத்தனத்தார் நீர்ப்பாய்ச்சலாதாரங்களை விருத்தி பண்ணக்கூடும். குடிகளின் வறுமையைப் போக்கி, அவர்கள் கைப்பொருள் சேர்க்கக்கூடிய வண்ணம் செய்வதும் துரைத்தனத்தாரின் கடமையேயாகும். பஞ்சகாலத்தில் ஜனங்கள் மடிந்துபடுவது நாட்டில் போதுமான உணவுப் பொருள்கள் கிடைக்காமையினாலல்ல. உணவுப் பொருள்களை விலைக்கு வாங்கி ஜீவிக்கும் சாதனமில்லாமை தான் பஞ்சத்தின் கொடுமைக்குக் காரணமாம். மிகப் பெரிய பஞ்சங்களிற்கூட நிலவரமான நிலவரி ஏற்பாட்டின் பயனைப் பெற்றுவரும் வங்காளக் குடிகள் மற்றைய மாகாணத்தவரைப் போன்று வருந்தாமையே அதற்குப் போதுமான சாக்ஷியாகும்.

போக்கும் வழிகள்

ஆங்கிலேய ஆட்சிக்கு முன் சுமார் 500 வருஷகாலத்திற்குள் 4 பெரிய பஞ்சங்கள் உண்டாயினவென்றும், அவர்களுடைய ஆட்சியில் கி. பி. 1770 முதல் கி. பி. 1900-க்குள் அதாவது 130 வருஷங்களுக்குள் 22 பஞ்சங்கள் உண்டாயினவென்றும் சொல்லப்பட்டிருக்கின்றன. இவற்றைப் பற்றி விசாரிக்கவும், இவை வந்த பிறகு

சேலவைக் குறைத்தல்

இவற்றைப் போக்கவும் துரைத்தனத்தார்கள் பல ஏற்பாடுகளைச் செய்தார்களெனினும், இவற்றை வரவொட்டாமற் றடுப்பதற்கான யாதொரு சிறந்த ஏற்பாட்டையும் செய்தார்களில்லை. துரைத்தனத்தார் முக்கியமல்லாதனவும், அளவிற்கு மிஞ்சினவுமான செலவுகளை மட்டுப்படுத்தியும், வரிகளைக் குறைத்தும் ஏற்பாடுகள் செய்யாத வரையில் பஞ்சம் நாட்டை விட்டகலாது என்பது திண்ணம். கி. பி. 1900-ம் வருஷத்திற்கு முந்திய 40 வருஷங்களில் மட்டும் சுமார் இரண்டுகோடி ஜனங்கள் பஞ்சத்தினால் மட்டில் இறந்து போனார்கள் என்பதிலிருந்து பஞ்சத்தின் கொடுமை எவ்வாறானதென்பது விளங்குகின்றது.

vi. கல்வி

நாட்டில் உண்டாக வேண்டிய நன்மைகள் அனைத்திற்கும் குடிகள் கல்வி கேள்விகளிற் சிறந்திருப்பதுதான் முதற் சாதனமாகும். கல்வி அபிவிருத்தி யடைந்தால், குடிகளின் வழக்கங்கள் ஒழுங்குபட்டும், அவர்களுடைய

கல்வியின் சிறப்பு

ஒழுக்கங்கள் திருந்தியும், அவர்கள் தங்கள் உரிமைகளையும், கடமைகளையும் உணர்ந்து சட்டதிட்டங்களுக்கு அடங்கி நடந்தும், துரைத்தனத்தாருக்கும் தமக்கும் எவ்விதமான தீங்கும் உண்டாகாமல் நடந்தொழுகக் கூடும். அதனால், துரைத்தனத்தாருடைய கடமைகளில் கல்வியபிவிருத்தியே முதன்மையானதாகும். அதையறிந்துதான், அவர்கள் ஆரம்பக் கல்வியை இலவசமாகவும், கட்டாயமாகவும் செய்து வருகிறார்கள். உயர்தரக் கல்வி சம்பந்தமாகவும் சிறந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

எனினும், கல்வியின் நோக்கு விசேஷ மாறுதல்களைப் பெறவேண்டும். கல்விச்சாலைகள் துரைத்தன

உத்தியோகங்களுக்கும், இதர சேவகங்களுக்கும் வேண்டிய கல்விகற்ற ஆட்களைத் தயாரிக்கும் யந்திர சாலைகளாகாமல், ஜனங்களுக்கு அறிவை யூட்டியும், அவர்களுக்கு ஜீவனோபாயங்களைக் கற்பித்தும், அவர்கள் எக்காலத்திலும் தொண்டு செய்வதைப் பெருந்தொழிலாகக் கருதாமல் கைத்தொழில், வியாபாரம், வியவசாயம் முதலியவற்றில் தமது புத்தியைச்செலுத்தி முன்னேற்றமடையும்படியும் செய்ய வேண்டும். அன்றியும், அவர்கள் தமது முன்னோர்கள் காலத்திய சிறந்த ஒழுக்கங்களைக் கைவிடாது, தமது வீடுகளிலேயே அந்நியர்களாய் விடாமலும், தமது இனத்தார்களையும், அவர்கள் வழிகளையும் பழித்துக் குறை கூறுமலும், தேசாபிமானம், மதாபிமானம் முதலிய நற்குணங்கள் உள்ளவர்களாய் நடந்தொழுகியும் வருமாறு கல்விகற்பிக்கப் படவேண்டும். தாய்மொழியைக் கொண்டே சகல கலைகளையும் கற்க வேண்டுமென்பதை இந்நாட்டிற்றான் சொல்லுவதென்பது ஏற்பட்டிருக்கிறது. மற்றைய நாடுகளில் அவ்வேற்பாடு சொல்லாமலே அமைந்திருக்கிறது.

கல்வித் திருத்தங்கள்

இவைகளை யல்லாமலும், துரைத்தனத்தார் பொருளுதவி செய்தும், கொஞ்சமும் வித்தியாசம் பாராட்டாமலும் நமது சிறுவர்களை அயல் நாடுகளுக்கனுப்பிக் கைத்தொழில்களிலும், சிற்ப சாஸ்திரங்களிலும், சரித்திர, சாஸ்திர ஆராய்ச்சிகளிலும், சாங்கேதிகமான இன்னும் பல வித்தைகளிலும் பயிற்சிபெறச் செய்யவேண்டும். சுருங்கச் சொல்லுவோமாகுல், பொது ஜனங்களும், துரைத்தனத்தாரும் ஒத்துழைத்தும், ஒரு மனப்பட்டும் மேனுட்டுக் கல்வியை இக்கீழ் நாட்டிற்குப் பொருந்தியவாறு செய்தல் அவசியமானது.

துரைத்தனக் கடமைகள்

vii. நிலவரித் தீர்மானம்

இந்நாட்டில் துரைத்தனத்தாருக்கு ஏற்பட்டுள்ள வரி மூலங்களில் நிலவரிதான் முதன்மையானது. அதன் கடுமைதான் நாட்டில் அடிக்கடி பஞ்சங்கள் உண்டாவதற்கு முதற்காரணமென்பது பல மேதாவிகளின் தீர்மானமான கொள்கை. காரன்வாலிஸ் வங்காளத்தில் நிலவரியை நிலவரமாகச் செய்ததை யொத்துத் துரைத்தனத்தார் இந்தியா முழுமைக்கும் நிலவரமான நிலவரியை விதிக்க வேண்டு மென்னும் அபிப்பிராயத்தை ஸர் தாமஸ் மன்ரோ, லார்ட்காணிங்க், லார்ட்லாரென்ஸ் முதலான ஆங்கிலேயப் பிரமுகர்களும் கொண்டிருந்தார்கள். எனினும், அச்சிறந்த ஏற்பாட்டைத் துரைத்தனத்தார் இன்னும் ஒத்துக் கொள்ளவில்லை. 'நிலவரி அப்போதைக்கப்போது விதிக்கப்படுவதுதான் சிறந்த ஏற்பாடு, குடிகளுக்கனுகூலமானது' என்று கர்ஸன் போன்ற ஆங்கிலேய மேதாவிகளும், 'நிலவரியை நிலவரமாகச் செய்தாலன்றிப் பஞ்சம் தொலையாது, குடிகளும் வறுமை நீங்கமாட்டார்கள்' என்று ரானடே, தத்தர், கோகலே முதலான இந்திய மேதாவிகளும் சொல்லியுள்ளார்கள். ஆராய்ந்து பார்த்தால் உண்மை வெளியாகுமாதலால், தேசாபிமானமுள்ள ஒவ்வொருவரும் அவற்றைப்பற்றின விஷயங்களைக் காய்தலு முவத்தலுமின்றிக் கண்டறிய வேண்டும்.

அபிப்பிராய பேதங்கள்

viii. வியாபாரமும், கைத்தொழில்களும்

நமது நாட்டில் மிகப் பழைய காலத்திற்கூடக் கப்பல் மார்க்கமாகவும், நிலத்தின் வழியாகவும் அயல் நாடுகளோடு வியாபாரம் நடந்து வந்ததென்பதை நாம் அறிவோம். முற்காலத்திய கட்டிடங்களையும், மண்ணினாலும், கல்லினாலும், மரத்தினாலும் செய்யப்பட்ட பிரதிமைகளை

யும், தந்தத்திலும், பொன்வெள்ளியிலும் செதுக்கப் பட்ட சித்திரங்களையும், டாக்கா மஸ்லின்போன்ற ஆடைகளையும், கல்வெட்டுக்களையும், குகைக்கோயில்களையும் கொண்டு கைத்தொழில்களின் அபிவிருத்தி யிருந்த வாற்றை எளிதில் தெரிந்து கொள்ளலாம்.

பழைய கைத்தொழில்கள்

ஆங்கிலேயக்கீழ் இந்தியா கம்பெனியார் கைத்தொழில்களை ஆதரித்து வருவதை நீத்து அவற்றைத் தொலைத்துவிடுவதில் முயன்று வந்தார்கள். அவர்கள் கைக்கோளர்களுக்கு முன் பணம் கொடுத்தும், அவர்களைத் தங்களுடைய தொழிற்சாலைகளில் வேலை செய்யும்படி கட்டாயப் படுத்தியும், அவர்கள் சரக்குக்களைக் குறைந்த விலைக்கு வாங்கியும், நெசவுத் தொழிலை நாசஞ்செய்து வந்தார்கள். அவர்கள் இந்நாட்டில் ஆங்கிலேயக் கைத் தொழில்களுக்குத் தேவையான பருத்தி முதலிய பொருள்களை உற்பத்தி செய்வதில் நோக்கமுள்ளவர்களாக விருந்து தாங்கள் போட்டி செய்து வெல்லக் கூடாதனவான கைத் தொழில்களைத் தம்முடைய அதிகாரத்தைக் கொண்டு கொன்றுவிட்டார்கள். அன்றியும், சுதேசக் கைத்தொழில்களுக்கு அதிகமான தீர்வைகளை விதித்தும், இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் வேலை தீர்ந்த சரக்குக்களுக்கு அதிக தீர்வையைப் போட்டும், இங்கிலாந்திலிருந்து இங்கு இறக்குமதி செய்யப்பட்ட சரக்குக்களுக்குத் தீர்வையைக் குறைத்தும் வந்ததனாலும் சுதேச கைத்தொழில்கள் நாசமடைந்து போயின. அவர்கள் தங்கள் கைத்தொழில்களைப் பல விதங்களிலும் காப்பாற்றிக் கொண்டு இந்தியக்கைத் தொழில்களைப் போட்டியினால் அழித்துவிட்டார்கள்.

கம்பெனியார் செய்த தீமைகள்

ஆங்கிலேய ஆட்சியில் வரி சம்பந்தமான அதிகாரம் குடிகளுக்குக் கொஞ்சமும் இராததனால், அவர்கள் ஏற்றுமதி இறக்குமதித் தீர்வைகளையும், உள் நாட்டுச் சுங்கங்களையும் பெரும்பாலும் தங்களுடைய கைத்தொழில்களின் உயர்வையே நாடி விதித்து வந்திருக்கிறார்கள்.

டாரிப்

அல்லாமலும், இந்நாட்டுச் சரக்குக்கள் ஆங்கிலேயக் கப்பல்களிலேயே கொண்டு போகப்பட்டும், கொண்டு வரப்பட்டும் வியாபாரம் நடைபெற வேண்டியிருப்பதான நிபந்தனை இருந்து வருவதனாலும், வர்த்தகத்தின் அபிவிருத்திக்கு இடையூறு உண்டாயிருக்கிறது.

கரைக் கப்பல்கள் தேவை

இப்பொழுது நமது நாட்டிற்கே யுரியவையான வர்த்தகக் கப்பல்களைக் கொண்டு நமது நாட்டின் கரையோரமாய் நடைபெறும் வியாபாரத்தைச் செய்து லாபத்தை விருத்தி பண்ணிக்கொள்ள வேண்டுமென்று நாம் விரும்பி முன் வந்து அதற்கான சட்டங்களைச் செய்விக்க முயன்று வருவது ஏற்கெனவே ஆங்கிலேய வியாபாரிகளுக்கு விசேஷ மனக்கலக்கத்தை யுண்டாக்கிவிட்டது. வியாபார விஷயங்களில் இன்னமும் ஆங்கிலேய வர்த்தகர்களின் சௌகரியங்களும், அபிப்பிராயங்களும் மதிக்கப்பட்டு வருகின்றனவே யல்லாது, இத்தேசத்தின் நன்மைகள் கருதப்படவில்லை யென்றே சொல்லலாம். ஆதலின், நமது வியாபாரமும், கைத்தொழில்களும் முன்னேற்ற மடைவதற்கு வேண்டிய பல சாதனங்களிலும் டாரிப் ரிபாரம் என்னும் தீர்வை வரிச் சீர்திருத்தம் முக்கியமானதாகும்.

ix. போர்ப்படைகள்

இந்தியாவின் பாதுகாப்பின் பொருட்டு கடற்படைகளும், நிலப்படைகளும் இருந்து வருகின்றன வென்பது யாவருக்கும் தெரிந்த விஷயமாகும். இவற்றின்

பொருட்டு வருஷ வாரியில் சுமார் 60 கோடி ரூபாய்
செலவிடப்பட்டு வருகிறது. இந்திய வருமானத்தில்
பாதிப்பணம் இவ்வழியில் செலவாய்விடுகிறது. வருஷத்
திற்கு வருஷம் பெருகித் தேசத்துக்குத் துன்பத்தை
விளைவித்துவரும் செலவைக் குறைப்பதற்கான ஆலோசனை
களைச் சொல்லும்படி உண்டாக்கப்பட்ட ஹன்டர் கமிஷ

ஹன்டர் எஷர் கமிஷன்கள்

னும் கூடச் சேனை சம்பந்தமான செலவை
மட்டுப்படுத்த வேண்டுமென்று சிபார்ஸு
செய்திருக்கிறார்கள். செலவைக் குறைக்க
வும், ராணுவத்திருத்தங்களைச் செய்யவும்
வேண்டும் என்று வற்புறுத்திய எஷர்
கமிட்டியாருடைய தீர்மானங்களை யொட்டியும், சேனை
யின் செலவு குறைந்துவர வேண்டும். தேசப்பாதுகாப்பை
இந்தியரைக்கொண்டு செய்விப்பது தான் சிறந்த முறை
யாகும். இவ்வேற்பாட்டில் செலவும் குறைந்துபோம்.

சேனைகளினால் உண்டாகக்கூடிய நன்மைகள் ஆங்கி
லேயருக்கும் இந்தியருக்கும் பொதுவாக இருக்குமிடங்
களில் எல்லாம் அவற்றின் பொருட்டுச் செய்யப்படும்
செலவுகளும் பொதுவில் செய்யப்படுவது தான் நியாய
மாகும். ஆங்கிலேய ஸாம்ராஜ்யத்தின் அநுகூலத்
திற்காக, இந்நாட்டிற் கப்பால் அபிஸீனியரோடும்,

செலவைப் பங்கிடல்

திபெத் தேசத்தவரோடும், ருஷியரோடும்
செய்யப்பட்ட சண்டைகளின் செலவை
இந்திய பொக்கிஷத்திலிருந்து செய்வது
சரியல்லவென்பதைச் சில நடுவுநிலைமை
பொருந்திய ஆங்கிலேய மேலதிகாரிகளே எடுத்துச்
சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுது இந்தியப் பாதுகாப்
பைச் செய்துவரும் கப்பற்படையினால் இந்தியாவுக்கன்றி,
ஆங்கிலேய ஸாம்ராஜ்யத்திற்கும் அநுகூலம் ஏற்பட்டு
வருவதனால், அதன் செலவின் ஒரு பகுதியைத் துரைத்

தனத்தார் தங்களுடைய நாட்டின் வருமானததிலிருந்தும் கொடுத்து வரவேண்டு மென்பதும் சில நிபுணர்களின் அபிப்பிராயம்.

இந்தியக் கப்பற்படையையும், இந்திய சேனையையும் இந்தியரைக் கொண்டே அமைத்து, செலவைக்குறைத்து, வரியையும் மட்டுப்படுத்தித் தொழிலி லார்க்குத் தொழிலைத்தந்து, இந்தியர் களைச் சேனைத் தலைவர்களாகவும், கப்பல் தலைவர்களாகவும் பயிற்றுவிப்பதுதான் நாட்டின் முன்னேற்றத்திற்கான முறைகளாம்.

இந்தியரைப் பழக்குதல்

X. வரவு செலவுகள்

ஆங்கிலேய வர்த்தகக் கம்பெனியார் தங்களுடைய நன்மையைக் கருதியும், தங்களுடைய விரோதிகளை யடக்கியும் செய்த சண்டைகளின் பொருட்டுப்பட்ட கடனும், கவர்னர்-ஜனரல்கள் ஆங்கிலேய ஸாம்ராஜ்யத்தின் பெருமையை நாடி இந்தியாவுக்கு வெளியில் செய்த யுத்தங்களினால் உண்டான கடனும், சில ஆங்கிலேய வர்த்தகர்கள் கர்னாடக நவாப்பான மகம்மதுஅலி போன்ற குடி நலத்தைச் சிறிதுங் கருதாத சுதேச அரசர்களுக்கு வீணான செலவுகள் செய்வதற்காக அவர்களுடைய நாட்டை ஈடாகக் கொண்டு கொடுத்த கடனும், இருப்புப் பாதைகளையும், நீர்ப்பாய்ச்ச லாதாரங்களையும் உண்டு பண்ணுவதற்காகத் துரைத்தனத்தார் இங்கிலாந்திலும், இந்நாட்டிலும் வாங்கிக் கொண்ட கடனும் ஒன்றாகச் சேர்ந்து 'தேசீயக் கடன்' ஆய்விட்டன. அதன் பொருட்டு நாட்டின் வருமானத்திலிருந்து வட்டி செலுத்தப்பட்டு வருகின்றது.

தேசீயக் கடன்

இந்தக் கடன்கள் நாட்டின் நன்மைக்காகச் சிற்சில சமயங்களில் வாங்கப்பட்டன வென்றாலும், அடைமான

சொத்தைப் பெற்றுக்கொண்டவர்கள் அந்தச் சொத்தின் மீதுள்ள கடனைத் தாங்கள் பைசல் செய்து விட்டுச் சொத்தை அநுபவிக்கும் நியாய வழியை விட்டுச் சொத்துக்களைத் தாங்கள் கைப்பற்றிக் கொண்டுவிட்டு, அவற்றின் ஈட்டில் வாங்கியிருந்த கடனை நாட்டுக் குடிகளின்மீது சுமத்தி அதைத் தேசியக் கடனில் சேர்த்துவிட்டது எவ்விதத்தாலும் நியாயமாகாது. அது எவ்வாறாயினும், தேசியக்கடன் குறையும் வழியைத் தேடுவது இப்பொழுது அவசியமாகும்.

இந் நாட்டிற்கு வெள்ளியே முக்கிய நாணயமாக இருந்து வருவதாலும், சகல பொருள்களும் வெள்ளி நாணயங்களிலேயே விலைமதிக்கப்பட்டு வருவதனாலும், இங்கிலாந்து, அமெரிக்கா முதலான அந்நிய நாடுகளில் பொன் நாணயமே விலைமதிக்க ஏற்பட்டிருப்பதனாலும், வெள்ளியின் விலை அடிக்கடி மாறுபடுவதனால், வெள்ளியையும் பொன்னையும் மாற்றும் விஷயத்தில் அப்போதைக் கப்போது பேதம் உண்டாவதனாலும், நமது வர்த்தகர்களும், துரைத்தனத்தாருங் கூட நஷ்டப்பட வேண்டியிருக்கின்றது. அதனால், அவ்விரண்டையும் மாற்றுவதில் வித்தியாசங்கள் உண்டாகாதபடி ஒரு குறித்த மதிப்பை ஏற்படுத்தி விடுவது இன்றியமையாததாகும்.

நாணயம் மாறுதல்

இந்திய துரைத்தனத்தாரும், மாகாண கவர்ன்மெண்டுகளும், ஸ்தல ஸ்தாபனங்களும் வரிவிதிக்கும் அதிகாரத்தையும், கடன் வாங்கிப் பரிபாலனஞ் செய்யும் உரிமையையும் பெற்றிருப்பதனால், அவைகள் யாவும் குடிகளின் நலத்தையும், அவர்களுடைய முற்போக்கையும் நாடி அவசியமான வரிகளை விதித்தும், வீணான செலவுகளைக் குறைத்தும், செலவை ஆதாரமாகக் கொண்டு வரு

வரி விதித்தலும் செலவிடலும்

மானத்தை நிர்ணயிக்காமல், எவை இன்றியமையாதன வென்பதை யெண்ணி அவற்றின் பொருட்டு மட்டில் வரிகளை விதித்தோ அல்லது கடனை வாங்கியோ அவற்றைச் செய்து வரவேண்டு மென்பதுதான் ராஜ்ய பரிபாலனத்தின் சிறந்த நோக்காம். மனித அமைப்பின்பாற்பட்ட எல்லாவற்றிலும் குற்றங்களும், குறைவுகளும் இருப்பது சகஜமே யாதலால், நாம் துரைத்தனத்தாரோடு ஒத்து உழைத்து அவற்றைப் போக்கிக் கொள்ளவேண்டும். அவ்வாறு செய்வது நமது கடமையுமாகும். எல்லாம் வல்ல கருணைக் கடலாம் கடவுள் நமக்கும் நமது துரைத்தனத்தாருக்கும் நல்லறிவையும், மெய்யுணர்ச்சியையும் உண்டுபண்ணி, ஆங்கிலேய ஸாம்ராஜ்யத்திற் சேர்ந்து இந்தியா சுய ஆட்சியைப் பெறவும், நாமும், நமது நாடும் முன்னேற்றத்தை யடைந்து சிறப்புற்று ஓங்கிவிளங்கவும், ஆங்கிலேயர்கள் தாங்கள் தங்களது உயிரினும் மேலானதாகக் கொண்டாடிவருவதான ஸ்வதந்திரத்தை நமக்கும் அளித்து நற்பெயரெடுத்து அனைவராலும் கொண்டாடப் படவும் அமையுமாறு அநுக்கிரகிப்பாராக!

முற்றுப்பெற்றது

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
49	30	இண்டியா	இண்டிகா



கி. பி. 1911-ல் ப்ரிடிஷ் இந்தியா

அநுபந்தம் I

முகலாய சக்ரவர்த்திகளின் வம்ச பரம்பரை

1. பாபர் (1526—1530)

2. ஹுமாயூன் (1530—1540); (1555—1556) காம்ரான் ஹின்டால் அஸ்காரி

3. அக்பர் (1556—1605) ஹகீம்

4. ஜஹாங்கீர் (1605—1627) மூராட் டானியல்

குஸ்ரூ பார்விஸ் 5. ஷாஜஹான் (1627—1656) ஜஹான்டர் ஷார்யார்

புலாகி

டாரா — ஷுஜா — 6. ஔரங்கஜீப் (1656—1707) — மூராட் — மற்றவர்கள்

6. ஔரங்கஜீப்
(1656—1707)

7. ஷாஹலம் I என்னும் பஹதுர் ஷா
(1707—1712)

8. ஜஹான்டர் ஷா — அஸீமஸ்ஷான் — ரபியஸ் ஷான் — மகம்மது அக்தர்

8. ஜஹான்டர் ஷா
(1712—1713)

14. ஆலம்கீர்
(1754—1759)

15. ஷாஹலம் II
(1759—1806)

16. அக்பர் II
(1806—1837)

17. பகதுர் ஷா II
(1837—1858)

அஸீமஸ்ஷான்

9. பருக்ஸியர்
(1713—1719)

ரபியஸ் ஷான்

11. ரபியத்தெளலா
(1719)

10. ரபியத்தரஜத்
(1719)

மகம்மது அக்தர்

12. மகம்மது ஷா
(1719-1748)

13. ஆமது ஷா
(1748-1754)

அநுபந்தம் II

பீஷ்வாக்களின் வம்ச பரம்பரை.

1. பாலாஜி விசுவநாத் (1714—1720)
   - 2. பாஜி ராவ் I (1720—1740)
     - 3. பாலாஜி பாஜிராவ் (1740—1761)
       - விசுவாஸ ராவ்
       - 4. மத்து ராவ் I (1761—1772)
       - 5. நாராயண ராவ் (1772—1773)
         - 7. மத்து ராவ் II (1774—1795)
     - 6. ரகுநாத ராவ் (1773)
       - 8. பாஜி ராவ் II (1796—1818)
         - நானாஸாஹிப் (தத்துப் புத்திரன்)
   - சிவதாஸ ராவ்

அநுபந்தம் III

இந்திய கவர்னர்-ஜனரல்களும், வைஸ்ராய்களும்

1774 வாரன் ஹேஸ்டிங்ஸ்
1785 ஸர் ஜான் மெக்பர்ஸன்
1786 லார்ட் காரன்வாலிஸ்
1793 ஸர் ஜான் ஷோர்
1798 லார்ட் வெல்லெஸ்லி
1805 லார்ட் காரன்வாலிஸ்
,, ஸர் ஜார்ஜ் பார்லோ
1807 லார்ட் மின்டோ I
1813 லார்ட் ஹேஸ்டிங்ஸ்
1823 லார்ட் ஆமெர்ஸ்ட்
1828 லார்ட் வில்லியம் பெண்டிங்க்
1835 ஸர் சார்ல்ஸ் மெட்கால்ப்
1836 லார்ட் ஆக்லண்ட்
1842 லார்ட் எல்லன்பரோ
1844 லார்ட் ஹார்டிஞ்ச்
1848 லார்ட் டல்ஹௌஸி
1856 லார்ட் கானிங்க்

இந்திய வைஸ்ராய்கள்

1858 லார்ட் கானிங்க்
1862 லார்ட் எல்ஜின் I
1864 லார்ட் லாரென்ஸ்
1869 லார்ட் மேயோ
1872 லார்ட் நார்த்ப்ருக்

1876	லார்ட்	லிட்டன்
1880	லார்ட்	ரிப்பன்
1884	லார்ட்	டப்ரின்
1888	லார்ட்	லான்ஸ்டௌன்
1894	லார்ட்	எல்ஜின் **II**
1899	லார்ட்	கர்ஸன்
1905	லார்ட்	மின்டோ **II**
1910	லார்ட்	ஹார்டிஞ்ச்
1916	லார்ட்	செம்ஸ்பர்ட்
1921	லார்ட்	ரீடிங்
1926	லார்ட்	இர்வின்.

*இராஜாங்க முறை நூல்

(இரண்டாம் பதிப்பு)

இது

பெ[illegible]ி. ஷி. ஷி. ஹை ஸ்கூல் தலைமை உபாத்தியாயர்

எம். சே[illegible]சுந்தர வரதாசாரியர், பி.ஏ., எல்.டி. அவர்களால்

எழுதப்பட்டது.

(படங்களுடன் கூடியது)

நான்காம் பாரத்திற்குரியது

புதிய விஷயங்களுடன் சமீபத்தில் பிரசுரம் செய்தது 0 12 0

* எலிமெண்டரி ஸிவிக்ஸ் 0 6 0

இதுவும் ஷையார் எழுதியது.

(முதல் மூன்று பாரங்களுக்கு உபயோகமானது.)

* பாலர் ஸிவிக்ஸ் 0 5 0

இதுவும் ஷையார் எழுதியது. நான்காவது ஐந்தாவது வகுப்புக்களுக்கு உபயோகமானது.

(* துரைத்தனத்தார் அங்கீகாரம் பெற்றது.)

இந்தியன் பப்ளிஷிங் ஹவுஸ் லிமிடெட்

5, சங்குராம செட்டி தெரு, சென்னை.